நு 3
232

# கலைமகள்

## பொங்கல் மலர்.



மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள்.

1935

4 As.

வருகிறது! எதிர்பாருங்கள்!

சென்னை ஸ்ரீ மீனாட்சி சினிடோன் கம்பெனியாரால் மிகுந்த செலவில் தயாரிக்கப்பெற்ற

# "பவளக்கொடி"

## தமிழ் பேசும் படக்காட்சி.

தமிழ் நாட்டிலுள்ள பிரபல வித்வான்களான

**M. K.** தியாகராஜ பாகவதர் ஸ்ரீவை **S. D.** சுப்புலட்சுமி

**S. S.** மணி பாகவதர்

முதலியவர்கள் இப்படக்காட்சியில் நடித்துள்ளனர்.

**பாபநாசம் சிவன் இயற்றிய ஐம்பது இனிய பாட்டுகள்.**

"சகுந்தலா" நாடகத்தில் பெயர்பெற்ற

**மிஸ் சாந்தா தேவியின்**

**ஆடல் பாடல்**

தமிழ்நாட்டில் நற்பெயர் பெற்றுள்ள தமிழ் பேசும் படக்காட்சி.

**கூடிய சீக்கிரம் இரங்கூனில் நிதர்சிக்கப்பெறும்.**

# உள்ளுறை.


| எண். | | பக்கம். |
|---|---|---|
| 1 | தமிழ்நாட்டு வணிகர் | 1 |
| 2 | கைம்மையர் துயரம் (பாட்டு) | 5 |
| 3 | இந்தியாவில் நான்கண்டதென்ன? | 7 |
| 4 | திருவருள் பெற்ற பெரும்பாணர் மூவர் | 9 |
| 5 | மகளிர் குருகுலம் | 12 |
| 6 | மைசூரின் முன்னேற்றம் | 15 |
| 7 | நூதன சீர்திருத்தம் | 25 |
| 8 | பொதுமையின் அதிசயம் | 28 |
| 9 | செல்வன் திருமகள் (பாட்டு) | 33 |
| 10 | ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர் | 37 |
| 11 | கூட்டுறவு வேண்டும் | 41 |
| 12 | எனது தோழன் | 43 |
| 13 | பூமியும் பூகம்பமும் | 49 |
| 14 | ரங்கூனில் நான்கண்ட காட்சி | 57 |
| 15 | மலேயாவும் அதன் மக்களும் | 65 |
| 16 | கூட்டுக் கமிட்டி அறிக்கை | 81 |
| 17 | சுதந்திரத்திற்குச் சுருக்க வழி | 85 |
| 18 | கொடுக்கல் வாங்கல் | 89 |
| 19 | தனவைசியர் இளைஞர் சங்கம் | 97 |
| 20 | தாயின் கடிதம் | 99 |
| 21 | இன்பக் கூத்தன் | 101 |


## படங்கள்.



| | |
|---|---|
| பிரார்த்தனை, முகப்பு மூவர்ணப் படம் | 1 |
| மலாய்நாட்டுக் காட்சிகள் படம் | 26 |
| மைசூர்க் காட்சிகள் | 10 |
| இதர படங்கள் | 9 |

“விண்ணே வளியே யொளியழலே விரியும் புனலே மேதினியே
வெளியே மதியே செங்கதிரே மேய வுயிரே யுயிர்க்குயிரே

பண்ணே பண்ணி னுடனமையும் பாட்டே பாட்டி னுட்பொருளே
பகரா ருறுக் கப்பாலாம் பாமே பாவு வார் வரமே

எண்ணே யெண்ணின் மறைக்கொழுந்தே யெண்ணி யெழுதற் கரியபுக
ழேறே யிமையோர் பேறேசன் இமய முயிர்த்த பெருமாட்டி

கண்ணே கண்ணுக் கினியவிளங் காளாய் வருக வருகவே
கழியா வளங்கள் பொழியும்விடைக் கழியாய் வருக வருகவே!”




" பிரார்த்தனை "

# தமிழ்நாட்டு வணிகர்.

மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்.

ஒரு நாட்டின் நாகரிகத்துக்கு முதற் காரணமாயிருப்பது அதன் செல்வ மிகுதியாகும். செல்வ வளர்ச்சிக்குத் துணைபுரிவன வற்றுள் தலை சிறந்தது வியாபாரம்; ஆதலின் வாணிகமே ஒரு நாட்டு நாகரிகத்தின் சிறப்புக்குப் பெரிதும் உதவியாயிருப்பதாகக் கருதப் படுகின்றது.

ஆதி காலந் தொடங்கி மக்கள் மேற்கொண்டு செய்துவரும் ஒவ்வொரு தொழிலும் ஒவ்வொரு கடமையாகவே கருதப்பட்டு வந்திருக்கின்றது. சரீரத்தின் அங்கங்கள் எல்லாம் வேலை செய்வதனால் சரீரம் எப்படிப் பாதுகாக்கப்படுகிறதோ அப்படியே தேசத்தின் க்ஷேமத்துக்குப் பல தொழில்களும் உதவுகின்றன. ஒவ்வொரு தொழிலும் அதனைச் செய்பவர்களுக்குப் பயனளித்து வந்தாலும் பரோபகாரமாகவே இருப்பதால் சிறந்த தருமமாகவும் எண்ணப்படும்.

நாகரிகம் மிக்க மேனாடுகள் வியாபாரத்திற் சிறந்த நிலையை உடையனவாக இருக்கின்றன. நம்முடைய தமிழ்நாடு முற்காலத்தில் வியாபாரத்திலும் பிறவற்றிலும் உயர் நிலையை அடைந்து இருந்தது. இதனைப் பழைய தமிழ் நூல்களால் நாம் அறியலாம்.

தொழில்களிற் சிறந்தனவாகச் சொல்லப்படுவன உழவும் வாணிகமுமாகிய இரண்டுமேயாம். ஒருவர் பிறருக்கு அடிமைப்படாது உரிமையோடு செய்யும் இவ்விரண்டும் பல நூல்களிற் சிறப்பித்துப் பாராட்டப்படுகின்றன. வேளாண்மையினால் விளைவிக்கப்படும் பொருள்களும் கைத்தொழில்களால் உண்டாக்கப்படும் பொருள்களும் பல நாட்டாரும் பெறும்படி செய்வித்தலில் வாணிகம் உதவுகின்றது. மனிதனுடைய வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் யாவும் ஓரிடத்திலேயே கிடைத்தல் அரிது. ஆதலின், பலவேறு இடங்களில் உண்டாக்கப்படும் பல வேறு வகைப் பொருள்களை மனிதர்களுக்குப்பயன் பெறச் செய்யும் முயற்சியே வாணிகமாகும்.

இந்த வாணிகத்தினாலேயே வட மலையிற் பிறந்த பொன்னும் தென் மலையிற் பிறந்த சந்தனமும் குடகடற் பவளமும் தென் கடல் முத்தும் ஒருங்கே மனிதரால் பெறப்படும் நிலையில் சேர்கின்றன.

வாணிகத்தை பரம்பரையாகச் செய்து வரும் மரபினர் வணிகர், வைசியரெனப்படுவார். அவர்களிற் பல வகையினர் உண்டு. தனவைசியர், கோவைசியர், பூவைசியர் என்பார் ஒரு வகைப் பிரிவினர். இப்பர், கவிப்பர், பெருங்குடி வாணிகரென்பார் வேறொரு வகைப் பிரிவினர்; இப்பிரிவினர் தாம் கொண்ட பொருளளவாற் பெயர் பெற்றனர். தாம் செய்யும் வியாபாரத்தாற் பிரிக்கப்பட்ட கூல வாணிகர், பொன் வாணிகர், அறுவை வாணிகர், மணி வாணிகர் முதலிய பிரிவினரும் உண்டு. சேனை வாணிகர் என்பவரைப்போன்ற உத்தியோகப் பிரிவினரும் உண்டு.

தமக்குரிய நூல்களை ஓதுதல், தமக்குரிய யாகங்களைச் செய்தல், தாம் பெற்றபொருள்களை நல்வழியில் ஈதல், உழவு செய்வித்தல், பசுக்களைக் காத்தலென்னும் ஐந்தும் வணிகருக்குரிய தொழில்களென்று தொல்காப்பியத்துட் கூறப் பட்டிருக்கிறது. அவர் அரசர்களால் பெரிதும் மதித்துப் பாராட்டப் பெற்றனர். இமய வரம்பன் நெடுஞ் சேரலாதனென்னும் சேர அரசன் தன் நாடு காத்து

வரும் சிறப்பைப் புகழ்ந்து பாடிய குமட்டூர்க் கண்ணனு ரென்னும் புலவ ரொருவர் ஒரு பாட்டில், 'உன்னுடைய நாடு நோயும் பசியும் இல்லாமல் விளங்கும்படி நீ காத்து வருகின்ருய்' என்னும் பொழுது அவன் காக்கும் முறையை விரித்துச் சொல்லுகிருர்; 'பலவகை உணவு பண்டங்களை விற்கும் வணிகருடைய குடிகளைக் காப்பாற்றி வருகின்ருய்' என்னும் கருத்தை அமைத்து,

"கூலம் பகர்நர் குடிபுறந் தராசு"

என்று கூறியிருக்கிருர். இதனுல் ஒரு நாட்டின் இன்ப வாழ்க்கைக்கு வணிகரைப் பாதுகாத்தல் இன்றியமையாததென்பதும் அங்ஙனம் செய்தல் அரசன் கடமைகளில் ஒன்றென்பதும் தெரியவருகின்றன.

தமிழரசர்கள் தங்களுக்குள் போர்நேர்ந்த காலங்களில் தூதாக அனுப்புதற்கு உரியவர்களுள் வணிகரும் ஒருவகையினர். அரசர்களது நிலையை உணர்ந்து சினமின்றித் தாம் கூறுவதைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் ஆற்றலுடைமையால் அவர் அத்தொழிற்கு உரியராயினர். பண்டங்களை விற்கும் போதுகூடச் சுருங்கப் பேசி விளங்க வைக்கும் இயல்புடையவர்கள் அவர்கள். இதனை,

"புல்லியோர் பண்டங் கொள்வார்
வினவின் அப் பொருள் தம் பக்கல்
இல்லெனின் இனமா யுள்ள
பொருளுரைத் தெதிர்ம றுத்தும்
அல்லதப் பொருளுண் டென்னின்
விலைசுட்டி யறுத்து நேர்தும்
சொல்லினும் இலாபங் கோள்வார்
தொன்மர பிருக்கை சொல்வாம்"
(திருவிளையாடற் புராணம்.)

என்னும் செய்யுளால் அறியலாம்.

அரசர்களும் வணிகர்களும் கலந்து பழகினுர்கள். அதனுல் வணிகர்கள் இளங்கோக்களெனக் கூறப்படுவார்கள். காவிப்பூம் பட்டினத்தில் வீதியில், 'அரச குமாரும் வணிக குமாரும் குதிரைகளின் மேலும் கனற்றின் மேலும் ஏறி ஒருங்கே சென்றனர்' (சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்தகாதை 158-60) என்று சொல்லப்பட்ட பகுதியால் அரசருக்கும் வணிகருக்கும் இருந்த நட்பு விளங்குகின்றது. அரசர்களால் அவர்கள் பலவகையான சிறப்புக்களைப் பெற்றுர்கள். எட்டியென்னும் பட்டமும் அதற்குரியதாகிய பொற்பூவொன்றும் அவர்களுக்கு அளிக்கப்பெற்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை சீவகசிந்தாமணி, குண்டலகேசி முதலிய நூல்களில் வணிகரைப் பற்றிய பல செய்திகள் காணப்படும்.

வணிகர், தம் தொழிலை அறநெறி தவருமல் செய்து வந்தார்கள். பிறர்பாற் பெறும் பொருளை மிகுதியாகப் பெருமலும் தாம் அளிக்கும் பொருளை குறைவாக கொடாமலும் இலாபத்தை வெளிப்படச் சொல்லி விற்று வந்தனர். பிறர் பொருளையும் தம்முடையன போற் கருதிப் பிறருக்குத் துன்பம் வாராமற் பாதுகாத்து வந்தனர்.

காவிரிப்பூம் பட்டினத்திலும் மதுரையிலும் வணிகர்கள் மிகுதியாக இருந்தனர். அவ்விரு நகரிலும் நாளங்காடி என்னும் காலைக் கடைத்தெருவும் அல்லங்காடி என்னும் மாலைக் கடைத்தெருவும் இருந்தன. இவற்றிற் பண்டம் விற்போர் தம்மிடம் உள்ள பண்டங்கள் இன்ன வென்பதை காட்டுவதற்கு அறிகுறியாகச் சிலவகைக் கொடிகளைத் நாட்டி வைப்பர். இரவிற் கொடியினுற்புலப்படுத்த இயலாதாகையால் பலவகை விளக்குகளால் அதனைப் புலப்படுத்தினுர்கள். இச்செய்திகள் சிலப்பதிகாரத்தாலும் பட்டினப்பாலை யாலும் விளங்கும். இவ்வழக்கங்கள் இக்காலத்தில், புகை வண்டிகளுக்குக் காட்டும் குறிகளாகப் பகலிற் கொடிகளையும் இரவில் விளக்குகளையும் உபயோகிப்பதைப்போன்றனவாகத் தோன்றுகின்றன.

காவிரிப்பூம் பட்டினத்திற் பட்டினப்பாக்கம் என்றும் மருவூர்ப்பாக்கம் என்றும் இரண்டு பெரும்பிரிவுகள் உண்டு. அவற்றுள் பட்டினப்பாக்க மென்பது கடற் கரையை அடுத்தஇடம். அங்கே பெரும்பாலும் வணி

கர்களே வசித்தார்கள்; சுங்கச்சாலை இருந்தது; கலங்கரை விளக்கமும் இருந்தது; "தாழை நிறைந்த தெருக்களில் அரசனுக்குரிய பொருள்களைக் காக்கும் காவலாளர்கள் ஒவ்வொருநாளும் சலிப்பின்றிச் சுங்கங் கொள்வார்கள். கப்பலிலிருந்து நிலத்தில் இறக்கப்படுவனவும், நிலத்திலிருந்து கப்பலில் ஏற்றப்படுவனவுமாகிய அளவில்லாத பண்டங்கள் முன்றிலில் மலைபோலக் கிடக்கும். மாடங்களில் உள்ள மகளிர்கள் கைகளைக் கூப்பி, வெறிபாடும் மகளிரோடு பொருந்தி வேய்ங்குழல் முதலியவற்றை வாசிக்க விழாக்கொண்ட ஆவணத்தையுடையது அப்பட்டினம். தெய்வத்திற்காக எடுத்த கொடிகளும் விலைப்பண்டங்களை அறிவித்தற்குக் கட்டிய கோடிகளும், ஆசிரியர்கள் வாதுகருதி வைத்தகொடிகளும், கப்பலின் கூம்பிலுள்ள கொடிகளும், பிறவும் நகர்ப் பக்கத்தில் விரவியிருக்கும். அங்கே கடல்வழியே வந்த குதிரைகளும் நிலத்தின் வழியே வந்த மிளகு பொதிகளும், இமயத்திலுண்டான மணிகளும் பொன்னும், குடகு மலையிற்பிறந்த சந்தனமும் அகிலும், கொற்கைத் துறையிற் பிறந்த முத்தும், கீழ்கடலில் உண்டான பவளமும், கங்கையில் உண்டான பொருள்களும், காவிரியில் உண்டான வளங்களும், ஈழநாட்டிலிருந்து வந்த உணவுப் பொருள்களும், காழக நாட்டுப் பொருள்களும், பிற அரிய பொருள்களும் கூடி வளம் மிகுந்த பரந்த இடத்தையுடைய தெருக்கள் உள்ளன. பின்னும், அப்பட்டினம் வணிகர் நெருங்கியிருக்கும் இருப்பிடங்கள் பலவற்றை உடையது. அவ்வணிகர்கள் வலையருடைய மனைகளின் முன்னே நீரில் மீன்கள் அச்சமற்றுத் திரியவும் அச்சாதியாரிடமிருந்து கொலையை நீக்குவார்கள்; கள்வரிடமிருந்து களவுத்தன்மையைப் போக்குவார்கள்; தேவர்களுக்கு ஆகுதிகளைக் கொடுத்து வழிபடுவார்கள்; பசுக்களையும் எருதுகளையும் பாதுகாப்பார்கள்; உணவையும் பிறவற்றையும் உரியார்க்கு அளித்து நுகத்தடியிலுள்ள பகலாணி போல நடுவு நிலைமையையுடைய நெஞ்சினராய் உண்மையைக் கூறித் தம்பொருள்களையும் பிறர் பொருள்களையும் ஒப்ப நினைந்து, கொடுக்கும் பண்டத்தின் மதிப்பிற்கு அதிகமாகப் பொருளைக் கொள்ளாமலும் கொள்ளும் பொருளுக்குக் குறையப் பண்டங்களைக் கொடாமலும் பல பண்டங்களை இலாபத்தை வெளியாகச் சொல்லி விற்பார்கள்' என்று பட்டினப்பாலையில் அவர்களைப் பற்றிய செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

ஊனுண்போர் இயல்பையும் களவு செய்வோர் இயல்பையும் மாற்றும் திறமை அவர்கள் பால் இருந்தமை அவர்களுடைய சிறந்த தன்மையை விளக்குகின்றது. நல்லுரையினாலும் அறச் செயலாலுமே அத்தகைய செயல்களை அவர்கள் செய்து வந்தார்கள் அவர்களது ஈகைச் சிறப்பைப்பாராட்டி ஒரு பழைய செய்யுள்,

"ஈட்டிய தெல்லாம் இதன்பொருட் டென்பதே
காட்டிய கைவண்மை காட்டினார்—வேட் டொறும்
காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார் வணிகர்
தாமரையும் சங்கும்போல் ஈந்து"

என்று கூறுகிறது; 'சோழ அசனுக்குரிய காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள வணிகர்கள் பதும நிதியையும் சங்க நிதியையும் போலப் பொருள்களை வழங்கி, தாம் ஈட்டிய செல்வமெல்லாம் அறம்புரிவதற்கேயாமென்பதை விளக்கும் கொடைத் திறத்தைக் காட்டினார்கள்' என்பது இதன் கருத்து. ஆலயத் திருப்பணி முதலியவைகளிலும் வித்தியா தருமங்களிலும் இக் காலத்தில் ஒப்பற்று விளங்கும் தனவணிகர்களுடைய கைவண்மைக்கும் இச்செய்யுள் பொருத்தமாகத் தோற்றுகின்றது.

தமிழ் நாட்டு வணிகர்கள் பிற நாட்டாரோடும் வாணிகம் புரிந்து வந்தனர். பிற நாட்டு வணிகர்கள் இந்நாட்டுக்கு வந்து பல பண்டங்களைப் பெற்றுச் சென்றார்கள். தமிழ் நாட்டு வணிகர்கள் ஈழம், காழகம், கடா

ரம் (பர்மா), சீனம், சோனகம், யவனம் முதலிய நாட்டு வணிகர்களுடன் வியாபாரம் செய்தனர். கப்பல் வியாபாரம் மலிந்திருந்தது. யானைகளும் குதிரைகளும் கப்பல்களில் வந்து இறங்கின. உள் நாட்டில் வியாபாரம் செய்யச் செல்லும் வணிகர், கூட்டம் கூட்டமாகச் சென்றார்கள். அக்கூட்டத்துக்குச் சாத்து என்று பெயர். வணிகர்களுள் சாத்தன், சாத்தப்பன் என வழங்கும் பெயர்கள் பழைய காலத்தில் சாத்துக்குத் தலைவனாக இருந்தவர்களது பெயரிலிருந்து வந்தனவாகத் தோற்றுகின்றன. வேறு நாட்டுக்குச் செல்ல விரும்பியவர்கள் அந்த வணிகர் கூட்டத்தையே துணையாகக் கொண்டு சென்று வந்தார்கள்.

பல நாட்டு வணிகர்களோடு பழகுவதனாலும் பல நாடுகளுக்குச் சென்று வருதலாலும் அவர்களுக்குப் பல தேசத்து மொழிகள் தெரிந்திருந்தன. மணிமேகலையில், சாதுவனென்னும் வணிகன் ஒருவனுக்கு நாக சாதியினருடைய பாஷை தெரிந்திருந்ததென்றும், தன்னைக் கொல்ல வந்த நாகர்களிடம் அவன் அப்பாஷையிற் பேசி அவர்களாற் போற்றப் பட்டானென்றும் ஒரு செய்தி கூறப் பட்டுள்ளது. பல தேச சஞ்சாரத்தால் அவர்கள் உலக அநுபவமும் கூரிய அறிவும் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். கணக்கு முதலிய கலைகளில் அவர்கள் சிறந்த ஆற்றலுள்ளவர்கள்.

வணிகர்களுள், பழைய காலத்திலும் பிற்காலத்திலும் பல புலவர்கள் இருந்தார்கள். போன் வாணிகனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார் என்பவர்கள் சங்க நூல்களால் அறியப் படுபவர்கள். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலையைச் செய்த சீத்தலைச் சாத்தனாரும், வேறொன்றாகிய குண்டலகேசியை இயற்றிய நாத குத்தனாரும் வணிக மரபினரே.

செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள திருக்கச்சூரென்னும் ஸ்தலத்திலுள்ள சாஸனமொன்றில், சாத்தனால் வழி வந்த ஒருவனைப் பற்றிய செய்தி காணப்படுகிறது. அவருக்குப் பெருநம்பி யென்னும் பட்டம் உண்டென்றும் தெரிகிறது. பாண்டிய அரசனுக்கு மந்திரியாக இருந்த குலச் சிறை நாயனார் அப்பட்டம் உடையவர். தக்கயாகப் பரணி யென்னும் நூல் உரையில் பெருநம்பி யென்னும் பட்டம் அரசனுடைய மந்திரிகளுக்கும் அவர்களைப் போன்ற பெரிய அதிகாரிகளுக்கும் வழங்கப்படுவதென்று தெரிகின்றது. ஆதலின், சாத்தனார் வழி வந்த பெருநம்பி ஒருபெரிய அதிகாரியென்று கொள்ளலாம். அதனால் வணிகமரபினர் அரசர்களுக்கு மந்திரிகளாகவும் பெரிய அதிகாரிகளாகவும் இருந்தமை பெறப்படும்.

பெரிய புராணத்திற் சொல்லப்படும் நாயன்மார்களில் இயற்பகையார், அமர் நீதியார், மூர்த்தியார், காரைக்கா லம்மையார், கலிக்கம்பர் என்னும் ஐவரும் வணிக மரபினர். இவருள் மூர்த்தி நாயனார் சிவபெருமான் திருவருளால் அரசாக இருந்து ஆண்டு வந்தார். அச்செயலால் வணிகர் அரசுரிமையைப் பெறுவது முண்டென்று தோற்றுகின்றது. பதினோராந் திருமுறையிலுள்ள நூல்களை இயற்றிய பலருள் ஒருவரும் பெருந்துறவினருமாகிய பட்டினத்தடிகளின் பெருமையை அறியாதார் யாவர்? அவர், வணிக மரபிற் பிறந்து என்றும் குன்றாத பெரும் புகழை அம்மரபிற்கு உண்டாக்கினார்.

இவர்களை யன்றிப் பிற்காலத்தில் வணிகருட் சிறந்த பெரு மக்கள், புலவர்கள் முதலியோர் பலர். அவர்களைப் பற்றிய செய்திகள் விரிவுடையனவாதலின் இதனோடு நிறுத்துகின்றேன்.

# கைம்மையர் துயரம்

( திருச்செந்தூர் திரு. மு. கிருஷ்ண சர்மா பாடியது. )

சோதரர்காள் நும்செல்வச் சுந்தரிய ரைச்சிறிதும்
ஆதரமில் கைம்மையரென் ருக்கியிருட் பாழறையுள்
வாதைச் சிறைப்படுத்து வாழ்ந்துவக்கும் தீயிர்க்கெப்
பேதையர்கொல் அந்தணராம் பேர்தந்து போயினரே.

செய்யீர் மறுமணம்நும் சிற்றிடையார்க் கென் றுரைத்த
பொய்சாயும் நூலெலாம் பொன் றமுது காட்டெரியில்
வையீர் இனியேனும் மங்கையருக் கன்னதுசெய்து
உய்யீர் எனப் புகறற்கோரிமையும் தாழ்த்தாதீர்.

சீரணிநெற் றித்திலகம் தீர்ப்பதுவும் அன் றிநறும்
தாரணியும் கூந்தலையும் தான்மழிக்கக் கைம்மையர்க்கென்
றீரமிலா நூல்கள் எழுதினரை யாம்காணில்
ஓடியில் வன் றடியால் ஓங்கியடித் தேகொல்வேம்.

நுங்கள்விருப் புள்ளனவேல் நுண்ணிடையார் ஆயிரவர்
தங்களையும் நீர்மணக்கத் தக்கீர்போ லும்மெலிய
மங்கையர்அவ் வாறு மணக்கமறுப் பீர் போலும்
இங்குளநும் வன்கண்மை எந்நாட்டும் காண்பரிதே.

உற்ருரும் நீரும்சேர்ந் துண்டுவந்தாடிக் களிக்கப்
சிற்றுடை சுற்றத் தெரியாச் சிறுமியர்க்குச்
பொற்ருலி பூண்பிக்கும் புன்ருெழிலால் அன்னவர்நூல்
அற்ருலஃ தும்பிழைகொல் அன்றேல் விதிப்பயன்கொல்.

சோலையிலே வாழுமிளந் தோகையன்னர் நூவிலாரய்
மூலையிலே தள்ளுண்டு மூடுதிரை யுள்வருந்தும்
காலையிலே தோழியர்தம் காதலரோ டாடல் நினைந்
தாலையிலே புக்ககரும் பானைதல் ஓர்ந்திலிரோ.

கன்னன் கழற்ருக் கடுவிலங்கென் காற்கணிந்தீர்
என்னுசை மன்னவரே என்றிறந்த அன்பர்தமை
முன்னுக்கிக் கைம்மையர்தீ மூச்சொடழக் காண்கல்லும்
பன்னுள் வருந்துமுங்கள் பாழுளமென் ருேஇரங்கும்.

சில்லென்று பூக்கும் சிறுநெருஞ்சிக் காட்டுடே
நில்லென்று சொல்லி நிறுத்திவழி போனீரென்
றெல்லென் றழுதகுரல் உங்கள்செவி கேட்டிருந்தும்
கல்லென்ற உள்ளம் கரையாததென் னேயோ.

வீதியிலே சிற்றில் விளையாடும் ஓர்சிறிய
பேதையின்பால் நின்னகத்துப் போழுகை யாதெனஎன்
காதலன் மாண்டானெனுமின் கம்பிவாவா லென்றங்கு
ஆதாமாப் பின்னும்விளை யாடியதும் கேட்டிலிரோ.

ஒன்றே யுரைப்பல் ஒறுத்திரே லும்பொறுப்பல்
என்றே மறுமணம் நம் ஏழைச் சிறுமியர்க்கு
மன்றேற்றிச் செய்து மகிழ்வாமோ மற்றையர்போல்
அன்றேயாம் நாகரிகர் ஆவாமிஃ துண்மையரோ.


# குறைந்த விலையில்

## புதிய உயர்ந்த சரக்குகள் !

நயத்தைத் தேடி லாபத்தை விரும்புபவர்களுக்கு நல்ல தருணம்.

**நயமான ஜ்வுளிகள் !** **சகாயமான விலைகள் !**

எங்களிடத்தில் அசல் கதரில் பலவிதமான வேஷ்டி தினுசுகளும், சேலைக ளும், சட்டைக்காக வேண்டிய தினுசுகளும், சேலம், கும்பகோணம், துயில், வேஷ்டி, துப்பட்டா, பட்டு சேலைகளும் இன்னும் தற்கால நாகரீகத்திற்கேற்ற முறையில் பற்பல ஜவுளி தினுசுகளும், மதராஸ் ராமகோடி குறிப்பு. பேரேடு காட்டுப்புத்தகம், லெட்டர் பேப்பர், மரக்கறி வத்தல் வகையறுக்களும் குறை ந்த விலைக்குக் கிடைக்கும்.

கோ. கீ. வே, கடையில் பாகஸ்தராயிருந்து விலகிக் கொண்ட

## கு. அ. அங்கமுத்து முதலியார்

ஜவுளி வியாபாரம், நெ. 79, மொகல் தெரு, இரங்கூன்.

# இந்தியாவில் நான் கண்ட தென்ன?

(பர்மிய யாத்ரீகரின் அபிப்பிராயம்·)

பௌத்த கயா க்ஷேத்திரத்துக்குப் பர்மிய யாத்ரிகர் ஒருவர் சென்றிருந்தார். அப்பொழுது அவர் பார்த்தவற்றைப் பற்றி, பிரபல "ஸன்" பத்திரிகையில் கீழ் வருமாறு எழுதியுள்ளார்:—

கல்வி பயில்வதைத் தவிர்த்து வேறு வேலையாக பர்மாவின் பர்மியர்கள் தங்கள் சொந்த நாட்டைவிட்டு அந்நிய நாடுகளுக்குச் செல்வோர் மிகக் குறைவு. இருந்தாலும் இதர நாடுகளைச் சேர்ந்த வியாபாரிகளும் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களும் நம்முடைய பர்மா தேசத்திற்கு ஆண்டு தோறும் வந்து போய்க் கொண்டிருப்பதைப் பிரத்தியட்சமாய்ப்பார்க்கிறோம். பல நூற்றுக்கணக்கான மைல்களுக் கப்பாலிருந்து பர்மாவுக்கு வந்து போவதால் அந்நியர்கள் ஏதாமொரு பிரதி பலனை அடைகிறார்களென்று நினைப்பதில் சிறிதும் ஐயம் கொள்வதற்கில்லை.

சமீப காலத்தில் ஏற்பட்ட தடின்ஜூ விழா விடுமுறை காலத்திலே இந்தியாவுக்குப் போய் வருவோமென்ற எண்ணம் உதித்தது. அதுபோல் அக்டோபர் மாதம் 16ந் தேதி ரங்கூன் துறைமுகத்தை விட்டு எஸ். எஸ். எல்லங்கா என்ற கப்பலில் கல்கத்தாவுக்கு அன்பரொருவருடன் பயணமானேன். 18ந் தேதி காலை 9 மணிக்கெல்லாம் கல்கத்தாவை அடைந்தோம். நாங்கள் ஏறிச் சென்ற கப்பலில் இங்கிலாந்து தேசத்து தபால்கள் இருந்தமையால் கப்பல் காப்டன் அவர்கள் அதிகபிரயாசையுடன் கப்பலை வேகமாய் நடத்தி 48 மணி நேரத்தில் கல்கத்தாவையணுகச் செய்தனர். இதேகப்பலிலேயே நவம்பர் மாதம் 2ந் தேதியன்று ரங்கூனுக்கு வந்து சேர்ந்தோம்.

அக்டோபர் மாதம் 18ந் தேதி காலையில் படுக்கையை விட்டெழுந்து பார்க்கும்போது ஹூக்ளி நதியில் கப்பல் போய்க் கொண்டிருப்பதைக் கண்டேன். இரு மருங்கிலும் பிரமாண்டமான சணல் மில்கள் இருப்பதைப் பார்த்தேன். இவையாவும் ஆங்கிலக் கம்பெனிகளுக்குசொந்தமாகும். கல்கத்தாவுக்கும் கடலுக்கும்80 மைல் தூர முண்டு. ஹூக்ளியில் போய்கொண்டிருக்கும்போது ஐராவதி நதியின்முகத்துவாரத்தில்காணப்படுவதைப்போன்று சிறு கிராமங்களும் பச்சைப்பசேலென விருக்கும் நெற் பயிர்களும் தென்னை மரங்களும் காட்சியளித்தன.

கப்பல்கள் மாரமத்து செய்யப்படும் கிட்டாப்பூர் என்றழைக்கப்படும் இடமானது நதியின் வலதுபுறத்துக் கரையிலிருக்கிறது. அவ்விடத்தில் ஏக காலத்தில் 16 கப்பல்கள் வரை நிறுத்தி ரிப்பேர் செய்யக்கூடுமெனச் சொல்லப்படுகிறது.

நதியின் இடது புறத்துக் கரையில் ஹௌரா என்றழைக்கப்படும் ஊர் இருக்கிறது. இவ்வூருக்கும் கல்கத்தாவுக்கும் மிதப்புப் பாலத்தால் போக்குவரவு இணைக்கப்பட்டிருக்கிறது. ஹௌராவில் உலகில் உள்ள எல்லா வகைச் செடிகொடிகளைக் கொண்டிருக்கும் மிக அபூர்வமான தோட்டமொன்றிருக்கிறது.

வில்லியம் கோட்டைக்கு எதிர்த்தாப்போலுள்ள துறைமுகப் பாலத்தில்தான் கடற் பிரயாணக் கப்பல்கள் பிடித்து பிரயாணிகளை இறக்கிவிடுகின்றன. இந்தப் பாலத்தைத் தவிர்த்து வேறு பாலங்களெதுவும் கிடையாது.

## ஏடன் தோட்டமும் திடலும்


துறைமுகத்தைவிட்டு வெளியேறியதும் பிரபல பந்தாட்டங்கள் நடைபெறக்கூடிய பிரமாண்டமான திடலிருப்பதைப் பார்க்கலாம். இது கண்டோன் மெண்டு எல்லைக்குள்ளிருந்து வருவதால், ரங்கூன் பி. ஏ. ஏ. மைதானத்தில் காணப்படும் கட்டிடங்களைப் போன்ற கட்டிடங்களை அமைத்துக் கொள்ளும் வசதியில்லாமலிருந்துவருகிறது. மைதானத்தைச் சுற்றி எந்தவிதமான தடுப்புகளும் கிடையாததால் பொதுஜனங்கள் தாராளமாய்ச் சென்று உலாவிவருகிறார்கள். கல்கத்தாவுக்குச் செல்லும் வழியில் இடது புறத்தில் ஏடன் தோட்டமொன்றிருப்பதைப் பார்க்கலாம்.

தேகாரோக்கியத்தை முன்னிட்டு கல்கத்தாவாசிகள் சாயுங்கால வேளையில் இத்தோட்டத்திற்குச் செல்கிறார்கள். நான் போயிருந்த சமயம் துர்கா பூஜா ஆனபடியால் வங்காளிகள் இல்லங்களிலுள்ள விக்கிரகங்களுக்கும் தேவாலயங்களிலுள்ள விக்கிரகங்களுக்கும் கங்கையின் கிளையான ஹூக்ளியில் ஆடல்பாடல் விமரிசைகளுக்கிடையில் நீராட்டி வைத்தார்கள். முஸ்லீம் மஸ்ஜித்களுக்கு முன்னால் மேள தாளங்கள் வாசிக்காதிருப்பதற்காக கவர்ன்மெண்டார் துப்பாக்கி சகிதமுள்ள போலீசார்களையும் ஐரோப்பிய சார்ஜெண்டுகளையும் காவல் காக்கச் செய்திருந்தார்கள். ஆயினும் ஊர்வலத்தை நடத்திச் செல்லும் பிரமுகர்கள் குறிப்பிட்ட இடத்தை அணுகியதும் மேள தாளங்களை நிறுத்தி விடும்படி எச்சரிக்கை செய்து சமிக்ஞை காட்டுவதைப் பார்த்தேன்.

இந்தியாவில் விளையும் எல்லாவிதமான உலோகங்கள், கையால் நெசவு செய்யப்பட்ட உடைகள், அந்தந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்களின் உருவங்கள், ஒருவித தைலத்தால் தோய்க்கப்பட்ட சகல உயிரற்ற ஜீவ பிராணிகள், உள்நாட்டு விளை பொருள்கள் இவைகளைக் கொண்டிலங்கும் மாபெரும் பொருட்காட்சி. இது பார்க்கத்தக்கது. இங்கே மாந்தலே அரண்மனையிலிருந்து கொண்டுவரப்பட்டிருக்கும் சிங்காதனம் ஒன்றும் இருப்பதைக் கண்டேன். விக்டோரியா ராணியின் ஞாபகார்த்தமாக வைசிராய் லார்டு கர்ஸன் ஆட்சியில் 500 ஆண்டுகளுக்கு முன் ஷாஜகானால் கட்டப்பட்ட தாஜ்மகாலைப் போன்று கட்டிடமொன்று, காட்சிசாலையில் கட்டப்பட்டிருக்கிறது. வேடிக்கை பார்ப்பவர்களின் கூட்டம் இக்காட்சி சாலைகளில் எக்காலத்திலும் நிறைந்திருப்பதைக் காணலாம்.

## வங்காளிகளின் தோற்றம்

ஐரோப்பியர்களைப் போன்று உடையணியும் வங்காளிகள் மிகக் குறைவு. வங்காளியைப்போல் வேஷ்டியுடுத்தி, தலையில் ஐரோப்பியர் தொப்பியை மாட்டிக்கொள்ளும் வழக்கம் வங்காளிகளிடத்தில் காணோம். வேஷ்டியும் ஷர்ட்டும் வெள்ளையே. சுதேச மிதியடியை 100-க்கு 90 வங்காளிகள் போட்டுக் கொள்கிறார்கள். பீடியும் சிகரெட்டும் போக்குவரத்தின்போது புகைக்கிறார்கள். வீட்டில் ஹூக்காவைப் பிடிக்கிறார்கள். ஊர் மத்தியில் பெரிய ரஸ்தாக்களில் பெருங் கூட்டத்தை த்திரட்டி, குழப்பத்தை யுண்டாக்கி வைக்கும் மதுபானக் கடைகளைப் பார்த்தேனில்லை. சந்துகளிலாயினும் சரியே அகன்ற வீதிகளிளாயினும் சரியே குடி வெறியின் மயக்கத்தால் அப்படியு மிப்படியும் ஆடி ஆடிச் செல்லும் மனிதர்களையும் காணோம். வங்காளிகள் தங்கள் குலத்தை நேசிப்பவர்களாயிருப்பதால் நான் மிகவும் மகிழ்ச்சி யுறுகின்றேன். தம்மையொருவர் ஏளனம் செய்வாரோ வென்ற பயம் வங்காளிகளுக்குள்ளிருந்து வருவதால் குலாபிமானம் சிறந்தவர்களாகக் காணப்படுகிறார்கள்.



கூட்டுக்கமிட்டி அறிக்கையில் பர்மாவிலுள்ள செட்டியார்களைப் பற்றி இழிவான முறையில் தாக்கியிருப்பதைக் கண்டித்து ஆவன செய்வதற்காக தாய்நாட்டிலுள்ள செட்டியார்களைக் கலந்துபேச பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தலைவர் திரு. சா. அ. ச. ராமன் செட்டியாரும், சங்கக் காரியதரிசி திரு. சுப. க. அ. அ. மு. லட்சுமணன் செட்டியாரும், சங்க உத்தியோகஸ்தர்களில் ஒருவரான திரு. ராஜுவும் 4-1-35 ல் சென்னைக் கப்பலில் புறப்பட்டனர். அவர்கள் கப்பலேறுவதற்கு முன் இப்படம் எடுக்கப்பெற்றது.

# திருவருள் பெற்ற பெரும்பாணர் மூவர்

சுவாமி விபுலாநந்தா

நிலவுலகத்தினை மூடியிருந்த இருட்படாம் அகலக் குணதிசை யுதித்த இளஞாயிறு போன்று, மாந்தாது அகவிருளிரியச் சீகாழி பதியிற்றோன்றிய கவுணியர் குலதிலகமாகிய ஆளுடைய பிள்ளையார் தமிழ் நாட்டினை அணி செய்த காலத்திலே, இயலிசை நாடக முத்தமிழ்க் கலைகள் மீட்டும் வளர்ச்சி பெய்துவவாயின.

முத்தமிழ் விரகராகிய ஞானசம்பந்தப் பிள்ளையாரது திருவடிகளைத் தொழுதுய்யும் பொருட்டுத் திருவெருக்கத்தம்புலியூரில் வாழ்ந்த திரு நீலகண்ட யாழ்ப்பாண நாயனார் அவரது மனைவியாராகிய மதங்க சூளாமணியாரோடுடன் வந்தாரென்பது,

"திருநீல கண்டத்துப்
பெரும்பாணர் தெள்ளமுதின்
வருநீர்மை யிசைப்பாட்டு
மதங்கசூளா மணியார்
ஒருநீர்மை யுடனுடைய
பிள்ளையார் கழல்வணங்கத்
தருநீர்மை யாழ்கொண்டு
சண்பையிலே வந்தணைந்தார்"

என்னுஞ் சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கானறியக் கிடக்கின்றது.

பெரும் பாணரது வரவினை யறிந்த பிள்ளையார் அவரை யெதிர்கொள்ளப் பாணரும் பிள்ளையாரது துணைப்பதந் தொழுதெழுந்து, ஆர்வத்தோடுமேத்தி மெய்ம் மொழிகளாற் றுதித்து, நல்வினை கூட்டத் தாமெய்திய பெருவாழ்வினை யெண்ணியக மகிழ்ந்தார். பிள்ளையார் அவரைக் கோயிற்புற மொன்றிற் கொடுபோந்து கும்பிடுவித்து இறைவற்கு யாழ்த்தொண்டு செய்குதிர் எனப் பணிக்க அவரும்,

"தானநிலைக் கோல் வடித்துப்
படிமுறைமைத் தகுதியினால்
ஆனவிசை யாராய்வுற்
றங்கணர்தம் பாணியினை
மானமுறைப் பாடினியா
ருடன்பாடி வாசிக்க
ஞானபோனகர் மகிழ்ந்தார்
நான்மறையோ ரதிசயித்தார்"

"காழியார் தவப்பயனுங்
கவுணியர்தந் தோன்றலார்
ஆழிவிட முண்டவர்தமடி
போற்றும் பதிகவிசை
யாழின் முறைமையினிட்டே
யெவ்வுயிரு மகிழ்வித்தார்
ஏழிசையும் பணிகொண்ட
நீலகண்ட யாழ்ப்பாணர்"

அதன் பின்னர் அன்றுபோ லென்றும் அகலா நண்பினராகிய பெரும்பாணர் பிள்ளையாரோடுடன் சென்று திருப்பதிக விசையை யாழிலிட்டுப் பாடிச் சேவித்து வருவாராயினர். பெரும்பாணரது திருத்தாயார் பிறந்தவிடமாகிய தருமபுரத்திற்குப் பிள்ளையாரும் பாணருஞ் சென்றிருந்த காலத்திலே பாணரது சுற்றத்தார் அவரை நோக்கித் திருப்பதிகவிசையை நீர்யாழிலிட்டியற்றுமதனாலே அகில மெல்லாம் அவ்விசை நிகழ்வதாயிற்று எனக் கூறினர். அது கேட்ட பாணர் உள நடுங்கிப் பிள்ளையாரைநோக்கி யாழின் கணடங்காத திருப்பதிக மொன்றினைத் தேவரீர் கட்டளை யிட்டருளினால், திருப்பதிகவிசை யாழின்கண் அடங்கா அளவின தென்பதை இவரும் உலகத்தாரும் அறிந்துய்வாரென, விண்ணப்பித்துத் திருமுன்னிலையினின்றார். 'மாதர் மடப்பிடி'

யென்னும் யாழ் முரித்திருப்பதிகத்தினைப் பிள்ளையார் அருளிச்செய்ய, அது யாழின் கண் அடங்காதாயிற்று.

உண்மையை யுணர்ந்த பெரும்பாணர் மெய்ப் பயமும் பரிவு முற்றுப் பிள்ளையா ரது கழலிணையில் வீழ்ந்தெழுந்து; "இக்கருவியினைத் தொடுதலினன்றோ திருப்பதிக விசையை யாழிலேற்பனென யான் செப்பியது" எனக்கூறி அவ்யாழினை உடைத்து விடுதற்கெண்ணி யோங்கினர். பிள்ளையார் தடுத்தருளி ஐயரே! இக்கருவியினைத் தாருமெனவாங்கிக்கொண்டு

"சிந்தையாலளவு படாவிசைப் பெருமை
செயலளவி லெய்து மோநீர்
இந்தயாழினைக் கொண்டே இறைவர்
திருப்பதிக விசை யிதனிலெய்த
வந்தவாறே பாடி வாசிப்பீரெனக்
கொடுப்பப் புகலி மன்னர்
தந்தயாழினைத் தொழுதுகைக்கொண்டு
பெரும்பாணர் தலைமேற் கொண்
டார்."

பிள்ளையார் திருச்சாத்த மங்கையில் வந்திருந்த காலத்திலே முத்தீவளர்க்கும் இருபிறப்பாளராகிய திரு நீல நக்க நாயனரை நோக்கி, நீலகண்டப் பெரும் பாணர்க்கு இன்று தங்க வோரிடங் கொடுத்தருளுவீரென்ன, அத்திருமறை யோரும் நடுமனைவேதிபின்பாங்கரிடங்கொடுத்தனர்வேதியிலருத செந்தீவலஞ் சுழித்தெழுந்து ஒளிவீசியது. அது கண்ட நீல நக்கர் மகிழ்வுறச்சகோட யாழ்த்தலைவராகிய பெரும்பாணர் விறலியாருடன் பள்ளி கொண்டார். திருநீல கண்டப் பெரும்பாணர் ஒருநாள் மதுரைப் பதியையடைந்து யாழ் வாசித்தாராக, அவரது யாழிசையைச் செவிமடுத்து திருவுள மகிழ்ந்த ஆலவாயிலவிர் சடைக் கடவுள், யாழ் தரையிற்படில் வீக்கழியுமாதலிற் பாணர்க்குப் பொற் பலகையிடுமினென, அடியாரைப் பணித்தருளினன். அடியார்இறைபணி நிற்கப், பாணரும் பொற் பலகையேறி, உமையம்மையை யொருபாகத்திற் கொண்ட இறைவனது வண்மையை உலகெலாமறியும் படி ஏத்தினர்.

"நக்க மேருவர் நாடுமோர் ஊருமே
நாதன் மேனியின் மாகண மூருமே
தக்க பூமனைச் சுற்றக் கருளொடே
தார முய்த்தது பாணற் கருளொடே"

என்னும் திருவிய மகத்தினுள்ளே திருநீலகண்டப் பெரும்பாணர்க் கருளிய திறத்தினைப் பிள்ளையார் போற்றித் துதித்தார். (திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் புராணம் அளம்) திருப்பதிகவிசையை யாழிலிட்டுப் பாடிய பெரும் பேற்றினைப் பெற்ற திரு நீலகண்டப் பெரும்பாணர் மனைவியாரோடும் திரு நல்லூர்ப் பெரு மணத்திலே இறைவனது திருவடியைச் சார்ந்தார். பிள்ளையார் உலகில் வதிந்த காலம் கிறிஸ்தாப்தம் 650 வரையிலாமென ஆராய்ச்சியாளர் கூறுவர். திருநாவுக்கரசு சுவாமிகளை துன்புறுத்திப் பின்னர்ச் சைவனுகிய மஹேந்திர வர்மன் என்னும் பல்லவ மன்னன் ஏழாம் நூற்றுண்டின் முற்பாகத்தி லிருந்தவன். இவன் பலகலை விநோதன். குடுமியா மலைக் கல்வெட்டு இவனுற் பொறிக்கப்பட்டதென எண்ணுதற் கிடமுண்டு. இக்கல் வெட்டு இசைமர புணர்த்துவது. சுத்த ரிஷபம், பிரதி மத்திமம், சுத்த தைவதம், என இக்காலத்து வழங்கும் மூன்ன ஸ்வர ஸ்தானங்களையொழித்து எஞ்சிய ஒன்பது ஸ்வரஸ்தானங்களைக் கொண்டு நடப்பது. அந்தரகாந்தாரத்தை அந்தரம் எனவும் காகலி நிஷாதத்தைக் காகலியெனவும் பெயரிட்டு அவற்றினை முறையே அ. க. என்னும் எழுத்துக்களாற் குறியீடு செய்திருக்கும் முறைமை இக்கல் வெட்டின்கண் நோக்கற்பாலது.

ஆளுடைய பிள்ளையாரும் ஆளுடையவரசும் இயற்றிய தேவாரத் திருப்பதிகங்களும் குடுமியா மலைக் கல்வெட்டும் ஏழாம் நூற்றுண்டிலே தமிழ் நாட்டில் வழங்கிய இசை மரபினைத் தெரிவிப்பன.

ஒன்பதாம் நூற்றுண்டின் முதற்பாகத்திலே சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திலே பண்டைத் தமிழிசை மரபு வழக்கிலிருந்தது. அக்காலத்திலே யிருந்த பத்திரனர் என்னும் பாணர்,

"மதி மலி புரிசை மாடக் கூடற்
பதி மிசை நிலவு பானிற வரிச்சிற
கன்னம் பயில் பொழிலாலவாயின்
மன்னிய சிவன் யான் மொழிதருமாற்றம்
பருவக்கொண் மூப்படிபெனப் பாவலர்க்
குரிமையினுரிமையி னுதவியொழி திகழ்
குருமாமதிபுரை குலவியருடைக் கீழ்ச்
செருமாவுகைக்கும் சேரலன் காண்க
பண் பாலியாழ் பயில் பானபத்திரன்
தன்போலென் பாலன் பன்றன் பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண் பொருள் கொடுத்து வாவிடுப்
பதுவே"

என இறைவனருளிய திருமுகப் பாசுரத்தைப் பெற்று, அதனைக் கொண்டு சென்று மலைநாடெய்திக் கொடுங்கோளூரிலே சேரமான் பெருமானுபனுரையடைந்து பெரும் பொருள் பெற்றார்.

'பண்பு பெருகும் பெருமாளும் பாணனார்
பத்திரனார் பின்
கண்கள் பொழிந்த காதனீர் வழியக்
கையாற்றொழு தேத்தி
நண்பு சிறக்குமவர் தம்மை நகரின்
புறத்து விடைகொண்டு
தின்பொற் புரிசைத் திரு மதுரை
புக்கார் திருந்து மிசைப் பாணர்''

சைவப் பெரும்பாண ரிருவாது வாலாற்றினைக் கூறினம். அவர் காலத்தினையணுகிய காலத்தினராகிய வைஷ்ணவப் பெரும்பாண ரொருவாது வாலாறு சிந்தையை யுருக்கும் நீர்மையதாதலின் அதனையுஞ் சுருக்கமாகக் கூறுதும்.

சோழவளநாட்டிலே உறையூரிலே தோன்றிய திருப்பாணாழ்வார் திருவரங்கத்தம்மானுக்குப் பாடற்றிருத் தொண்டு செய்ய உத்தேசித்துப் புறப்பட்டுத் தாம் தாழ்ந்த குலத்தவாாதலின், அரங்கத் தெல்லையுட் புகாது தென் திருக்காவேரியின் தென் திசையை யடைந்து திருவமர் மார்பனைத் திக்குநோக்கித் தொழுது, கண்டமுங் கருவியுமொக்க இன்னிசைக் கீதம்பாடினர். இவ்வண்ணம் நிகழ்ந்து வருநாழி லொருநாள், வைகறைப் பொழுதிலே, திருவரங்கச் செல்வனுக்கு நீர் கொணர்தற்குப் பொற்குடத்தை யெடுத்துக் கொண்டு பொன்னித்துறையை யடைந்த லோக சாரங்கர் என்னும் அந்தணர் இவாது நீர்மையை யறியாதாராய் "எட்டச்செல்" என்று பல முறை பணித்தார். ஆழ்வார் இவ்வுலகத் தொடர்பை மறந்திருந்ததினல் அம்மொழி செவியுருமல் வாளா நின்றிட்டார். ஆங்கு நின்ற வேதியர் சிலர் இவர்மேற் டல கற்களை பெறிய அதனுனுஞ் சலியாது பாவசப் பட்டிருந்தார். அந்தணர் அஞ்சியகன்றனர். திருவரங்கேசன் லோகசாரங்க முனிவருக்குக் கனவிலே தோன்றி "நமக்கு நல்லன்பராகிய பாண்பெருமாளை இழிவாக நினையாமல் நீர் சென்று தோள்களில் எழுந்தருளப் பண்ணிவாரும்" என்று நியமிக்க அவரும் வைகறையில் எழுந்துசென்று பாணரது திருவடிகளைத் தொழுது திருவரங்கச் செல்வாது கட்டளையைத் தெரிவித்தார். பாணர் முதலிலே மறுத்து நின்றுரேனும் ஆண்டவனுடைய கட்டளையை மறுத்தற் கஞ்சி அநந்த சயனனுக்குத் தம்மை யர்ப்பணஞ் செய்து நின்றுர். பின்னர் லோக சாரங்கர் தோளிற் கொண்டு சென்றுவிடத் திருப்பாணழ்வார் அழகிய மணவாளனது திருமேனியழகில் ஈடுபட்டு "அமலனுதிபிரான்" என்னும் பிரபந்தத்தை யருளிச் செய்து, அண்டர்கோன் அணியரங்கன் என்ன முதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணுவே" எனக் கூறி மறைந்தருளினர். முன்னுளிலேயிருந்த பாணர் முடியுடை வேந்தரையும் குறுநில மன்னரையும் பாடிப் பொருள் பெற்றனர். பின்னுளிலிருந்த திருநீலகண்டப் பெரும்பாணர், பாணபத்திரனர், திருப்பாணாழ்வாராகிய மூவரும் ஆண்டவனைப் பாடியருள் பெற்றனர்.

# மகளிர் குருகுலம்

பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியார்.

"மக்கடாமே யாறறிவுயிரே" என்னும் இய னூற் கொள்கைப்படி பொறியுணர்வோடு சிறந்த மனவுணர்வுடையாரே மக்களாவர். மனவுணர்வென்பது தக்கவின்ன தகாதன வின்னவென ஆராய்ந்து தெளிவது. அவ்வு ணர்வு மக்களல்லாத பிறப்புக்களிலும் ஒரு சிறிது காணப்படும். எனினும் அவ்வுணர் வின் மலர்ச்சிநிலை மக்கட் பிறப்பிற்கே சிறந்ததாகும். இங்ஙனம் மக்களுக்கு இயற் கையானமைந்த மனவுணர்வைப் பெருக்கிக் கோடற்குக் கருவியாக வுள்ளது கல்வியே யாகும். கல்வியறிவின்றேல் இறைவனரு ளான் இயற்கையி னமைந்த மதி நுட்பம் விளக்கம் பெறாது. நிரம்பிய நூலின்றிக் கோட்டிகொளல் அரங்கின்றி வட்டாடியற் றெனக் கூறிய பொய்யில் புலவர் பொரு ளுரை இதனை வலியுறுத்துவதாகும். புறக் கண் பெற்றார் கதிரொளியின் றுணைகொடு பருப் பொருள்களைக் காண்டல்போல, அகக் கண்ணாகிய மதி நுட்பம் பெற்றார் கல்வியின் றுணைகொண்டே, நுண் பொருள்களைக் காண்டல் வேண்டும். நுண் பொருட் காட்சி யானன்றி நல்லின்பந் துய்த்தல் இயலாத தொன்றாம். ஆகவே நம் வாழ்க்கையிற் பெ றக்கடவ நல்லின்பம் நுகர்தற்குக் கல்வி யறிவே சிறந்த சாதனமென்பது போதரும். நடுவனதெய்த இருதலையும் எய்துமென்ற படி பொருளானே அறனும் இன்பமும் எய்துமென்றல், அப்பொருள் அவற்றுக்கு ஒரு சார் துணை நிற்பது பற்றிக் கூறியதா கும். அறம் பொருளின்பம் முதலிய எல்லா வற்றையும் ஒருங்கு தரவல்லது கல்வியறிவே யாகுமாதலின் அறனையும் இன்பத்தையும் பொருளான் எய்தலாமென்பது ஒருசார் துணைபற்றியன்றி முழு ஆற்றலும் அப்பொ ருட்குள்ளன வென்று கோடற்கு ஏது வில்லை. இங்ஙனம் வாழ்க்கை நலன்களைச் செவ்விதின் அளிக்கவல்ல கல்வியறிவை ஆண் பெண் என்னும் இருபாற்பட்ட மக்க ளனைவரும் உரிய பருவத்தில் தவறாது பெ றும் கடப்பாடுடைய ராவர். கல்வி நலம் பெறாத ஆடவரும் மகளிரும் மணமிலா முருக்க மலரென மதிக்கப் படுதலோடு தம் வாழ்க்கை யின்பத்தைச் செவ்விய முறையில் எய்துதற்கும் இயலாதவராவர். பண்டைக் காலந் தொட்டுப் பெரும்பாலும் ஆடவர் கல் வியுடைய ராகவும் பெண்பாலார் சிறுபான் மை கற்றவராகவும் உள்ளனரென்பது யாவ ரும் உணர்வர். அங்ஙனம் நேர்ந்ததற்குக் காரணம் ஆண் மக்கள் பெண்பாலரை ஒரு வகை இன்ப நுகர்ச்சிக்கும் இற்பணி முதலி யன செய்தற்கும் உரியராக்கி அவ்வளவில் அமைதியுற்றதே யாகும். மகளிரைக் கலையறி வுடையராக்கினால் தமக்கு ஏதம் உண்டாம் என்று கருதி ஆண்மக்கள் விலக்கி வந்தா ரென்று கூறுதற்கு இடனின்று. மகளிரது கல்வி வளர்ச்சியில் சிரத்தை மேற்கொள் ளாத மடிமைக் குற்றம் ஆண் பாலரை விட் டதென்று சொல்லவும் வழியில்லை. மகளிர் கற்றற் குரியரல்லர் என்பது பற்றிப் பிறர் கூறும் தடைகளுக்கும் அவற்றை மறுத் துரைக்கும் விடைகளுக்கும் இக்கட்டுரையில் இடனளித்தல் வேண்டாததொன்றென விடு க்கின்றேன். அத்தடை வலியற்ற தொன்று கும். அஃது இக்காலத்தில் அறிஞர்பலரானும் கண்டிக்கப்பட்டு ஆண் மக்களை யொப்பவே பெண்பாலாரும் கல்வி நலமுடையராய்த் திகழ்தல் வேண்டுமென்று நிலைபெறுத்தப் பட்டுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம் தமிழ் நாட்டில் நல்லிசைப் புலமை மெல்லியலார் பலரிருந்து சங்க மேறித் தம் புலமை நலத்தைச்சிறந்த பாடல்

களின் முகமாக வெளிப்படுத்துள்ளார். சுவைநல முதிர்ந்த சிறந்த காவியங்களை மதி வலியினாராய்ந்து அச்சுவைக் கடலிற்றிளைத்துச் சொற்பொருளின்பங்களைத்தானும் நுகர்ந்து தன் கணவனுக்கும் ஊட்டி மகிழ்விக்கும் அறிவுடைப் பெண்மணியோடு கூடி வாழும் பேறு ஓர் ஆடவனுக்கு வாய்க்குமாயின், அதனினுஞ் சிறந்த வாழ்க்கையின்பம் யாதுமின்றாம். பொறிகளினாற்றலால் நுகரும் இன்பத்திலும் அறிவாற்றலானுகரப்படும் இன்பம் சிறந்ததென்பது அறிவுலகங் கண்ட முடிபாகும். மகளிர் கற்புடையாராகவும் நற்குண முடையாராகவும் இருத்தற்குக் கல்வி சிறந்த காரணமாகுமாவென்று ஒரு சிலர் கேட்கக்கூடும். கற்புமுதலிய நற்குணங்களின் உண்மையின்மைகளைக் கல்வியின் உண்மையின்மைகளாற்றுணிதல் இயலாததொன்றாம். ஆயினும் அறிவு விளக்கம் கல்வியுடையார் பாலன்றிக் காண்டலரிது. மகளிர் நற்குண நற்செய்கை யுடையாராக இருத்தலோடு சிறந்த கலாஞானங் கைவரப் பெற்றவராகத் திகழ்தல் மிகவும் பாராட்டத் தக்கதன்றோ? மகளிர்க்குச் சிறந்த கல்வி முதற்கண் அளித்துவிட்டால் அவர் தம் நாகரிக முறைக்குப் பின்னர் முயற்சிமேற்கோடல் வேண்டா. கல்வி நலமில்லாத பெண்டிரை நாகரிகவுலகிற்கு ஆளாக்க மேற்கொள்ளும் முயற்சி, கருதியபயனை யளியாதென்பது ஒருதலை. மகளிர் கல்வி அவர் அறிவு விளக்கத்திற்கும் அவர்தம் கணவரது வாழ்க்கையின்பத்திற்கும் வழித்தோன்றல்களாகிய மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் சிறந்த ஏதுவாகுமாதலின் அதன் இன்றியாமையைப் பற்றி விரித்துரைக்கவேண்டா.

இனி எத்தகைய கல்வி முதற் கண்வேண்டப் படுவது என்பதைப் பற்றிச் சிறிது கூறுவாம். இக்காலத்தில் அரசியலார் மொழி, வேற்றுமொழியாகலின் உரியநாட்டு மொழியோடு அரசியலார் மொழியும் பயில வேண்டும். நமக்குரிய நாட்டு மொழியிற் பயிற்சி செவ்வையாகப் பெற்றிலேமெனின் வேற்று மொழிப் பயிற்சியாற் கிடைக்கும் அறிவு, வாழ்க்கை நலம் பெறுதற்கு அத்துணைச் சிறந்ததாகாது. நமக்குரிய மொழியாகிய தமிழோ இனிமையும் அறிவு விளக்கத்திற்கு வேண்டிய நூற்பெருக்கங்களும் உடையதாகும். தொன்மையானும் இலக்கணவரம்பினுனும் பயில்வாரைச் சுவைக்கடலிற்றிளைப்பிக்கும் காவியப்பெருக்கங்களானும் சிறப்புற்று விளங்குவதொன்று. ஆதலின் தமிழ் மொழியைத்திருத்தமான முறையிற் கற்றல் வேண்டும். அதனோடு ஓரளவு ஆங்கில மொழிப் பயிற்சியும் இருத்தல் வேண்டும். ஆங்கில மொழிப்பயிற்சியின் பயனைவிதந்து கூற வேண்டா. தையல் முதலிய தொழிற்பயிற்சி பெண்மக்களுக்கு இன்றியமையாததாகலின் அக்கலைகளையும் முதலில் ஓர் அளவு பயிற்ற வேண்டும். பெண் மக்களுக்குத்தாய்மொழிப் பயிற்சி சிறந்ததாகவும்மற்றது துணையாகவும் அமைதல் பொருத்தமாகும்இசைப்பயிற்சியும் பெண்பாலருக்குச் சிறந்ததாகும். இசைநலந் தழுவிய இயலின்பமே உள்ளத்தைக் குளிர்விப்பதாகும். இசைமுறையா னமைந்த தமிழ் மறைகளை மன முருகப்பாடி இன்புறும் வாழ்க்கையே எல்லாவற்றினும் விழுமியதாகும். ஆகவே தமிழ் ஆங்கிலம் இசைக்கலை தொழிற்கலை என்னும் இவற்றைப் பயிற்றற்குரிய கல்லூரி யொன்று நம் நாட்டில் அமைதல் நன்று. நம் தமிழ் நிலத்துப் பெண் மக்களுக்கெல்லாம் பொதுவாக அக் கல்லூரி அமைதல் நன்றாயினும் முதலிற் கல்வித் துறையிற் பிற்பட்டு நிற்பவர்களும் நாகரிக வேட்கை மிக்குடையாரும் ஆகிய நம் நாட்டுக்கோட்டை நகரத் தனவைசியப் பெண் மக்களுக்கென்று ஒரு சிறந்த குருகுலம் அமைதல் நன்றாகும். நம்மரபுச் சோதரிகளுக்கென்று அமைக்கப்படும் குருகுலம் நாளடைவில் பெருக்கமுற்று நம் நாட்டுச் சோதரிகளுக்கும் இடனளிக்கும் நிலையில் வளர்ச்சி யெய்தும் வண்ணம் வேண்டுவன புரிதல் வேண்டும்.

நம் பெண் மக்களின் குருகுல அமைப்புச் சிறந்த முறையிலிருத்தல் வேண்டும். கல்வியொன்று மாத்திரமே முக்கிய நோக்கமாக இருத்தலாகாது. நற்குண நற்செய்கைகளாகிய சீலம் பெரிதும் பாதுகாக்கப்படல் வேண்டும். உயிரினுஞ் சிறந்ததாகிய ஒழுக்கத்தின் பாதுகாப்பு முதலாவதாகவும் அடு

த்தபடியாகக் கல்வி யறிவு வளர்ச்சியும் குருகுலத்தின் நோக்கங்களாதல் வேண்டும். குருகுலம் நம் தனவைசியர் நாட்டில் சிறந்த நீர் நில வளங்கள் செறிந்த ஓர் அகன்ற இடத்தில் அமைதல் வேண்டும். மக்கள் நெருங்கிய பெரு நகரங்களிலும் அந்நகரங்களுக்குச் சற்று புறம்பாகவுள்ள ஒரு தனியிடஞ் சிறந்ததாகும். அவ்விடத்தில் அமைக்கப்படும் குருகுலம், தெய்வ வழிபாடு செய்யுமிடம், உணவுச்சாலை, பெண்கள் தனித் தனியே தங்குதற்குரிய அறைகள், கல்வி பயிலுமிடம், விளையாடுமிடம், ஆசிரியர்களுக்குரிய இல்லங்கள் முதலிய எல்லா முடையதாக அமைதல் வேண்டும். ஆசிரியர்கள் பெரும்பாலும் பெண் மக்களாகவே இருத்தல் வேண்டும். முதல் வகுப்பு முதற் கற்பிக்கப்படல் வேண்டும். முதலிற் றொடங்கப்படும் குருகுலம் பத்து ஆண்டுக் கல்வியைப் போதிக்கும் நிலையில் அமைதல் நன்றாம். பெற்றோர்கள் தத்தம் பெண் மக்களைக் குருகுலத்திற் சேர்த்த பின் அப்பெண்கள் குருகுல மக்களாக உண்டுடுத்து வளர்ந்து கல்வியறிவு வாய்க்கப்பெற்று ஞானமணிகளாகப் பெற்றோரைப் பின்னர் அடைதல் வேண்டும். அத்துணை நம்பிக்கை பெற்றோர்க்கு ஏற்படும் படி குருகுலம் பணி செய்தல் வேண்டும். பல்லாற்றானும் இம்மகளிர் குருகுலத்துக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குவது யாழ்ப்பாணத்துள்ள இராமநாத வித்தியாலயமாகும். இஃது இலங்கையில் சிறந்த கல்வியாளராகவும் தேசாபிமானியாகவும் விளங்கிய Sir. P. இராமநாதன் அவர்களால் நிறுவப்பெற்று நடைபெற்று வருகின்றது. இக் குருகுலத்தை இரண்டாண்டுகளின் முன்னர் நேரிற் கண்டு மகிழ நேர்ந்தது. அப்பொழுது என் உள்ளத்தெழுந்த உவகைக்கு அளவின்று. ஆங்குள்ள சோதரிகளெல்லாரும் ஆங்கிலம் தமிழ் இசைப் பயிற்சியுடையராய்த் திகழ்தலைக்கண்டு பேருவகை பூத்தேன். அக்குருகுல அமைப்பு Sir. P. இராமநாதனவர்களின் புகழுடலாகக்காணப் பட்டது. பூதவுடலிறக்கப்புகழுடல் ஆக்க முறும் என்பதை கண்கூடாகக் கண்டேன். அவ்வமைப்பையே நம் மகளிர்குருகுலத்துக் குப்படியாக மேற்கோடல் நன்றாகும்.

இத்தகைச் சிறந்த மகளிர் குருகுலத்தை நிலைபெறச் செய்வதற்கு மூலதனம் தொகுத்தல் வேண்டும். அதற்கு ஒரு நிருவாக சபையமைத்து அதன்கட் சிறந்த அபிமானிகளும் உதவியாளரும் உறுப்பினராதல் வேண்டும். அச்சபைக்குத் தலைவர் ஒருவரும் காரியதரிசிகள் இருவரும் உறுப்பினர் பதின்மரும் இருக்கலாம். இவர்கள் கூடிக் குருகுல அமைப்புக்கு வேண்டுவன சூழ்ந்து முடித்தல் வேண்டும். நம் நகர வைசியச் செல்வர்களனைவரும் மனமுவந்து பொருளுதவி புரிதல் வேண்டும். தொகுக்கப்படும் பொருளைக் கவர்ன்மெண்ட் பாங்குகளில் வைத்துப் பாதுகாக்க வேண்டும். முதலில் நம் நகரங்களுள் ஒன்றில் இதுபற்றி ஒரு சபை கூடி நிர்வாக சபையையும் குருகுல விதிகளையும் நிர்ணயஞ் செய்தல் வேண்டும். பின்னர் வேண்டுவனவற்றை அந் நிர்வாக சபை செய்துகொள்ள உரிமையளித்தல் வேண்டும். இக்குறிப்புக்கள் அறிஞர் குழுத் திருத்தித் தீர்மானித்தற்குரிய ஆலோசனைகளுக்கு முதற்படியாக இங்கே குறிக்கப் பட்டன.

எல்லாவற்றுக்கும் மூலமாகவுள்ளது கல்வியாதலின் இம் மூலப்பொருளை நம் பெண்மணிகள் பெறுதற்கு நாம் ஒவ்வொருவரும் உதவி புரிதல் வேண்டும். கல்வியின் மையாகிய இருட்டறையில் தூங்கிக்கிடக்கும் நம் சோதரிகளைக் கலை விளக்கேற்றி ஒளி பரப்பித் தட்டி எழுப்புதலே இப்பொழுது விரைந்து செயற் பாலதாம். நம் வாழ்க்கையில் எத்தனையோ பல் செலவுகளைச் செய்கின்றோம். அவற்றால் எய்தும் பயன்கள் எல்லாவற்றுள்ளும் இச்செயல் மிகச் சிறந்ததாகும். ஆதலின் இது குறித்துச் செய்யப்படும் பொருட் செலவு சிறந்த அறமாகத் திகழ்தலோடு நம் குலத்துப் பெண்களின் அறிவை விளக்கமுறச் செய்து மரபையும் உயர்த்துவதாகும்.

தனவைசியச் செல்வர்களே!

நம் சோதரிகள் நாகரிக வுலகில் அறிவுடையராய் நல்வாழ்வெய்தி யின்புறுதலில் நமக்கு உண்மையான அவாவிருக்குமாயின் காலந் தாழ்த்தலின்றி இன்றே எழுமின்! நம் மக

# மைசூரின் முன்னேற்றம்.

"சரித்திரக்காரன்"

## இயற்கை வளம்

பாரத தேசத்தின் பல பாகங்களில் பிரகிருதி தேவதை தன் பூரண ஆட்சியைச் செலுத்தி வருகிறாள் என்றாலும் மைசூரில் அவள் திருக்கோயில் கொண்டிருக்கிறாள் என்று கூறுவது மிகையாகாது. தட்சணத்தின் மத்திய பாகத்தில் அமைந்திருக்கும் இந்தச் சமஸ்தானத்தை மேற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் தழுவிக் கொண்டிருக்கின்றன. சமுத்திர மட்டத்திற்கு மேல் சுமார் இரண்டாயிரம் அடி உயரமுள்ள இந்தப் பிரதேசம் முக்கோண வடிவமாய், பல நதிகளின் உற்பத்திஸ்தானமாகவும், அவைகள் தவழ்ந்து விளையாடுவதற்குரிய இடமாகவும் அமைந்திருக்கிறது. காவிரி, பெண்ணை, பாலாறு, துங்கை, பத்திரை முதலிய பேராறுகளும், அர்க்காவதி முதலிய சிற்றாறுகளும் இந்த நாட்டிலேயே பெருக்கெடுத்தோடுகின்றன. பள்ளத்தாக்குகளும், மேட்டுப் பாங்கான பூமிகளும், உயர்ந்த குன்றுகளும் இந்தச் சுதேச சமஸ்தானத்திற்கு விசேஷமான ஓர் அழகைக் கொடுக்கின்றன. ஆனால் இந்த நாட்டிலுள்ள மலைப் பிரதேசங்களின் தனிப் பெருமை என்னவென்றால், இவைகள் வெறும் இறுகிப்போன கற்பாறைக் கூட்டங்களாகவோ, மண் பிண்டங்களாகவோ இருக்கவில்லை. அதற்கு மாறாக, மனித சமூகத்தின் நல் வாழ்வுக்கு வேண்டிய பல பொருள்களை ஈன்று அளிக்கும் பெருமையோடு பிரகாசித்து வருகின்றன.

சந்தன மரங்களின் செறிவும், காபி செடிகளின் படிப்படியான பசுமையின் ஈட்டமும், பழந்தரு மரங்களான மா, பலா, விளா முதலியவைகளின் அடர்த்தியும் கண்கொள்ளாக் காட்சிகளன்றோ? தவிர, தங்கம் இரும்பு முதலிய உலோக வகைப்பொருள்கள் பலவும் இந்தச் சமஸ்தானத்தில் உண்டாகின்றன. உலகத்திலேயே இரண்டாவது பெரிய நீர் வீழ்ச்சி என்று சொல்லப்படும் கெரொஸப்பா நீர் வீழ்ச்சியும், மைசூரின் பல பாகங்களுக்கும் மின்சார வசதிகளை அளிப்பதற்கு உதவும் சிவசமுத்திர நீர் வீழ்ச்சியும் இந்தச் சமஸ்தான எல்லைக்குள்ளேயே இயற்கையாக அமைந்து இருக்கின்றன. ஆங்காங்கு காணப்படும் பூமியின் ஏற்றத் தாழ்வுகளும், சிற்றருவிகளும், சிறு குன்றுகளும், அடர்ந்த செடி கொடிகளும் மனிதனுக்கு ஒரு புதிய சக்தியையும் புத்துணர்ச்சியையும் அளிக்கின்றன. உதாரணமாக பெங்களூரிலிருந்து மைசூருக்கு ரெயில் பிரயாணஞ் செய்யும் ஒருவன், ரயில் பாதையின் இருமருங்கிலும் காணப்படும் இயற்கைப் பொலிவினைக் கண்டு ஒருவித ஆவேசங்கொள்ளாமலிருக்க முடியாது. புனாவுக்கும் பம்பாய்க்கும் இடையேயுள்ள இயற்கைக் காட்சியானது எப்படி சிவாஜிக்கு வீரவுணர்ச்சியை ஊட்டியதோ அது போலவே, மைசூரின் இயற்கை வனப்பு, ஹைதருக்குச் சுயேச்சை உணர்ச்சியை ஊட்டியிருக்க வேண்டுமென்று இந்தக் காட்சிகளைக் கண்டு களித்திருப்போர் நன்கு அறிவர்.

---

ளிர் குருகுலத்துக்கு வேண்டுவன சூழ்மின்! மூலதனந் தொகுக்க முற்படுமின்! தத்தம் மாலியன்ற அளவு பொருளுதவி புரிமின்! தமிழ் நலம் பேணத் தலைப்படுமின்! நம் சோதரிகள் சிறந்த கவியரசிகளாக விளங்குதலைக் காண விரைமின்! சொல்லுதல் எளிது; செய்தல் அரிது; ஆதலின் அரியதாகிய செயலை மேற்கொண்மின்! சொற்பொருள் வடிவினராகிய உமாநாதர் நம் நன் முயற்சியைப் பயனுறச் செய்து இன்புறுத்துவாராக!

சரித்திர சம்பந்தம்

இத்தகைய இயற்கை வளனும் செயற்கை வனப்பும் படைத்த மைசூர், வேதகாலந் தொடங்கி சரித்திரப் பிரசித்தி பெற்றதாயிருக்கிறது. வேதகாலத்து ரிஷிகளால் போற்றப்பட்ட கிஷ்கிந்தை யென்பது இந்த மைசூர் சமஸ்தானத்தை அடக்கிக்கொண்டிருந்ததென்று சரித்திரக்காரர் துணிகின்றனர். இதிகாச காலங்களில் 'மாஹிஷகம்' என்று இந்நாடு அழைக்கப்பட்டது. "ரமணீயமான மாஹிஷகம்" என்கிறார் வால்மீகி. (1) இதுவே பிற்காலத்தில் மஹிஷ மண்டலம் என்று வழங்கப்பட்டது. மஹிஷாசுரன் என்ற அரக்கன் ஆண்டு வந்ததனால் இதற்கு மஹிஷமண்டலம் என்ற பெயர் வந்ததென்று சிலர் கூறுவர். (2)இந்த மஹிஷ மண்டலம் என்பதுவே தமிழில் எருமைநாடு என்று வழங்கப்பட்டதென்பது சில சரித்திரக்காரர் துணிபு. இந்த எருமைநாடு தமிழ்நாட்டில் ஒரு பகுதியாக இருந்ததென்றும், தமிழ் மன்னரின் ஆதிக்கத்திற்குட்பட்ட ஒரு குறுநில மன்னன் இதை ஆண்டுவந்ததாகவும் சொல்லப்படுகின்றன. (3) மைசூரையும் அணித்தான குடகு நாட்டையும் இராஜராஜன், இராஜேந்திரன் முதலிய சோழமன்னர்கள் தங்கள் ஆதீனத்திற் குட்படுத்திக்கொண்டிருந்தார்கள் என்பது அவர்களுடைய சாஸனங்களில் காணப்படும் மெய்க்கீர்த்திகளினின்று புலனாகும். (4)

தற்கால அரச பரம்பரை

சரித்திரப் பிரசித்தி வாய்ந்த இந்த நாட்டை இதுபோது ஆண்டு வருகிறவர் ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் பகதூர் அவர்கள். இவருடைய முன்னோர்களைப்பற்றிய வரலாற்றைச் சிறிது சுருக்கமாகத் தெரிவித்து மேலே செல்வோம். கி. பி. பதினுன்காம் நூற்றாண்டின் இறுதியில், விஜயராஜன், கிருஷ்ணராஜன் என்ற இரு சகோதரர்கள், வட இந்தியாவில் கத்தியவார் சமஸ்தானத்திலுள்ள துவாரகையினின்று நீங்கி கர்நாடக தேசத்திற்கு வந்தார்கள். வந்து, மைசூரைச் சேர்ந்த ஹதிநாடு என்ற பிரதேசத்தை யடைந்து, அப்பிரதேசத்துமன்னன் சித்த சுவாதீன மில்லாதவனு யிருக்கிறானென்றும், அவனது குமாரத்தி அண்மையிலுள்ள ஒரு சிற்றரசனுக்குப் பலவந்தமாக விவாகஞ் செய்து கொடுக்கப்படப் போகிறாளென்றும், அப்படித் தனக்கு மணஞ் செய்து கொடுக்கப் படாவிட்டால், அப்பெண்ணின் தந்தையினுடைய இராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக் கொள்ளப் போவதாக அக்குறுநில மன்னன் பயமுறுத்திக் கொண்டிருக்கிறானென்றும் கேள்வியுற்றார்கள். இதனால் கோபாவேசங் கொண்ட இவ்விரு சகோதரர்களும் மேற்படி சிற்றரசனைக் கொன்று அவன் இராஜ்ஜியத்தை வசப்படுத்திக் கொண்டார்கள். மற்றும் விஜயராஜன் என்பான், மேற்படி பெண்ணை விவாகஞ் செய்து கொண்டான். இம்மணத்திற்குப் பிறகு விஜயராஜன், தன் முன்னோர்கள் அனுஷ்டித்து வந்த வைஷ்ணவ மதத்தினின்று விலகி, வீர சைவ மதமாகிய லிங்காயத்து மதத்தை அநுஷ்டித்து வந்தான். இவனுக்குப்பிறகு சுமார் இருநூறு வருஷங்கள் வரை, இவனுடைய பரம்பரையினரே, சாதாரண பாளையக்காரர் என்ற அந்தஸ்தில் அரசாண்டுவந்தார்கள். இந்தக்காலத்தில் தென்னிந்தியாவில் விஜயநகர மன்னர்கள் சர்வாதிகாரம் செலுத்தி வந்தார்கள்.

மைசூர் அரசாங்கமும் இந்த விஜயநகர சர்வாதிகாரத்துக்குட்பட்டேயிருந்தது. இப்படியிருக்கையில், கி, பி, 1609 ம் வருஷத்தில் மைசூரை யாண்டு வந்த ராஜ உடையார் என்பவன், விஜய நகர ராஜியம் சீரழிந்து வருவதை யாதாரமாகக் கொண்டு, மேற்படி விஜய நகர அரசாங்க நிருவாகத்திற்குட்பட்டிருந்ததும், மைசூருக்கு மிகச் சமீபத்தி


(1) கிஷ்கிந்தா காண்டம்: சர்க்கம் 41.

(2) மஹிஷஊர்—மஹிசூர்—மைசூர் என்று மருவியது.


(3) 'நாரரி நறவின் எருமையூரன்.'

அகம் 36


(4) "கங்கபாடியும் நுளம்பாடியுந் தடிகைபாடியும் குடமலை நாடும் கொல்லமும்" என்பது இராஜ ராஜசோழனுடைய சாஸன மொன்று.




மைசூர் லலிதா மகால்.




கண்ணம்பாடி அணை.



கண்ணம்பாடி அணையின் மற்றொரு காட்சி.




மைசூரில் ஒரு வீதி.



ஸ்ரீ சாம ராஜேந்திர உடையாரின் உருவச்சிலை.



பெங்களூர் அரண்மனை.



சாமுண்டி மலையடிவாரம்.



தசரா ஊர்வலம்.

விருத்ததுமான ஸ்ரீ ரங்கப் பட்டணக் கோட்டையைக் கைவசப் படுத்திக் கொண்டு அவ்வூரையே தனது ராஜதானியாக்கிக் கொண்டான். மற்றும், வீரசைவ மதத்தினின்று விலகி, தனது முன்னோர்கள் அனுஷ்டித்து வந்த வைஷ்ணவ மதத்தையே மீண்டும் அநுசரிக்கத் தொடங்கினன். இப்படியே பதினேழாவது நூற்றாண்டுக் கடைசி வரை இவனுடைய வமிசத்தினர் ஒழுங்காக இராஜ்ய பரிபாலனஞ் செய்து வந்ததோடு, இராஜியத்தையும் விஸ்தீரணப் படுத்திக்கொண்டு வந்தார்கள். இதன் பிறகு அரசு கட்டிலேறிய மன்னர்கள், சுகபோகங்களில் ஈடுபட்டவர்களாகவும் திறமையற்றவர்களாகவும் இருந்தார்கள். இதன் பயனாக மஹாராஷ்டிர தேசத்தில் எப்படி பீஷ்வாக்கள் பூரண ஆதிக்கம் செலுத்தி வந்தார்களோ அப்படியே இங்கும் பிரதம மந்திரிகள் அரசர்களைப் பொம்மைகள்போல் ஆட்டி வைத்து வந்தார்கள். இந்த ஆட்டத்திற்கு அடங்கி, பெயரளவில் அரசர்களாக இருந்தவர்களில் ஒருவரான ஸ்ரீ சிக்க கிருஷ்ணராஜ உடையார் என்பவர் 1736 ம் வருஷ முதல் 1766 ம் வருஷம் வரை ஆண்டு வந்தார். இவருடைய காலத்திலேயே ஹைதர் அலி முன்னுக்கு வந்து, அரசாங்க நிருவாகத்தைத் தானே ஏற்றுக் கொண்டான். ஹைதர் காலத்திலும் அவன் மகன் திப்பு காலத்திலும், மைசூரின் பரம்பரை ஹிந்து மன்னர்கள், அரண்மனைப் பொம்மைகளாகவே இருந்தார்கள். கடைசியில் 1799 ம் வருஷம் திப்பு சுல்தான், கடைசி மைசூர் யுத்தத்தில் கொல்லப்பட்ட பிறகு, அரசாங்கம் பழையபடி ஹிந்து மன்னர்கள் கையில் வந்தது. இதற்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பெரிதும் துணை செய்தனர். அப்பொழுது பட்டத்துக்குரியரென்று தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் ஐந்து வயதுடையாராகவே இருந்தார். இவருக்குத் துணையாக இருந்து அரசாங்கத்தை நடத்த, முன்னம் ஹைதர் அலி கானிடத்திலும் திப்பு சுல்தானிடத்திலும் மந்திரியாக இருந்த பூர்ணய்யாவை பிரிட்டிஷார் திவானாக நியமித்தனர். இந்தக் கிருஷ்ணராஜ உடையாருடைய பேரப்பிள்ளையே தற்போதுள்ள அரசர். இவர் பட்டத்துக்கு வந்து சுமார் நாற்பது வருஷங்களான போதிலும் அரசியல் நிருவாகத்தை ஏற்றுக்கொண்டு சுமார் 33 வருஷங்களாகின்றன. இவரை "கலியுக ஜனகர்" என்று கூறுவது முற்றிலும் பொருந்தும். இவருடைய முகத்தில் ராஜ கம்பீரமும் தவ முனிவர்களின் சாந்தமும் கலந்து பொலிகின்றன. குடிதழீ இக்கோலோச்சி, காட்சிக் கெளியராய், கடுஞ் சொல்லற்றவராய் விளங்கும் இம் மன்னர், அருங்கலை விநோதர்; சங்கீத ரஸிகர்; பல மொழிகளிலும் புலமை படைத்தவர். வித்துவான்களின் திறமையறிந்து ஆதரிக்கும் பெருந்தகையாளர். இவரைப்பற்றி ஒரு பெரியார் அபிப்பிராயங் கூறும்போது "மைசூர் மன்னர், அரசரிலே மனிதராகவும், மனிதரிலே அரசராகவும் இருக்கிறார்" என்று வியந்து பாராட்டினர். இவரை நேரில் கண்டவர்களுக்குத்தான் இந்த வாக்கியத்தின் உண்மை புலனாகும்.

இந்த மன்னருடைய ஆட்சிக் காலத்தில் சமஸ்தானம் பல துறைகளிலும் முன்னேற்ற மடைந்து வருகிறது. பல சமஸ்தானங்களுக்கும் வழி காட்டியா யிருப்பது மைசூர் என்று எங்கணும் போற்றப்படுவதற்குக் காரணம் இந்தப் பெருந்தகையினுடைய விடா முயற்சியும் சலியா உழைப்புமே காரணங்களாகும். சுதேச மன்னர் பலர், நிருவர்கப் பயிற்சி பெறும் பொருட்டு மைசூருக்கு வருகின்றனர் என்பதொன்றைக் கொண்டே இச் சமஸ்தானத்தின் நிர்வாகத்திறமை நன்கு புலனாகும். கைத்தொழில் முன்னேற்றத்திலாக, இயற்கை வளத்திலாக, மைசூர் முன்னணியில் நிற்கிறதென்றால் அதற்கு ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையாரும் அவருடைய மந்திரிமார்களுமே காரணமென்று மீண்டுங் கூறி இங்கு பார்க்க வேண்டிய முக்கியமான சில இடங்களை மட்டும் குறிப்பிடுவோம்.

### மைசூர் நகரம்

மைசூர் அழகியதொரு சிறு நகரம். மகாராஜாவின் நிரந்தர வாசஸ்தலம் இது தான்.

தோட்டங்கள் நிறைந்த இந்த நகரத்தை "உலகத்திலுள்ள அழகான நகரங்களில் ஒன்று" என நகர நிர்மாண நிபுணர்கள் வியந்து பாராட்டியிருக்கிறார்கள். சாமுண்டி மலையின் அடிவாரத்திலே இருக்கும் இந்நகரத்தில் இயற்கையும் செயற்கையும் கலந்துறவாடுகின்றன. நகரத்தின் மத்தியில் அரசருடைய அரண்மனை இருக்கிறது. அநுமதி பெற்று இதனை உள்ளே சென்று பார்க்கலாம். இதிலுள்ள தர்பார் மண்டபம், அம்பாவிலாசம் முதலியவைகள் சித்திரக்காரர்களுடைய மனோபாவம் எவ்வளவு தூரம் செல்லும் என்பதை நிரூபிக்கும் காட்சிப்பொருள்களாய் விளங்குகின்றன. ரவிவர்மாவின் கையினாலேயே வரையப்பட்ட ஓவியங்களை இங்கே காணலாம். வருஷந்தோறும் தசரா பத்து நாட்களும் ஷை தர்பார் மண்டபத்தில் அரசர் கொலு வீற்றிருப்பார். அப்பொழுது இது தேவேந்திர சபையாகவே விளங்குகிறது என்று சொல்வது எவ்விதத்திலும் உயர்வுநவிற்சியாகாது. அரண்மனை முழுவதும் விளக்குகள் ஜோதிமயமாய் பிரகாசிக்க, எதிரில் யானைகளும் குதிரைகளும் அணிவகுத்து நிற்க, ஆசார வாசலில் இரண்டு யானைகளால் தாங்கப்பெற்ற அம்பாரியின் மீது தென்னிந்திய நாதசுரம் முழங்க, எதிர் மேடையில் மல்லர்கள் தங்கள் வலிமையைக் காட்ட பரிவாரங்களுடன் அரசர் தர்பாருக்கு வருங்காலத்து, எதிர் மைதானத்தில் திரளாகக் கூடியிருக்கும் ஜனங்கள், இராஜபக்தி மேலீட்டால், சிரத்தின்மீது கரங்குவித்து, கண்ணீர் ஆறாய்ப் பெருக, "எங்கள் சுவாமி வந்துவிட்டார்; எங்கள் நாராயணர் வந்துவிட்டார்" என்று வாய்குழறக் கூறுங் காட்சி ஒரு தனிப்பெருங் காட்சியாகும். அரண்மனை மைதானத்தைச் சுற்றியுள்ள பெரிய வீதிகளில், அரண்மனைக் காரியாலயம், முனிசிபல் கட்டிடம், பானுமையா ஸ்கூல், லாண்ட்ஸ்டௌன் பஜார், டவுன் ஹால்முதலிய கட்டிடங்கள் விளங்குகின்றன. இந்தப் பெரிய அரண்மனைக்குப் பின்புறத்தில் "ஜகன் மோகன அரண்மனை" என்ற ஒரு கட்டிடம் இருக்கிறது. இங்குப் பலவிதமான வாத்தியங்களும், சித்திரப் படங்களும் மகாராஜாவின் விவாக காலத்தின் போது வழங்கப்பட்ட பரிசுகளும், வேறு பல நுண்பொருள்களும் காட்சியாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சிறு தொகை செலுத்தி அனைவரும் இதனுட் சென்று பார்க்கலாம்.

அரண்மனைக் கோட்டை வடக்கு வாயிலுக்கு எதிரிலுள்ள "இர்வின் சதுக்க"த்தின் மத்தியில் இப்பொழுதுள்ள மகாராஜாவின் தகப்பனார் ஸ்ரீ சாமராஜேந்திர உடையாருடைய உருவச்சிலை கம்பீரமாக நிற்கிறது. இதுவும் இஃது அமைந்திருக்கும் மண்டபமும் சலவைக் கற்களால் செய்யப்பட்டவை. இந்த மண்டபத்தின் சிகரம் தங்க ரேக்குகளினால் மூடப்பட்டிருக்கிறது. சுமார் மூன்றரை லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இந்த உருவச்சிலையைக் கடந்தால் 'தொட்ட பேட்டை' என்கிற பெரிய கடை வீதி எதிர்ப்படும். இது மைசூர் நகரத்தின் முக்கியமான வியாபாரஸ்தலம். தசராவின் கடைசி நாளன்று மகாராஜாவின் ஊர்வலம் இந்த வீதி வழியாகவே வன்னி மண்டபத்திற்குச் செல்லும். இவை தவிர, மகாராஜாவின் மோடார் நிலையம், குதிரை லாயம், மிருகக் காட்சிசாலை, அரசாங்கச் சர்வகலாசாலைக் கட்டிடங்கள், அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலை, பட்டு நெசவுசாலை, சாமராஜேந்திர கைத்தொழிற்சாலை முதலியன பார்க்க வேண்டிய இடங்களாகும். இவைகளைப் பார்த்துக்கொண்டு, சாமுண்டி மலைமேலேறிப் போகலாம். மலை மீது செல்வதற்குக் கற்படிகளாலாய கால் நடைப்பாதையொன்றும், வளைந்து வளைந்து செல்லும் அழகிய மோடார் பாதையொன்றும் இருக்கின்றன. கால் நடையாகச் செல்ல வேண்டுமானால் சரியாக ஆயிரம் படிகள் ஏற வேண்டும். வழியில் இடையிடையே தங்கி சிரம பரிகாரஞ் செய்து கொள்வதற்கு மண்டபங்கள் இருக்கின்றன. 600 வது படிக்குச் சரியாகப் பெரியதொரு நந்தி உருவம் கல்லினால் செதுக்கப் பட்டிருக்கிறது. இதுவும் பார்ப்பதற்குரியதாம். இப்படி மேலேறிச் சென்றால், நேரே சாமுண்டீசுவரி கோயிலை

அடையலாம். இஃதோர் அழகான இடம் கோயிலைச் சுற்றி நான்கு வீதிகளும் இடையிடையே மண்டபங்களும் இருக்கின்றன. தசரா முடிந்ததும், சாமுண்டி தேவியின் திருவிழா நடைபெறும். இதற்குத் திரளான ஜனங்கள் கூடுவார்கள். இரதோற்சவத்தன்று, மகாராஜா அவர்களே நேரில் ஆஜராகியிருந்து உற்சவத்தை நடத்தி வைப்பார். தேவியை ரதத்திலேற்றுவித்து, பிறகு, மற்ற ஜனங்களுடன் மகாராஜாவும் கூட இருந்து வடம் பிடித்துத் தேரை இழுப்பார். இந்த உற்சவம் மிக விமரிசையாக நடைபெறும். மைசூரிலிருந்து சாமுண்டி மலைக்குச் செல்ல மோட்டார் பாதையொன்றுண்டு என்றுகூறினோமல்லவா? இதற்கு, அரண்மனை குதிரைலாயத்தைத் தாண்டி 'நரசிம்ம ராஜ போலிவார்ட்' (Narasimharaj Boule ward) என்ற வழியாகச் செல்வோமானால் பல இன்பகரமான காட்சிகளைக் காணலாம். இந்த 'நரசிம்ம ராஜ போலிவார்ட்' என்பது இருபக்கமும் சோலைகள் நிறைந்த ஓர் அழகிய பாதை. சுமார் இரண்டு மைல் நீளமுள்ளது. பாதை முழுவதும் இடையிடையே பெஞ்சுகள் போடப்பட்டிருக்கும். கோடை காலத்தில் இப்பாதையில் தூசு எழாமலிருக்கும் பொருட்டு உலர்ந்த சருகுகளைப் பரப்பி அதன்மேல் தண்ணீர் தெளிக்கிறார்கள். இப்பாதையின் தொடக்கத்திலேயே, மகாராஜாவின் மெய் காவற்படையின் வாசஸ்தலமும் காரியாலயமும் இருக்கின்றன. இதற்குச் சமீபமாகவே "ரேஸ் கோர்ஸ்" (Race Course) என்கிற குதிரைப் பந்தய மைதானம் இருக்கிறது. மலையடிவாரத்தில் நவீன நாகரிக வசதிகளுடன் அமைக்கப்பட்டிருக்கும்இந்தமைதானம், இந்தியாவிலுள்ள இத்தகைய மைதானங்களுள் அழகிய தொன்று எனச் சொல்லப்படுகிறது. நரசிம்ம ராஜ போலிவார்ட் வழியாகச் சென்றால், பாதையின் முடிவில், மலையேற்றத்தின் ஆரம்பத்தில், 'லலிதா மஹால்' என்கிற பெரியதோர் அரண்மனை புலனாகும். இந்தக் கம்பீரமான கட்டிடத்திற்குச் சுமார் இரண்டு பர்லாங்கு தூரத்திற்கு முன்னாலேயே நாம் ஓர் அரண்மனைக்குச் செல்கிறோம்; மகத்தான அழகும் வேலைப்பாடும் அமைந்த ஒரு காட்சிப்பொருள் நமது கட்புலனுக்கு விருந்தளிக்கப் போகின்றது என்பன போன்ற உணர்ச்சிகளை நமது உள்ளத்தில் எழுப்பக் கூடிய விதமாக இந்தக்கட்டிடம் அமைந்திருக்கிறது. இந்த மஹாலுக்குள் செல்லும்போது முதலில் தென்படும் சலவைக் கற்களினாலாய படிக்கட்டு வரிசைகள் சிற்பிகளின் கைத்திறனை நன்கு வெளிப்படுத்துகின்றன. லட்சக்கணக்கான பணச் செலவில் கட்டப்பட்ட இக்கட்டிடம் மன்னரின் முக்கிய விருந்தாளிகள் தங்குவதற்கென்று உபயோகப்படுத்தப் பட்டுவருகிறது. இந்த மஹாலைக் கடந்து செல்வோமானால் 'லலிதாத்ரி' என்ற ஓர் அழகிய இடத்திற்குச் செல்கிறோம். இது தற்கால வசதிகளுடன் பூர்வகாலத்து முறையில் அமைந்துள்ள ஓர் ஆசிரமம். நான்கு அறைகளோடு கூடிய இந்தச் சிறிய கட்டிடம் எவ்வித ஆடம்பரமுமின்றி இன்பத்தோடு பொலிகிறது. இதன் சுவர்களில் பெரியோர்களுடைய நன்மொழிகளை எழுதிப் படங்களாக அமைத்துத் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. இக்கட்டிடத்தைச் சுற்றி இனிய சோலைகள் வரிசைவரிசையாக நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு கற்பாறைகளில், துகாராம், புரந்தரதாஸ்முதலிய பெரியோர்களுடைய நல் வசனங்கள், சாஸனங்கள்போல் செதுக்கப்பட்டுள்ளன. இந்த இடத்திற்குச் செல்வோர் எவருக்கும், அவரையறியாது ஒருவிதமான நிம்மதி ஏற்படுவதை உணரலாம். மகாராஜா தமது தியானஸ்தலமாகவும், அமைதியாக இருந்து உயரிய கிரந்தங்களைப்படிப்பதற்குரிய இடமாகவும் இந்த லலிதாத்திரியை உபயோகிக்கிறார். இதனை விட்டு நேரே சாமுண்டி மலையின் உச்சிக்குச் செல்வோமானால், சாமுண்டி கோயிலுக்குச் சிறிது உயர்வான இடத்தில் அமைந்திருக்கும் மகாராஜாவின் "மலையரண்மனை"யையடைவோம். அம்மனைத் தரிசிக்கும் பொருட்டு மகாராஜா மலைக்குச் செல்லுங்காலத்து இந்த அரண்மனையில் தங்குவார். அநேகமாக இராக்காலங்களை இங்கேயே கழிக்கின்றார். இங்கு வடமொழி ஞான நூல்கள் பலவற்றை மகாராஜா தமது உப

யோகத்திற்கென்று வைத்திருக்கிறார். மகாராஜா ஊரிலில்லாத காலங்களில் இந்த இடங்களை யெல்லாம் அநுமதி பெற்றுச் சென்று பார்க்கலாம். சாமுண்டி மலையை இராக்காலத்தில் பார்ப்பது ஒரு தனிக்காட்சியாக இருக்கும். இந்த மலையின் மோடார் பாதை முழுவதும்-சுமார் ஒன்பது மைல் நீளம்-மின்சார விளக்குகள் போடப் பட்டிருக்கின்றன. இவை மலைக்கு ஒரு மாலை போட்டதுபோல் அவ்வளவு அழகாக அமைந்திருக்கின்றன. மைசூருக்குச் சுமார் பத்து மைல் தூரத்திலிருந்தே இந்த விளக்கு மாலை எல்லாருக்கும் ஒரு பிரமிப்பை உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றது. சாமுண்டி மலைமீது வசிக்கும் ஜனங்களுக்கு மகாராஜாவின் விசேஷகருணையினால் தண்ணீர்க்குழாய் வசதிகளும் மின்சார விளக்கு வசதிகளும் உண்டாயிருக்கின்றன வென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கண்ணம்பாடி அணை


இனி மைசூர் நகரத்தை விட்டு அருகாமையிலுள்ள முக்கியமான சில இடங்களுக்கு மட்டும் செல்வோம். முதலில் கண்ணம்பாடி அணை. இதற்கு மைசூரிலிருந்து இரண்டே காலணா கட்டணஞ் செலுத்தி ரயிலேறி பெலகோலா என்ற ஸ்டேஷனுக்குச் சென்று இறங்கி அங்கிருந்து மூன்று மைல் பஸ்ஸில் செல்லவேண்டும். இஞ்சினீர்களின் திறமைக்கு அத்தாட்சிப் பொருளாக இந்த அணை விளங்குகிறது. இரண்டு மலைகளுக்கும் நடுவே ஓடிக்கொண்டிருக்கும் காவிரியை, சுமார் ஒன்றரைமைல் நீளமும் தொண்ணூறு அடி உயரமும் உள்ள ஓர் அணைபோட்டுத் தடுத்திருக்கிறார்கள். இந்த அணைக்குக் கீழே காவிரிக்கரையிலே ஓர் அழகிய நந்தவனம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்குச் செல்லுவதற்கு முதலில் காவிரியை ஓர் உருவச் சிலையாகச் செய்வித்து அணையோடு சேர்த்திருக்கிறார்கள். இதன் முகமாக எப்பொழுதும் நீர் வந்து கொண்டிருக்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கிறது. காவிரி என்றும் வற்றாத நீர் வளத்தை யுடையவள் என்பதை இது காட்டுகிறது. பிறகு நந்தவனத்திற்கு இறங்கிச் செல்வோமானால், தேவேந்திரனுடைய கற்பகப் பூஞ்சோலையில் உலவுகிறோமோ என்ற எண்ணம் நம்மையறியாமலே உண்டாகும். ஆங்காங்கு ஊற்றுக் குழாய்கள் அமைத்து அவைகள் மூலம் தூவானம் போல் தண்ணீரைத் தெளிக்கச் செய்வதும் இடையிடையே பலவர்ணமுள்ள மின்சார விளக்குகள் அமைந்திருப்பதும் இதற்குத் தனிச் சிறப்பை நல்குகின்றன. உலகத்திலுள்ள மனோகரமான காட்சிகளுள் இஃதொன்று என்று எவ்வித சந்தேகமின்றியும் கூறலாம். இதற்கு 'பிருந்தாவனம்'என்று பெயர் வைத்திருக்கிறார்கள். காவிரியில் ஸ்நானம் செய்ய விரும்புவோர்க்கு வசதியாக படித்துறைகள் முதலியனவும் இங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன.


இந்த அணையானது ஸர். எம். விசுவேசுவரய்யா, மைசூர் திவானாயிருந்த காலத்து, அவருடைய நன்முயற்சியினால், பல எதிர்ப்புகளுக்கிடையே தொடங்கப்பெற்றது. சுமார் நான்குகோடி ரூபாய் வரை இதற்கென்று செலவழிக்கப் பட்டிருக்கிறது. இந்த அணையை இந்த இடத்தில் கட்டி ஜனங்களுக்கு அதிகமான நீர்ப்பாசன வசதிகளை உண்டுபண்ண வேண்டுமென்று எண்ணியவன் திப்புசுல்தானே யாகும். இது சம்பந்தமான சாஸனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு, அஃது இப்பொழுது அணையின் முகப்பை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது.

## ஸ்ரீரங்கப் பட்டணம்

அடுத்தாற்போல் ஸ்ரீ ரங்கப் பட்டணம் செல்வோம். இது மைசூரிலிருந்து இரண்டணா கட்டணத் தொலையிலுள்ளது. காவிரி நதியானது, குடகுமலையிலிருந்து உற்பத்தியாகிக் கடலில்சங்கமமாவதற்குள் இடையில் மூன்று இடங்களில் பிரிந்து கூடுகிறது. இதற்கு ரங்கம் என்றுபெயர். ஆதிரங்கம், மத்திய ரங்கம், அந்தியரங்கம் என்று பெயர் கொண்ட மூன்று ரங்கங்களில், மைசூருக்கு அருகாமையிலுள்ள ஸ்ரீ ரங்கப்பட்டணம் ஆதிரங்கம். மைசூருக்குச் சுமார் அறுபது மைல் தொலைவிலுள்ள சிவசமு

மைசூரில் யானை வேட்டை





த்திர நீர் வீழ்ச்சியோடு நெருங்கியிருப்பது மத்திய ரங்கம்; திருச்சிராப்பள்ளிக்கணித்தேயுள்ள ஸ்ரீ ரங்கம் அந்தியரங்கம். முதல் ரங்கமாகிய ஸ்ரீரங்கப் பட்டணம் இப்பொழுது ஒரு தாலுகாவின் தலை நகரமாயிருக்கிறது. ஒரு காலத்தில் கங்கர், நொளம்பர், ஹொய்சளர் முதலியோரும், பிற்காலத்தில் உடையார் அரசவமிசத்தினரும் கொலுவீற்றிருந்த இந்த நகரம் இப்பொழுது தாயற்ற குழந்தைபோல் காட்சி தருகிறது. ஹைதரின் வீராட்டகாசம் தாண்டவமாடிய இடத்திலே, ஐரோப்பியர் பலரைச் சிறைப்படுத்தி, உலகத்தின் வல்லரசுகளோடு சமமாக இருக்க வேண்டுமென்று இராஜ்யத்தைப் பலவகையிலும் விஸ்தரிக்க முயன்ற திப்பு சுல்தான் வாழ்ந்த இடத்திலே இப்பொழுது இடிந்துபோன கோட்டைச் சுவர்களும் தரையோடு தரையாகப் போன திப்பு சுல்தானின் அரண்மனையும், பூமி மட்டத்திற்குக் கீழே அமைக்கப்பட்டு இப்பொழுது வௌவால்களுக்கும் கோட்டான்களுக்கும் வசிப்பிடமாயுள்ள பழைய ஆயுதசாலைகளுமே காட்சி தருகின்றன. இந்த ஊரில் இப்பொழுது கழுதைகளும் குரங்குகளும் அதிகமாக வாசஞ் செய்வதைப் பார்த்தால், "எழுநிலை மாடங்கால் சாய்ந்துக்குக் கழுதை மேய்பாழாயினுமாகும்" என்ற வெற்றிவேற்கையின் வாக்கியம் எவனுக்கும் நினைவுக்கு வரும். இங்கே காவிரி மிக அழகாக ஓடுகிறாள். ஸ்நானம் செய்வதற்கு அநுகூலமான படித் துறைகள் இங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. ஊர் மத்தியில் ஒரு பெரிய மசூதியுண்டு. திப்பு சுல்தானுடைய முக்கிய தொழுகை ஸ்தலமாக இஃதிருந்தது. இதன் மத்தியில் சுமார் இருநூறு அடி உயரமுள்ள ஒரு சிகரம் இருக்கிறது. இதில் அனைவரும் ஏறிச் சென்று பார்க்கலாம். இங்கிருந்து பார்த்தால் ஊர் முழுமையும் புலப்படும். ஆனால் சரித்திர மனமும் சரித்திரக் கண்களும் கொண்டு பார்க்கும் எவனும் கண்ணீர் விடாமலிருக்க முடியாது. திப்பு சுல்தான் காலத்தில் கொடிமரமாயிருந்தது இப்பொழுது கூந்தலற்ற ஸ்திரீபோல் கண் முன் தோன்றுகிறது. கோயிலுக் கருகாமையில் ஆடும்பாலமொன்று இருக்கிறது. சுமார் முப்பது அடி உள் நீளமுள்ள இந்தச் செங்கற் பாலம், மாதிரிக்காக திப்பு சுல்தான் காலத்தில் ஒரு பிரஞ்சு இஞ்சினீயரால் கட்டப்பெற்றது. இத்தகைய பாலம் ஒன்று காவிரிக்குக் குறுக்கே அமைக்க வேண்டுமென்று திப்பு சுல்தான் கருதினான். இதன் மீதேறி நின்று குதிப்போமானால், இதுவும் நம்முடன் கூடவே அசைகிறது. இதன் மீது ஜனங்கள் ஏறி ஏறிச் செங்கற்கள் தேய்ந்து பள்ளமாகி யிருக்கின்றன. இதற்குள் என்ன விசைவைக்கப்பட்டிருக்கிறதென்று இன்னும் எந்த இஞ்சினீயரும் கண்டு பிடித்ததாகத் தெரியவில்லை. கோட்டை வாயிலைக் கடந்து சென்றால் "தர்யா தௌலத்" என்கிற அழகிய நந்தவனமும் கட்டிடமும் புலனாகும். இது திப்பு சுல்தானின் கோடைக்கால வாசஸ்தலமாயிருந்தது. இதன் சுவர்களில், ஹைதர் காலத்திலும் திப்பு காலத்திலும் நடைபெற்ற யுத்த விவரங்கள் முதலியன சித்திரங்களாக வரையப்பட்டிருக்கின்றன. இதன் நந்தவன அமைப்பு, தாஜ்மகால் நந்தவன அமைப்பை ஒத்திருக்கிறது. இதிலிருந்து சுமார் மூன்றுமைல் தூரம்போனால் 'கும்பஸ்' என்ற இடமிருக்கிறது. ஹைதர் திப்பு இவர்களுடைய சமாதிகள் இங்கிருக்கின்றன. கறுப்புச் சலவைக் கற்களினால் ஆக்கப்பட்ட இக்கட்டிடத்திற்கு, தந்த வேலைகள் அமைந்த கதவுகள் இருக்கின்றன. முஸல்மான்கள் பலர், பக்தி சிரத்தையோடு, இந்த 'கும்பஸ்' கட்டிடத்துக்குச் சென்று வருகிறார்கள்.

மைசூருக்கும் பெங்களூருக்கும் இடையே மத்தூர் என்ற ஸ்டேஷனில் இறங்கி பதினொரு மைல் பஸ்ஸில் சென்றால் சிவ சமுத்திர நீர் வீழ்ச்சியையடையலாம். இதிலிருந்தே மின்சார சக்தி உற்பத்தி செய்யப்பட்டு மைசூர் சமஸ்தானத்தில் பெரும் பகுதிக்கு வழங்கப் படுகிறது. இங்குள்ள அதிகாரிகளின் அநுமதி பெற்று, இயந்திர இயக்கங்களனைத்தையும் பார்க்கலாம். இங்கு வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு காவிரிக் கரையிலேயே அழகான இடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன,

### பெங்களூர்

இனி பெங்களூருக்கு வருவோம். இது முக்கியமான வியாபார ஸ்தலம். மைசூர் சமஸ்தானத்தின் நிருவாகத் தலைமை ஸ்தானமாக இது விளங்குகிறது. திவான் முதலிய உத்தியோகஸ்தர்கள் இங்கேயே வசிக்கிறார்கள். அடுத்தாற்போலுள்ள கண்டோன்மெண்டில் பிரிட்டிஷ் ரெசிடெண்ட் வசிக்கிறார். பெங்களூரின் சீதோஷ்ண நிலைமை தேக சுகத்திற்கு மிகவும் ஏற்றது பலருடைய கோடைகால வாசஸ்தலமாக இது விளங்குகிறது. இங்கு லால்பாக், அரசாங்கக் காரியாலயக் கட்டிடம், மகாராஜாவின் அரண்மனை, சோப்பு உற்பத்தித் தொழிற்சாலை, டாடா விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி நிலையம் முதலியன பார்க்க வேண்டிய இடங்களாகும். பெங்களூரைச் சேர்ந்தாற் போலவே அழகிய தனித்தனி கிராமங்கள் (Subarbs) அமைந்திருக்கின்றன. இவை பார்ப்பதற்கும் வசிப்பதற்கும் மிகவும் ஏற்றவை. பெங்களூரில் எல்லா வகைப்பட்ட சமூகத்தினரையும் காணலாம். உடல் நோயின்றி, மன நிம்மதியுற்று தற்கால நாகரிக வசதிகளுடன் ஒருவன் வாழ விரும்பினால் பெங்களூர் தகுந்த இடம் என்று சுருக்கமாகக் கூறி மேலே செல்வோம்.

பெங்களூருக்கு அருகாமையில் நந்திமலை இருக்கிறது. பாலாறு உற்பத்தியாகும் ஸ்தானம் இதுவே. இஃதோர் ஆரோக்கிய ஸ்தலம். வெளியூர் வாசிகள் இங்கே தங்கிச் செல்வதற்குரிய எல்லா வசதிகளும் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. மகாத்மா காந்தி தமது தேகாரோக்கியத்தை முன்னிட்டு சுமார் பத்து வருஷங்களுக்கு முன்னால் இங்குதான் சிறிது காலம் தங்கியிருந்தார். இம் மலையிலுள்ள ஊற்று நீர் மிகத் தெளிவாகவும், பல சத்துப் பொருள்கள் அடங்கியதாகவும் இருக்கிறது.

கோலாரில் தங்கச் சுரங்கம் இருக்கிறது. ஐரோப்பியக் கம்பெனியாரால் இது நிருவகிக்கப் படுகிறது. இங்குள்ள சுரங்கங்களுக்குள் சென்று பார்க்க அதிகாரிகள் அனுமதி வேண்டும். இங்குள்ள இயந்திர ஏற்பாடுகள் பிரமிக்கத் தக்கவை.

### பிற இடங்கள்.

இவை தவிர மேல்கோட்டை என்கிற திருநாராயணபுரம், ஷிமோகா ஜில்லாவிலுள்ள ஆகும்பே என்ற மலையுச்சி, குடகு மலையிலுள்ள காபி தோட்டங்கள் சிருங்கேரி முதலிய இடங்களும் பார்க்கவேண்டிய இடங்களாகும். மைசூர் இராஜ்ஜியத்தை சிற்பக் களஞ்சியம் என்று கூறலாம். ஹொய்சள மன்னர்கள் காலத்தில், அவர்கள் ஆதரவு பெற்று நிர்மாணிக்கப் பெற்ற கோயில்கள் பேலூர், ஹளேபீத் முதலிய ஊர்களில் இருக்கின்றன. மைசூர் அரண்மனைக் கோட்டை மைதானத்தில் சுமார் பன்னிரண்டு கோயில்கள் இருக்கின்றன. இவைகளில் வராஹ ஸ்வாமி கோயிலின் வேலைப்பாடுகளை வியந்து பாராட்டாதவரில்லை. சிருங்கேரியிலுள்ள வித்தியா சங்கரர் கோயிலிலிருக்கும் நவரங்க மண்டபத்தை அனைவரும்பார்க்கவேண்டுவது மிக அவசியமாகும். இந்தமண்டபத்தை சிங்க சிகரங்களோடு கூடிய பன்னிரண்டு கற்றூண்கள் தாங்கி நிற்கின்றன. இந்தச் சிங்கங்களின் முகம் மிகக் கம்பீரமாகச் செதுக்கப் பட்டிருப்பதோடு, இவைகளின்வாய்க்குள்கற்பந்துகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் வெளியே வரா. ஆனால் வாய்க்குள்ளேயே உருண்டு செல்லும். இதை எப்படித்தான் சிற்பிகள் நிர்மாணித்தார்களோ தெரியவில்லை. இந்தப் பன்னிரண்டு தூண்களும், பன்னிரண்டு மாதங்களுக்கு மாதமொன்றாக வான சாஸ்திரப்படி நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. சூரிய வெளிச்சமானது ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதத்திற் குரிய தூணிலேயே படும். மற்றவைகள் மீது படாது. இந்த அமைப்பைப் போற்றாத சிற்பிகள் இல்லை. சிருங்கேரியானது, துங்கை நதியும் பத்ரா நதியும் கூடுகின்ற இடத்தில் இருக்கிறது. ஸ்ரீசங்கராச்சாரியார் இங்குதான் வசிக்கிறார். இந்த இடம் சென்றோர்க்கு, தானாகவே மனத் துறவு ஏற்பட்டுவிடுமென்பதில் ஐயமில்லை.

### முடிவுரை

மைசூர் சமஸ்தானம் கைத்தொழிற்றுறையில் அதிக முன்னேற்றமடைந்துவருகிறது. சந்தன எண்ணெய்க்கும், சந்தன சாமான்களிக்கும், ஊதுவத்தி முதலிய வாசனைத் திரவியங்களுக்கும், லாகர் வேர் (Lacquer-ware) என்கிற வர்ணச் சாமான்களுக்கும் மைசூர் பெயர் பெற்றிருக்கிறது. இவைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மற்றும் பட்டுத் தொழிலும், சோப் உற்பத்தியும் இங்கே சிறந்து விளங்குகின்றன. கர்ப்ஸ்டோன் (Kerbstone) என்ற ஒருவகைக் கற்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சமீபத்தில் பீங்கான் உற்பத்தி சாலை, சர்க்கரை உற்பத்தி சாலை முதலியன தொடங்கப்பெற்றிருக்கின்றன. இவை தவிர, பத்ராவதி என்கிற இடத்தில் ஏராளமான செலவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இரும்புத் தொழிற்சாலையானது, சமஸ்தானத்துக்கு வேண்டிய இரும்புச் சாமான்களைச் செய்து வழங்குவதோடு வெளியிடங்களுக்கும் ஏற்றுமதி செய்துவருகிறது. இத்தொழிற்சாலையில் எஃகுச் சாமான்கள் உற்பத்தி செய்யவும் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

மைசூரில் இயற்கை வளமும் நல்லரசாட்சியும் கலந்து மன்பதைக்கு இன்பத்தை ஊட்டிவருகின்றன. இவ்வின்பம் இந்தியா வெங்கணும் பரவுமாக.

---

குறைந்த சார்ஜ்! குறித்த காலம்!!

தமிழ், ஆங்கிலம், பர்மா முதலிய

பாஷைகளில்

சிறந்த

அச்சுவேலைகள்.

செய்து கொடுக்கப்பெறும்.


செட்டியார் பிரஸ்,

182, பார் விதி, :: :: இரங்கூன்.

# ரங்கூன் மியூஸிகல் ஸ்டோர்ஸ்

**479, டல்ஹவுஸி வீதி,**
பிராஞ்சு:- 497, டல்ஹவுஸி வீதி, } **இரங்கூன்,**

சோல் ஏஜண்டுகள் (1) பிராட்காஸ்டு'
(2) ஹட்சின்ஸ் ரிகார்டுகள்.



செம்பை வைத்யனாத பாகவதர்


**Broadcast**

எல்லாவித ஹட்சின்ஸ், பிராட்காஸ்ட் ஓடியன், கொலம்பியா, டுவின் தனி ரிகார்டுகளும், நாடக செட்டுகளும் கிடைக்கும்.

உயர்தர சாமான்களால் செய்யப் பெற்ற கிராமபோன் மெஷின்கள் குறைந்த விலைக்கு விற்கப்படும்.

எல்லாவிதமான கிராமபோன் ரிப்பேர்களும் குறைந்த சார்ஜில் செய்து கொடுக்கப் [படும்.

வெளியூர்களுக்கு தபால் செலவின்றி அனுப்பப்படும்.





நாடகராணி எம் எஸ். விஜயாள்.

# தொண்ணூற்றுறூர் நகரத்தார் கூட்டம்.




பவஹூ மார்கழிமீ 16வ கோவிலூரில் நடைபெற்றது.

# நூதன சீர்திருத்தம்.

"சுதந்திரச் சங்கு" கூட்டாசிரியர் திரு. நாராயணன் எழுதியது.

உலக சரித்திரத்தில் இன்று இந்தியா ஒரு விசித்திரமான நிலையில் இருக்கிறது. நாகரீகத்திற்கே உறைவிடம் என்று சொல்லக் கூடிய நம் தாய்நாடு இன்று அடிமை தேசங்களிலெல்லாம் கீழ்ப்பட்ட நாடா யிருக்கின்றது. மொகலாய சக்கிரவர்த்தி பாபர் "பாலும் தேனும் பிரவாகமாக ஓடும்தேசம்" என்று வர்ணித்த வளம்பெற்ற நாடு இன்று வறுமைக்குப் பேர்போன தேசமாய் விளங்குகிறது. உலகத்தில் உள்ளவர்க் கெல்லாம் அன்னமிட்டுத் தானும் வயிறுர உண்ணும் வசதிகளிருந்தும் இன்று இந்திய மக்களில் பெரும்பான்மையோர் ஒரு வேளைக் கஞ்சிக் குக்கூட விதியற்று வாடுகின்றனர். அநேக மன்னர்களின் மண்ணாசைக்கு இறைபாகி, அவர்கள் கொடூரத்திற்கெல்லாம் தப்பி இன்று ஆணவத்துடன் தான் இழந்த சுதந்திரத்தைப் பெற பெருமுயற்சி செய்து அதற்காக உலகமெல்லாம் பிரமிக்கும் முறையில் தியாகம் செய்திருக்கிறது. சென்ற 150 ஆண்டுகளாக இந்த துர்ப்பாக்கிய தேசத்தை ஆண்டுவரும் பிரிட்டிஷ் வர்க்கத்தார் இந்நாட்டின் சுதந்திரக் கோரிக்கையை நேர்மையான முறையில் திருப்தி செய்ய மறுக்கின்றனர். காங்கிரஸ் நமது தாய் நாட்டின் அரசியல் சுதந்திரத்தைப் பெறுவதற்காகச் சென்ற அரை நூற்றுண்டாக எல்லாத்துறைகளிலும் உழைத்து வருகிறது.

சென்ற 15 வருஷமாக சத்யமே உருவெடுத்த மகான் காந்தியின் தலைமையில் நம் நாட்டினர் நடத்திய சுதந்திரப் போரைப் பார்த்து இன்று உலகமே நம்மை புகழ்கிறது ரத்தவெறி பிடித்த மேல் நாட்டிற்கு இன்று சாந்தி தத்வத்தை உபதேசித்து வருவது இந்தியாதான். அஹிம்சைக் கொள்கையி னுல் உலகமே மாறினுலும் மாறலாம் என்பது அறிஞர்களின் அபிப்பிராயம். இவ்வளவு புனிதத்தன்மைபெற்ற இந்நாடு பூர்ண சுதந்திரம் பெற யோக்கியதை யற்றது என்று பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் கூசாமல் சொல்லுகிறது. ஒருநாடு ஒன்று அடிமையாயிருக்கலாம்; அல்லது சுதந்திர நாடாயிருக்கலாம். சுதந்திரத்திற்கும் அடிமைத் தனத்திற்கும் நடு நிலைமை ஏதாவது உண்டா? சுதந்திரத்தை அளந்து கொடுக்க முடியுமா? அடிமைத் தனத்திற்கு மருந்து சுதந்திரம் தான்; வேறு மருந்து இருப்பதாக சரித்திரம் கூறவில்லை. இப்படிக்கிருந்தும் விலங்குகளை முறிப்பதற்கு வழி புதிய விலங்குகளை அணிவது என்று கூறுகிறது பிரிட்டிஷ் அரசாங்கம்.

## புது அறிக்கை.

இந்தப் புது அறிக்கைக்கு, கூட்டுக்கமிட்டியின் முடிவைப் பார்த்தால் வேறு என்ன பொருள்? இந்தியாவிற்குப் புதிய தளைகளை அளிக்கிறது கூட்டுக் கமிட்டி. இந்தியா கேட்டது என்ன? இந்தியா போராடியது எதற்காக? இந்தியப் பெண்மணிகளும் இளைஞர்களும் தியாகம் செய்தது எதற்காக? கேவலம் போலிச் சுய ஆட்சி பெறுவதற்காகவா? இல்லை! இல்லை!!

இந்த அறிக்கையைப் படித்தவுடன் எனக்கு ஒரு சிறு கதை ஞாபகத்திற்கு வருகிறது. தான்யம் வாங்குவதற்கு ஒருவன் கடைக்குச் சென்றுன். ரூபாய்க்கு எத்தனை படி தான்யம் என்று தீர்மானம் செய்யப்பட்டது. அளக்க ஆரம்பித்தான் கடைக்காரன். தூக்கி வாரிப்போட்டது பண்டம் வாங்குபவர்க்கு. ஏனெனில் கடைக்காரன் படியை கவுத்து அளந்தான். படியை

நிமிர்த்து அளக்கவேண்டும் என்று வாதாடி ஞன் வாங்குபவன். கடைக்காரனுக்கும் மற்றவனுக்கும் சண்டை முத்தியது. வழிப் போக்கன் ஒருவனுடைய உதவியை நாடி ஞர்கள் இருதரப்பினரும். வழிப் போக்கன் ஒரு சமரஸம் கூறினன். படியை கவுத்தும் அளக்கவேண்டாம்; நிமித்தும் அளக்க வேண்டாம்; படுக்கப்போட்டு அளந்துவிடு என்பதுதான் வழிப்போக்கன் யோசனை. இது மாதிரிதான் இருக்கிறது கூட்டுக் டுக் கமிட்டியின் முடிவு. இந்தியா கேட்டது பூர்ண சுயராஜ்யம்; சர்க்கார் வெள்ளையறிக் கையின் மூலம் கொடுக்கத் தீர்மானித்த சுதந்திரம் ஏதோ சொல்பம். அதையும் இல் லையென்று சொல்லிவிட்டதுகூட்டுக்கமிட்டி. போதுமா பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தாராள நோக்கத்திற்கு அத்தாட்சி?

இந்த அறிக்கையை யாரும் விரும்பாத தில் என்ன ஆச்சரியம்? சென்னைப் பதவி வேட்டைக் கும்பலைத் தவிர மற்ற கண்யம் வாய்ந்த அரசியல்வாதி யாரும் இந்த அறிக் கையைப் புகழவில்லை. அடிமைத்தனத்தை ரூ. அ. பை. யாக மாத்த விரும்பும் யோக் கியமற்ற ஒரு மனித வர்க்கம் யஜமான்கள் அளித்த பரிசைக் குற்றம் கூறுமா?

இந்த அறிக்கை மூலம் வெளியாயிருக்கும் அரசியல் அமைப்பு இந்தியாவுக்குத் தகுதி யற்றது என்பதற்கு தர்க்க முறையிலும் காரணம் சொல்லலாம். இந்த அறிக்கையில் சுதந்திரம் கிடைப்பதற்குத் தகுந்த அறிகுறி கள் காண்கின்றனவா என்று பார்ப்போம். இந்த அறிக்கை திட்டம் எந்த அரசியல் பரிட்சைக்கும் தேராது என்பதற்கு உதா ரணமாய்ச் சில காரணங்கள் கூறுகிறேன்.

(1) இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளிப்பதுதான் தங்கள் நோக் கம் என்று இர்வின் பிரபுவும், பிரதம மந்திரி யும் சொல்லி வந்திருக்கிறார்கள். ஆனல் இந்த அறிக்கையில் "குடியேற்ற நாட்டு அந்தஸ்து" என்கிற பதம் கூட உபயோகிக் கப்படவில்லை. இந்தியாவிற்கு எப்பொழு தாவது அது கிடைக்குமா என்று கூடக் குறிப்பிடவில்லை. ஆனல் பொறுப்பாட்சிக்கு எப்பொழுது இந்தியா தகுதியாகும் என்று யோசனை செய்வது கூட சாத்தியமில்லை என்று சொல்லிவிட்டனர் கூட்டுக்கமிட்டியி னர்.

(2) இந்தியா மந்திரியின் ஆதிக்கம் குறையவில்லை.

(3) இந்த அரசியல் அமைப்பை மாற்ற இதன்கீழ் ஏற்படும் சட்டசபைகளுக்கு அதி காரம் கிடையாது.

(4) கூட்டுக் கமிட்டியினர் விதித்திருக் கும் நிபந்தனைகள் பிரகாரம் சமஷ்டி அரசி யல் எப்பொழுது ஸ்தாபிதமாகும் என்று சொல்லுவதற்கில்லை. அறிக்கையில் குறிக்கப் பட்டிருக்கும் நிபந்தனைகள் இடைஞ்சல் களாகத் தோன்றுகின்றன.

(5) ஜீவாதார உரிமைகளுக்கு திட்டத் தில் இடங்கிடையாது.

(6) ராணுவம் இந்திய மயமாவதற்கு ஒரு வழியும் அறிக்கையில் குறிப்பிடவில்லை. ராணுவச் செலவைக் குறைக்கும் வழியும் இல்லை.

(7) பண சுதந்திரம் தற்போது உள்ள அளவுகூட இல்லை. ராஜப்பிரதிநிதிக்கு ராஜ் யத்தின் நிதி நிலைமையைப் பாதுகாக்கும் தனிப்பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

(8) இந்தியக் கைத்தொழிலுக்குப் பாது காப்புகளளிக்கவும், இந்திய கைத்தொழிலை போட்டியினல் பாதிக்கக்கூடிய அயல்நாட் டுத் தொழில் களுக்கு வரி விதிக்கவும் இப் பொழுது சட்டசபைக்கு உள்ள அதிகாரம் ரத்து செய்யப்பட்டுவிட்டது. ஆங்கில வியா பாரிகள் இந்தியாவில் வந்து வியாபாரம் செய்வதற்கு வேண்டிய வசதி கொடுக்கப் புது திட்டம் இடங்கொடுக்கிறது. ஆனல் சமஷ்டி சட்டசபையில் இந்தியத் தொழில் பாதுகாப்புக்காக ஏதாவது சட்டம் நிறை வேறினல் அந்தச் சட்டம் பிரிட்டிஷ் தொழில் வளர்ச்சியை பாதிக்கக் கூடியது என்று ராஜப்பிரதிநிதி அந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவா மறுக்கலாம்.

(9) சட்டசபைக்குட்படாத ரயில்வே போர்டு ஒன்று நிறுவப்படும்.

(10) ஆங்கில சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்களுக்குத் தனிப்பாதுகாப்பு. அவர்கள் சம்பளம் சட்டசபைக்குட்பட்டதல்ல.

(11) ராஜப்பிரதிநிதியும் கவர்னர்களும் இனி ஹிட்லர்களாகவும், முஸ்ஸோலினிகளாகவும் விளங்குவார்கள்.

(12) எங்கும் கேளாத மறைமுகத் தேர்தல் முறை அளிக்கப்பட்டிருக்கிறது.

(13) மாகாண சுய ஆட்சி என்னும் பெயரால் கவர்னர்களுக்குப் பூரா சுய ஆட்சி அளிக்கப்பட்டிருக்கிறது எந்த இலாகாவிலும் அவர்கள் குறுக்கிட்டு மந்திரிகள் சுதந்திரத்தைப் பறிமுதல் செய்துவிடலாம். சமூக சீர்திருத்தத்தைக் கூடச் சிறுபான்மையைக் காக்கும் தனிப் பொறுப்பு என்னும் பிரிவின்கீழ் ஒன்றுமில்லாமல் செய்துவிடலாம்.

(14) போலீஸ் இலாகா நிர்வாகம் மந்திரிகள் கையில் என்றுபெயர். ஆனல் போலீஸ் சட்டத்தைத் திருத்த முடியாது. ரகஸ்யப்போலீஸ் கவர்னர் கையில். பயங்கர இயக்கத்தை ஒடுக்குவதுகவர்னர்பொறுப்பு.

(15) சீமையில் பிரபுக்கள் சபையைக் கலேத்துவிட வேண்டும் என்று கிளர்ச்சி செய்யும் நாளில், அயர்லாந்தில் 'செனட்' சபையை டிவிலேரா கலேத்துவிட்ட இந்நாளில் இந்தியாவிற்கு மாத்திரம் (மாகாணங்களில் சிலவற்றில்) இரண்டு சட்டசபைகள்.

(16) நஷ்டத்தில் நடக்கக் கூடிய சிந்து, ஓரிஸ்ஸா என்னும் புதிய மாகாணங்கள்.

(17) பர்மாப் பிரிவினே. பர்மாவைப் பிரிக்கக் கூடாது என்று ஜனங்கள் நிதர்சனமாய்க் காட்டியும் அது தனி மாகாணமாகிவிடப்போகிறது. ஆங்கிலேயர்கள் எதேச்சாதிகாரம் செய்ய பர்மா அகப்பட்டது. அங்கு இந்தியர்கள் பால் பர்மியருக்கு வெறுப்பு உண்டாக்க வழி செய்து விட்டார்கள். இந்தியர்கள் பர்மாவிற்குச் சென்று அங்கு முதலேக் கொட்டி நாட்டை செழிப்பித்தார்கள். அதற்குப் பலன் இன்று அவர்கள் கதி பரிதாபகரமாய்ப் போய் விட்டது.

இந்தியா இன்று இந்தப் புதிய சீர்திருத்தத்தை வேண்டாமென்று சொல்ல முக்கிய காரணங்கள் இவை தான். வளர்த்துக் கொண்டு போனல்இந்த அறிக்கையின் ஒவ்வொரு வரியிலும் அதை உதறித்தள்ள வேண்டிய காரணங்கள் காண்கின்றன; அவைகளேப்பற்றி எழுதலாம்.

இம்மாதிரி வேண்டா அறிக்கையை என் ஆங்கிலேயர்கள் நமது தலேயில் சுமத்தப் பார்க்கிறார்கள்? இந்தியாவிற்கு ஆங்கிலேயர்கள் வியாபாரத்திற்கு வந்தார்கள். "ஆங்கிலேய ஜாதியினர் வெறும் கடைக்காரர்கள்" என்று சொன்னர் பிரெஞ்சு சர்வாதிகாரிநெப்போலியன். ஆங்கிலேயர் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் பவுனில் கண் வைத்துக் கொண்டு தான் செய்வார்கள். பூரண சுதந்திரம் இந்தியர்களுக்கு அளித்தால் ஆங்கில வியாபாரம் அஸ்தமித்து விடும். அதுதான் வருஷக் கணக்காக பேரம் செய்கிறார்கள். சீமைச் சரக்கை இந்திய மக்கள் இஷ்டப்பட்டால் தான் வாங்க முடியும் என்பதை உணரக்கூடிய தீர்க்கதரிசித்தனம் ஆங்கிலேயர்களுக்கு இல்லே. அதனல் தான் இந்த சீர்திருத்தத்தில் பணப்பையைத் தாங்களே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனல் நம்முடைய நன்மைக்காகத்தான் பணத்தை அவர்கள் வைத்துக்கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். "ஆங்கிலேயரை எல்லாவற்றிற்கும் நம்பலாம்; ஆனல் பண விஷயத்தில் நம்பக்கூடாது" என்று சின்ஹா பிரபு கூறியிருக்கிறார்.

என்ன விதத்தில் நாம் சுதந்திரத்தைப் பெறலாம். தர்க்கத்திலும் வாதத்திலும் நாம் ஆங்கிலேயரை வென்றுவிடலாம் என்று நினைப்பது மதியீனம். இந்தியாவிற்குச் சுதந்திரமளிக்க மறுத்தால் அதனல் நஷ்டமேற்படும் என்பதை அவர்கள் உணர்ந்தால்தான் நம்முடைய லட்சியம் சித்திபெறும்.

"நாமிருக்கும் நாடு நம
தென்பதறிந்தோம்—இது
நமக்கே யுரிமையா
மென்ப தறிந்தோம்" பாரதியார்

---

# பொதுமையின் அதிசயம்.

திரு. டி. என். சேஷாசலம் பி. ஏ. பி. எல்.

ஆச்சரியமான தொன்றை எடுத்து ஆராய்ந்து கூறிச் சாதாரணமாக்கிவிடுவது மிகச் சுலபம். ஐயாயிரம் மைல்களுக்கப்பால் ஒருவன் பேசுவதை நாம் ரேடியோவின் மூலமாகக்கேட்கின்றபோது எப்படித்தான் இது இயன்றதோ வென்று அடங்கமாட்டா ஆச்சரியங் கொள்கின்றோம். ஆனால் அந்த எந்திரத்தின் அமைப்பையும் அதினை இயக்குகின்ற சக்தியின் தன்மையையுங் கற்றுக்கொண்டபின் இவ்வளவுதானே இது என்று எண்ணும்படி ஆகிவிடுகின்றது. இதற்கெதிர், சாதாரணமான தொன்றை அது அதிசயத்திலும் அதிசயமாய்த் தோன்றும் வரையில் அதனிடத்தில் நம்முடைய கவனத்தைச் செலுத்தி வைக்கப் பயில்வதே கஷ்டமானது. உண்மையான பயனையுந் தரத்தக்கது.

மேல் நோக்காகப் பார்க்கும்போது மனிதனுக்கு, மனிதனைக்காட்டிலும் சாதாரணமானது வேறொன்றுமில்லை. அதனிலும் ஒவ்வொருவனுக்கும் தன்னைவிட்டு ஒரு கணமேனும் பிரியாமல் தன்னுடன் உழல்வது தான். உறங்கும்போதும் தன்னை மறக்கத் தரியாமல் கனவின் மூலமாக உறவு கொள்கின்றான். பிறக்கின்றான், உண்கின்றான் வளர்கின்றான், பொருள் ஈட்டுகின்றான்கொடுக்கின்றான் காக்கின்கின்றான்,கவர்கின்றான் களவு கொடுக்கின்றான், நகுகின்றான் அழுகின்றான்,வருந்துகின்றான், வருத்துகின்றான், வெகுள்கின்றான், மணக்கின்றான், மக்கட்பெறுகின்றான், பெறாமல்தடுக்கின்றான்,இறக்கின்றான். இன்னவைகளுக்கு ஆளாகும் ஒன்று "மனிதன்" என்று பெயர் எடுத்திருக்கின்றது. அந்தத் தொழில்களும் இந்தப் பெயரும் எல்லாம் சாதாரணம்.

ஆயினும் இந்த மனிதனைச் சற்று ஊன்றிப் பார்ப்போம். பச்சைப் பிண்டமாய்த் தோன்றிப் பிடிசாம்பராய் முடிகின்ற ஒரு அற்பச் சரித்திரத்திற்கு இலக்காவதேயோ மனிதன் கதி. தானே அழ அழப் பிறந்து தன் உறவினர் அழ அழ இறக்கின்ற இந்தப் பிராணி என்ன எண்ணி என்ன செய்ய இப்படி நடமாடுகின்றது? இரண்டு கோடியிலும் இப்படி அழுகையை வைத்திருக்கின்ற இது இடையிலே என்னதான் சாதிக்கக் கிடக்கின்றது! எத்தனை ஆசை, எத்தனை அழுக்காறு, எத்தனை கோபம், எத்தனை களிப்பு! என்றைக்கேனும் எவ்விடத்தேனும் எவனேனும் சுகப்பட்டானோ! ஆயினும் ஒவ்வொருவனும் தன் உயிரை விடாப்பிடியாய்ப் பற்றிக் கொள்கின்றான். தற்கொலை புரிந்து கொள்வாரைக் கருதி ஆச்சரியப்படுகின்றோம்; இந்த நிலையில் தற்கொலை புரிந்து கொள்ளாமல் உயிரைச் சுமந்து கொண்டு திரிகின்ற ஏனையோர் அனைவரும் அன்றோ நமது ஆச்சரியத்திற்கு ஆளாக வேண்டும்! எதனைக்கொண்டு மனிதனை ஒரு பொருளாக மதிப்பது! "இப்பிறவி வேண்டா வேண்டா" வென்றே வித்தகர் முதல் பாமரர் வரையில் யாவரும் கதறுகின்றனர். ஆயினும் "மற்று என் பிறந்தாய்" என்று ஒருவரையும் கேட்பதற்கில்லை. ஏனெனில், பிறந்தது அவன் பொறுப்பன்று; கர்ப்பத்தடைமுறைகளைக் கற்காத அவன் பெற்றோர் பிழை அது, உண்மையே! எனினும் இறந்தகல்வது, சட்டவிரோதமாயினும், இவன் கையிற்றானே இருக்கின்றது! மற்று, வெண்ணெயிருக்க நெய்க்கு வருந்துவாருண்டோ! சட்டத்திற் கஞ்சியா? செத்தவன் மீது எச்சட்டமுஞ்செல்லாது. "செத்தபின் ஒருகால் தமக்கு இதனிலும் கொடியதோர் நிலை வாய்க்குமோ என்னுமொரு அச்சத்தினால்தான் மனிதன் தற்கொலை புரிந்துகொள்ளாமலிருக்

கின்றனர்; இல்லையேல் எவன்தான் தன் னுயிரைத் தாங்கிக் கிடப்பான்" என்று கேட் கின்றான் ஷேக்ஷ்பியர் நாடக பாத்திரங்க ளில்ஒருவனாகிய ஹாம்லெட். ஹாம்லெட் உண் மையில் பித்தனோ அல்லது பித்தன்போல் நடித்தானோ என்று ஷேக்ஸ்பியர் நாடக ஆராய்ச்சியாளர் சிலர் ஐயுறுவார். இந்தச் சொல் சொன்னவன் உண்மையில் பித்தனே என்பதிற் சந்தேகங்கொள்ளச் சிறிதேனும் நியாயமில்லை என்று மதிக்கவேண்டி வரு கின்றது. சாகத்துணியாதவன் சொல்கின்ற 'சாக்கு' இது. இம்மையில் இருக்கின்ற இந் தத் துன்பத்திற்கும் மேலானவொரு துன் பம் மறுமையில் எய்தக் கூடும் என்ற எண் ணமே தடை செய்வதால் தான் தன்னை மாய்த்துக் கொள்ளாமல் இருக்கின்றான் மனிதன் என்பது எத்துணையும் அனுபவத் திற்குப் பொருந்தாது. இப்படிப் பேசிய ஹாம்லெட் வெறும் பித்தனே.

சாகாமைக்குக் காரணம் எதுவாயினும், மனிதன் இத்துணை இடுக்கண்களுக்கிடையே இருப்பதன் நோக்கம் யாதென்று அறிய மாட்டாமல் இருக்கின்றது. "To each his suffering all are men condemned alike to groan" என்றார் ஆங்கிலப் புலவர் க்ரே என்பவர். இதற்குச் சான்றுகளும் மேற்கோள்களும் வேண்டவும் வேண்டா. எனினும் ஒன்று. இந்த மனிதர்களை எல் லாம் படைத்த கடவுளே இராமனெனப் பெயர்கொண்டு மனிதனாகப் பிறந்தபோது,

ஆய்வுறு பெருங்கட லகத்து ளேயவன்
பாய்திரை வருந்தொறும் பரிதற் பாலனோ
தீவினைப் பிறவிவெஞ் சிறையிற் [பட்டயாம்
நோயுறு துயரென நுடங்க [னேன்மையோ

என்பானேல் இப்பிறவியை நம்மனோர் வெறுக்காமலிருக்கும் வகையுண்டோ. சீதை யை இழந்து வருந்திய இராமன், தன் அரு மைத்தம்பி இலக்குவனையும் இழந்தானென்று எண்ணித் துயரந் தாங்கமாட்டாமல் தற் கொலை புரிந்துகொள்ள முயன்ற சிறிது நேரத்திற்குள், பிறவித்துயரை இப்படி எடுத் துப் பேசுகின்றான் என்பதையும் எண்ணுங் கால், மனிதன் தன் உயிரைப் பிடித்துக் கொண்டிருக்கிற கொள்கையின் அதிசயம் நன்கு புலப்படவேண்டும்.

எல்லாவற்றிலும் ஆச்சரியமானது எது என்று யக்ஷன்கேட்டபோது தருமபுத்திரன் "இறப்பதே நிச்சயமும் சாதாரணமுமாக இருக்க ஒருவன் இறந்தால் மற்றவர்கள் அந் நிகழ்ச்சியை ஏதோ அதிசயம்போல் பாராட் டுகின்றார்களே, அதுதான் எல்லாவற்றிலும் ஆச்சரியமானது" என்று எதிர்விளம்பினான். மற்றும், சாவது இத்துணைச்சுலபமும் சாதா ரணமுமாக இருக்க, "தீவினைப் பிறவிவெஞ் சிறையிற்பட்டவர்" ஏன் தம்மை மாய்த்துக் கொள்ளாமல் இப்படி யுழல்கின்றார்களோ தெரிந்ததில்லையே, அதுதான் எல்லாவற்றி லும் ஆச்சரியமானது என்று பதில் சொல் லியிருப்பானாயின் தருமபுத்திரனது மதிநுட் பம் பின்னும் பலபடி பாராட்டக் கூடியதாக நின்றிருக்கும்.

எனின், மனிதன் உயிரோடு நடமாடுவதை விடச் சாதாரணமானது இவ்வுலகில் வே றொன்றில்லையாக, மற்று உற்று நோக்குங் கால் அதுவே இத்துணை அதிசயமாகி ஆச் சரியப் படும்படி முடிகின்றது.

மனித வாழ்க்கை இப்படியாயிற்று. இது ஒரு புறமிருக்கட்டும். மனிதத் தன்மையைப் பார்த்தாலோ அதுவும் ஒன்றும் பாராட்டுவ தற்குரியதாக இல்லையே. வளர்ச்சி முறையில் குரங்கின் பரம்பரையில் தோன்றியது இம் மனித இனம் என்று டார்வின் அனையஉயிர் நூல் ஆராய்ச்சியாளர் எடுத்துக்காட்டியிருக் கின்றனர். இது கொண்டு "குரங்கினின்று மாறியவர்களா நாம்" என மனிதர் தம் குரங்கின முன்னையோரைக் கருதி மான மழிந்து நிற்கின்றார். எனினும், விற்றும் வாங்கியும், உண்டும், பெண்டு கொண்டும், வலியோருக் கொடுங்கியும், மெலியோரை நலிந்தும், நன்றியைக் கொன்று தின்றும், நான்நான் எனத் தருக்கிச் செல் வத்தின் போகமே மானுடச்சாதனையென்று ஒன்றை விட்டு ஒன்று பற்றித் திரிகின்ற இம்மனிதனைக் காண்கின்ற குரங்குகள்,

"நல்ல வேளை, நாம் இவ்வற்ப மனிதர்களா காமல் தப்பினோமே" என்று களி கூர்ந்திருக் கவில்லை என்பது நிச்சயம் அல்லவே, என மேரியன் க்ராபர்ட் என்னும் ஆங்கில நூலா சிரியர் ஒருவர் கூறியிருப்பது சாலச் சிந்தித் தற்குரியது. இவ்வாங்கில நூலாசிரியர் இன்று சொல்கின்ற வார்த்தை இது. இதற் கிணை நமது பண்டைய தமிழ் இலக்கியங்களி லும் உளது. கச்சியப்ப சிவாசாரியார் தம் கந்தபுராணத்தில் எண்ணரிய நுட்பம் வாய் ந்த காட்சியொன்று காட்டுகின்றார்:—

பாதிமதி சடையணிந்த பரமன் உமையி னோடும் வந்து ஓர் கூவிளந்தருவின் நிழலில் தங்கியபோது அம்மரத்தின் மீதிருந்த ஓர் குரங்கு தனக்குரிய குறும்பு மதியால் தழை களைப் பறித்து அவர்மீது தூவுதலும் சுந்தரி சிறிது சினந்தனள் நோக்க வெருவிய அவ் வானரம் விதிர்ப்புற இழிந்து ஐயனையும் ஆய்தனையும் ஆர்வமொடு வணங்கா அடிய னேன் பிழை பொறுத்திர் என இரந்தது. அப்பொழுது,

பிழையிதென வச்சமொடு பேசலெமை யீண்டே
விழுமியதொர் கூவிளையின் மெலிலைகளிட்டு
வழிபடல் புரிந்தனை மனுக்குல முதித்து
முழுதுலகை யாளுகென முன்னவன் மொழிந்தான்

ஈங்கிது செய்தது சேட்டையே யானு லும், தானுகந்த வில்லுவத் தளிர்களால் அர்ச்சிக்கப் பெற்ற இக் கறைமிடற்றிறை வன் அதற்கீடாக, "நீ மனு குலத்தில் மனித னாகப் பிறந்து உலகம் முழுவதையும் ஆள் வாய்" என்றோர் வரமருளினன். குரங்கி ற்கோ இது சாபமாகத் தோன்றியதேயன்றி வரமாகத் தோன்றவில்லை. ஆப்பைதனை அசைத்ததனில் அரியதோர் இடுக்கண் இச் சேட்டையால் எய்தியதென மாழ்கியது. மாழ்கி "யான் செய்த பிழையோ மிகச் சிறி யதாக, அதற்கு மனிதனாய்ப் பிறக்கவேண் டும் என்னும் அத்துணை பெரிய சாபத் தையே இட்டு விடலாமோ" என மன்றாடி,

நுங்களை வைகலு நோக்கி யுவப்பாய்
இங்குறை கின்ற திகந்து நிலம்போய்
மங்குறு செல்வ வலைப்படு வேனேல்
எங்கள் பிரான்பினை யெங்ஙன முய்கேன்

எனப்பாவம் அப்பேதை வானரம் பரிந்து இரந்தது. மனிதனாயின் பின்னர் உய்கை இல்லை என்பது அக்குரங்கிற்கு நிச்சயம். எம்பெருமான் அதனை அன்புடன் நோக்கி "நின் உள்ளந் தூயது, யாதும் வருந்தல்; நிலத்திடைச் சில நாள் அரசிருந்து பின் னிங்கு மீள்வாய்" என்று தேற்றினும் ஆற் றாமல்,

பொய்ம்மறை யான புலாலுடல் போற்றி
அம்மையில் வாழ்விடை யற்ற முறாதே
இம்முக னோடற வெற்கரு ளென்னா
மெய்ம்முசு வின்கலை வேண்டிய தன்றே

என அச்சிறு சரிதத்தை முடிக்கின்றார் புல வர் பெருமான் கச்சியப்ப சிவாசாரியார். "மனித முகங்கொண்டு நான் கடவுளுக்கு ஆளாவதெங்ஙனம்" என அஞ்சிக் குரங்கின் முகமே சாலச் சிறந்ததோர் காப்பு என்று எண்ணிய அம்முசுகுந்தனது வேண்டு கோளை விட மனிதனது அவமானத்திற்கு வேறு என்ன வேண்டும்! இந்த அவமா னத்தை ஒருவாறு போக்குதற்கு முயன்ற கம்பர் பெருமான்,

தேறின னமரர்க் கெல்லாந் தேவராந் தேவ ரேன்றே
மாறியப் பிறப்பில் வந்தார் மானுடராகி மன்னோ
ஆறுகொள் சடிலத் தானு மயனுமென் றிவர்களாதி
வேறுள குழுவை யெல்லா மானுடம் வென்ற தன்றே.

என்று இராமனைக் குறித்து வேறோர் குரங்கு சுக்கிரீவன் சொல்லும்படி வைத்திருப்பது உண்மையேயானாலும், இன்னமும், முசுகுந் தன் சுமத்திய அப்பரிபவப் பொதியினின்று மனிதன் தலை நிமிர மாட்டாமல் இருக்கின் றான் என்றே மதித்தல் வேண்டும்.

குரக்கினத்து இம்முசுகுந்தன் அன்றியும் அரக்கர்குலச் செம்மல் அக்கடோற்கசன், 'அரக்கிமகன்' என்று தன்னை இழித்துக் கூறிய துரியோதனனை முன்னிட்டு, அரக்கர்கள்,

செழுந்தழல்வாழ மனைகொளுவார்
செய்ந்நன்றி
கொன்றறியார் தீங்கு பூணர்
அழுந்துமனத் தழுக்குறு ரச்சமுமற்
றருளின்றிப் பொய்ச்சூ தாடார்
கொழுந்தியரைத் துகிலுரியார் கொடுங்கான
மடைவித்துக் கொல்ல வெண்ணர்
எழுந்தமரின் முதுகிடா ரிவையெல்லா
மடிகளுக்கே வேற்ப வென்றுன்

"மானுட அடிகளே, நீங்கள் இவ்விழிதகைத்தொழில்கள் பூண்டிருப்பதாற்றான், அரக்காகிய எம்மினின்று வேருக நிற்கின்றீர்" எனக் கடோற்கசன் கழறியது துரியோதனனை மட்டுமே சாருமென அமைதற்கில்லை; எல்லா அடிகளுக்கும் இது ஏற்கும்.

குரங்கும் அப்படிக் கூறுகின்றது. அரக்கனும் இப்படி அறைகின்றான். இனி, குலத்திற்குள்ளிருந்தே இதனை ஏசுவார் எத்தனையோ பலர். இன்னவர்களில் ஒருவர், தற்காலம் தனக்கு நிகரில்லாச் சிந்தனையாளர் என்னும் புகழுடன் ஓங்குகின்ற வித்தகர் ஜான் கூபர் பாய்ஸ் என்னும் அமரிக்க ஆசிரியர். "நாம் மீன்களல்ல, ஆடுகள் அல்ல, நரிகள் அல்ல, புலிகள் அல்ல, பேய்கள் அல்ல, இவைகளை யெல்லாம் விடக் கேடு கெட்டவர்—மனிதர்" என்பார் என்றால் அப்புறம் பல பேசுவானேன்.

நன்று; மனித வாழ்க்கையோ அத்துணை அவலமானது, மானுடத் தன்மையோ இத்துணை இழிவானது; எனின், பொதுமையிற் பொதுமையாகிய இம்மனிதன் இன்னுந் தன்னை மாய்த்துக் கொள்ளாமல், உயிரை நச்சி நடமாடுவதன் அதிசயத்தினை அரிதின் அறிய வேண்டாவோ! புலையாம் பிறவி பிறந்து என் செய்தார்? இதனினும் அதிசயம் இன்னு மொன்றுளது. இத்துணை அவலமும் இழிவும் இயற்கையாயிருக்க "அரிது அரிது மானுடராதல் அரிது" என்கின்றார்களே சிலசான்றோர். இன்னார் என்ன நினைத்துஎன்னசொல்கின்றார். "அரிதரிது மானுடராதலரிது" என்னும் இவ்வாசகம் பொதுமையிற் பொதுமையானது. நூற்றிற்குத்தொண்ணூற்றென்பது கட்டுரையாளர் வாயில் இது தவறாமல் வரக்காணலாம். எனினும், முன்னே கூறியவைகளை நினைக்கும்போது, இவ்வாசகத்தை ஊன்றிச் சிந்திக்குமளவும், எவ்வகையில் இம்மனிதப் பிறவி அரிதெனும் அதிசயமே அதிகமாகின்றது.

இத்தகைய அதிசயங்களுக் கிடையே, வேறோர் பொதுமை மிகப் பெரியதொரு ஆச்சரியமாகத் தோன்றி எழுகின்றது. அதனைச் சிறிது ஆராய்வோமாயின் இக்கட்டுரையின் பொருளும் பயனும் தெரியவரும்.

கடவுளென்னுங் கருத்து மிகப் பொதுமையானது. வேறு எது தெரியினும் தெரியாவிடினும் இவ்வுலகடங்கலும் உள்ள மாந்தர் அனைவர்க்கும் கடவுள் என்னும் அந்தப் பெயர்தெரியும். மிக இழிந்த இம்மனிதன் மிகப் பெரிய அப்பெயரை எங்ஙனந் தெரிந்து கொண்டான். இந்த அதிசயத்தை எடுத்துக் காட்டியவர் ரஷ்யா தேசத்து நூலாசிரியர்களில் ஒருவராகிய டாஸ்ட்ட விஸ்க்கி என்பவர் கூறுகின்றார்.

What would be marvellous is not that God should really exist; the marvel is that such an idea, of the necessity of God, could enter the head of such a savage, vicious beast as man. So holy it is, so touching, so wise and so great credit it does to man.

"இத்துணை மூர்க்கமும் குரூரமும் வாய்ந்த இந்த மனிதன் என்னும் மிருகத்தின் தலையில், அத்துணைப் புனிதமாயதும் மேன்மையானதும் ஆகிய கடவுளின் அவசியத்தை கண்டு கொண்ட கருத்து எப்படித்தான் நுழைந்ததோ, அடங்கமாட்டா ஆச்சரியமாக இருக்கின்றதே இது! எத்துணை அறிவு

சான்றது! எத்துணை பெரிய பெருமையை இது மனிதனுக்குச் செய்து வைக்கின்றது!'' என வியக்கின்ற அவ்வாசகத்தினுள் மனிதப் பிறவி அரியதாவதன் இரகசியம் அடங்கியிருக்கின்ற தென்பதை இனி இயம்பல் மிகை.

டாஸ்ட்ட விஸ்க்கி கூறும் வண்ணம் கடவுள் என்னுங் கருத்தே மனிதனுக்கு அத்துணைப் பெருமை யளிக்கின்றதென்றால் அக்கடவுளைக் கண்டுகொண்ட பின் இம்மனிதப் பிறவியின் பெருமை மாத்திரமின்றி அதன் அருமையும் தெரியவரும். இந்தக் காட்சிக்குத்தான் அவாவி அலைகின்றது இம்மானுட மனம். தன்னிலும் பெரியதொன்றைத் தான் தேடும் இப்பரபரப்பே, பொருளென்றும் புகழென்றும் அதிகாரம் என்றுந் தோன்றி மனிதனைப் பிய்த்துத் தின்கின்றன. உண்மையில் இவன் நாடுவன இவைகளல்ல. அவைகளிலெல்லாம் மேலாய நிரந்தரமானதொன்றைத் தேடியடையவே தடுமாடுகின்றது இவன் மனம். அது தெரியாமல், மண்ணும் பெண்ணும் பொன்னும் அம்மனத்தை நிறைத்துக்கொண்டுவிடலாம் என்று வீணே எண்ணி அலைவதாற்றான் இவ்விபரிதங்களெல்லாம் நிகழ்ந்து கெட்ட பேரும் எடுக்கின்றான். எடுப்பது கெட்ட பேரானாலும், இந்த அல்லலே அவன் ஆன்மாவின் அதிசயத்தைக் காட்டித் தருகின்றது. "மனித வாழ்க்கை மிகவும் அற்பமானதென்றே வைத்துக் கொள்வோம். மற்று, அது அற்பமான தென்பதைத் தான் நாம் தெரிந்து கொண்டது எங்ஙனம்? இந்த அவலத்திற்கும் அதிருப்திக்கும் ஆதாரம் என்ன? எல்லாரும் ஒரு படித்தாய் உணர்கின்ற குறையும் அறியாமையும், நம்முடைய ஆன்மாவானது தனது மாபெரும் உரிமையைக் கேட்கின்றவோர் நுட்பமான குறிப்பேயன்றி வேறு யாவதாயிருத்தல் கூடும்'' என்று இக்கருத்தை அமெரிக்க வித்தகர் எமர்ஸன் என்பவர் அழகுற விளம்புகின்றார். எனின், அலகிலா நிரந்தர நிலையின் நினைவு நம்மில் வேரூன்றி இருத்தலாற்றான், அலகும் அழிவும் உடையது நம்முடைய வாழ்க்கை என்னும் எண்ணம் நமக்கு இடைவிடாமல் தோன்றலாகின்றது என்பதில் யாதும் ஐயமில்லை. எனின், "தேடிக் கண்டுகொண்டேன், திருமாலொடு நான்முகனுந் தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே தேடிக் கண்டு கொண்டேன்'' என்று நம் பெருந்தகை திருநாவுக்கரசருடன் பாட வல்லோமாயின், இவ் ஆக்கையாற் பெருதற்குரிய பயனைப் பெற்றவர்களாவோம்.

குனித்த புருவமுங் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய வெடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
யிந்த மானிலத்தே.

எங்கள் அபிமானிகட்கு

# நற்செய்தி!



எங்கள் வியாபார நிலையத்தை ஆதரித்து வந்த, வருகின்ற, வரப்போகும் அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் வந்தனம் உரியதாகுக!

## மங்களமாகப் பொங்கல் பொங்குக!

# வந்தேமாதரம்!

ராம. செ. ராம. ராமசாமி செட்டியார்

78, மொகல் வீதி, :: :: இரங்கூன்.

# செல்வன் திருமகள்

"சமூகப்பித்தன்",

("பச்சைமலை பவளமலை" யென்ற மெட்டு)

(1) கான்மலரும் நறும்பூவும் கவின்கொள் வயற் பூவும்
கமழுமனோ ரஞ்சிதமும் பொருந்தி மிக மேவும்
தேன்மலருஞ் செஞ்சாலி தன்னில்விளை முத்தும்
தீம்மதுர நற்கரும்பு வேயில்விளை முத்தும்
தோன்றலர் செந் தாமரைவென் டாமரையோ டல்லி
துவன்றிவரும் பைந்துணர்கள் மேலதிகம் புல்லி
வான்மலருஞ் சந்தமகில் தேக்குமுதற் பலவும்
மணிவயிற்றின் மேற்சுமந்தே அணிகளெலாங் குலவும்.

(3) இருமருங்கும் கரைபுரளும் பெரு நீத்தம் விஞ்சும்
இந்துகதி ரவன்சுடர்கள் இதனலேயே கொஞ்சும்
பெருமரங்கள் வானிலிவர் பெருமையது முதிரும்
போரா வாரமது பெரும்பூமி யதிரும்
பருமைமிகு மணிகளெலாம் மிக வான்றிக் கொழிக்கும்
பயில்கழனி யெம்மருங்கும் பல்வளங்கள் செழிக்கும்
தருமமிகு மக்கள்பலர் சார்ந்திருப்பர் மருங்கே
சாற்றவெனி லதன்பெருமை யாரறிவா ரொருங்கே.

(3) அத்தகைய காவிரியும் அணிகொழிக்கும் வடபால்
அமைந்திருக்கும் மருதநகர் அந்நகரின் குடபால்
பக்தர்களும் எளியர்களும் பரந்திருப்பர் மிகவே
பரிந்தவர்க்கு "மழை மாரி" பொழிவது போற் றகவே
எத்தகைய பேர்களுக்கும் எந்நாளும் ஈயும்
ஏந்தலவன் வாழுகின்ற திருமனையும் தோயும்
சத்தியமே உருவான தனிகனவன் பேரே
சாத்தப்ப வணிகனெனச் சாற்றுபெருஞ் சீரே.

மழை மாரி = ஒரே பொருளைக் குறிக்கும் நாட்டுச் சொல்.

(4) ஈராறு லட்சமது இனங்களிலே யுண்டு

— — — — — —

ஓராயி ரத்தொண்ணூ ருநடவாம் "நஞ்சை"
ஒன்பதினோ டெழுநூற்றுக் குறுக்கமதாம் "புஞ்சை"
தீராத வழக்கிற்குப் பஞ்சாயத் தென்று

திரளான மக்கள் பலர் சேவிப்பார் நின்று
வாராத கீர்த்தியது வாய்த்திடினும் சற்றும்
மாறுதான் கோபமிலான் பேரருளான் முற்றும்
நஞ்சை, புஞ்சை = நன்செய், புன்செய் என்பவற்றின் மருஉ.

(5) மரகதங்கோ மேதகநீ லம்பதும ராகம்
வச்சிரம்ப வளவயிடூ ரியம்புருட ராகம்
தரள மெனும் நவமணிகள் வியாபாரஞ் செய்யும்
தனிகரிவர் சாத்தப்ப வணிகருக்கே உய்யும்
அருமையுள மக்களுமே ஐந்து பெயருண்டு
அவர் மூத்தாள் ஆனந்த வல்லி யெனும் பெண்டு
சுரிகுழலாள் இன்பநகைத் தூயவெழில் உள்ளாள்
தோன்றிவளர் பருவம்பத் தொன்றினையுந் தள்ளாள்.

(6) மூத்தமகள் இவளுக்கே மணம்பேச வென்று
முதியர்சிலர் தமையுய்த்தார் அவரெங்குஞ் சென்று
காத்தநலூர்க் கருப்பையச் செட்டியார் பேரன்
கண்ணப்ப வணிகர்மகன் காளைசுகு மாரன்
பூத்தமலர்ப் பருவமுளான் மாப்பிள்ளை யன்றே
பொருளிவருக் கெட்டுலட்சம் பொருந்திடுமாம் நன்றே
நேத்திரம்போல் ஆனந்த வல்லியெனும் மாதே
நிச்சயமாய் எத்திருவும் பெருவளென்றூர் தோதே.
பூத்தமலர்ப் பருவம்—16 வயது.

(7) பெரியார்கள் இவைசொல்லக் காத்தநலூ ராரின்
பிள்ளைசா தகம்பெற்றுப் பார்த்தார்கள் தேரின்
சரியான பொருத்தமிதன் மேலில்லை யெங்கும்
தசவிதமாம் நற்பொருத்தம் சந்தோஷம் பொங்கும்
பரிவான சுந்தரையர் பகர்ந்திதைக் கேட்டார்
பக்ஷமுடன் வார்த்தைசொல மாப்பிள்ளை வீட்டார்
திருவான நாட்பார்த்து நிச்சயதாம் பூலம்
செய்துகொண்டார் மறுமாதங் கல்யாணக் கோலம்.

(8) கண்ணப்பர் ஒருலட்சம் கைப்பொருளைக் கொட்டி
காளைகல்-யாணத்தை முடித்தற்கே தட்டி
எண்ணுற்ற முகூர்த்தமதில் எழுந்திருந்த கிழவ
ரெடுத்தாரே கழுத்துருவை யிருகையினும் வழுவி
மண்ணுற்ற வதைமீண்டும் வருத்தமுடன் எடுத்தார்
மணமகளின் கழுத்தினிலே முடிச்சினையுந் தொடுத்தார்
கண்ணுற்ற மணமகள்தாய் கவலைமிக வானாள்
கண்பிசைந்தே துயர்க்கடலின் கரையிகந்தாள் மானாள்
எது அட்டி—ஆக்ஷேபனை என்ன.

(9) மணமான மறுமாதம் வைகூரி பார்த்து
மணமகனுஞ் சேர்ந்தானே பரலோகம் ஈர்த்து
குணமான ஆனந்த வல்லியொடு கூடி
கூக்குரலிட் டார்பெண்கள் ஒப்பாரி பாடி
பிணமான உடலைப்பங் காளிகள் தூக்கி
பெருங்காடு சேர்த்திட்டார் பிறகென்ன பாக்கி?
கணமான சுற்றத்தார் பெண்ணிவளுஞ் சிறியாள்
கருமமெலாம் பின்னரென்றார் என்னெனவும் அறியாள்.

(10) பட்டுரவிக் கைபூண்டு பச்சைப்பட் டுடுப்பாள்
பன்மலர்கள் ஜடைப்பின்னி வீதியினில் அடுப்பாள்
வட்டமதி பூரணமாய் நாலெட்டுஞ் செல்ல
மாதிவளும் ருதுவானள் வருத்தமது புல்ல
சட்டமிது-வெனச் சொல்லி நன்னாளைத் தேர்ந்து
சடங்காகும் கருமங்கள் சலிப்புடனே கூர்ந்து
இட்டமது வில்லாமல் காளைக்குப் பந்தர்
இட்டார்கள் இருதாரப்புச் சுற்றத்து மந்தர்

வட்டமதி பூரணமாய் நாலெட்டு—32 பூரணச்சந்திரன் ( வூ 8 மீ

(11) பந்தருக்குள் ஆனந்த வல்லிதனை யிருத்தி
பக்கமெங்கும் வெண்சேலை சிக்கெனவே பொருத்தி
நொந்தவிதி விதவையரின் மூத்தார்கள் இருவர்
நுடங்கிடையாள் வணச்சேலை பறித்தங்கு தருவர்
அந்தமிலா வெண்சேலை தனையுடுத்துத் தாலி
யதையவிழ்க்க ஐயோவென் றாற்றினளே கோலி
பந்தமுறு வினைகளெலாம் முடிந்தபின்ஆ னந்தி
பயிலலுற்றாள் எஞ்ஞான்றும் வீட்டினுளே குந்தி.

(12) "தாயாரே தந்தையொடு சல்லாபங் கொண்டு
சார்ந்திருக்கும் வகையறிவேன் தங்கையர்கள் தொண்டு
ஓயாதே கணவருடன் உல்லாசத் தோடு
ஒலிபெருக்கும் மகிழ்வதுவிவ் வுலுத்தைக்குக் கேடு
வாயாதே இன்பகலம் வாடுகின்றேன் மங்கை
மற்றவர்கள் இல்வாழ்வில் மனங்கொள்ளுஞ் சங்கை
ஆயாதே சிறுவயதில் திருமணமே செய்தார்
ஐயையோ என்வாழ்வை யடியோடு கொய்தார்.

(13) பட்டிழந்து பூவிழந்து பலமெல்லாம் அழிந்து
பாங்கிழந்து வனப்பிழந்தே ஆசையெலாம் ஒழிந்து
பொட்டிழந்து புலனிழந்து புத்திதடு மாறி
பொல்லாத வினைமுடிப் பித்தமிக வேறி

கட்டிழந்து கருத்தழிந்து கவலையெலாம் மல்கி
கங்குகரை யில்லாத காமமது பில்கி
தொட்டிழந்த படுபாவி துஞ்சலுமில் லேனே
தொல்லுலகி லுயிர்வாழ்தல் நஞ்சமதென் பேனே"

(14) என்றினைய பலவெண்ணி யேங்குவள்ஆனந்தி
இவள்துயரைப் போக்கற்குச் சாத்தப்பர் முந்தி
நன்றினிய தன்மகளை மறுமணமே செய்து
நல்கிற்சமூ கப்பிரஷ்டம் நேரிடுமே வெய்து
ஒன்றுமினிச் செய்வதற்கு இல்லோமே யென்று
உளங் கொதித்து மிகநைந்தார் பயனேது மின்று
தன்றுணையைப் பறிகொடுத்த அன்றிலது போலே
சஞ்சரித்தாள் ஆனந்த வல்லியும்பார் மேலே.

வெய்து—கொடியது

(15) கைப்பிடிநா யகரிழந்த விதவையர்கள் பன்னாள்
கண்கலக்கங் கொண்டதுவும் போதுமன்றே இந்நாள்
ஒப்புடைய ஒரு தோழன் தேர்ந்தெடுத்து மணமே
உஞற்றிடிலே நல்வாழ்வு உண்டாகுங் குணமே
இப்படியே செய்திடினஞ் சமூகமது உயரும்
இறைபாணை இறையளவும் ஐயமிலை பெயரும்
ஒப்பேது சரித்திரத்திற் பொன்னாலாம் எழுத்தே
உறும் அதற்குத் தடையேது உறுதியென வழுத்தே.

(இப்பாட்டில் வந்துள்ள பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல)

# ஸ்ரீராம கிருஷ்ண தேவர்

திரு. பழ. அ. மெய்யப்ப செட்டியார்.

சீலத்தார் தொழுதேத்த மறைவிரித்த
பெருங் குரவன் சேயபாதம்
ஞாலத்தே படிந்தருளப் பின்னுமொரு
முறை நடப்ப நயந்தானுகிக்
காலத்தால் வேறுபடாக் கங்கையெனுந்
தெய்வ நதி கலந்துநின்று
கூலத்தா லுலகளிக்கும் கங்கைவள
நாட்டை யுளங் கொண்டானன்றே.
(ஸ்வாமி-விபுலானந்தர்)

**தான் வருந்திப்** பிறர்க்குதவுந் தயை பிறந்த நாடாகிய இப்பாத கண்டத்திலே வங்காள தேயத்தில் ஹூக்லி ஜில்லா 'காமர் புகூர்' என்னும் ஊரில் திருமாலை வழிபடும் அந்தணர் குலத்திலே குதிராம் சட்டோபாத்யாயருக்கும், சந்திரமணி தேவியாருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர் 1836ம் ஹு பிப்ரவரி மீ 18உ பிறந்தருளினர்.

ஆங்கில பாஷையிலும் அவர் தம் உடை நடையிலும் மயக்குற்றிருந்த நம் நாட்டு மக்கட்கு இப்பெரியாரின் திருவவதாரம் மிகப் பயனுடையதாயிருப்பதையாரும் மறுக்கவியலாத தொன்று. இக்கட்டுரையுள் நாம் இனி இவரை குருதேவர் என்றே குறித்துச் செல்வாம்.

இவரோடுடன் பிறந்தார் (1) ராம் குமார் (2) காத்தியாயனி (3) சர்வ மங்களை என்னும் மூவர் ஆவர்.

இவருடைய தந்தையார் பிரிவு 1843ல் நேர்ந்தது. அதன் பின்னர் இவர் தமயனுர் ராம்குமார் ஆதாவில் இருந்துவந்தார். வழக்கம்போல் பள்ளிச் சாலைக்கு அனுப்பப் பெற்றும் அக்கல்வி முறையில் மனம் பற்றவில்லை. இறைவன் மாட்டு "கற்றுவின் மனம் போலக் கசிந் துருகும்" பயனுள்ள கல்வியுள தேல் "கற்பனவும் இனியமையும்" என்பதில் என்ன வியப்பு?

இவர் சிறு பருவத்தே தம்மோடொத்த இளஞ்சிறூர்களை அழைத்துக்கொண்டுமாமாச் சோலைகட்குச் சென்று அங்கே நாடகம்ஆடுவதும், பாடுவதும்வழக்கம். ஒருசமயம் "இராதா சோகம்" என்ற நாடகத்தில் குருதேவர் இராதையாக நடிக்கும் போது தன்னை மறந்து "கிருஷ்ணு" "கிருஷ்ணு" வெனக் கூறிக் கொண்டே மூர்ச்சையாகிக் கீழே விழுந்து விட்டார். பால்யத்தில் பார்வைக்கு நிரம்ப அழகுள்ளவராகக் காணப்பட்டார். சிறந்த சித்திரங்களை எழுதுவதிலும் மண் பதுமைகளை அழகுறச் செய்வதிலும் கைவன்மையுடையவராக இருந்தார். தக்ஷிணேசுவராலயத்தில் இவரால் செவ்வை செய்யப்பட்ட கிருஷ்ண விக்ரகம் இன்றும் அழகோடுவிளங்கிக் கொண்டிருக்கின்றது.

இவருக்கு இவர்தம் 16ஆம் வயதில் உபநயனம் ஆயிற்று. அத்தருணத்தில் வழக்கப்படி உயர்குலப் பெண் பாலாரிடம் பிச்சை ஏற்க வேண்டியதிருக்க, இவர் அவ்வாறு செய்யாமல் தாழ்ந்த குலப் பெண் பாலார் ஒருவரிடம் பிச்சையேற்று தம்முடைய சமத்துவ எண்ணத்தை வெளிப்படுத்தினர்.

கல்கத்தாவிற்கு வடக்கே ஐந்து மைல் தூரத்திலுள்ள தக்ஷிணேசுவரம் காளி கோயில் அர்ச்சாகவிருந்த தம் தமயனுர் ராம்குமார் விருப்பின்படி அவருடனிந்து பூஜைக்கு வேண்டிய இன்றியமையாத உதவிகள் செய்து கொண்டிருந்தார். சின்னுட் சென்ற பின்னர் தமயனுர் ராம்குமார் நோய் வாய்ப்

பட்டு அதனால் வருந்தினாராக அக்கோவி லுக்கு அர்ச்சகராக குரு தேவர் 1855ல் நிய மிக்கப்பட்டார்.

"தப்பாமே தாம் பிடித்தது சலியாத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியும் அலறியும் பாடியும் பரவியும்"

என்று கூறியாங்கு குருதேவரும்காளிதே வியின்பால் இடையறுவன்பு கொண்டு ஆடு வார்அகங்குழைந்து பாடுவார்.உரையாடுவார் சமாதியிலாழ்ந்து விடுவார். இவர் வழிபா டியற்றும் போது தரிசிக்கச் செல்லுவோர் அம்மை திருவடிவத்தின் கண் தோன்றி அருள் சுரந்து நிற்கும் பான்மையும் கண்டு பேரின்ப முறுவார்.

இவர் இவ்வாறு இறையுணர்வு பெற்று அம்மெய்யுணர்வின் வழியே செல்வாராய் நின்றமை யுணர்ந்த சுற்றத்தார் அவ்வுணர்வு களை மறவி செய்வான் வேண்டி இவருக்குத் திருமண முடிக்கக் கருதி இராமேசுரரின் புதல்வி ஐந்து வயதுள்ள சாரதாமணி தேவியாரை காமர்புகூரில் 1859ல் மணஞ் செய்வித்தனர். மீண்டும் தக்ஷிணேசுவரம் சென்று பூசனை யாற்றிவந்தார். இவரது அரிய புகழ் எங்கும் பரவ கல்கத்தா முதலிய இடங்களிலிருந்து பல பண்டிதர்களும் அடி யார்களும் வந்து அளவளாவிச் செல்வாராயி னர். செல்வத்தை இவர் ஒருபோதும் மதித் ததில்லை. ஒருகையில் பணத்தையும் மற்றொரு கையில் மண்ணையும் வைத்துக்கொண்டு 'பணம் மண், மண் பணம்' என்று சொல்லி இரண்டையும் கங்கையில் எறிந்து விடுவார். நிருவிகற்ப சமாதி யடைவதற்காக இவர் பனிரெண்டு வருஷ காலம் கொடிய தவம் புரிந்தார். இவர் பரமார்த்த விஞ்ஞானம் அனைத்தையும் உணர்ந்து ஞானியாக ஆக வேண்டுமென்று முயல்கையில் ஒரு "பிரா மணியிடம்" தந்திரசாதனம் பயின்றார். பின்னர்,

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த்
தொடங்கினர்க்கு .

ஓர் வார்த்தை சொலக் சற்குருவும் வாய்க்
கும் பராபரமே" (தாயுமானவர்)

என்றவாறே 'தோத்தாபுரி' என்ற ஒரு மஹான் வந்து 1864-ல் இவருக்குச் சகல வேதாந்தங்களையும் உபதேசித் தருளினர்.

இவருடைய மனைவி சாரதாமணி தேவி யார் தமது பதினெட்டாவது வயதில் இவ ரைத் தக்ஷிணேசுவரம் சென்று தரிசித்தார். "உன்னை மணந்தவன் இறந்துவிட்டான், இப்போதிருக்கும் இவன் புதியவன்" என்று சொன்னார் குருதேவர். பின்னர் அவ்வம்மை யார் நீண்டநாள் அவருடன் இருந்து அவ ரது ஆத்மீக வழிக்குத் துணையாக இன்றி யமையாத் தொண்டுகளியற்றித் தானும் அக் குருதேவரைப் போன்று மெய்யுணர் வெய்தப் பெற்று நீண்டநாள் வாழ்ந்து சின் னாட்களுக்கு முன்னர் கல்கத்தாவில் தேகவி யோகமானார்.

குருதேவருக்கு ஏராளமான சிஷ்ய கோடி களிருந்தாலும் முதன்மையாகக் கருதப் பெற வேண்டியவர் "விவேகாநந்த சுவாமி களே"யாவார். முதலில் இவருடைய கேள் விகட்குத் தகுந்த பதில் அளித்து அஞ்சா மையும் அருள் ஒளியும் நிறைந்த விவேகா நந்தரை 1880–ஆம் வருடம் நவம்பர் மாதம் ஆட் கொண்டருளினர். இவர் காலத்தவர் கள் கேசவ சந்திரசேனர், கிரீச்சந்திர கோஷ், பங்கிம் சந்திர சட்டர்ஜி, முதலி யோர்கள் ஆவர்.

கிறிஸ்துப் பெருமானையும் புத்த தேவரை யும், தீர்த்தங்கர மஹா வீரரையும், (சமணர்) நபிநாயக முதலிய பிற சமயாசாரியர்களையும் அவரவர் கூறியபடி அவ்வந் நெறியிலே நின்று உளங்கொண்டு வணங்கி உண்மை தேர்ந்து சமய நெறிகளனைத்தும் மெய்ந்நெறி களே யென்றும், பெரியார்கள் ஆராய்ந்து கண்ட சமயங்கள் யாவும் இறைவன் பாலுய்க்கும் அறத்தாறுகும் என்றும் ஒரு தலையாக உணர்ந்தார்.

குரு தேவர் அவர்களின் உபதேச மொழிகள்.

389. ஆழமான கடலில் முத்துக்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளை எடுப்ப தற்கு ஒருவன் எல்லாவித ஆபத்துகளுக்கும் துணிய வேண்டும். கடலில் ஒருதரம் மூழ்கி

யதில் உனக்கு முத்துக்கள் அகப்படாது போனால் அக்கடலில் முத்துக்களே இல்லை என்று தீர்மானித்து விடாதே.

850. அத்வைத ஞானமே மிகச் சிறந்த தாயினும் முதன் முதலில் ஈசுவரன் வழிபடத் தகுந்தவன். நான் வழிபாடு செய்ய வேண்டியவன் (ஆண்டானடிமைத் திறம்) என்ற மனோபாவத்துடன் நீ பக்தி பண்ண வேண்டும். அப்பால் உனக்கு அந்த அத்வைத ஞானம் எளிதில் வரும்.

இப்படிப்பட்ட அரிய உபதேசங்களை அவர் கூறும் பொழுதெல்லாம் உடனிருந்த சிஷ்யரொருவரால் அவர் அறியாது குறித்து வைத்திருந்து இதுபோது 1003, உபதேசங்கள் கொண்ட அரிய நூலாக வெளி வந்திருக்கிறது.

உயர்ந்த விஷயங்களை எளிய உபமானங்களால் நன்றாகத் தெளிவுபெற விளக்கப்பெற்றுள்ளது. 1884 ஆம் ஆண்டு பிற்பகுதியில் குருதேவரின் புகழொளி எங்கும் பரவியது. இவர் 1885 ஆம் ஆண்டில் நோய்வாயுற்றார். அதனால் தக்ஷிணேசுவரம் நீங்கி கல்கத்தா நகரை அடைந்து "நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி" அரிய மருத்துவர் பலர் பார்த்தும் நோய் தணியாதிருத்த லறிந்த சீடர்கள் குருதேவரின் திருவுள்ளக் குறிப்பின்படி சியாமப்புகூருக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு சில நாள் தங்கியிருந்து பின் 1885-ஆம் வருடிசம்பர் மாதம் 11 ஆம் தேதி சீடர்கள் பன்னிருவருடன் காசிப்பூர் பூம் பொழிலகத்தைச் சார்ந்தனர். அங்கும் நோய் தணியுமாறில்லை. சீடர்களும் மற்றையோரும் பெரிதும் கவலையுற்றிருந்தனர். 1886 ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி திங்கட்கிழமை இரவு 1 மணிக்கு மகா சமாதியாகி திருநாடலங்கரித்தருளினர். அவரது அன்பர்கள் அனைவரும் குருதேவரவர்களின் பிரிவால் துன்பக்கடலு ளாழ்ந்தனர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும் வாய்மைக்கு இலக்கியமாய் அவதரித்து வற்றாத ஞான ஊற்றாகப் போந்துபெருகி மக்களின் ஞான வேட்கைத் தாகத்தைத் தணித்தருளிய வள்ளலை வாயார வாழ்த்தி வணங்குவோம்.


எத்தனையோ கோடான கோடி ஜனங்கள் பிறக்கின்றனர். இறந்து மண்ணோடு மண்ணாய்ப் போகின்றனர். அவர்களைப்பற்றி யார் நினைக்கின்றார்கள். சரித்திரம் எழுதப் படுகின்றதா? பாக்கள் இயற்றப் படுகின்றனவா? இல்லை! இப்பெருமானுக்கு அனேகமாய் எல்லாப் பாஷைகளிலும், பாக்களும் சரித்திரமும் யாக்கப் பெற்றிருக்கின்றன. நமது தமிழ் மொழியில் இவரது சரித்திரம் சிறந்த முறையில் இறவாத தமிழ் நூலாக ஸ்ரீ வில்லிபுத்தூர் அ. ஸ்ரீ னிவாசாச்சாரியார் அவர்களால் எழுதப்பெற்று ஸ்ரீராமகிருஷ்ண மடத்தாரால் வெளியிடப் பெற்றிருக்கின்றது. அதன் உதவி கொண்டே இஃது எழுதப்பெற்றது.

அவரது சிறந்த சீடராகிய விவேகானந்த சுவாமிகள் அமெரிக்கா முதலிய வெளிநாடுகட்குச் சென்று நமது இந்துமதத்தின் உண்மையை அந்நிய நாட்டார் முன்னர் சொற்பொழிவாற்றி அவர்கள் அனைவரையும் வணங்கும்படி செய்தார். "திறமான புலமையெனில் வெளி நாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்றபடி சுவாமிகள் செய்த வீர கர்ஜனையினால் அந்நாட்டிலும் நமது நாட்டிலும் "பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரேல்லாம் விழி பெற்றுப் பதவி" பெற்றார்.

---

# ஒரு ரூபாய்க்கு கதர் வாங்கினல்?

## யார் யாருக்கு எவ்வளவு கிடைக்கும்.




நாட்டின் வறுமை நீங்க கதரையே அணியுங்கள் !

# இண்டோ பாம்.

## தலைவலிக்குச் சிறந்த மருந்து.




தயாரிப்பவர்கள்
**KARNIK BROS.**
BOMBAY.

பர்மா சோல் ஏஜண்டு.
ராம. செ. ராம. ராமசாமி செட்டியார்,
78, மோகல் வீதி, இரங்கூன்.

# கூட்டுறவு வேண்டும்.

திரு. அ. மு. மு. வெள்ளையன் செட்டியார் எம். எல். சி.

பர்மா வாழ் இந்தியர் நிலை இன்று மிகக் கவலைக்கிடமா யிருப்பது அனைவரும் அறிந்த விஷயமே. அதிலும் விசேஷமாகச் செட்டியார் தொழிலைப்பற்றி கூட்டுக்கமிட்டி அறிக்கை ஆசிரியர்கள் கூறியுள்ள வாசகம் மிகவும் வருந்தத்தக்கது. முக்கியமாக நம்மவரிடையே சமீப காலத்தில் பரபரப்பு உண்டானதற்குக் காரணம் இவ்வசை மொழியே என்றும் கூறலாம். ஆயினும் பர்மாவையே வந்து பாராது சட்டதிட்டங்களை நிர்ணயிக்கும் பார்லிமெண்டரி சபையாரை குற்றம் கூறுவதில் பிரயோசனமில்லை. சாகுபடி செய்கிறவர்களிடமிருந்து சாகுபடி செய்யாத நிலச்சுவான்தார் கைக்கு நிலம் செல்லுகிறது என்று கூறியவர்கள் பர்மாவின் வேளாண்மையின் சரித்திரம் தெரியாதவர்களாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் கீழ் பர்மாவில் நெல் வேளாண்மை தொடங்கியகாலம் முதல் பெரும்பாகமான நிலம் சாகுபடி செய்யாத முதலாளிகளுக்குச் (Landlord) சொந்தமாக இருந்து வந்ததுடன் அவர்களால் சாகுபடி செய்பவர்களுக்கு (Tenants) சேவாவுக்குஅடைக்கப் பெற்று வந்திருக்கிறது. இந்த விஷயம், மந்திரி பர்மா சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையிலும் தவருகச் சொல்லியுள்ளார். அதை ஒட்டித்தான் தனவணிகர்களைப்பற்றி கூட்டுக் கமிட்டியார் இவ்விதமான 'நிலம் வேளாண்மை செய்யாத சுவான்தார்கடம் நிலம் சுமந்தது தவறு' என்று தப்பர்த்தத்தைக் கொண்டார்கள் என்று மதிக்க இடம் தருகிறது. இவ்வபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளும் பொருட்டு ஏனைய விடங்களில் வேண்டுவன செய்யப் பெறுமென நம்புகிறேன்.

இது எவ்வாறு இருப்பினும் நமது சமூகத்தின் பிற்கால வாழ்க்கையை உத்தேசித்தும், வியாபார வளர்ச்சியை உத்தேசித்தும் நாம் எச்சரிக்கையுடன் இது சமயம் நடந்து கொள்ளவேண்டும்.

முதலில் நம்மவர் தொழில் முறைகளை தற்கால முறைகளை அநுசரித்து திருத்திஅமைத்துக் கொள்ளவேண்டியது அவசியமெனத் தோன்றுகிறது. இதற்கு சற்று பொருளாதார ஞானமும், வியாபார தேர்ச்சியும் வேண்டும். சாதாரணமாக நமது இளைஞர்களை சிறு வயதிலேயே வெளி நாட்டுக்கு கைபழக யாதொரு தேர்ச்சியுமன்னியில் கூட்டி யனுப்புவதைக் காட்டிலும் போதுமான அளவு ஆங்கிலம் பயின்றும் சற்று உலக வியாபார நிலைகளை அறிந்த பின்பும் அனுப்புவது உசிதம்.

மற்றபடி நமது வியாபார நிலயங்களையும், சொத்துக்களையும் காலத்துக் கேற்றவாறு பாரமரிப்பு செய்து வரும் நிமித்தம் திருத்தியமைத்துக் கொள்ளவேண்டும்.

லேவாதேவி செய்பவர்கள் ஒவ்வொருவரும் தற்கால பாங்க் முறைகளை அனுசரித்துச் செய்வதுடன் பல நிலயங்களை ஒரு நிலயம் ஆக்கி சொந்தக்காரர் தானே கவனிப்பது நலமென தோன்றுகிறது. மற்றும் வியாபார மந்தத்தினுல் வாங்கியவர் கடனை நமக்கு திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் நாம் பெரும் சொத்துக்களை ஒப்புக் கொண்டிருக்கிறோம். முக்கியமாக கீழ் பர்மாவில் சாகுபடி செய்யும் நிலங்களே உள. இவை சுமார் 25 லக்ஷம் ஏக்கர் நம்மவரிடையே இருக்க வேண்டும் என்று மதிக்கிறோம். இந்நிலங்கள் யாவும் சில்லரை துண்டுகளாக ஒரு முதலா

ளிக்கு பல பகுதிகளிலும் இருந்து வருகிறது. சுலபமாக இந்நிலங்களை பராமரிப்புசெய்வதுமிகவும் சிரமமாய் இருந்து வருவதுடன் சேவா வசூலிக்க மிகவும் பொருட்செலவாகின்றது. ஒரே பகுதியில் மூன்று வெவ்வேறு முதலாளிகளுக்கு நிலங்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்நிலங்களில் சேவா வசூலிக்க ஒவ்வொருவரும் தனித்தனியே ஆட்கள் அனுப்பி வசூலிப்பதைக் காட்டிலும் மூன்று முதலாளிகளுக்கும் ஒரே ஆளே வசூலிப்பது சௌகரியமாகவும் சிக்கனமாகவும் இருக்குமல்லவா? இவ்வாறே ஒரு ஆளையே அனுப்பி வசூலிப்பதற்கு மூன்று முதலாளிகளும் மனதொப்புவது முக்கியமான விஷயம். பொதுவாக இவ்விதமான சிரமத்தை கூட்டுறவு நிலையங்களை ஏற்படுத்தி நீக்கிக் கொள்ளமுயற்சிக்கலாம். நிலையங்களைப் பற்றியவரை கூட்டுறவு நிலையங்கள் நிறுவுங்கால் அந்நிலங்களின் பங்குக்காரர்கள் (Share holders) தவிர பிறரிடமிருந்து புதிதாக நிலங்களை ஒப்புக்கொள்ள உரிமையில்லை என்ற நிபந்தனை செய்து கொள்வது புதிய பர்மிய கவர்ன்மெண்டுக்கு ஒருவாறு சலுகை காட்டியது போலவிருக்கும் என்பது கவனிக்கத் தக்கது. இவ்விதமான கூட்டுறவு நிலையங்களாகச் செய்துகொள்வதால் சட்டப் பிரகாரம் சில சில சௌகரியங்களையும் அடைய வசதி உண்டு.

நிலச்சுவான்தார்கள் நிலத்திற்கு சமீபத்திலேயே வசிப்பதுடன் அந்நிலத்தின் வளத்திலும், பயிரிலும் சற்று கவனம் செலுத்த வேண்டியது அவசியம்- பொதுவாக பர்மாவில் நிலத்தை சேவாவுக்கு அடைப்பதும் நெல்லை அளப்பதும் தான் நிலச்சுவான்தார்களுக்கு வேலை யென்று மதிக்கிறார்கள். உறுதியுடைய நல்ல மாதிரியான நெல்லை விதைத்து உற்பத்தி செய்யும் பக்ஷத்தில் என்றும் மார்க்கெட் விலைக்குக் கூடவே நல்ல நெல்லுக்கு விலை கிடைக்கும் என்பதை நாம் அறிய வேண்டும். பொதுவாக வேளாண்மை நுட்பங்களை ஆராய்ச்சி செய்து அனுபவத்திற்கு கொண்டுவர வேண்டியது நம்மவர்களுக்கு அத்தியாவசியமாயிருக்கிறது. நெல்லை விதை செய்வதுடன் நமது முயற்சி நின்றுவிடவில்லை. ஏனெனில் அவ்வினை பொருளை விற்று வரக்கூடிய ஊதியத்தையே நாம் பெறவேண்டியவர்களாக யிருக்கிறோம். அவ்விதமான ஊதியத்தை பூர்ணமாக நாம் அடைவதற்கு அரிசி ஆலைகளை அமைத்துக் கொள்ளுவதும் ரெங்கூன் மார்க்கெட்டில் அரிசியை விற்பனை செய்வதின் நுட்பத்தையும் அரிசியின் உலகத் தேவையின் அவசியத்தையும் அறிய வேண்டியவர்களாக இருக்கிறோம். இவை ஒவ்வொன்றும் தனித்தனியே ஆராய்ச்சி செய்யவேண்டிய விஷயங்கள். சுருங்கச் சொல்லின் நம்மவர்கள் ஒற்றுமையாகத் தொழில் முறையை ஆராய்ச்சி அனுபவங்களுடன் நடத்தாதவரை சிரமத்துக் குள்ளாவார்கள் என்பது நிச்சயம்.

சுயநலம்கருதியோ அழுக்காறுகொண்டோ முயற்சியின்மையாலோ நமது பெரியோர்கள் ஒற்றுமைக்குறைவாயில்லாமல் இனியும் சமூக அபிவிருத்தியை உத்தேசித்தே ஊக்கத்துடன் உழைக்க முன்வரவேண்டும்.

— —

# எனது தோழன்

திரு. போ. திருகூடசுந்தரம் எம். ஏ., பி. எல்.

சில மாதங்களுக்கு முன் சென்னை 'ஊழியன்' பத்திரிகையில் "எனது நண்பர்" என்ற ஒரு கட்டுரையும் காரைக்குடி "குமரன்" ஆண்டுமலரில் 'எனது கார்' என்ற ஒரு கட்டுரையும் எழுதியிருந்தேன். அவைகளைக் கண்ணுற்ற நண்பர்களிற் சிலர் "ஏது? இவ் விஷயங்களைப்பற்றி மட்டும் கட்டுரைகள்? தங்கள் நண்பரை நேரில் காண்பதில்லை. தங்கள் காரில் தங்களையும் நாங்கள் பார்ப்பதில்லை. தங்களுக்கு உயிரினும் தலை சிறந்த ஒரு தோழன் உண்டே, அவனைத்தானே நாங்கள் நன்கு அறிவோம் அவனும் ஆதி ஆச்சர்யமான தோழன் அல்லவா? அவனைப் பற்றி ஒரு கட்டுரை எழுதினால் என்ன?" என்று கேட்கின்றார்கள். அதனால் அவனைப் பற்றி இந்த "தனவணிகன் பொங்கல் மல"ரில் எழுதுகிறேன்.

சாதாரணமாக நண்பர்கள் வேறு, நாம் வேறு அல்லவா? நண்பரும் நாமும் ஏகம், எவ்வித வித்யாசமும் இல்லை யென்று கூற முடியுமோ? உயிருக்குயிரான நண்பர் என்று கூறிக்கொள்ளலாம், ஆனால் அங்கும் பேதம் பிறவாமல் இருந்து விடாது.

நட்பின் ஒருவகை காதல், நட்பில் ஒற்றுமை முதிர்ச்சி, ஏக ஐக்யம் தோன்றுமிடம் காதல் என்று கூறுவர். காதலர் ஈருடல் ஓருயிர் என்று கூறி மகிழ்வர். சிலசமயங்களில் காதலைப் பற்றிக் கற்பனை கூறும் கவிஞர்கள் காதலிடைக் காணும் நட்பு "உடம்போடு உயிரிடையன்ன" தன்மையுடையது என்றும் கூறத் துணிந்து விடுவர். ஆனால் எனக்கும் என் தோழனுக்கு முள்ள நட்பு ஒன்றே உண்மையில்உடம்புக்கும் உயிர்க்குமுள்ள நட்பை ஒக்கும் என்று தைரியமாய்க் கூற இயலும். எனக்கு வேறு உடல் அவனுக்கு வேறு உடல் என்பதில்லை. அதுபோல் எங்கள் இருவர்க்கும் உயிரும் ஒன்றே. ஒருடல் ஓயிருயிர் உடைய நண்பர்கள் நாங்களே!

அதுமட்டுமா? சாதாரணமாக நண்பர்கள் வேறு பெயர் உடையவர்கள். காதலர்—புருஷன் மனைவியும் கூட ஒரே பெயர் வகிப்பதில்லை. பெயரைக் கேட்டவுடனேயே இவர் கணவர் இவர் மனைவியார் என்று கூறிவிடலாம். ஆனால் எங்கள் விஷயத்தில் ஒரு நாளும் அவ்விதம் சொல்லிவிட முடியாது. எங்கள் இருவர்க்கும் ஒரே ஒரு நாமந்தான். எனக்குக்கூடப் பெயரில்லை. என் தோழன் பெயரே எனக்கும் என்று கூறலாகும்.

என் தோழனைவிட்டு நான் தனியாகத் தோன்றுவதில்லை. இலைமறை காய்போல் என் தோழனில் நான் முழுதும் மறைந்துள்ளேன். பிறர் என் தோழன் இருப்பதைக் கொண்டே நானும் இருப்பதாக உணர்கின்றனர். என் தோழனுள்ள இடம் நானுமிருக்கின்றேன். ஆனால் அதுபோல் நானுள்ள இடம் அவனிருக்கின்றான் என்று கூறமுடியாது. அது மட்டுமன்று. நானுள்ள இடம் என்று கூடச் சொல்வதற்கில்லை. நான் ஒரு நாளும் தனித்திருப்பதில்லை. என் தோழனே எனக்கு ஆதாரம்.

நாங்கள் இருவரும் "இருவர்" அல்லர், "ஒருவரே" என்று கூறுவது உபசாரமொழிகள் அல்ல. முற்றிலும்—முக்காலும் உண்மையாகும். சாதாரணமாக நண்பர்கள் சுகதுக்கங்கள் மற்றவர் சுகதுக்கங்கள் என்று சொல்லிக் கொள்வதுண்டு. காற்று வீசுவதைக் காட்டும் கருவிபோல்

நண்பன் வாடினால் நானும் வாடுவேன். நண்பன் மலர்ந்தால் நானும் மலர்வேன் என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால் அப்படி ஒத்துவாழும் நண்பர்களைக் கண்டுவிட்டதாக யாரேனும் உரைக்க முடியுமோ?

"உண்மையான காதலர் ஒருவர் உரோமம் ஒன்றிற்குத் தீங்கு உண்டானாலும் உடனே தனக்கும் உண்டாய் விட்டதாக உணர்ந்து வருந்துபவர்; காதலர்க்குள் நீ, நான், உனது எனது என்பதே கிடையாது" என்று ஆங்கிலப் பேறிஞர் எட்டார்ட் கார்ப்பேண்டர் காதலைப் பற்றி வர்ணிக்கின்றார். அவர் கூறுவதை மறுக்க நான் விரும்பவில்லை. காதலர் இருவரும் இரு வீணைகள். ஒரு வீணையின் பேரில் மெல்லிய காற்றை வீசினாலும், உடனே அந்த சமயத்திலேயே அடுத்த வீணையின் தந்தியும் அதே நாதத்தை வெளியிடும் என்று நம்பிக்கொள்வோம். ஆனால் இந்த விசேஷ வீணைகள் இவ்வுலகில் அபூர்வ சிருஷ்டி என்பதை யாரும் ஒப்புக் கொள்வர்.

எனது தோழனும் நானும் அவ்வித வீணைகள் என்று சந்தேகமறக் கூறுவேன். விஷயத்தை அறிந்த பின் ஒருவரும் மறுக்கமாட்டார். நாங்கள் அபூர்வ சிருஷ்டிகள் அல்லர். எல்லோர்க்கும் தெரிந்தவர்களே! என்னிடம் முனிவு சிறிதே முளைக்கட்டும். உடனே என் தோழன் முகம் சுருங்கிக் கருப்பதைக் காணலாம். நான் சிறிதே வருந்தட்டும். உடனே என் தோழன் கண்களில் நீர் ததும்பிவிடும். நான் அணுவளவே கவலை கொள்ளவேண்டியதுதான், அந்த க்ஷணமே என் தோழன் முகம் ஒளி மங்கிவிடும். அவன் வயிறுகூடத் தன் ஜீரண வேலையை நிறுத்தி விடும். நான் அறிவை அபிவிருத்தி செய்தால் அடுத்தது காட்டும் பளிங்குபோல் என் தோழன் முகம் தேஜஸ் நிறைந்து தோன்றும். ஒரு துளி ஆனந்தம் என் உள்ளத்தில் விழட்டும்! உடனே என் தோழன் துள்ளிக் குதிப்பதை நீங்கள் காணலாம். என் வெகு சிறு எண்ணங்களும் இச்சைகளும் என் தோழனிடம் பிரதிபலித்துத் தோன்றுவதால் என் தோழன் சாயல்களைக் கண்டே என்னை என் இதர நண்பர்கள் அறிந்து கொள்கிறார்கள்.

என் காரியங்கள் என் தோழனில் காணப்படுகின்றன என்பது மட்டுமன்று. என் தோழன் இல்லாமல் நான் இந்த உலகில் யார்? என் தோழன் மறைந்து விடட்டும், அந்த நிமிஷமே நான் அனாதைதான். என்னை என் பெற்றோர், உற்றார் உறவினர் கூட அலட்சியம் செய்து விடுவர். எனக்கு இந்த உலகில் எவ்வித வேலையுமில்லை.

நான் ஏதேனும் உலகில் செய்ய நினைத்தால்—எனக்கென்று ஏதேனும் ஓர் வேலை நியமிக்கப் பட்டிருக்குமானால் அதைச் செய்து முடிக்க என் தோழனே எனக்கு ஆதாரம். நானாகத் தனியே ஒன்றும் செய்து விட இயலாது. என் தோழனை இன்றியமையாத சாதனம் என்று இயம்பலாமா?

பாருங்கள் நான் படிக்கவேண்டுமா, நான் உலகில் அவதரித்த பெரியோர் நூல்களை சுவைத்து இன்புற வேண்டுமா, கம்பன் கவிரசம் பருக வேண்டுமா, ஷேக்ஸ்பியர் செந்தேன் தேவையா, ஷில்லியருடைய வில்லிபம் டெல்லின் தோழமை கொள்ள விருப்பமா, காளிதாசன் சகுந்தலையைக் காண வேண்டுமா, மஹாத்மா காந்தியின் மணிமொழிகளை அறிய வேண்டுமா, அப்படியானால் எனக்கு என் தோழன் கண்களும் மூளையும் அத்யாவசியமாகத் தேவை.

என் தோழன் காதுகள் கொண்டுதான் தியாகராஜ கீர்த்தனைகள், தேவார திருவாசகங்கள் முதலியன கேட்கவியலும். என் தோழனில்லாவிட்டால் எனக்குசங்கீதவித்வசிரோன்மணிகளும் இல்லாதவர்களே. கிராமபோனும் வெறும் குழாய்களாகவும் பெட்டிகளாகவுமே ஆகிவிடும். "டாக்கி"யும் வெறும் சினிமாவாககவே தோன்றிவிடும். ஏன் இவை? குழலினும் யாழினும் இனிமையான குழந்தைகள் குரலும் எனக்கு அறிந்து அநுபவித்து ஆனந்திக்க முடியாமல் போகுமே.

என் தோழன் இல்லாவிட்டால்—என் என் தோழனிருந்தும் குருடாய் விட்டால் நானும் குருடனே. எதைத்தான் காண முடியும். குழந்தைகளைக் காண்பேனோ—நண்பர்களைக் கண்டு களிப்பேனோ. இயற்கை நமக்கு நிமிஷத்திற்கு நிமிஷம் நம்மகிழ்ச்சிக்கென்று

விநோத விநோதமாய் தயாரிக்கும் இன்பக் காட்சிகள் எனக்கு எள்ளளவும் உண்மையாகுமோ. மகாத்மா காந்தியடிகளை தரிசிக்கும் பாக்கியம் இழந்துவிடுவேனன்றோ?

இங்ஙனம் சகல விஷயங்களிலும் என் தோழன் மூலமாகவே நான் ஸ்தூல சூட்சம உலகங்கள் இரண்டிலும் சஞ்சரிக்கும் சக்தியுடையவனாவேன். என்னையும் இந்த உலகத்தையும் இணைத்து நிற்பவன் என்தோழனே. நான் இதை எழுதுகிறேனே நான் எழுதுகிறேனென்றுசொல்லிக் கொள்ளலாம். நீங்களும் நம்பி கொள்ளலாம். ஆனால் உண்மை அது வாகுமோ. நான் எண்ணங்களை வகுக்கின்றேன். அவன் திருக்கரங்களன்றோ அவைகளைப் பிறர் பார்க்கும் வண்ணம் அவ்விதம் எழுதி அமைக்கின்றன?

இந்த உலக இன்பங்களை நான் அனுபவிக்கின்றேனா—என் தோழன் அநுபவிக்கின்றானா. இது ஒரு பெரிய சிக்கலான கேள்வி. இதை வாசிக்கும் நேயர் ஆராய்ந்து முடிவு செய்வார்களா?—நான் அனுபவிக்கின்றேனா அவன் அனுபவிக்கின்றானா ஒன்று மட்டும் நிச்சயம். அவனில்லாவிட்டால் எனக்கு அணுவளவு அநுபவமும் இருக்கமாட்டாது. விருந்துக்கு அழைக்கிறார்கள். விதவிதமான உணவுகள் பலகாரங்கள் பானங்கள் நவநவமான உடைகள் அணிகள் புதுப்புதுக்காட்சிகள், விநோதமான வேடிக்கைகள், விசேஷமான சங்கீதங்கள் எல்லாமுள. ஆனால் நாம் அனுபவிக்கப்படாவிட்டால் — —? அந்த நிலைமைதான் எனக்கு என் தோழனில்லாவிட்டால் அமையும்.

என் தோழன் எப்படி நடந்து கொள்கிறானோ அதைப் பொறுத்தே என் இன்பங்களும் துன்பங்களும். "இன்பமும் துன்பந் தானும் உள்ளத்தோடு இயைந்ததன்றே" என்று கம்பர் எளிதாகக் கூறிவிட்டார். உள்ளத்தோடியைந்ததோ உடம்போடியைந்ததோ அதை பெரியார்கள் ஆராயட்டும். அடியேன் இங்கு சாதிப்பது என் தோழனோடுதான் என் இன்ப துன்பங்கள் இயைந்துள என்னும் உண்மையேயாகும்.

என்தோழன் என்ன உண்கிறானோ என்ன பருகுகிறானோ என்ன பயில்கின்றானோ என்ன அணிகின்றானோ அவை எல்லாம் என்னிடம் நன்மையோ தீமையோ விளைவித்து விடும். என் தோழன்உணவு சாத்வீகமானதால்என்னையும் சாத்வீகமானவன் என்று யாரும் கூறிவிடுவர். என் தோழன் மாறுபடும் உணவு உண்டு விட்டால் உடனே நானும் நோயால் வருந்த வேண்டியதே. என் தோழன் கட்குடியனானால் நானும் வெறியனே. என் தோழன் தேகப்பியாசம் செய்து வந்தால் என் தேகமும் வைரமாய் விடும், என்னையும் ஸாண்டோ என்று கூறிவிடலாம். என் தோழன் பழக்க வழக்கங்கள் எல்லாம் என்னையும் பாதித்துவிடும். என்னை உயர்ந்தவனாக்கவும் என்னை தாழ்ந்தவனாக்கவும் என் தோழனுக்குச் சக்திஉண்டு.

என் தோழனுக்கு இந்த சக்தியிருந்தால் எனக்கும் அவ்வித சக்தி உண்டு. நான் எண்ணங்கள் இச்சைகள் இன்பங்கள் துன்பங்கள் சோர்வுகள் கவலைகள் முதலியவை மூலம் என் தோழனுக்கு நன்மையும் தீமையும் தந்துவிடுவேன். நாங்கள் இருவரும் அவ்வளவு நெருக்கமான ஐக்கிய முடையவர்கள் அல்லவா? வாலி சீதையை ராமனுடைய ஆவிஎன்றுகூறிவிட்டாள். அதுபோல் சீதை ராமனைத் தன் பிராணனாகச் சொல்வாள். ஆனால் நானும் என்தோழனும் அவ்விதம் சொல்ல முடியுமா. எங்களுக்கு ஒரு உடல்தான். அதுபோல்ஒரு உயிர்தான் யார் யார்க்கு ஆவி உயிர் பிராணன்? வாசக நேயர்களே நீங்கள்தான் கூறுங்கள் பார்ப்போம்.

"தன்னைத்தானே குணப்படுத்திக் கொள்ளுதல்" என்றும் சிகிச்சை முறையை பிரகடனம் செய்த மான்ஷியர்க்யூ என்றும் பிரஞ்சுப் பெரியார் எங்கள் இருவர்க்குமுள்ள இணை பிரியா நட்பை நன்கு உணர்ந்திருந்தார் என்று தோன்றுகிறது. அதனால்தான் அவர் "உன் தோழன் சுகமாயிருந்தால் நீ சந்தோஷமா யிருப்பாய் என்பது மட்டுமன்று; நீ சந்தோஷமாயிருந்தால் உன் தோழனும் சுகமாய் இருப்பான் என்பதும் உண்மையாகும்" என்று கூறுகிறார்.

என்தோழன்சுகவீனமுற்ருல்நான் அவனை குணப்படுத்த செய்ய வேண்டிய தென்ன. அவன் மருந்துண்ணலாம், ஆனல் அதுமட்டும்போதாது. நானும் உதவிசெய்தல் அவசியம்; நான் கவலைவிட்டு சோர்வுநீத்து பயம் ஒழித்து சந்தோஷமாய் இருக்கவேண்டும். என் ஆனந்தம் அவன் ஆரோக்கிய சாதனம்.

இப்பொழுது நவீன வைத்ய ஆராய்ச்சியாளரும் எங்கள் ஐக்யத்தை விளக்க ஆரம்பித்துளர். என்தோழனிடம்சிலசிறு உறுப்புகள் "கிளான்ட்"என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுபவை உளவாம். அவைகள் ஆரோக்கியமாயிருந்தால் நானும் ஆரோக்கியமாய் அறிவுடையவனுய்அறத்தாலும்நிற்பவனுயிருப்பேனும்; அவை கேடுற்ருல் என் ஆரோக்கியம் அறிவு ஆற்றல் அனைத்தும் அழிந்துவிடுமாம். ஆகவே எப்படிப்பார்த்தாலும் நாங்கள் தோழர்களே. உங்களை எல்லாம் நண்பர்கள் என்று உரைத்துக் கொண்டாலும் எங்களைப்போல் தோழர்கள் என்று கூற நா எழவில்லை. கோபித்து விடுவீர்களோ.

கோபிக்க வேண்டியதில்லை. காதலர் நட்பிலும் எங்கள் நட்பு நெருங்கிய தென்று கூறவில்லைபா. நாங்கள் ஒரு கணமேனும் பிரிந்திருக்கமாட்டோமோ. என் மனைவியுடன் சம்பாஷிக்கும் பொழுது கூட என் தோழன் பிரசன்னமாய் எங்கள் மத்தியில் இருப்பானே. அவன் அறியாத எவ்வித அந்தரங்காகசியமும் கிடையாதே. இதில் இன்னுமோர் விந்தை ! நான் என் தோழனேடிருப்பது போலவே என் மனைவியும் தன் தோழியோடவேஇருப்பாள். நடைமுறையில்இருப்பதைவிட வெகு நெருக்கமாயிருப்பதாக வர்ணிக்கும் கவிஞர்கள் கதையாசிரியர்கள் நூல்களிற் கூட இந்தக் காட்சி காணப்படுவதில்லை.

இம்மட்டோ? நானும் என் மனைவியும் பேசிக்கொள்வது கூட நான் என் தோழன் அவள் தன் தோழி மூலமாகத்தானே! என் தோழன் உதவி கொண்டு அவள் தோழியைக் காண்கின்றேன்: அந்தத்தோழியின் தோற்றங்களைக்கொண்டு என் மனைவியின் எண்ணங்கள் முதலியவற்றை நிர்ணயிக்கின்றேன். அதுபோலவே என் மனைவி என்விஷயத்தில் நாங்கள் இருவரும் தனத்தனியே ஒரு பொழுதும் சந்திப்பதில்லை, உணர்வதுமில்லை. தோழி போய்விட்டால் என் மனைவியையேஇழந்துவிட்டதாகவருந்துகின்றேன். தவிர தோழியை சந்தோஷிப்பித்தால் என் மனைவியையும் சந்தோஷிப்பித்தவனுகின்றேன். இத்தகைய நட்பைப்பற்றி இதற்கு முன் நீங்கள் கேட்டதுண்டா, கனவிலேனும் பார்த்ததுண்டா?

எனக்கு உயிர் உண்டு. அப்படித்தான் பிறர்க்குத் தோன்றுகிறேன். ஆனல் உண்மை எப்படியோ. என் தோழனுக்கு உயிர் உள்ளளவும் எனக்கும் உயிர் உண்டு. என் தோழன் இறக்கட்டும், பிறகு இவ்வுலகில் நான் எங்கே? யாரும் என்னை எங்கும் அறியமாட்டார்கள். என் நண்பர்கள்—என் பெற்ருேர்கள், என் மனைவியுங்கூட என் தோழன் இறந்தவுடன் நானும் போய்விட்டதாகக் கூறிவிடுவர். என்னை இழந்துவிட்டதாக வருந்துவர். தத்துவ ஞானிகள் நாம் இருப்பதும் வாழ்வதும் நடப்பதும் கடவுளிடத்திலேயே என்று வேதாந்தங் கூறுவர். ஆனல் நானே என் தோழனிடத்திலேதான் வாழ்கின்றேன். எனக்கு ஆதாரம் என்று துணிகரமாய்க் கூறுவேன். தத்துவ ஞானிகள் என் கூற்றை மறுக்கட்டும்! ஆனல் அவர்கள் கோஷ்டியைச் சேர்ந்த திருமூலரிடம் முதலில் யோசனை கேட்டுக் கொண்டு மறுக்கும் யோசனையில் இறங்கட்டும்.

அவனே—என் தோழனே எனக்கு ஜீவாதாரம் என்பதால் நான் அவனை எவ்வளவு ஜாக்கிரதையாய் போஷித்து பாதுகாத்து வரவேண்டும் என்பது சொல்லாமலே விளங்குமல்லவா? அஸ்திவாரத்தில் ஒரு சிறு கல் பிடுங்கினுலும் அரண்மனை உடனே விழுந்துவிடும். அதனல் அவனுடைய க்ஷேமத்தில் நான் கண்ணுங் கருத்துமா யிருக்க வேண்டும். அதனுலேயே ஐரோப்பாவிலுள்ள கிரீஸ் தேசத்தில் ஆயிர மாண்டுகட்கு முன்னரேயே என் தோழனுக்குப் பெருமதிப்புத் தந்துவந்தனர். அவன் க்ஷேமத்தை ஒரு

தேவதையாகக்கூட போற்றி வணங்கி வந்தனர்.

இவ்வளவு அபூர்வமான இவ்வளவு அத்யாவசியமான தோழனை நான் எப்பொழுது பெற்றேன், அவனை எனக்கு தேடிக்கொடுத்தவர் யார்? இந்தக் கேள்விகள் இதை வாசிக்கும் நேயர் மனதில் எழாமல் இரா. என் பெற்றோர்களே என் தோழனை எனக்குத் தேடி—தேடி என்று கூறுவதா அமைத்து என்று கூறுவதா—அளித்தனர். என் பெற்றோர்களில்லாவிடில் எனக்கு இந்தத் தோழன் கிடைத்திருக்கவே மாட்டான். அதனால் அவர்கட்கு அனந்தவணக்கம். அவர்கள் அவனை எப்பொழுது எனக்குத் தந்தார்கள்? எப்பொழுது நானும் தோழனும் தோழமை கொண்டோம்? உலகில் குழந்தை பிறக்கின்றதே இதுபோல் என்னையும் பிறந்ததாகக் கூறியிருப்பார்களே அதற்கு முன்பே நாங்கள் சிறிது சிறிதாக தோழமைகொள்ள ஆரம்பித்துவிட்டோம். ஆனால் நன்றாய்—இரண்டற—கலந்தபின்பே உலகின்தோற்றம் பெற்றோம். பிறக்கும்பொழுது போலவே அவ்வளவு நெருக்கமான நட்பும் உண்டாயிருந்தது.

உலகில் நட்பு என்பது என்றும் அழியாதது என்று பெரியோர் கவிஞர் சிறப்பித்துக் கூறுகிறார்கள். அதன் உண்மை பற்றி ஆராய விரும்பவில்லை. ஆனால் உலகில் பிறத்தல் வளர்தல் இறத்தல் மூன்றும்தினந்தோறும்சர்வசாதாரணமாய்க் காணும் விஷயமாயிருத்தலால் எங்கள் இருவர் நட்பும் அவ்விதம் அழிந்துவிடுமென்றே எண்ணுகின்றேன். இவ்வித நட்பு நான் மட்டுமே அடைந்திருக்கவில்லை. என்னைப் போல் இருநூறு கோடி மக்கள் பெற்றிருப்பதாகக் கேள்வி இதற்கு முன்னும் கோடானுகோடி பேர் பெற்றிருந்ததாகவும் சரித்திரங்கள் கூறுகின்றன. அவர்களுக்கு ஒரு விதி எனக்கு ஒரு விதியா.

ஆனால் மறுபடியும் நான் ஒரு தோழனைப் பெறுவேனா. என் தோழனும் என்னைப் போல் ஒருவனைப் பெறுவானா. இந்த ஆராய்ச்சியில் புகுந்துவிட்டால் இந்த வியாசத்திற்கு முடிவே இருக்கமாட்டாது.

---


## உங்கள் உயிரை இன்சூரென்ஸ் செய்ய வேண்டாமா?

உங்கள் சொத்துக்களை நெருப்பிலிருந்து பாதுகாக்க வேண்டாமா ?

அவசியம் வேண்டும் என்றால்

70, மோகல் தெருவிலுள்ள

**கரு. கண, கண்ணப்ப செட்டியார்**

தாங்கள் கோருவதை முடித்துக் கொடுப்பார்.

இந்திய ஆங்கில கம்பெனிகள் பலவற்றிற்கும் இவர் ஏஜண்டு.

வேலையில்லாத் திண்டாட்டத்திற்குப் பரிகாரம் என்ன?

சுதேசியை ஆதரிப்பதே !

அப்படியானல்

**மைசூர் சோப்பை உபயோகியுங்கள் !**

---

மைசூர் கைத்தொழில் இலாகா அதிகாரி சொல்கிருர்:—

அந்நிய நாட்டுப் பொருளுக்கு நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு காசும்-அந்தப் பொருள் எவ்வளவு மலிவாயிருந்தபோதிலும்-நமது ஜனங்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கிறது. ஆனல் சுதேசி சாமான்களுக்குச் செலவழிக்கும் ஒவ்வொரு காசும் ஏழை மக்களின் ஒருவேளை கஞ்சிக்கு உதவி செய்கிறது.

---

# மைசூர் சந்தன சோப்

## இன்னும் பல ரகங்கள்

உடம்புக்கு ஆரோக்கியம்! மனதுக்கு நிம்மதி!!

ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்!!!

**மைசூர் கவர்ன்மெண்ட் சோப் பாக்டரி**


பெங்களூர்,

பர்மா ஏஜண்டுகள்:—


**இந்தியன் இம்போர்ட் கம்பெனி,**

359, ஸ்பார்க்ஸ் தெரு, ரங்கூன்.

"உடலினை உறுதி செய்"



திரு கே. எல். ராமசாமி செட்டியார் புதுப்பட்டி



திரு. கே. ஏ. சோமசுந்தரம் செட்டியார் வலையப்பட்டி

# பூமியும் பூகம்பமும்.

திரு. கே. ஜி. கிருஷ்ணன் பி. எஸ். சி. (ஹானர்ஸ்.)

சூரியன் ஓர் பிர்மாண்டமான நட்சத்திரமாக விருந்தபோது அதினின்று பூலோகம் பிறந்ததென அறியக் கிடக்கிறது. ஓர் சமடம் சூரியனைவிட மிகப் பெரியதாயிருந்த மற்றொரு உருவம் சூரியனை யடுத்துப் போய்க் கொண்டிருந்த பொழுது, ஒன்றுக்கொன்று இழுக்குஞ் சக்தியினல் உருவத்திற் கொஞ்சம் சிறிதாயிருந்த சூரியன் ஜ்வாலையுடன் விளங்கும் அதன் உருவம் அகன்று கொடுக்க ஏற்பட்டு, அப்பெரும் நட்சத்திரம் கடந்து சென்ற பின் சூரியன் முன்போலத் தனது உருவத்தை யடைந்த கால், அதினின்றுஞ் சிறிய பாகங்கள் பிரிந்து அந்தரத்திலேயே சுழன்று கொண்டு தனியாகத் தங்கிவிட ஏற்பட்டதாக ஊகிக்கப் படுகிறது. அவ்விதம் புதிதாக ஏற்பட்ட பாகங்களில் ஒன்று பூலோகமெனக் கருதப் படுகிறது. இப் பூலோகம் முதன்மையில் தகிக்கக் கூடிய வாயு பதார்த்தமாயிருந்து அதின் உஷ்ணம் பல பக்கங்களிலும் பறந்து செல்லச் செல்ல உஷ்ணமான ஜல பதார்த்தமாக மேற்பாகம் மாறிக் கடைசியில் அதிகம் குளிர்ந்து திட பதார்த்தமாக மாறியதெனக்கூறப்படுகிறது. ஆகவே பூமியின் உட்பாகம் இன்றும்பெரும் உஷ்ணம் பொருந்தியதாகவே காணப்படுகிறது. பூமியின் குளிர்ந்த திடபதார்த்தம் மேல் பாப்பிலிருந்து சுமார் 40 மைல் ஆழம் வரையிருக்கும். அதற்கப்பால் உஷ்ணம் அதிகரித்துக் கொண்டே போய் மத்தியில் ஜ்வாலை கொழுந்து விட்டெரிந்துகொண்டிருக்கிறதென அறியக் கிடக்கிறது.

## பூமியின் வயது.

ஆறுகள் வருடா வருடம் உப்புகளைச் சமுத்திரத்தில் கொண்டு சேர்க்கும் அளவையும், சமுத்திரங்களிலிருக்கும் மொத்த உப்பின் அளவையுங் கொண்டு சமுத்திரங்கள் உண்டான காலம் அதாவது பூமியின் மேற்பாகம் குளிர்ந்து சென்ற காலம் சுமார் 1,800,000,000 வருஷங்களெனக் கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது. உலகத்திலேயே இதுவரையறிந்துள்ள அமெரிக்கா ஏல் சர்வகலாசாலையிலுள்ள "யுரேனிய"ப் பாறையின் நவீன சாஸ்திர ஆராய்ச்சிப்படி கணக்கெடுத்ததில் 1,852,000,000 வருஷங்களென 1930 வருடம் ஆகஸ்ட் மாதம் சாஸ்திர நிபுணர் ஏ. எப். கோவரிக் தெரிவிக்கிறதால் அதனையே பூமி உண்டாகி முடிந்த காலமெனக் கொள்ளலாம். ஹிந்து வேத நூற்படி 28 வது கலியுகங்கள் நடந்து இதுவரை உலகந் தோன்றி முடிந்த மொத்த வருடங்கள் 1,960,853,036 எனக் கூறப்படுகிறது. ஆகவே மேற்கூறிய மூவகை ஆராய்ச்சிகள் ஏறக்குறைய ஒத்திருப்பதால் பூமியின் வயதின் அளவைத் தெரிந்துகொள்ள ஏதுவாயிருக்கிறது.

பூமி தன்னைத்தானே சுற்றுவதோடு சூரியனையும் சுற்றி வருகிறது. அது தன்னைத்தானே சுற்றும்போது விநாடிக்கு 18½மைல் வீதம் சுற்றுகிறது. சூரியனைச்சுற்றும் போது மணிக்கு 66,000 மைல் வீதம் சுற்றிச் செல்லுகின்றது. பூமி 6,590,000,000,000,000,000,000 டன் கனமானதென்று நவீன சாஸ்திர ஆராய்ச்சிகளின் மூலம் கணக்கிடப் பட்டிருக்கிறது.

## பூமியின் உட்பாக உஷ்ணம்.

பூமியானது பெரும்பாகம் தண்ணீராலும் பனிக்கட்டியாலும்மூடப்பட்டுக் கண்ணுக்

குத் தோன்றுமலிருக்கிறது. ஆகவே பூமியின் மேற்பாகத்தில் அமைந்துள்ள மண், பாறை முதலிய வஸ்துக்களைப்பற்றி அவ்வளவு அதிகமாய்த் தெரியாமலிருக்கும்போது பூமியின் உட்பாகத்தின் உண்மை நிலைமையை நாம் எவ்வளவு தூரம் தெரிந்திருக்கக் கூடும் என்பதைக் கூறுவானேன். பூமியின் உட்பாகத்தை நேரே பார்த்து அரிய வேண்டுமானுல் கிணறுகள், சுரங்கங்கள் முதலியவை தோண்டவேண்டும். பூமியைச் சுமார் ஒருமைல் தூரத்திற்கு மேல் துளைப்பது கூடாமையால் பூமியின்உட்பாகத்தை நேரில் அறிவது அசாத்தியமாயிருக்கிறது. பூமியின் ஒரு புறத்திலிருந்து நேராக மறுபுறம் வரையிலுள்ள தூரம் சுமார் 8000 மைல். ஆகவே பூமியின் மத்திபம் சுமார் 4000 மைல் தூரத்திலிருக்கிறது. இதனுல் பூமியின் சுற்றளவு சுமார் 25,000 மைலாகிறது. ஆழமான சமுத்திரத்திலிருந்து வெகு உன்னதமான மலை உச்சிவரை தூரம் சுமார் 12 மைல். இத்தூரம் பூமியின் மத்திய தூரத்திற்கு மிக மிக அற்பமானதாகையால் இத்தூரத்தின் அமைப்பைக் கொண்டு பூமியின் உட்பாகத்தை ஊகிப்பது முடியாதல்லவா?

நாம் பூமியைத் துளைத்துக்கொண்டே சென்றுல் சுமார் 60 அடிக்கு, ஒரு டிகிரி வீதம் உஷ்ணம் அதிகரித்துக்கொண்டே போகிறதாம். அவ்வாருனல் சிலமைல் தூரத்திற்கெல்லாம் பூமியின் உஷ்ணம் கடினமான பாறைகளையும் உருக்கக்கூடிய தன்மை பொருந்தியதாயிருக்க வேண்டுமல்லவா? இவ்வாறு அதிக உஷ்ணமிருப்பினும் நாம் எதிர்பார்ப்பதுபோல் அவ்வளவு இலகுவில் பறைகள் உருகிவிடாது. ஏனெனில், பூமியின் மேலுள்ள பாறை முதலியவைகள் அமிழ்த்துக் கொண்டிருப்பதால் பாறைகள் உருகுஞ் செயலற்று விடுகிறன. நாம் ஓர் மலை உச்சியில் தண்ணீர்காய்ச்சினுல் தகிக்கும்உஷ்ணம் அதிகமில்லாமலே வெகுசீக்கிரத்தில்தண்ணீர் கொதிக்க ஆரம்பிக்கிறது. ஆனுல்ஒருசுரங்கத்தில்காய்ச்சினுல்உஷ்ணம் அதிகம் வேண்டியதாயிருக்கிறது. ஏனெனில்வாயுமண்டலம்பூமியின் மீது தாக்கி அமிழ்த்துக் கொண்டேயிருக்கிறது. இவ்வாறு அமிழ்த்தும்சக்தி பூமியிலிருந்து மேலே செல்லச் செல்ல குறைந்துவிடுகிறது. ஆகவே பூமியின் மீது சுமார் 212 டிகிரி உஷ்ணத்தால் தண்ணீர் கொதிக்கிறது. மலை உச்சிகளில் இதற்குக் குறைந்த உஷ்ணத்தாலேயே கொதிக்கிறது. இவ்விதமாகவே பூமியின் கீழ் உஷ்ணம் அதிகமாயிருப்பினும் மேலே ஏற்பட்ட கனத்தால் பாறைகள் உருக முடியாமலிருக்கின்றன. ஆனுல் மேற்பாகத்தின் கனங் குறைந்தோ அன்று பூமியில் பிளவோ ஏற்பட்டால் கீழ் பாகத்திலுள்ள பாறைகள் தீடீரென்று உருகத் தொடங்கிப் பெரும்பிளவுண்டாக்கி அதன் வழியாக மிகுந்த உஷ்ணம் பொருந்திய திராவகமாக வெளி கிளம்புகிறது.

## எரிமலை

இதற்கு எரிமலை எனப் பெயர். எரிமலைகள் எவ்விடத்தில் உற்பத்தியாகின்றனவோ அவ்விடத்திலேயே விட்டு விட்டு உண்டாகின்றன. அநேகமாய் புதிதாக ஏற்படுவது அபூர்வம். பூமியின் கீழ் உஷ்ணத்தால் உருக்கப்படும் பாறைமுதலியவைகள் வெளிகிளம்ப ஓர்மார்க்கம்ஏற்பட்டுவிட்டால் அம்மார்க்கத்துக்கே பூமியின் பலபாகங்களிலிருந்து உஷ்ணச்சுவாலையும் தகித்த பாறைக்கற்களும், உருகிய பாறைகளும் வெகு வேகமாய் வெளிப்போந்து வழிந்தோடுகின்றன. உஷ்ணத்தாலுருகிய வஸ்துக்கள் யாவும் வெளியேறிவிட்டால் எரிமலை அடங்கிவிடுகிறது. உருகிய பாறைகளும் கற்களும் முதலாவது வெகுவேகமாய் பெரும்சப்தத்துடன் வெளியேற முயல்வதால் துவக்கத்தில் அதனருகிலுள்ள பாகங்கள் சிறிது அசைய ஏற்படும். இது பூகம்பமாகாது.

## நீர் எழுச்சி

பூமியின் கீழ் ஏற்பட்டிருக்கும் உஷ்ணத்தாலேயே நீர் எழுச்சிகள் ஆங்காங்கு எரிமலைகள் போல உயர வெகு வேகமாய் எழும்புகின்றன. மழைத் தண்ணீர் முதலியவை சிறிது சிறிதாக பூமியில் சுரந்து கீழிறங்கிக் கொண்டேயிருக்கிறது. அத்தண்ணீர் வெகு தூரம், சில சுலபமான வழிகள் மூலம் சென்றுவிட்டால் பூமியின் உஷ்ணத்தால் தகிக்கப்பட்டு உஷ்ணம் பொருந்திய நீராவியாக மாறி அதிகரித்ததும் அதற்கு முன்னி

ருந்த இடத்தைவிட அதிக விசாலமான இடம் வேண்டியதால் பூமியின்கீழ் அங்குமிங்கும் ஓட முயன்று கடைசியாக பூமியில் மிகவும் இலேசான பாகத்தைப் பிளந்து அல்லது முன்னதாகவே சிறிய பிளவுபட்ட வழிகள் மூலம் நீராவியுந் தண்ணீருமாய் வெகு விரைவாய் வெகுதூரம் எழும்புகிறது. இவைகள் முக்கியமாய் அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலும் நியூஜிலந்திலும் ஏற்படுகின்றன.

பூகம்பம் ஏற்படுவதற்கு எரிமலைகள் தான் காரணம் என்று கற்றோரும் நம்புவது சகஜம். இது முற்றிலும் தவறாகும். எரிமலை திடீரென்று உண்டாகும் சமயத்தில் மாத்திரம் சிறிது அசைவு ஏற்படுவதுண்டு. ஆனால் அவ்வசைவு சுமார் 200 சதுர மைல்களுக்கப்பால் செல்லுவதேயில்லை. மேலும் எரிமலை உண்டாகும்போது அதனாலேற்படும் ஆட்டம் பெரும்பாலும் பூமியின் மேற்பாகத்திலேயே எரிமலை கிளம்பும் நேர்பாதையில் மாத்திரம் உண்டாகிறது. ஆனால் பூகம்பம் ஏற்படுவதற்கு பூமி உண்டாகிக் குளிர்ந்த போது இடையில் அங்குமிங்கும் மேடும் பள்ளமும், வளைவும், மடுவும் ஏற்பட நேர்ந்து மூடப்பட்டுப் போனதே காரணம்.

பூமி சூரியனின்றும் பிரிந்து கொஞ்சங் கொஞ்சமாகக் குளிர்ந்து, ஓர் ஆப்பில் பழம் வாடி வதங்கினால் எவ்வாறு சுருங்கல் ஏற்படுமோ அவ்வாறே பூமியின் மேற்பாகத்தில் மேடும், பள்ளமும் உண்டாகி முறையே மலையும், சமுத்திரமும் ஏற்பட்டன. இவ்வாறே பூமியின் உட்பாகம் படிப்படியாக குளிர்ந்து கெட்டியாகிக் கொண்டேபோகும் போது உட்பாகங்களிலும் சுருங்கல், மேடு பள்ளம் மடுவு முதலிய தாரதம்மியங்கள் ஏற்பட்டிருக்க வேண்டுமல்லவா? இவ்வாறு ஏற்பட்டிருக்கும் பள்ளம், மடுவு முதலியவைகளின் மேற்பாகங்கள் கனமுள்ள பாறை, மண் இவைகளால் மூடப்பட்டிருப்பதால் இக் கனம் பொருந்திய பாறைகள் அவைகளுக்குக் கீழ் ஏற்பட்டுள்ள சுருங்கல்கள்,மடுவுகள், பிளவுகள் இவைகளில் சில சமயம் மெதுவாகவும், சில சமயம் திடீரென்றும் இறங்கி விடுவதை எதிர்பார்க்கலாமல்லவா? அவ்வாறு ஒரு பக்கம் இறங்கும் போது மற்றொரு பக்கம் திடீரென்று ஏறிவிடுவதும் இயல்பு. பூமியின் உட்பாகம் முழுவதும் இவ்விதக் காரணங்களால் ஆங்காங்கு சமயா சமயங்களில் திடீரென்றோ அல்லது மெதுவாகவோ இறுகிய பாறை மண்கள் ஏறவும் இறங்கவும் அல்லது பூமியின்கீழ் ஏற்பட்டிருக்கும் வெகு மிருதுவான மண் மேற் கனத்தால் திடீரென்று இறுகி இறங்கிவிடுவதாலும் ஏற்படும் அசைவானது தண்ணீரின் அலைகள் போல நாலா பக்கங்களும் ஓடி உணர்த்துகின்றன.

### பூகம்பப் பாகங்கள்.

உலகம் குளிர்ந்த நாள் தொட்டு காற்றாலும், மழையாலும், பெரிய பிரவாகங்களினாலும், பூப்பாகம், ஜலபாகமாகவும, ஜலப்பாகம், பூப்பாகமாகவும், மேடு சமதளமாகவும் சமதளம் மேடாகவும் ஆக்கப்பட்டு வந்திருக்கின்றன. பூமியில் மிகவும் பாரமான பாகம் முக்கியமாக மலைப் பிரதேசங்களா யிருப்பதால் அவைகளின் கீழோரங்களி லேற்பட்டு மறைந்து நிற்கும் பிளவு, மடுவு, மிருதுவான மண் முதலிய பாகங்கள் திடீரென்று இறங்கஏதவுண்டு. முற்காலத்து மலைகள் இவ்விதமாக ஏறி இறங்கி பூகம்பங்களை யுண்டாக்கி மடுவு பள்ளங்கள் நிறைவுற்று சமதளதிற்கு வந்து இப்பொழுது பேசாது அடங்கி விட்டன. இவைகளுக்கு இந்தியாவில் விந்திய மலை, ஆரவல்லி மலை, தென்னிந்திய மலைத் தொடர்கள் திருஷ்டாந்தமாகும். ஆகவே அதிகமான பூகம்பங்கள் புதிதாக ஏற்பட்டிருக்கும் மலைப்பிர தேசங்களில் ஏற்படுவதை எதிர்பார்க்க வேண்டுமல்லவா? புதிதாக ஏற்பட்டிருக்கும் மலைப்பாகங்கள் வட தென்னமரிக்கா தேசங்களின் மேலோரமாக "ஆண்டிஸ்–ராக்கி" மலைத் தொடராக ஆசியாக் கண்டத்தில் ஜப்பான் தேசத்து வழியாக சைனா, மலேயா தேசங்கள் வரை வந்தடைகிறது. இதனைத் தொடர்ந்தாற்போல் மற்றொரு வட இந்தியா, ஆப்கன் பெலுஜிஸ்தானம் இவைகளில் ஹிமாலயம் என்ற நாமத்துடனும், பெர்ஸியா அரேபியா தேசங்களில்


"காக்கேஸியா" எனப் பெயருடனும், இத்தாலி, ஸ்பெயின் தேசங்களில் "ஆல்ப்ஸ்" மலைத் தொடராகம் வந்தும் முடிவடைகிறது. பெரும்பாலும் இப்பாகங்களிலேதான் அடிக்கடி பெரும்பூகம்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

### பழம் பெரிய பூகம்பங்கள்

உலகத்திலேயே பெருஞ் சேதங்களை விளைவித்து பூகம்பங்கள் ஏற்பட்ட இடங்களைச் சுருக்கமாகப் பார்ப்போம். 1703-ம் ஆண்டில் ஜப்பான் தேசத்தில் பெரிய பூகம்பம் ஏற்பட்டு சுமார் 200,000 ஜனங்கள் சேதமடைந்தனர். 1737-ல் இந்தியாவில் டில்லிக்கருகில் ஏற்பட்டு டில்லி நகரில் அதிகச் சேதம் உண்டாயிற்று. 1755-ல் போர்த்துக்கல் தேசத்தில் இரண்டு நிமிஷம் ஆடி லிஸ்பன் நகரும், 50,000 ஜனங்களும் சமுத்திரத்தில் வீழ்த்தப்பட்டனர். 1783-ல் கலேபிரியா பூகம்பங்கள் $1\frac{1}{2}$ மாதத்தில் ஆறு தடவை பலமாக ஆடியிருக்கின்றன. 1830 1847 இவ் வருடங்களில் ஜப்பான் தேசத்திலேயே மறுபடியும் ஏற்பட்டிருக்கிறது. 1857-ல் இத்தாலி தேசத்து நேப்பில்ஸ் நகரத்தை யடுத்துண்டாகி இத்தாலி தேசத்தையே ஆட்டி சுமார் 12,000 ஜனங்களுக்கு மேல் மாண்டனர். 1880ல் ஜப்பான் தேசத்தில் உண்டாகி யோக்கோகாமா நகரை பாழ்படுத்தி விட்டது. 1891-ல் திரும்பவும் ஜப்பானில் மினோஓவாரியில் ஏற்பட்டு சுமார் 10,000 பேர் மாண்டனர். 1896-லும் ஜப்பானிலேயே ஏற்பட்டிருக்கிறது. 1897ல் இந்தியாவில் அஸ்ஸாம் மாகாணத்தில் பூகம்பம் உண்டாகி சுமார் 12 மைல் தூரம் பூமியில் அகன்ற பிளவு ஏற்பட்டது. 1905-ல் இந்தியாவில் மறுபடியும் சிம்லாவுக்கருகில் காங்காரா கணவாயில் ஏற்பட்டு சுமார் 20,000 பேருக்குமேல் சேதம். 1906-ல் அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோவில் உண்டாகி அந்நகரையே அழித்து சுமார் 200 மைல் தூரத்திற்குப் பிளவுகள் ஏற்பட்டன. 1908-ல் இத்தாலி தேசத்து மெஸ்ஸீனு நகரில் இரண்டு நிமிஷத்தில் சுமார் 100,000 ஜனங்கள் சேதமடைந்தனர். 1923-ல் ஜப்பானில் கொடிய பூகம்பம் உண்டாகி சுமார் 100,000 பேர் உயிர் துறந்தனர். 1933-ல் மறுபடியும் ஜப்பானைச்சுற்றி பூகம்பத்தால் சமுத்திர கொந்தளிப் பேற்பட்டு பெருத்த சேதங்கள் உண்டாயின. 1934 ஜனவரிமீ 15உ பகல் இரண்டு மணிக்கு வட இந்தியா பீகார் மாகாணத்தில் என்றுமில்லா ஆட்டம் ஏற்பட்டு கண்ணுக்கு தென்பட்டவரை சுமார் 15,000 பேர் மறைந்தனர். 1934 டிசம்பர்மீ 15உ இமய மலைச்சாரலிலும், 17உ துருக்கி தேசத்தில் அலிடோயோ பிரதேசத்திலும் ஏற்பட்டு இவண் 25 கிராமங்கள் நாசமாயின. ஆகவே மேற்குறிப்பிட்டபடி பலமான பூகம்பங்கள் மலைப் பிரதேசங்களிலேயே ஏற்பட்டிருப்பது நாம் முன் கூறியவற்றிற்குப் போதிய சான்றாகும்.

### பூகம்ப அதிர்ச்சி

எவ்விடத்திலாவது பூகம்பம் ஏற்பட்டால் அவ்விடத்திலிருந்து அதிர்ச்சி பல பாகங்களில் அலைகள்போல பறந்தோடுகின்றன. சில பூமியை ஊடுருவியும், சில பூமியின் மேற்பாகமாகவும் அசைந்தோடுகின்றன. பூமியின் மத்தியிலிருந்து சுமார் 2000 மைல் வரை நாலா பக்கமும் ஜ்வாலையுடன் பொருந்திய இரும்புப் பாறைகள் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. படத்தில் DE அதனைக் குறிக்கிறது. பூகம்பம் பூமியில் A என்ற ஓர் பாகத்தில் ஏற்படுவதாகஇருந்தால் படத்



தில் காட்டிய வண்ணம் அதிர்ச்சியின் அலைகள் பூமியை ஊடுருவி ஓடுகின்றன. பூமியின் மத்தியில் சேல்லும்போது அவ்வலைகள் நேர்முகமாகச் செல்லாது வந்த வழி மாறி யாவது அல்லது வந்த வழியே திரும்பியும் வர ஏற்படுகின்றன. B குறிக்கும் அலை அதற்கு மேலேயுள்ள அலையைப் போல அதிக அதிர்ச்சியை உணர்த்தாது. C குறிக்கும் அலை பூமியின் மத்தியிலுள்ள சுவாலை பொருந்திய திராவக மயத்தை ஊடுருவிச் செல்லும் அலைகளிலொன்ருகும். பூகம்பம் ஏற்பட்ட A இடத்திற்கு அருகிலுள்ள இடங்களுக்கு அலைகள் வெகு பலமாகப் போய்ச் சேர்வதால் அவ்விடங்களில் அதிர்ச்சி பலமாகவும், தூரமான இடங்களுக்கு அலைகள் சேருமுன் பலம் குறைந்து அதிர்ச்சியை அதிகம் உணர்த்த முடியாமலும் போய் விடுகிறது. பூகம்ப அதிர்ச்சியின் அலைகள் படத்தில நேராகக் காட்டாமல் சிறிது வளைவாகவே காட்டியிருப்பதானது பூமியில் ஒரே விதமான வஸ்துக்களின் சேர்க்கையில்லாமல் மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லச் செல்ல பூமியின் பாகங்கள் கனத்திலும் குணத்திலும் வேறுபடுவதால் பறந்தோடும் அலைகள் ஒவ்வொரு பாகத்தையுங் கடந்து செல்லும்போது சிறிது சிறிதாக வளைய ஏற்படுகிறது.

பூகம்பம் ஏற்பட்ட இடத்திலிருந்து புறப்பட்டு மற்ருேரிடத்திற்கு அதிர்ச்சியை உணர்த்த அலைகள் பூமியை ஊடுருவியும், பூமியின் மேற்பாகமாகவும் ஓடுகின்றனவென்று முன்பே குறிப்பிட்டோம். இவைகளில் பூமியை ஊடுருவி வரும் அலைகளே முன்னதாக வந்து சேருகின்றன. சப்த அலைகள் காற்றில் செல்லுவதைவிட தண்ணீரில் 4 பங்கு வேகமாகவும், இரும்பு முதலிய உலோகங்களில் 16 பங்கு வேகமாகவும், செல்லுவதாயிருப்பதால் பூமியை ஊடுருவிச் செல்லும் அலைகள் பூமியைச் சுற்றிவரும் அலைகளைவிட வேகமாய்ச் செல்லுகின்றன. ஆனல் பூமியைச் சுற்றி வந்து சேரும் அதிர்ச்சி பலமானதாக விருப்பதால் அவைகளால்தான் அதிர்ச்சி அதிகமாக உணர்த்தப் படுகிறது.


பூமியை ஊடுருவிச் செல்லும் அலைகள் இருவித மானவைகள். ஒன்று நேர்முகமாகவே அசைந்து அசைந்து ஓடி வரும். மற்ருென்று வளைந்து அசைந்தாடி வரும். இவைகளில் குறிப்பிட்ட அலையே முன்னதாக வந்து சேரும்.

## பூகம்பக் கருவி.


பூமியின் ஆட்டத்தைக் குறிப்பிட வேண்டுமானல் முதலாவது ஓர் பேனு வேண்டும். பூமியாடும்போது அதையொட்டிய சகல வஸ்துக்களும் அசைவதால் அசைவதைக் குறிப்பிடும் பேனு மாத்திரம் ஆடாமலிருக்க வேண்டியது அவசியமல்லவா? இப்பொழுது, ஓர் மெல்லிய உறுதியான நீண்டதோர் நூலில் அதிகக் கனமான இரும்புக் கட்டியைப் பிணித்து நூலை மெதுவாக விரைவாய் அசைத்தால் அந்நூலில் கட்டியிருக்கும் இரும்பு வெகு நேரம் வரை அசையாமலிருக்கும். இவ்வாறு தொங்க விட்ட உலோகக் கட்டியில் ஓர் பேனுவையமைத்து அப்பேனு ஒரு காகிதத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும்படி செய்தால் பூமியாடும்போது காகிதம்பூமியோடுஆடும். அப்பொழுதுபூமியாட்டத்தால் அசையாமலிருக்கும் பேனுகாகித ஆட்டத்திற்குத் தகுந்தவாறு பாம்புக்கோட்டைப் போன்றதாகக் காகிதத்தில் கீறுமல்லவா? காகிதத்தை ஓர் மெல்லிய கட்டைச் சுருளில் சுற்றி எப்பொழுதும் ஒரே முகமாய் ஒரே அளவுடன் சுற்றிக் கொண்டிருக்கச்செய்து அதேசமயத்தில், சுழலும்சுருள் ஒருபக்கத்திலிருந்து மறுபக்கம் நகன்று கொண்டே போய்க் கொண்டிருந்தால் அதனைத் தொட்டுக்கொண்டிருக்கும்பேனு கோட்டைக்கீறிக் கொண்டே போகும். இவ்வாறு கீறிச்செல்லும் போது பூகம்ப அதிர்ச்சியின் அலைகள்வந்தால் பேனு அசைவின்பலத்திற்கும்,பூகம்பம் உண்டான தூரத்திற்குந்தகுந்தவாறு மெல்லிய வளைந்த கோட்டைக் கீறி அசைவு முடிந்தவுடன் மறுபடியும் முன் போல நேர்முகமான கோட்டைக் கீறிச் செல்லும்.

மேற்கூறியவாறு தொங்கவிடப்பட்ட கட்டியானது ஒரு முழு அசைவு அசைய

பூமி ஒரு அசைவு அசைய ஏற்படும் நேரத்தைவிட அதிகம் ஏற்படவேண்டியதவசியம். ஆகவே கட்டியிருக்கும் நூல் சுமார் 3000. அடி நீளமாயிருக்க வேண்டும். இவ்வளவு நீளமுள்ளதாக அமைப்பது அசாத்தியமாகும். ஆகவே பூகம்பக் கருவியை 2-வது படத்தில் காட்டியவாறு அமைக்கபடுகிறது. AB ஒரு கனமான இரும்புத் தூண். இதுபூமியின்கீழ்சுமார் 30 அடி ஆழத்திலிருந்து கட்டப் பட்ட 'சிமன்ட்' தூண் மீது நிறுத்தப் பட்டிருக்கிறது. இத்தூணைத்தொட்டுக்கொண்டிருக்கும் BC இரும்புக் கட்டப்பாரையுடன், சேர்ந்திருக்கும். C, சுமார் 100 பவுண்ட் கனமான ஈயக்கண்டு இரு மெல்லிய AC கம்பிகளால் அந்தரத்தில் தொங்கவிடப்பட்டிருக்கிறது. Cயின் மீது ஒரு சுற்றாணியால் அமைக்கப்பட்டிருக்கும் பேனா D, காகிதத்தை மேலே போர்த்தியுள்ள சுருள் Gயைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. E மின்சாரத்தால் மணியைக் குறிக்கும் கம்பி. இது மின்சாரத்தால் பெரியதோர் கடிகாரத்தோடு சம்பந்தப்பட்டு ஒரு மணிக்கு அல்லது அரைமணிக்கொருதரம் கம்பி Eயின் முனை சுருளின் காகிதத்தில் வரைந்துள்ள கோட்டின் மீது அடித்து அடித்து மணி அடையாளத்தைக் குறிப்பிட்டுக்கொண்டே யிருக்கும். G, E இவை மற்றொரு உறுதியான 'சிமன்ட்' தூணின் மீது அமைக்கப்பட்டிருக்கின்றன.




சில இடங்களில் இக் கருவியைப்போல இரண்டு அழைத்திருக்கின்றனர். தென்வடக்காய் ஓடிவரும் பூகம்ப அலைகளைக்காட்ட கிழமேலாய் ஒரு கருவியையும், கிழமேலாய் ஓடிவரும் அலைகளைக் காட்ட தென்வடக்காய் ஒரு கருவியையும் அமைத்து வைக்கின்றனர். இதன்றியும், பூமியில் நேர்முகமாய் மேல் நோக்கி அலைகள் புறப்பட்டு வருவதால் அவைகளைக் குறிக்க AC கம்பிகளுக்குப் பதிலாக ஒரு உறுதியான 'ஸ்பிரிங்' வைத்துத் தொங்கவிட்டிருப்பதோடு சுழலும் சுருள் தலைகீழாய் அமைக்கப்பட்டிருக்




கும். இக் கருவிகள் காற்று முதலியவை சென்று ஆட்டிவிடாவண்ணம் ஒரு சிறிய கட்டடத்தில் அமைத்து வைக்கப்படுகின்றன. இவண் விளக்கியிருக்குங் கருவி ஜப்பானியர் உபயோகிப்பது போன்றது. இதைவிட இலேசான கருவிகளுமுள. அவைகளில் சுருளில் பேனாகொண்டு கோடு வரையாமல் புகைப்படக் காகிதத்தால் வெளிச்சக் கதிர்களால் கோடுகள் உண்டாக்கச் செய்கின்றனர்.

எல்லா மலைப்பிரதேசங்களிலும் முக்கியமாய் பூகம்பக் கருவிகள் அமைத்திருக்கின்றனர். இந்தியாவில், கோடைக்கானல், பம்பாய், ஆக்ரா, டேராடூன், கல்கத்தா இவ்விடங்களிலுமிருக்கின்றன. இரங்கூனில் சர்வகலாசாலையின் ஆதரவில் 1933ல் இரண்டு பூகம்பக் கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பூகம்பம் உண்டானால் பூகம்பக்கருவிகள் 3-வது படத்தில் காட்டியுள்ளபடி அலைகளை

வரைந்து காட்டும். பூமியை ஊடுருவி வரும் அதிர்ச்சியின் அலைகள் இருவிதமென முன்பு கூறியுள்ளோம். அவைகளில் முன்னதாக வருவது P. அதைப்பின் தொடர்ந்து வரும் அலை S. பூமியைச் சுற்றி நீண்ட சக்தி வாய்ந்த அலைகள் L. இந்த அலைகளின் பலத்தைக் காட்டுவது M. பிறகு அசைவு நின்றவுடன் எப்பொழும் போல நேர்முகக் கோடு உண்டாகும் P வந்து சேரும் நேரத்திற்கும், S வந்து சேரும் நேரத்திற்குமுள்ள வித்தியாசத்தைக் கொண்டும் அல்லது S–L இவைகளுக்கேற்படும் வித்தியாசத்தைக் கொண்டும், அந்தக் கருவியின் அசைவு கணக்குகளைக் கொண்டும், பூமியின் சுற்றளவை கொண்டும் பூகம்பம் ஏற்பட்ட சுற்றளவு தூரத்தைக் கணக்கெடுக்கப்படுகிறது. இவ்வாறு பல கவிருகளில் குறிப்பிடும் தூரங்களையெல்லாம் ஒன்று சேர்த்து வரைந்து பூகம்பம் ஏற்பட்ட சரியான இடத்தைக் காட்ட முடிகிறது.

### பூகம்பத்தை முன்னறிய முடியுமா?

இவண் விளக்கியுள்ள கருவிகளைக்கொண்டே பூகம்பத்தை முன்னதாக அறிய முடியும். பெரிய பூகம்பங்கள் உண்டாவதற்கு முன் வெகு அற்பமான அசைவுகள் ஏற்படுவதுண்டு. ஆங்காங்குள்ள பூகம்பக் கருவிகளில் குறிப்பிடும் அவ்வசைவுகளைக் கணக்கிட்டு பெரிய பூகம்பம் உண்டாகப் போகும் இடத்தைத் தெரிவிக்க முடியும். மேலும் ஹங்கேரி தேசத்து சாஸ்திர நிபுணரொருவர் கண்டுபிடித்த பூமியின் இழுக்குஞ் சக்தியை அளவிடும் கருவியைக் கொண்டு பூமியின் உட்பாகத்தின் தன்மையை அறியலாம். அதிகமாக இழுக்கும் சக்தி யிருந்தால் அடியில் பாறைகள் போன்ற உறுதியான வஸ்துக்களிருக்க வேண்டும். இழுக்கும் சக்தி குறைவானால் அடியில் மிருதுவான மண் அல்லது பிளவு, மடுவு முதலியவைகள் இருக்க வேண்டும். இவ்விதமாக மடுவுகள், பிளவுகள் உள்ள இடங்களைக் கண்டுபிடித்து அவ்விடங்களில் பூகம்பங்கள் ஏற்படுவது நிச்சயமானதால் அவண் விட்டகன்று செல்லவேண்டும். ஜப்பானில் இவ்விதமாகவே ஆராய்ந்து வருகின்றனர். கடந்த பூகம்பக் கணக்குகளைக் கொண்டு 11,22,33,19 வருஷங்கள் வீதம் முடிய பூகம்பங்கள் வடதுருவத்தில் அடிக்கடி ஏற்படுமென்பதாகக் கூறுகின்றனர். எப்படியானாலும் பூகம்பம் உண்டாகப்போகும் இடத்தை முன்னறிந்துரைக்க முடிந்தாலும் எந்நேரத்தில் ஏற்படப்போகுமென்பதை உரைக்க முடிகிறதில்லை.

சோதிட ஆராய்ச்சிக் காரர்கள் சிற்சில சமயம் பூகம்பம் ஏற்படப்போகும் பாகங்களைக் கூறுகின்றனர். இவர்கள் பூகம்பம் உண்டாகும் இடத்தை நறுக்காகக் குறிப்பிடாது பொதுவாக பல இடங்களைச் சேர்த்து சில காலத்தையும் குறிப்பிடுவது வழக்கம். அவ்வாறு குறிப்பிடுவதில் ஒரு சமயம் அதிர்ஷ்ட வசமாய் அசைவு ஏற்பட்டு விடுகிறது. பல சமயம் உண்மையற்றுப் போய் விடுகின்றன. முன்னறிந்து கூறுவதே துர்லபம். அவ்வாறுரைப்பவைகளில் 100-க்கு ஒன்றிரண்டு எப்படியோ பொருந்தி விடுவதே யல்லாது பெரும்பாலும் அவர்கள் குறிப்பால்சரியான இடத்தையும் நேரத்தையும் தெரிந்து தப்பிப் பிழைத்தவர் ஒருவருமில்லை. மேலும் சமீபத்தில் எத்தனையோ பூகம்பங்கள் ஏற்பட்டன. அவைகள் அனைத்தையும் அறிவித்தார் ஒருவருமில்லை. ஆனால் சாஸ்திரக் கருவிகள் மூலம் பூகம்பம் உண்டாகும் இடத்தை யாவது முன்னறிந்து திட்டமாகக் கூறமுடிகிறது. சாஸ்திர ஆராய்ச்சியின் முன்னேற்றம் வெகு ஆச்சரியப்படத் தக்கதா யிருந்து வருவதால் பூகம்பம் உண்டாகப் போகும் நேரத்தைக் கூட முன்னறியக்கூடிய காலம் சீக்கிரம் வந்துவிடலாம் என்பதைத்துணிந்து கூறலாம்.

பூமிபாட்டத்தினால் வீடுகள், கோபுரங்கள் முதலியவைகளும் ஆடிவிழுந்து மனிதர்களுக்கு ஆபத்துகளை விளைவிக்கின்றனவேயொழிய பூகம்பத்தாலே மாத்திரம் சேதம் ஏற்படுவதில்லை. ஆனால் பூமியாடி வெடிப்புகள் ஏற்பட்டாலுண்டு. இது அடிக்கடி நேருவதில்லை. ஆதலால் மனிதர் வீடுகளை சரியான உறுதியான தரையின் மீது ஆழத்தில் "காண்கிரீட்" போட்டு பலமான வீடுகளைக் கட்டவேண்டும். அவ்வாறில்லா

விட்டால் இலேசான மர வீடுகள் அமைக்க வேண்டும். மர வீடுகள் சில சமயம் பூகம்பத்தால் நெருப்புப் பிடித்துக் கொள்ளுவதால் கான்கிரீட் வீடுகளே தகுந்ததென ஜப்பானியர் அறிந்து அதன்படி நடந்து வருகின்றனர்.

## பூகம்பக் கதைகள்.

பூகம்பம் உண்டாவதற்கு அனேகர் பல கட்டுக் கதைகளை நம்பி வருகின்றனர். அஸ்ஸாம் நாட்டில் வசிக்கும் காரோஸ் ஜாதியார்களின்படி உலகம் ஓர் சதுரமான சமதளம். இச்சதுரமான உலகம் அந்தரத்தில் நான்கு கயிறுகளால் நான்கு மூலையிலும் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கிறது. சில சுண்டெலிகள் இக் கயிறுகளைக் கடித்து அறுத்து விட யத்தனித்து வருவதை ஒரு பிரமாண்டமான குருட்டு மனிதன் தடுத்துக்கொண்டேயிருக்கிறனும். அவன் குருடனுதலால் சில சமயம் அவ்வெலிகள் அவனுக்குத் தெரியாமல் கயிறை நறுக்கிவிட முடியும். இவ்வாறு ஒரு கயிறை நறுக்கி விட்டதால் தான் பூமி திடீரென்று கீழிறங்கி 1897-ல் அஸ்ஸாம் மாகாணத்தில் பூமி ஆடியதென்று நம்பி வந்தனர்.


இந்துக்கள் கதையின்படி உலகமானது ஆயிரம் சிரசுகளையுடைய ஆதி சேஷனென பெரிய சர்ப்பத்தால் தாங்கப்பட்டு வருகிறதாம். இப் பாம்பு சமயா சமயம் ஒரு தலை விட்டு மறு தலைக்கு பூமியை மாற்றும்போது பூமி அசைந்தாடுகிறதாம். சிலர், சர்ப்பத்திற்குப் பதிலாக ஒரு பசு தனது கொம்பினுல் தாங்கி வருவதாகவும், கனம் அதிகமாகி விட்டால் ஒரு கொம்பை விட்டு மறு கொம்பிற்கு மாற்றும்போது பூமி அசைவு ஏற்படுவதாகவும் கூறுகின்றனர்.

முற்காலத்து கிரீக் தேசத்தார்களின்படி பூகம்பக் கடவுள் ஒருவர் இருப்பதாயும், அக் கடவுளுக்கு சதாபலி முதலியவை கொடுத்து வணங்கி வந்தனர். எப்பொழுதாவது பூமி யாடினுல் பூகம்பக் கடவுள் தூங்கிவிட்டார் என்று நம்பி "நாங்கள் இங்கே இருக்கிரேம், இங்கே இருக்கிரேம்" என்று பெருஞ் சத்தங்கள் போடுவார்களாம். இவ்வாறு செய்வதில் பூகம்பக் கடவுள் நித்திரை விட்டெழுந்து பூமி ஆட்டத்தை நிறுத்தி விடுவாராம்.

1755ல் போர்த்துகல் தேசத்தில் பூகம்பம் உண்டாகி ஜனங்கள் மாண்டதற்கு அத்தேசத்துக் கத்தோலிக் கிறிஸ்துவர்கள் சில புரோடெஸ்டெண்ட் மதத்தினரைத் தங்களிடையே வைத்திருப்பதனுல் பரமண்டலத்திலுள்ள பிதா பூமியை ஆட்டி தண்டித்து தக்க பாடம் கற்பித்தார் என்று கத்தோலிக் சுவாமியார்கள் கூறினுர்களாம்.

கடந்த ஜனவரி மாதம் வட இந்தியாவில் ஏற்பட்ட பூகம்பம் ஹுஸ்டன் வெள்ளைக் கூட்டத்தார் ஆகாயக் கப்பல்களில் இமய மலை எவரெஸ்ட் சிகரத்திற்கு மேல் பறந்து சென்றதால் ஏற்பட்டதாம். அவ்வாறு மேலே பறந்துபோனதால் அங்கு வசிக்கும் ஆதி சிவக் கடவுள் பூமியை அசைத்துத் தனது கோபாக்கினியைக் காண்பித்தாரென்று பல வட இந்தியர் கூறினுர்களாம். இக்கதைகளை விரிக்கில் பெருகும். பூகம்பங்கள் அடிக்கடி ஏற்படுவதையும், அவைகள் ஏற்படும் தன்மைகளையும் நன்ருய் விளங்கிக் கொண்டவர்கள் இவைகள் யாவும் மூட நம்பிக்கைகளென்று கூசாமற் கூறிவிடுவர்.

# பிரான்மலை என வழங்கும் பாரிமலை



"ஒருசா ரருவி யார்ப்ப வொருசார்
பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்
வாக்க வுக்க தேக்கட் டேறல்
கல்லலைத் தொழுகு மன்னே பலவே
லண்ணல் யானை வேந்தர்க்
கின்னா னாகிய வினியோன் குன்றே"

—கபிலர்—புறம்.

# ரங்கூனில் நான் கண்ட காட்சி

"தேவ தேவன்"

சென்னையிலே திண்டாடினவர்கள் ரங்கூனுக்குப் போனால் கொண்டாட்டம் போடலாம் என்று எங்கள் மானமதுரை முத்து மூப்பனர் சொல்லிக் கொண்டிருப்பார். ஆனால் என் தலைவிதி ரங்கூனிலும் திண்டாட்டந்தான். என்னுடைய அதிர்ஷ்டம் என்னை யறியாமலே என்னுடன் கப்பலில் வந்து விட்டது. இல்லாவிட்டால் கப்பலில் வாந்தி யெடுத்து மயக்கமாகப் படுத்திருந்தபோது என் மூட்டையை யாரோ அடித்துக் கொண்டு போயிருப்பார்களா? மலையளவு பாவத்திலே கடுகளவு புண்ணியம் என்பது போல அந்த மூட்டை என்னுடையதல்ல வென்கிற விஷயத்தில்சிறிது திருப்தி. சுமார் 25 வருஷங்களுக்கு முன் ரங்கூனுக்குச் சொல்லாமல் ஓடி வந்து விட்ட கோதண்ட பாணி கண்டியருக்கு, அவருடைய அத்தை மூங்காத்தாள் அன்போடு கட்டிக்கொடுத்த இரண்டு வீசை புளி மூட்டை யிது. வீட்டுப் புறக்கடையிலே இருக்கும் புளியமரத்தின் பழமானதால் இதற்கு அதிக ருசி என்று சொல்லி அந்த ஆச்சி, இந்தப் புளியை என் தலையிலே சுமத்தினாள். எனக்கு அந்தச் சிரமம் கூடாதென்று வழியிலே வேறொருவன் அதைச் சுமந்து கொண்டு போய் விட்டான். ரங்கூனில் நான் போய் இறங்க வேண்டிய இடமோ மேற்படி கண்டியருடைய வீடு. புளி மூட்டையின்றி அவருடைய வீட்டுக்கு எப்படிப் போவது? யோசித்தேன். சமுத்திரக் காற்றினால் அற்ப சொற்பம் இருந்த எனது மூளையும் வறண்டு போய் விட்டது. ஒரு யோசனையுந் தோன்றவில்லை. கடைசியில் ரங்கூன் நகரம் கண்ணுக்குத் தென்பட்டவுடனே பளிச்சென்று ஒரு யுக்தி தோன்றியது. எனக்குப் புளி சோறு அதிகம் பிடிக்குமென்று என் பாட்டியார் வழிப் பிரயாணத்திற்காக ஒரு பெரிய மூட்டை கட்டிக் கொடுத்திருந்தாள். அதில் கால்பாகந்தான் செலவழிந்தது. மீதத்தை அப்படியே மூட்டை கட்டி, கண்டியரிடத்தில் "உங்கள் அத்தையின் பிரசாதம்" என்று சொல்லி ஒப்புவித்து விடலாம் என்று தீர்மானித்தேன். புளிக்குப் பதிலாகப் புளிச் சோற்றையே கொடுத்தால் கண்டியருக்கு அதிக சந்தோஷம் உண்டாகும்; எனக்கும் பலமான உபசாரங்கள் நடக்கும் என்று பூரிப்படைந்தேன். ஆனால் ரங்கூன் வாழ்க்கையானது, காட்டு மிராண்டிகளை யெல்லாம் நாகரிக மனிதர்களாக்கி யிருக்கிறதென்பதையும், அந்த நாகரிகமானது பழகிப் போன புளிச் சோற்றை எட்டிப்பாராதென்பதையும் நான் தெரிந்து கொள்ளவில்லை. எங்களூர் பெருமாள் கோயில் பட்டாச்சாரியார் "பழைய புளியோதரைக்குப் பழகின மோர்க் குழம்பு பலே வாட்டமாயிருக்கும்" என்று அடிக்கடி பிரசிங்கிப்பதை அப்படியே ரங்கூனிலும் சொல்லலாம் என்று நினைத்தேன். ஆனால் ரங்கூன் நாகரிகம் என்னை முட்டித்தள்ளி விட்டது.

ஃ ஃ ஃ

ரங்கூனுக்கு நான் வந்தபோது நல்ல வெயில் காலம். கீழே தார் ரோட்; மேலே சூரிய பகவானின் கோபம். இவை இரண்டுக்கும் நடுவே நான் தில்லை நடராஜனைப்போல் தாண்டவம் செய்து கொண்டு கண்டியர் வீடு போய்ச் சேர்ந்தேன். அப்பொழுதே நினைத்தேன், 'ஐயோ, வரும்போதே தாண்டவம் செய்ய வேண்டியிருக்கிறதே. இனி இங்கிருக்கும் வரை தாளம்போட வேண்டி-

யது தானே' என்று கப்பலடியில் என்னை அழைத்துப்போக ஒருவரும் வரவில்லை. நான் வருவதாக என் பாட்டியார் கண்டியருக்கு ஒரு கடிதம் போட்டிருந்தாள். புளி மூட்டை கொடுத்தனுப்பிய ஆச்சியைக் கொண்டு ஒரு கடிதம் எழுதுவித்தேன். நான் சென்னையிலி ருந்து புறப்படுவதற்கு முன் ஒரு தந்தியும் கொடுப்பித்தேன். ஆனால் என் துரதிர்ஷ்டம் கப்பலடிக்கு ஒருவரும் வரவில்லை. கண்டியரு டைய வீட்டுக்குப் போன பிறகு தான் இதன் காரணம் தெரிந்தது. புதிதாக ரங்கூனுக்கு வருபவர்கள் ஒன்று சிறிது பணம் படைத்தவர்களாகவாவது இருக்கவேண்டும்; அல்லது அவர்களால் ஏதாவது காரியம் ஆவதாயிருக்க வேண்டும். இவர்களை ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்து உபசாரம் செய்து அழைக்கலாமாம். மற்றபடி அவர்கள் எவ்வளவு நெருங்கிய உறவினர்களாயிருந்த போதிலும் அல்லது பழகின நண்பர்களா யிருந்த போதிலும் கப்பலடிக்குச் சென்று அழைத்துவருவது கௌரவக் குறைவாம். அதுவும் ஓர் உத்தியோகத்தை நாடி வந்திருப்பதாகத் தெரிந்துவிட்டால் போதும் அவன் பாடு. ரங்கூன் பெரிய மனிதர்கள், அவனிடத்தில் பரம கிருபையுள்ளவர்கள் போல் நடித்து அவனுடைய வாய்ப்பொறுப் பையெல்லாம் பிடுங்கிக் கொண்டு, அவன் பின்னாலேயே பரிகாசமும் செய்வார்கள். ரங்கூனிலே படித்த பெரிய மனிதர்களென்று தாங்களே நினைத்துச் சந்தோஷப்படும் கனவான்களை அடுத்து "எங்கேனும் ஏதாவது உத்தியோகம் கிடைக்குமா?" என்று கேட்டால் "இல்லை" அல்லது "உத்தியோகத்தைத் தேடித் தரும்படியான அவ்வளவு செல்வாக்கு எனக்கு இல்லை" என்ற பதில்கள் வரவே வரா. பரம கருணையுள்ளவர்களல்லவா? தங்களால் ஒரு காரியம் ஆகாதென்று தங்கள் மனச்சாட்சி கூறியபோதிலும் "தங்களிடம் நான்கு பேர் உத்தியோகத்திற்குக் காத்து நிற்கிறார்கள்" என்ற கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக "நாளை வா, வெள்ளிக்கிழமை வா" என்று பல முறை அவனை காலொடியச் செய்வார்கள். அவன் வந்துபோன பிறகு, "என்பாடே திண்டாட்டத்திலிருக்கிறது. இவனுக்கு நான் எங்கே வேலை செய்து வைப்பது?" என்று மனம் விட்டுப் பேசுவார்கள். ஆனால் சில வருஷங்களுக்கு முன் இப்படியெல்லாம் இருந்ததில்லையாம்.

ஃ ஃ ஃ

அப்படியும் இப்படியுமாக அலைந்து மெதுவாகக் கண்டியர் வீடு போய்ச் சேர்ந்தேன். கண்டியரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. கண்டியர் சம்சாரம் இருந்தாள். என்னை வரவென்றுகூடச் சொல்லவில்லை. அதற்குமாறாக முகத்தை ஒருவாறு சுருக்கிக் சொண்டாள். எங்கே தன்னுடைய வீட்டில் நான் தங்கிவிடுவேன் என்று அந்த அம்மாளுக்குப் பயமோ என்னவோ? அல்லது கண்டியரை உத்தியோகம் செய்து தருமாறு தொந்திரவு செய்து அவருக்கு அபகீர்த்தியை விளைவித்து விடுவேன் என்ற எண்ணமோ? இவைகளை நான் பொருட்படுத்தாமல் என்னுடைய படுக்கையையும் பெட்டியையும் கொண்டு வைத்தேன். நான் வருகிற சமாசாரம்கூடத் தெரியாதவர்கள்போல் அவர்கள் நடந்து கொண்டார்கள். பார்த்தேன் சிறிது நேரம். அவிழ்த்தேன் மூட்டையை. புளிச் சோற்றுக் கட்டை எடுத்துக் கண்டியருடைய சம்சாரத்தின் முன்னிலையில் வைத்து "மூக்காத்தாள் கொடுத்தனுப்பியது" என்று கூறினேன். அந்த அம்மாள் அதை அப்படியே சுவற்றோரமாகக் காலால் தள்ளினாள். சிறிது நேரங் கழித்துச் சுடச்சுட ஒரு டம்ளர் காபியைக் கொண்டு வைத்தாள். நல்ல வெயில்! வயிறோ பற்றி எரிகிறது! இதிலே சுடச் சுட காபியா? ஆனால் இது தான் ரங்கூன் நாகரிக அம்சங்களில் முக்கியமானதொன்று எனப் பிற்பாடு தெரிந்து கொண்டேன். ரங்கூனில் எந்தச் சமயத்தில் —இப்பவோ, பின்னையோ, மற்றெந்த நேரத்திலோ—யார் வீட்டுக்குப் போனபோதிலும் காபி கொடுப்பார்கள். அதை வாங்கிச் சாப்பிடுவதுதான் மரியாதை. ஒருவன் ஒரு நாளையில் எத்தனை கப் காபி அதிகமாகச் சாப்பிடுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு நாகரிகத்தில் உயருகின்றான் என்பது ரங்கூன் சித்தாந்தம். சாப்பாட்டு வேளையில் சென்ற போதிலுங்கூட "சாப்பிடுங்கள்" என்று வாய் திறந்து சொல்லமாட்டார்கள். ஆனால்

காபியை மட்டும் டின் பாலோடு சேர்த்தாவது கொடுப்பார்கள். இதற்கு மேல் "மதராஸ் பக்கத்திலேயுள்ளவர்கள் எல்லாரும் கர்மிகள். வீடேறி வந்தவர்களுக்குக் காபி கூட கொடுக்கமாட்டார்கள்" என்று கூசாமற் கூறுவார்கள். ஆனல், "மதராஸ் பக்கத்திலுள்ளவர்கள் வீடேறி வந்தவர்களுக்கு வயிறு நிறையச் சாப்பாடு போடுவார்கள். வயிறெரிய காபி கொடுக்கமாட்டார்கள்" என்று நானே பதில் கூறிக்கொள்வேன். சாயங்காலம், கண்டியர் வீட்டுக்கு வந்தார். ஊர்ச் சமாசாரங்களை அன்போடு விசாரித்தார். ஆனல் அத்தையாருடைய க்ஷேமத்தை மட்டும் அழகாக மறந்துவிட்டார். அவருடைய க்ஷேமத்தை விசாரிக்கும்போது எங்கே அவருக்கும் பணம் அனுப்ப வேண்டுமென்ற எண்ணம் உண்டாகிவிடுகிறதோ என்ற பயமோ என்னவோ? அன்றிரவு மட்டும் அவர் வீட்டில்சாப்பிட்டுவிட்டு,மறுநாள் முதல் வேறோரிடத்தில் சாப்பாட்டுக்கும் ஜாகைக்கும் ஏற்பாடு செய்து கொண்டேன். பிறகு ஊர் சுற்ற ஆரம்பித்தேன். என் கண்ணுக்குப்பட்ட சில காட்சிகளை மட்டும் இங்கே சுருக்கமாகக் கூறுகிறேன்.

ஃ ஃ ஃ

ரங்கூனில் முதன் முதலாக எல்லாருடைய கவனத்தையும் இழுப்பது 'லஞ்சா' என்று சொல்லப்படும் ரிக்ஷா வண்டி. இதை இழுத்துச் செல்வோர் 'கோரங்கிகள்' என்கிற தெலுங்கர்கள். மதராஸ் ரிக்ஷாக்களில் ஏறினல், உடம்பில் ஏற்படும் முடக்குவாதம் இடுப்புவலி முதலியன வெல்லாம் ஒரு நிமிஷத்தில் பறந்து போகும். ரங்கூன் ரிக்ஷாக்கள் இந்தப் பரோபகாரத்தைச் செய்யமாட்டா. அதற்கு மாருக, நன்ருகத் தூக்கம் வராதவர்கள் இந்த லஞ்சாக்களில் இரண்டு மூன்று முறை போய்வருவார்களானல் நிம்மதியாகத் தூக்கம்வரும். தவிர "பேக எல்லு" என்று சொல்லிவிட்டால்—இது தெலுங்கு பாஷைதான்—போதும். மேலே இரண்டு காசு கொடுத்துவிடவேண்டும். நீங்கள் எங்கே போகவேண்டுமானலும்-நரகத்திற்குக்கூட-எவ்வளவு சிக்கிரம் போக வேண்டுமானலும் போகலாம். வண்டியிலே உட்கார்ந்தபிறகு,'கூடக்காசுகொடுக்கிருயா? அல்லது கவிழ்த்துவிடட்டுமா?' என்று இங்கே ரிக்ஷாக்காரர்கள் பயமுறுத்துவதில்லை. ஆனல் இந்த ஊரிலே சில பெரிய மனிதர்கள், இரண்டு அல்லது மூன்று மணிநேரம் லஞ்சாவிலே ஊரெல்லாம்சுற்றியடித்துவிட்டு எங்கேயாவது ஒரு சிறு சந்தண்டையோ அல்லது பெரிய மாடி வீட்டெதிரிலேயோ இறங்கி, 'இங்கேயே இரு' என்று அதிகாரத்தோடு லஞ்சாக்காரனுக்கு உத்திரவிட்டுப் போவார்கள். அவ்வளவுதான். லஞ்சாக்காரன் அங்கேயே இருந்து பார்ப்பான். போன பெரிய மனிதர் திரும்பி எங்கே வரப்போகிருர் ? இவர்கள் முதல் நம்பர் பெரிய மனிதர்கள். இவர்களைவிட ஒருபடி உயர்ந்தபெரியமனிதர்கள்சிலர் இருக்கின்றனர்.இவர்களுடைய வேஷம்—அதாவது ஐரோப்பியஉடை-மிகப்பலமாக இருக்கும். ஹாட், சூட், பூட், ரிஸ்ட்வாச் எல்லா அலங்காரங்களும் இருக்கும். இவர்கள் லஞ்சாக்களில் ஏறிக்கொண்டு இஷ்டப்பட்ட இடமெல்லாம் சுற்றிவிட்டு தங்களுக்கு எப்பொழுது எந்த இடத்தில் பசியெடுக்கிறதோ அப்பொழுது அந்த இடத்தில் இறங்கி, ஒரு ரூபாய்க்குச் சில்லறை இருக்கிறதா என்று கேட்பார்கள்: ஏழை லஞ்சாக்காரன் ஓடிச் சம்பாதித்து இறுக முடிபோட்டு வைத்திருக்கும் சில்லறையை ஒருமுறைக்கு இருமுறை எண்ணிக் கொடுப்பான். இதை வாங்கிக்கொண்டு "இங்கேயே இரு; ரூபாய் அனுப்புகிறேன்" என்று சொல்லிவிட்டு வேருெரு தெருவழியாகக் கம்பி நீட்டிவிடுவார்கள் இந்தப் பெரிய மனிதர்கள். ஊராரை யெல்லாம் சுமந்து சென்று சம்பாதிக்கும் பணத்தை இந்தப் பெரிய மனிதர்களுக்குப் பாதகாணிக்கையாகச் செலுத்தாமல் இருக்க முடியுமா? ஆனல் இந்த லஞ்சாக்காரர்களுடைய பிழைப்பில் கூட மண் விழுந்துவிடுமோ வென்று சிலர் பயப்படுகிருர்கள். இது நிற்க. ரங்கூன் லஞ்சாக்களில் ஏறி உட்கார்ந்தால் முகத்திலே தனியானகளை உண்டாகிவிடுகிறது. ஒன்றுந் தெரியாத நாட்டுப்புறத்தானகிய நான்கூட வன்றே, ரங்கூனுக்கு வந்த மூன்ருவது நாளிலேயே லஞ்சாவில் கம்பீரமாக உட்கார ஆரம்பித்து

விட்டேன். கால் மேல்கால்; இரண்டு பக்கத்து மூங்கில் வளைவுகளையும் இரண்டு கைகளால் பிடித்துக்கொள்ளுதல்; ஆகாயத்திலே பார்வை; பலவந்தமான புன்சிரிப்பு; வழக்கமிருந்தால் வாயில் சிகரெட். இந்த லட்சணங்களோடு லஞ்சாவில் போவதுதான் பெரிய மனிதர்களுக்கு அழகு. பத்து கஜ தூரத்திலிருக்கும் ஓரிடத்திற்குப்போகவேண்டுமானல் கூட இந்த லஞ்சாவை உபயோகிக்கிறார்கள் ரங்கூன் வாசிகள்.

ஃ ஃ ஃ

ரங்கூனில் சினிமாக்கள்-மன்னிக்க வேண்டும், டாக்கிகள்—மிக அதிகம். உத்தியோகம் புருஷ லட்சணம் என்கிற மாதிரி, வாரத்தில் ஆறு நாளாவது டாக்கிகள் பார்ப்பது ரங்கூன் கனவான்களின் லட்சணம். இதைப் பற்றிப் பேசுவதில்கூட ஒருவித அழகைக் காட்டுகிறார்கள் இவர்கள். டாக்கிக்குப்போயிருந்தேன், அல்லது சினிமாவுக்குப் போயிருந்தேன் என்று சொன்னல் அவ்வளவு நாகரிகமாகக் கருதப்படுவதில்லை. 'ஸ்கோப்' புக்குப் போயிருந்தேன் என்று சொல்ல வேண்டுமாம். 'பயாஸ்கோப்' என்ற சொல்லின் குறள் வடிவம் இது. ஆமாம் 'பயாஸ்கோப்' என்று நீளமாகச் சொல்லி வாயை நோவச் செய்வானேன்? அநாவசியமாக இரண்டு எழுத்தை அதிகம் செலவழிப்பானேன்? 'ஸ்கோப்'புக்குத்தான் போகிறார்களே இந்தப்பெரியமனிதர்கள், அங்கேபோய் படங்களைத் தான் செம்மையாகப்பார்க்கிறார்களா? இல்லை. அந்தச் சமயத்தில் இவர்கள் நான்குமுகத்தோடுகூடிய பிரும்மாவாகிவிடுகிறார்கள். தேவேந்திரனைப்போல்ஆயிரம் கண்களில்லையே யென்று வருந்துகிறார்கள். தெரியாத்தனமாகக் கடவுள் இவர்களுக்கு இரண்டு கண்கள் கொடுப்பதோடு நிறுத்திக் கொண்டுவிட்டான். இந்த இரண்டு கண்களும், கொட்டகையின் நாற்புறத்திலும், மேலேயுள்ள 'காலரி'யிலும் சுழன்று சுழன்று வட்டமிடுகின்றனவே, இன்னும் அதிகமான கண்கள் கொடுத்தால் இவர்கள் கீழே நாகலோகத்தையும் மேலே வானலோகத்தையும் துருவிப் பார்க்க ஆரம்பிப்பார்கள் என்று பயந்துதான், பிரும்மன் இவர்களுக்கு இரண்டு கண்கள் கொடுப்பதோடு நிறுத்திக்கொண்டான் என்று தோன்றுகிறது. 'ஸ்கோப்'புக்குப் போனல் அங்கே இரண்டு மணி நேரம் அசடுமாதிரி உட்கார்ந்து பார்த்துவிட்டு வருவதால் மட்டும் உங்களுக்குப் பெருந்தன்மை ஏற்பட்டு விடாது. அங்கே போனல் உங்களுக்குத் தாகம் எடுக்க வேண்டும். அதுவும் ஆரஞ்சு, லெமன் கிரஷ் முதலியவைகளினலேயே சாந்தியடையக் கூடியதாகமாயிருக்க வேண்டும். சாக்லேட்டையோ அல்லது வறுத்த நிலக்கடலையையோ (இதற்கு ஈபே என்று இங்கு அழைக்கிறார்கள்) ஏற்றுக் கொள்ளக் கூடிய விதமாக வாய் ஊறல் எடுக்க வேண்டும். இவையிரண்டும் முடியவில்லையானல், கல்கத்தா 'கிலி'யை யாவது வாங்கிப்போட்டுக் கொள்ள வேண்டும். இந்தக் 'கிலியை' மதராசில் 'பீடா'என்று அழைக்கிறார்கள். இதில் இரண்டுவகைக்கிலிகள் உண்டு. ஒன்று கல்கத்தா கிலி. இதுகாசு(காலணவுக்கு)ஒன்றுதான் கிடைக்கும். மற்றொன்று பர்மா கிலி. இது காசுக்கு இரண்டு. தனியாக வீட்டிலே இருக்கும் போது இந்த பர்மா கிலியை வாங்கிப் போட்டுக்கொண்டால் அதை ஒருவரும் கவனிக்க மாட்டார்கள். 'ஸ்கோப்'புக்குப்போய் காலணவுக்கு குறைந்து கிலி வாங்கிப் போட்டால் எவ்வளவு கௌரவக் குறைவு? ரங்கூனில் மூக்குப்பொடி போடும் வழக்கம் அதிகமாகக் காணப்படவில்லை. அதற்குப் பதிலாக சிகரெட், சுருட்டு பிடிக்கும் வழக்கம் அதிகமாகத் தென்படுகிறது. எப்படியாவது புகையிலையை உபயோகப்படுத்த வேண்டும். அது பொடியாக மூக்கினுள் புகுந்தாலென்ன? புகையாகக் காற்றிலே கலந்தாலென்ன?

ஃ ஃ ஃ

'பிராமணர் ஆதிக்கம்' என்ற கூக்குரல் ஒரு காலத்தில் சென்னை மாகாணத்தில் வெகு மும்முரமாக இருந்தது. இப்பொழுது அடங்கிவிட்டது. ஆனல் அந்த ஆதிக்கமானது இது காலை ரங்கூனிலுள்ள காபி ஹோட்டல்களின் போர்டுகளில் ஏறிக் கொண்டிருக்கிறது. பிராமண சமூகத்திற்கு இஃது ஒரு கௌரவமல்லவா? நானழிந்தா

லும் என் பெயரழியாது என்று அஃது என் பெருமை பாராட்டிக் கொள்ளக்கூடாது? ரங்கூனில் பிராமணர் காபி ஹோட்டல்களுக்குக் குறைவே கிடையாது. ஆனால் தயை செய்து இந்த காபி ஹோட்டல் பிராமணனைப் பார்த்து "நீங்கள் என்ன வேதம்? உங்கள் கோத்திரம் என்ன?" என்று கேட்டு விடாதீர்கள். அப்படித் தெரியாமல் கேட்டு விட்டால் அதன் பலனை நீங்கள் தான் அனுபவிக்க வேண்டும். ஆயிரம் மைல்களுக்கப்பால் கடல் கடந்து வந்த பிறகுகூட வேதத்தையும் கோத்திரத்தையும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டு மென்று எதிர்பார்க்கலாமா? ரங்கூன் காபி ஹோட்டல் பிராமணனுக்கும் மதராஸ் காபி ஹோட்டல் பிராமணனுக்கும் முக்கியமான ஒரு வித்தியாசம் இருக்கிறது. முந்தினவர் வல்லினப் பிராமணர்; பிந்தினவர் இடையினப் பிராமணர். இதற்கு அத்தாட்சி வேண்டுமானால் காப்பிஹோட்டல் போர்டுகளைப் பாருங்கள். பிருமணர் ஹோட்டல் என்றுதான் போட்டிருக்கும். நிற்க ரங்கூன் ஹோட்டல் காரர்கள் தாராள மனது படைத்தவர்கள். உள்ளங்கைபகலமுள்ள தோசையைக் கொடுத்து ஓர் அணா வாங்கிவிடமாட்டார்கள். சிறுதொகையைப் பெற்றுக்கொண்டு பெரும் பசியைப்போக்கடிக்கும் பெருந்தகையாளர். ஒரு நாள் நான் ஒரு ஹோட்டலுக்குச் சென்று 'அரையணாவுக்குப் பகோடா கொடுங்கள்' என்று தெரியாமல் சொல்லிவிட்டேன். ஒரு பிளேட் நிறையக்கொண்டு வைத்தார்கள் அதில் கால் பாகம் தின்பதற்குள் என்பாடு போதுமென்றாய்விட்டது. கண்கள் பிதுங்கின; தாடைகள் வீங்கின; பற்கள் ஆடத் தொடங்கின. ஹோட்டலே! உனக்கு ஒரு கோடி நமஸ்காரம் என்று ஓடிவந்து விட்டேன்.

ரங்கூன் நகரம் அழகு வாய்ந்தது. நாகரிகம் படைத்தது. மூன்று நான்கு அடுக்கு மாடி வீடுகளும் புறாக் கூண்டுகள் போன்ற அவைகளின் நுழைவாயில்களும் நாகரிக உயர்வை நன்கு விளக்குகின்றன. சூரிய தேவனும் வாயு பகவானும் ரங்கூனில் ஒரு தனிதினுசாக நடந்துகொள்கின்றனர். "வழியேயேகுக; வழியே மீளுக" என்ற பழமொழியை இவ்விருவரும் மிக உறுதியாகக் கடைப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர்கள். ரங்கூன் வீடுகளில் இவ்விருவரும் போவதும் வருவதும் ஒரு வழியிலேயே. இவர்களுக்குவேறு வழி கிடையாது. எனவே, க்ஷயரோக தேவதை இந்த வீடுகளில் பிரவேசிக்க ஆவலாயிருப்பதில் ஆச்சரிய மில்லையல்லவா? ஒருநாள் ஷூவேதகான் பையா என்கிற புத்தர் கோயிலுக்குப் போயிருந்தேன். அழகு, அமைதி, அன்பு, இன்பம் யாவும் ஒருங்கு சேர்ந்து இங்கே வாசஞ் செய்தன. பர்மியர்கள் இங்கு முழந்தாளிட்டு மௌன வாக்குடன் பிரார்த்தனை செய்யுங்காட்சி என் மனதை உருக்கிவிட்டது. கடவுளைக் காண்பிக்கும் தரகர்கள் இங்கே காணோம். புத்தர் உருவத்திற்கு முன்னால் யார் வேண்டுமானாலுஞ் சென்று விளக்கேற்றி வைத்து பூவால் அருச்சித்து வணங்கிவிட்டு வரலாம். ஆனால் இந்தப் புத்தர் ஒன்றும் புரியாதவரா யிருக்கிறார். வந்து தரிசிக்கும் பக்தர்களுக்கு, நைவேத்தியம் என்ற பெயரால் தாம் ஏற்றுக்கொண்டு, பின்னர் பிரசாதம் என்ற பெயரால் வடையோ, சுண்டலோ, சர்க்கரைப் பொங்கலோ எதையோ ஒன்றைக் கொடுப்பிக்கக் கூடாதா? கால் கடுக்க வந்தவர்களுக்கு ஆயாசந் தீர வெல்லப் பானகம் கூட இல்லையென்றால் என்ன வெட்கக் கேடு? பக்தர்களுக்கு கோயிலுக்குப் போகவேண்டுமென்று எப்படி உற்சாகமுண்டாகும்? அதுதான் போகட்டும். தாசிகளைக் கொண்டு—மன்னிக்கவேண்டும். தேவதாசிகளைக் கொண்டு நாட்டியக் கச்சேரியாவது நடத்துவிக்கக் கூடாதா? ஐயோ இந்தச் சாமிக்கு ஒரு வாணவேடிக்கைக்குக்கூட கதியில்லை. இந்தப் பெரிய பையா கோயிலின் வெளிப் பிராகாரத்தில் நான் சுற்றி வந்து கொண்டிருக்கையில், நமது கோயில்களின் கர்ப்பக் கிருகம் நினைவுக்கு வந்துவிட்டது. தாயாருடைய கர்ப்பத்தில் பத்து மாதம் வாசஞ் செய்வதைக் காட்டிலும், கோயில் கர்ப்பக் கிருகத்தில் ஒரு மணி நேரம் நின்று கடவுளைத் தரிசிப்பது எவ்விதத்தில் குறைந்துவிட்டது? அப்படியிருக்க நமது கோயில்களைச் சீர்திருத்தவேண்டுமென்று ஏன் சில சீர்திருத்தக்காரர்கள் கூச்

சலிடுகிறார்கள் என்பது எனக்கு விளங்கவேயில்லை. இப்படிப் பலவித எண்ணங்களோடு இந்தப் பையா கோயிலைச் சுற்றிப் பார்த்து வந்தேன்.

ஃ ஃ ஃ

என்னுடைய ரங்கூன் வாசத்தின் முதற்பாகத்தில் எனக்கு ஒரு திகைப்பு ஏற்பட்டது. பர்மாவிலுள்ள கிராமங்களிலிருந்து வரும் கிராம வாசிகளைப் பார்த்தால் ஆண்களென்றும் பெண்களென்றும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது. ஒரேமாதிரி லுங்கி; தலை மயிரைக் கட்டிக்கொள்ளும் விதமும் அதற்குமேல் துணியைச் சுற்றிக்கொள்ளும் விதமும் ஒரே மாதிரி. இருவர் வாயிலும் 'செரூட்' என்கிற சுருட்டு. இந்த வித்தியாசமின்மைக்கு முக்கிய காரணம் பர்மிய ஆண்களில் பெரும்பாலோருடைய முகம், நாவிதர்களின் அவசியத்தைத் தேடாமலிருப்பதேயாம்.

ஃ ஃ ஃ

ரங்கூனில் பல வகையான மோட்டார்கள் அதிகம். மோட்டார் வைத்துக் கொண்டிருப்பவர்களுடைய வருமானம் எவ்வளவு அல்லது அவர்களுடைய கடன் எவ்வளவு என்பன போன்ற சிக்கலான கேள்விகளை மட்டும் கேட்டு விடாதீர்கள். ரங்கூனில் எந்தச் சாமானையும் யாரும் கடனாக வாங்கலாம். கடவுளுக்குக் கூடக் கடன் சொல்லி அர்ச்சனை செய்விக்கும் போதுகேவல மோட்டார்வண்டியைத்தானா கடனாக வாங்க முடியாது? நாளை வரப்போவதைப்பற்றிக் கவலைப்படாத வாழ்க்கையை யாரேனும் நடத்த விரும்பினால் "சோவாரும் செகத்தீரே ரங்கூனுக்கு" என்று கூவியழைக்கிறேன். கடனாக வாங்கின சாமான்களுக்கு, அடுத்த மாதம் முதலில் சம்பளம் வாங்கியானவுடன் பணம் கொடுத்து விடவேண்டுமே யென்று பயப்பட்டு விடாதீர்கள். ஐம்பது ரூபாய்க்குச் சாமான் வாங்கினால் அடுத்த மாதம் நீங்கள் ஐந்து ரூபாய் தாராளமாய்க் கொடுக்கலாம். அதற்காகக் கடைக்காரர்கள் உங்களைக் கோபித்துக் கொள்ள மாட்டார்கள். சாமான் கொடுப்பதையும் நிறுத்திக் கொள்ள மாட்டார்கள். இப்படி நாலா இடங்களிலும் கடன் வாங்கினால் தானே நாலு பேர் நமது வீட்டைத் தேடி வரவும் போகவுமாயிருப்பார்கள். அது ஒரு கௌரவமல்லவா! ரங்கூனில் எல்லாருமே இப்படி இருப்பதாக நினைத்துவிட வேண்டாம். ஒரு சிலர் தான் நாகரிகத்தோடு போட்டி போட்டு இப்படி கஷ்டப்படுகிறார்கள்! பொதுவாகக் குறைந்தது ஆறு மாதம் வரையிலாவது கையில் ஒரு காசு கூட இல்லாமல் ஆடம்பரமாக வாழ்வதற்கு ரங்கூனில் எல்லாச் சௌகரியங்களும் அமைந்திருக்கின்றன. சிறிது சாமர்த்தியமும் மனத் துணிவுந் தான் வேண்டும்.


ஃ ஃ ஃ

கடைசியில் ஊருக்குத் திரும்ப வேண்டுமென்ற ஆவல் அதிகமாகி விட்டதெனக்கு. கண்டியரிடத்தில் விடைபெற்றுக் கொள்ளச் சென்றேன். எனக்காக அவர் ஒரு சிரமமும் எடுத்துக் கொள்ளவில்லை யானாலும், அவருடைய நிழலிலேயே நான் குடியிருந்ததுபோலப் பேசினார். கடைசியில் பேசா மடந்தையாகிய கண்டியருடைய சம்சாரத்திடமும் விடைபெற்றுக் கொண்டு வெள்ளிக்கிழமை காலை கப்பலேறி ஊர் வந்து சேர்ந்தேன்.

---



மலாய் நாட்டு மங்கையரிருவர்



சக்காய் ஜாதியார் வாழும்குடிசை

# மலேயாவும் அதன் மக்களும்

திரு. அரு. சோக்கலிங்கன்.

உலக மக்களின் வாழ்க்கையை ஆராய்ச்சி செய்யப் புகுவோமாயின் ஆயிரக் கணக்கான மனித ஜாதி வகைகளையும் வித விதமான வாழ்க்கைத் தோரணை உடையவர்களையும் இயற்கையே தெய்வமென வழிபடும் ஒருவித ஜனங்களையும் நாகரீகமற்றவர்களாகக் கருதப்படும் நம்மிடமில்லா அரிய குணங்களைப் பெற்றிருக்கும் காட்டு மிராண்டிகளையும் காணலாம். அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளும் குணங் கொள்கைகளும் நடையுடை பாவனைகளும் அவர்கள் வசிக்கும் இடத்தைப் பொருத்து பல்வேறு பாடுடைத்தாயிருக்கின்றன. இருப்பினும் மனித ஜாதி வர்க்கத்தில் விலங்குகளுக்கொப்பான, சில, காட்டு மிராண்டிகளிடம் கூட கடவுள் வழிபாடென்பது வேரூன்றி இருப்பது கவனிக்கத் தக்கது. நாகரிக மக்கள் கடவுள் ஆராய்ச்சியிற் புகுந்து வித விதமான அர்த்தங்களையும் தோற்றங்களையும் கற்பனை செய்து சிக்கலான பிரச்னையில் கிடந்து தவிப்பது போல், காட்டு மிராண்டிகளும் ஒரு மனித ஜாதிக்கு மிஞ்சிய சக்தி இருக்கிறதென்பதை திண்ணமாகக் கொண்டு, தங்கள், அறிவுக்கேற்ற விதம் சிருஷ்டித்து வழிபட்டு வருகின்றனர். ஒருவரும் கண்டறியாத வஸ்துவில் அபிப்பிராயபேத மிருப்பது சகஜமெனினும் ஒரு வஸ்து உண்டு தான் என்பதில் ஆறறிவு படைத்த மக்கள் அத்தனையும் ஒப்புக் கொள்ளுகிறார்களென்பதிலேயமில்லை. இதில் இயற்கைச் செல்வம் பொழியும் மலேயாவும் அத்தேச ஜனங்களையும் எடுத்துக் கொள்வோமேயானால் வஞ்சகமற்ற சுபாவமுடையவர்களையும் காட்டு மிராண்டித் தனம் நிறையப்பெற்றவர்களையும் கண்டறியலாம். முதலாவதாக மலேயா தேசத்தைக் கொஞ்சம் விவரித்து விட்டு பிறகு ஜனங்களின் ஆராய்ச்சியிற் புகுவோமாக.

உலகத்தின் செழிப்பான பாகங்களுள் மலேயா தீப கற்பமும் ஒன்றாகும். இயற்கை பற்றுள்ள ஒருவன் மலேயாவில் காலடி வைத்தால் மலேயாவுக்கடிமையாகி விடுவானென்பது திண்ணம். ஏறக்குறைய 700 மைல் நீளமுள்ள மலேயா தீப கற்ப முழுதும் தேடியலைந்தாலும் வாடி வதங்கிய பயிரையோ செழிப்பற்ற பூமியையோ காண முடியாது. வருண பகவானின் பூரண கடாக்ஷத்தை மலேயா பெற்றிருப்பதால் 12 மாதமும் மழை பொழிந்து கொண்டே யிருக்கின்றது. மலேயாவில் எந்தப் பயிரையும் உண்டாக்க வேண்டியது மனிதர் கடமையாகவும் தண்ணீர் வார்த்துச் செழிக்க வைப்பது வருணனின் வேலையாகவு மிருக்கிறதென்றும் சொல்லலாம்.

எல்லை மலேயா தீப கற்பம் வடக்கே செயாமாலும் கிழக்கே சீனச் சமுத்திரத்தாலும் தெற்கு மேற்கு பாகங்களில் மலாக்கா ஜல சந்தியாலும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் மலேயா மூன்று பக்கங்களிலும் சமுத்திரத்தால் சூழப்பெற்ற ஒரு தீப கற்பமென விளங்குகிறது. இந்த தீப கற்பத்தின் பூபாகம் கிரா பூசந்திக்கு ஒரு டிகிரி வடக்கே அதாவது வடக்கு நூறு டிகிரியில் ஆசியா கண்டத்தோடு இணைக்கப் பெற்றிருக்கிறது. இதன் நீளம் உத்தேசம் 700 மைல்களாகும். ஆனால் சிங்கப்பூரிலிருந்து கிட்டா வடக்கு எல்லை வரையுள்ள தூரம் 500 மைல்களாகும். இதில் அதிக அகலமான பாகம் 200 மைல்களாகும். எல்லாவற்றிற்கும் வட பாகமாகிய கிராபூசந்தி 40 மைல் அகலந்தானிருக்கிறது. இதனால் மலேயா பூகோளத்தைப் பார்ப்போமானால் ஏறக்குறைய ஓர் ரோஜா இலையை யொத்த வடிவமாக இருக்கிறது. இவ்வழகிய தீப கற்பத்தைச் சுற்றி நூற்றுக் கணக்கான தீவுக் கூட்டங்கள் நிறைந்திருக்கின்றன. அதிற் சிறிய தீவுகளைவிட டச்சுக்காரர்களுக்கு சொந்தமான ஜாவா, சுமத்திரா முதலிய தீவுகள் மலேயாவுக்கு தென் மேற்கிலும் டச்சுக்காரருக்கும் பிரிட்டிஷாருக்கும் சொந்தமான போர்னியோ தீவு கிழக்கேயும் அமெரிக்கருக்குச் சொந்தமான பிலிப்பைன் தீவுகள் வட கிழக்கிலும் அமைந்திருக்கின்றன. ஆகையால் இவைகள் எல்லாவற்றையும் மொத்தமாக மலேயா தீவுக்கூட்

டங்களென்றும்(MALAY ARCHIPELAGO) தூர கீழ் பிரதேசங்களென்றும் (FAR EAST) அழைப்பதுண்டு. இத்தீவுகளை ஒருவன் ஆகாயத்திலிருந்து பார்ப்பானுனல் சமுத்திரத்தில் சிதறிக்கிடந்து மிதக்கும் பூ பாகங்களென தோன்றும்.

**சீதோஷ்ணம்** சிங்கப்பூர், மத்யரேகைக்கு 90 மைல்களுக்கப்பாலிருப்பதனுல் சீதோஷ்ணம் சமமாக இருக்கிறது. சுற்றிலும் சமுத்திரத்தால் சூழப்பட்டிருப்பதாலும் மேகங்கள் அதிகமாக உண்டாவதாலும் உஷ்ணம் குறைக்கப் படுகிறது. சிங்கப்பூர் 70° முதல் 92° டிகிரி (சராசரி 80° டிகிரி) வரை உஷ்ணமுள்ளதாக இருக்கிறது. பினங்கு சிங்கப்பூரைக் காட்டிலும் உஷ்ணமாகவும் சில பாகங்கள் அதைவிட உஷ்ணமாகவும் வருஷம் பூராவும் அப்படியே யிருப்பதால் ஒரு நாள் மழை பெய்யாவிட்டாலும் தாங்க முடியாத உஷ்ணமாகத்தெரியும். ஆனுல் வருஷத்தில் 178 நாட்கள் மலேயாவில் மழைபொழிவதால்உஷ்ணம் தோன்றப்படுவதில்லை.சிங்கப்பூரிலும் பினங்கிலும் வருஷத்தில் 99 அங்குலம் வரையிலும் தைப்பிங் மலைக்குன்றில் 148 அங்குலம் வரையிலும் மழை பெய்கிறது.உஷ்ணம் அதிகமான வருஷத்தில் 58 அங்குலம் வரையிலும் மழை அதிகமான வருஷத்தில் 135 அங்குலம் வரைக்கும் மழை பெய்வதால் இந்தியாவைப் போல் மலேயாவில் எப்பொழுதும் வெய்யற் காலமென ஒன்று கிடையாது. மாதம் மும்மாரி பெய்ததாக நமது புராணங்களில் கண்டு ஆச்சரியமடையும் நாம், மாதம் 15 நாள் மழை பெய்யும் மலேயாவைப் பற்றி ஆச்சரியமடையாதிருக்க முடியாது. அதுவும் கீழ் பர்மாவைப் போல் ஆறு மாதம் மழை ஆறு மாதம் வெப்பமென்றிராமல் வருஷ முழுதும் ஒரே கணக்கில் வெப்ப தப்பமிருந்து கொண்டிருக்கிறது. இதனுல் மலேயா தீப கற்பத்தின் சீதோஷ்ண நிலை எத்தேசத்தவருக்கும் குணதோஷத்தை உண்டாக்குவதில்லை.

**பிரிட்டிஷார்.** ஆதியில் ஒரு காலத்தில் சோழ ராஜர்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்த மலேயாவில் 18 வது நூற்றுண்டுக்கு முன் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரால் வியாபார ஸ்தலம் பினங்கில் ஸ்தாபனம் செய்த பொழுதிருந்து பிரிட்டிஷாருடைய ஆதிக்கம் ஆரம்பமானது. கொஞ்ச வருஷத்திற்குபின்பு டச்சுக் காரர்களிடமிருந்து மலாக்காவை அடைந்தனர். ஸ்டாம் போர்டு ராவ்ல்ஸ் என்பவரால் சிங்கப்பூரும் பிரிட்டிஷாருடைய ஆதிக்கத்துக்கு வந்தது. சயாம் எல்லைக்கு தெற்கேயுள்ள பூரா தீபகற்பமும் தற்பொழுது பிரிட்டிஷார் ஆளுகையிலும் மேற்பார்வையிலுமிருக்கிறது. அதில் ஸ்ட்ரெயிட்செட்டில் மெண்டு என்று சொல்லக்கூடிய கடலோரப் பிரதேசங்களாகிய ஐந்து பிரிவுகள் சேர்ந்து பிரிட்டிஷ் கிரௌன் காலனியாகவும் நான்கு சுதேசி ராஜ்யங்கள் சேர்ந்து ஐக்கிய மலாய் ஸ்டேட்டுகளென்றும் ஐந்து சுதேசி ராஜ்யங்கள் ஐக்கியப்படாத மலாய் ஸ்டேட்டுகளென்றும் வழங்கப்பட்டு வருகின்றன. ஐக்கிய மலாய் ஸ்டேட்டுகள் மலாய் சுல்தான்கள் ஆளுகைக்கு உட்பட்டதாக இருந்தாலும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ்தானிருக்கின்றன. மற்றஐந்து சுதேச சமஸ்தானங்களும் பிரிட்டிஷ் அட்மினிஸ்ட்ரேட்டர்களைக் கொண்டு அந்தந்த சுல்தான்களால் ஆளப்பட்டு வருகிறது. பிரிட்டிஷார் ஆதிக்கம் நிலை பெற்றதற்கும் பற்பல தேசத்தவரும் குடியேறியதற்கும் முக்கிய காரணம் அங்கு ரப்பரும் தகரமும் அதிகமாக உற்பத்தியாகிக் கொண்டு வருவதாவேயாகும். தகரத்தைக் கண்டு பிடித்து 60 வருஷங்களாகிறது. வரவர ரப்பர் விவசாயம் அதிகம் ஏற்பட்டுசெழிப்படைந்து வருவதால் இன்று மலேயா உலகப் பிரசித்தமாகிவிட்டது. இங்கு சைனுக்காரர்களும் இந்தியர்களும் ரப்பர், தகரத் தொழிலுக்காக கொண்டு வரப் படுகின்றனர். தற்பொழுது மலேயர்களைக் காட்டிலும் சீனர்களும் இந்தியர்களும் அதிகமாகக் காணப் படுகின்றனர்.

**ஸ்ட்ரேயிட்செட்டில்மேண்டு.** ஸ்ட்ரெயிட்செட்டில்மெண்டு என்பது சிங்கப்பூர், கொக்கோஸ் தீவு, கிறிஸ்மஸ் தீவு, லாபுவான் தீவு, பினங்கு வெல்லஸ்லி மாகாணம், டின்டிங்க்ஸ், மலாக்கா என்னும் பகுதிகளாகும்.

இப்பகுதிகளில் மொத்தம் 8,83,950 ஜனங்களிருக்கின்றனர். இவர்களில்:—

| | |
|---|---|
| சீனர் | 4,98,650 |
| மலேயர் | 2,55,400 |
| இந்தியர் | 1,04,600 |
| கலப்பு ஜாதியார் | 9,150 |
| ஐரோப்பியர் | 8.150 |
| மற்ற வகுப்பார் | 8000 |
| | 8,83,950 |

மலாக்கா என்னுமிடம் முதன்முதலாக 1511 வருஷத்தில் போர்த்துக்காரர்களால் ஆளப்பட்டு வந்தது. 1786 வருஷத்தில் காப்டன் லைட் என்பவரால் பினங்கு கண்டு பிடிக்கப்பட்டது. முதன்முதலாக மலயாவில்பிரிட்டிஷ்ஆதிக்கத்தை

நிலைநாட்டினார்கள். ஸ்டாம்போடு ராவ்ல்ஸால் சிங்கப்பூர்கண்டு பிடிக்கப்பட்டது கப்பல் தங்குவதற்கு சௌகரியமான துறைமுகமாக இருந்தபடியால்முக்கியகுடியேற்றஇடமாகிவிட்டதுபிறகு வெல்லஸ்லி மாகாணம் கிட்டா சுல்தானால் பிரிட்டிஷாருக்குக் கொடுக்கப்பட்டது. வெல்லஸ்லி மாகாணம் பினங்குக்கு எதிர் கரையிலுள்ளதும் சம தரையிலுள்ளதுமான ஒரு சிறிய பாகம். 1900ம்வருஷத்தில் ஸ்ட்ரெயிட்செட்டில்மெண்டோடு கிறிஸ்துமஸ் தீவும் சேர்க்கப்பட்டது. 1903 வருஷம் சிலோன் ஆளுகைக் குள்பட்டிருந்த கொக்கோஸ் தீவுக்களையும் 1907 வருஷம் லாவுவான் தீவையும் சிங்கப்பூரோடு சேர்த்து செட்டில்மெண்டு நடக்கப்பட்டது. இந்த செட்டில்மெண்ட் நாட்டை.. இங்கிலாந்து மன்னரால் நியமிக்கப்பட்ட கவர்னர் அரசாட்சி செய்கிறார்: இக்கவர்னர் ஐக்கிய மலாய் நாடுகளுக்கும் ஐக்கியப்படாத மலாய் நாடுகளுக்கும் உயர்தர அதிகாரியாகவுமிருக்கிறார். சட்டசபை, பரிபாலனசபை, முதலிய ஆலோசனை சபைகளுக்கும் கவர்னரே தலைமை வகிக்கிறார்.

செட்டில் மெண்டு பகுதிகளில் வருஷ மொன்றுக்கு ஏறக்குறைய 3,50,00,000 வெள்ளி வருமானம் வருகிறது. நெல், ரப்பர், அன்னாசிப்பழம், பிரம்பு, தென்னை முதலியன முக்கியமான விளைபொருள்களாகும். செட்டில்மெண்டு நாடுகளில் முக்கிய பட்டணங்களாகிய சிங்கப்பூரும் பினங்கும் தீவுகளேயாகும். இருப்பினும் ஐக்கிய மலாய் நாட்டிருப்புப் பாதையுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. பாதைகள் ஏறக்குறைய 800 மைல் நீளமிருக்கிறது. சிங்கப்பூரிலும் பினங்கிலும் எலெக்ட்ரிக் டிராம்கள் ஓடுகின்றன. சிங்கப்பூர் பினங்கு முதலிய துறைமுகங்களில் பெருங் கப்பல்கள் தங்கி நிற்க வசதிகளுண்டு. ஆனதால் எவ்விடங்களோடும் வியாபாரம் செய்வது சுலபமாக இருக்கிறது. சிங்கப்பூர் உலகத்தின் கீழ் பாகத்தில் பிரசித்திபெற்ற ஓர் துறைமுகம். மலாய் நாடுகளின் ஏற்றுமதி இறக்குமதிகள் சிங்கப்பூர் பினங்கு மூலமாய்த்தான் நடைபெறுகின்றன.

### சிங்கப்பூர்.

சிங்கப்பூர் மலேயாவுக்கு தலைநகரமாகும். இது மலேதீப கற்பத்தின் தென் பாகத்திலுள்ள ஓர் தீவு. முக்கால் மைல் அளவுள்ள ஜோகூர் ஜல சந்தியால் தீபகற்பத்தினின்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஜோகூர் பாலத்தால் இணைக்கப்பெற்றிருக்கிறது. இத்தீவு 217 சதுரமைல் கொண்டதும் 27 மைல் நீளமும் 14 மைல் அகலமுமாகும். இத்தீவில் 4,18,400 ஜனங்கள் வசிக்கிறார்கள். அதில் 3,15,000 சீனர்களும், 53,600 மலேயர்களும் 32,000 இந்தியர்களும், 12,000 ஐரோப்பியர்களும், மற்ற ஜாதியினர்களுமாகும். மலேயா முழுதுமே மலைக்குன்றுகள் நிறைந்திருக்கும் அதுபோல் சிங்கப்பூர் தீவிலும் அழகிய குன்றுகள் அநேகம், காட்சி கொடுத்துக்கொண்டிருக்கின்றன.

இத்தீவு 1819-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ம் நாள் ஸ்டாம்போர்டு ராவ்ல்ஸ் என்கிற ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டு 1823-ம் வருடம் வரை அவராலே நிர்வகிக்கப்பட்டு வந்தது. அவருக்குப்பின், ஜான்கிராவ் போர்டு என்ற கவர்னர் 1826-ம் வருடம் வரை ஆட்சி புரிந்துவந்தார். பிறகு சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா இவைகளை ஒன்றாகச் சேர்த்து ஒரே அரசாங்கத்தின் கீழ் பினங்கைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்யப்பட்டது. அதுவரை கிழக்கிந்தியக் கம்பெனியார் வசமே இருந்தது. அதனால் இந்நாடுகளுக்கு மதராசிலிருந்தும் பிறகு கல்கத்தாவிலிருந்தும் ஆட்சி முறையில் மேல் யோசனை சொல்லப்பட்டு இந்தியாவோடே இணைக்கப்பட்டிருந்தது. இந்தியசிப்பாய் கலகத்திற்கு பிறகுஸட்ரெயிட் செட்டில் மெண்டு தனியாக பிரிக்கப்பட்டது. சிங்கப்பூர் கீழ நாடுகளிலுள்ள முக்கிய பெரிய நகரங்களிலொன்று. அழகான ரோடுகளையும் பெரிய பெரிய மாளிகைகளையும் கொண்டிலங்குகின்றன. இங்கு மலேயா கவர்னர் வசிக்கிறார். மொத்தம் மலேயா முழுதும் தண்ணீர் பஞ்சமென்பதே கிடையா. மலை அருவிகளிலிருந்து ஒவ்வொரு கிராமத்திற்குங்கூட ஜல சப்ளை செய்யப்படுகிறது. இரவும் பகலும் தண்ணீர் குழாய்களிலிருந்து தண்ணீர் சொட்டிக்கொண்டே இருக்கும். சிரம்பான் முதலிய ஊர்களில் தண்ணீர் குழாயை அடைத்தால் தண்டனை கிடைக்கும். மலேயா முழுதும் பச்சை பசேலென்ற புற்கள் இரு மருங்கிலும் காணப்பெற்ற கற்பாதைகள் இருக்கின்றன. அதனால் தூளி தூசிகூட மேலே படாமல் மலேயாவைச் சுற்றிவரலாம். ஒவ்வொரு கிராமத்திலுங்கூட எலெக்ட்ரி தண்ணீர் வசதி, போலீஸ் ஸ்டேஷன் முதலிய வசதிகள் நிறையப்பெற்றிருக்கும். இவ்வளவும் குறைவறப்பெற்ற சிங்கப்பூர் தோற்றத்தில் அழகாகக் காணப்படுகிறது. இங்குதான் பிரிட்டிஷாரின் சாம்ராஜ்யத்திற்கே முக்கியமான கடற்படை வைக்கப்பட்டி

# செட்டியார்களுக்கு ஓர் நற் செய்தி.

அதாவது



உலகத்திலேயே பிரதானமாக விளங்கிவரும் நவரத்தினங்களில் ஒன்ருகிய சிவப்பு இரத்தினம் விளையக்கூடிய பர்மாவிலுள்ள மோச்கோவிலிருந்து (MOGOK) எமக்காகக் குளிர்ச்சி கண்ணுடிகளும், வெள்ளை எழுத்துக் கண்ணுடிகளும் ஸ்பெஷலாகத் தயார் செய்துவருகின்றன. கண்ணுடிகள் ரூபாய் 10 முதல் கிடைக்கும். கண்ணுடிகள் தங்களுக்குத் திருப்தியை அளிக்காவிடில் திருப்பி அனுப்பினுல், அதற்குள்ள தபால் சிலவைக் கழித்துக்கொண்டு பாக்கிரூபாயை அனுப்பித் தருவோம். இதற்கு நாம் உத்திரவாதம். பெரியோர்களே! எம்மிடத்தில் ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் அதன் உண்மை விளங்கும். எம்மிடத்தில் சிகப்பு இரத்தினங்களும் கிடைக்கும்.

நம்பிக்கை! நாணயம்!! நன்மதிப்பு!!! வாய்ந்த இடம்.

விலாசம்:- **L.RM. Ramaswamy Chettiar,**

**BANKER, KAWLIN. U. BURMA.**

---

## செட்டியார்களுக்குச் சந்தோஷச் செய்தி


### அதிர்ஷ்டமே சிறந்த தனம்,

ஜரீஷ் ஹாஷ்பிட்டரால் நடத்தப்படும் கிராண்டு நேஷனல் டிக்கட்டு ஒன்றின் விலை ரூ 6–14—0 சீட்டுகள் சிலவழியுமுன் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

1 வது பிரைஸ் ஒருவருக்கு பவுன் 30000 வீதம் 18 பேருக்கும்
2 வது பிரைஸ் ஒருவருக்கு பவுன் 15000 வீதம் 18 பேருக்கும்
3 வது பிரைஸ் ஒருவருக்கு பவுன் 10000 வீதம் 18 பேருக்கும்
இன்னும் 3000 பேர்களுக்குப் பிரைஸ்கள் உண்டு.

ஏஜண்டு.- **L. RM. RAMASWAMY CHETTIAR,**

BANKER, KAWLIN. U. BURMA.



மலாய் நாட்டுக் கிராம மொன்றில் தெருக்கூத்து நடக்கும் காட்சி.



கிராமங்களில் மலேயர் வாழும் குடிசைகள்



மலேயா மலைஜாதியினராகிய சக்காய் மாதர்கள் முகத்தில் பச்சை குத்திக் கொண்டிருக்கும் காட்சி



மலேயா வாசிகளாகிய சக்காய் ஜாதியார்களின் ஆண் பெண் கூட்டம்

ருக்கிறது. இக் கடற்படையைக் கொண்டு பிரிட்டிஷாருக்கு சொந்தமான போர்னியோ மலேயா முதலியவைகளையும் ஆஸ்திரேலியாவையும் டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான ஜாவா, சுபத்திரா முதலிய தீவுகளையும் காப்பாற்றி எந்த எதிரிகளையும் முறியடித்து விடலாமென்றும் கீழ்நாட்டு படையெடுப்பை தடுப்பதற்கு சிங்கப்பூர் கடற்படைதான் முக்கியமென்றும் கருதப்படுகிறது. இக்கடற்படைச் செலவில் டச்சுக்காரர்களும் ஒருபகுதி கொடுத்துவருகிறார்களென்றும் பிரஸ்தாபப்படுகிறது. இந்தக்கடற்படைக்கு வேண்டிய அமைப்புகள் ஐந்துவருடங்களுக்கு மேலாக அமைக்கப்பட்டு வருகிறது. முழுதும் முடிய இன்னும் இரண்டு வருடம் பிடிக்கும். இதன் செலவு 90லட்சம் பவுன் எனமதிப்பிட்டிருக்கின்றார்கள். நேவல்பேஸ் (Naval Base) என்றஇந்த பிரதேசத்தில் யாரையும் அனுமதிப்பதில்லை.

மலேதீபகற்பத்தில் வெல்லெஸ்லி மகாணத்திற்கு மேற்கே மலாக்கா ஜலசந்தியின் வடபாகத்திலுள்ள தீவுக்கு பிணங்கு தீவு என்றும் பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் தீவென்றும் அழைப்பதுண்டு. இதில்தான் அழகு பொருந்திய பிணங்கு நகரமுள்ளது. இந்த நகரத்தை ஜார்ஜ் டவுன் என்றும் அழைப்பதுண்டு. இத்தீவு 107 சதுர மைல் பரப்புடையதும் 15 மைல் நீளமும் 8மைல் அகலமுமுள்ளது. இத்தீவில் அழகிய மலைக்குன்றுகள் நிறைந்திருக்கின்றன. இத்தீவைச் சுற்றிலுமுள்ள மோட்டார் பாதைகள் உன்னதமான குன்றுகளில் ஏறி இறங்கிச் செல்லுங்காட்சி மனதைக் கவர்கின்றது. பிணங்கு ஹில் (Penang Hill) என்ற 2551 அடி உயரமுள்ள மலைக்குன்றொன்றுளது. இதில் பிரபலஸ்தர்கள் பங்களாக்களும் அரசாங்க மாளிகையும் இருக்கிறது. இக்குன்றின் உச்சிவரை மின்சார ரயில் செல்லுகிறது. இந்த ரயிலில் ஞாயிற்றுக் கிழமைகளில் ஏராளமான ஜனங்கள் பிரயாணம் செய்வார்கள். மலேயாமேற்கு கரைக்கு சமீபத்திலுள்ள இப்பிணங்கு சிங்கப் பூரிலிருந்து வடமேற்காக 400 மைல் தூரமுள்ளது. இதில் அதிக நாளாக பிரிட்டிஷார் இருந்து வருகின்றனர். இத் தீவு சுதேச மன்னர்களில் ஒருவராகிய கிட்டா அரசருக்கு வருஷந்தோறும் 6000 வெள்ளி கப்பம் கட்டுவதாக கிழக்கிந்தியக் கம்பெனி ஒப்புக்கொண்டதற்கிணங்க 1786ம் வருடத்தில் குத்தகைக்கு வாங்கப்பட்டதாகும். இதை முதன் முதலில் கண்டுபிடித்தது காப்டன் லைட் என்பவராகும். 1798ம் வருடத்தில் கொள்ளைக் காரர்கள் கஷ்டத்தைப் பொறுத்து பிணங்குக்கு எதிர் கரையிலுள்ள வெல்லெஸ்லிஎன்ற சிறிய பாகமும் பிணங்கோடு சேர்க்கப்பட்டு வருஷத்திற்கு 10,000 வெள்ளி கப்பம் கட்டுவதென்றும் ஏற்பாடு செய்யப் பெற்றது இப்பொழுது வெல்லெஸ்லி மாகாணம் பெரிதாக்கப்பட்டிருக்கிறது. பிறகு வர வர பிரிட்டிஷார் நேர் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்டன. 18[illegible]5ம் வருடத்தில் பிணங்கானது மதறாஸ் பாம்பே மாகாணங்களைப் போல் ஒரு மாகாணமாகப் பிரிக்கப்பட்டது. 1826ம் வருடத்தில் சிங்கப்பூரையும் மலாக்காவையும் பிணங்குடன் இணைத்து ஒரே அரசாங்கத்தின் கீழ் வைக்கப்பட்டு 1836ம் வருடம் வரை பிணங்கு முக்கிய தலை நகராகவும் இருந்தது. பிறகுதான் சிங்க பூர் தலைநகராக மாற்றப்பட்டது. பிணங்கில் ஜனங்கள் அதிகமாக குடியேறவும் புராதன நகராகிய மலாக்காவிலுள்ள வியாபாரங்கள் மந்தமாகிவிட்டன. ஆனால் சிங்கப்பூரைப் பிடித்தவுடன் சகல வியாபாரமும் சிங்கப்பூரிலே நடத்தப்பட்டுவருகிறது. பிணங்கு உள்நாட்டுவியாபாரத்தையே இப்பொழுது நம்பியிருக்கிறது. பிணங்கில் பிரிட்டிஷாரால் கட்டப்பட்ட பழையகோட்டை ஒன்றுளது. முதலில் சிறிய பட்டணமாக இருந்த பிணங்கு ஈயம், ரப்பர் கைத்தொழில்கள் விருத்தியானவுடன் நகரமும் விஸ்தரித்துவிட்டது. இங்கு மிக்கப் பணம் படைத்த சீனர்கள் அதிகமிருக்கின்றனர். ஆயர்யிடாம் என்ற இடத்தில் பெயர்போன சீனர்கள் கோவில், மலை உச்சியில் கட்டப்பட்டிருக்கிறது. பிணங்குத் தீவில் மொத்தம் 1,62,200 ஜனங்களிருக்கின்றனர். இவர்களில் 98,500 சீனர்களும், 36500 மலேயர்களும் 23,000 இந்தியரும் 2700 ஐரோப்பியரும் மற்ற ஜாதியினருமாகும்.

## உவெல்லெஸ்லி மகாணம்

உவெல்லெஸ்லி மாகாணமென்பது பிணங்குக்கு எதிர்க்கரையிலுள்ள சம வெளியில் ஒரு பாகம். இது 45 மைல் நீளமும் 8 மைல் அகலமும் 280 சதுர மைல் விஸ்தீரணமுமுடையது. ஏறக்குறைய 130,000 ஜனங்கள் வசிக்கின்றனர்.

## டின்டிங்ஸ்

இது பிணங்கிலிருந்து 90 மைல் தூரமிருக்கிறது. இதன் விஸ்தீரணம் 183 சதுர மைல்களுள்ளது. ஜனத்தொகை சற்றேறக்குறைய 120,000 மிருக்கிறது.

### மலாக்கா

மலாக்கா புராதன நகரமாகும். மலாக்கா பிரதேசம் 1337ம் வருடத்தில் ஜாவானியர்களால் துரத்தப்பட்ட மலேயர்களால் குடியேறபபட்ட இடமாகும். 1511ம் வருடத்தில் சமுத்திரபலம் அதிகமாக இருந்த போர்த்துகேஸ் தேசத்தவர்களால் மலாக்கா கைப்பற்றப்பட்டது. ஆல்புக்கர்க் என்ற போர்த்துகேயர்தான் இதைக் கண்டு பிடித்தார். அவர்கள் ஆட்சியிலிருந்த காலத்தில் அநேகம் மாதா கோவில்களையும் பள்ளிக்கூடங்களையும் கட்டி கீழ்நாட்டு வியாபாரத்தைவிருத்தி செய்வதற்கு தகுந்த இடமாக வைத்திருந்தார்கள். 1641ம் வருடம் டச்சுக்காரர்கள் மலாக்கா பிரதேசத்தைக் கைப்பற்றி 154 வருடம் வரை நிலை பெற்ற ஆட்சி செலுத்தி வந்தனர். 1795ம் வருடம் நெப்போலியன் ஐரோப்பாவில் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்பொழுது இவ்விடங்கள் சரியான பாதுகாப்பில்லாமையால் பிரிட்டிஷார் கைப்பற்ற நேர்ந்தது. 1811ம் வருடம் மலாக்காவிலிருந்து ஒரு இங்கிலீஷ் படை ஜாவாவுக்குச் சென்று ஜாவாவையும் பிடித்துக்கொண்டது. பிறகு நான்கு ஐந்து வருடங்கள் வரை ஜாவா பிரிட்டிஷார் வசமே இருந்தது. மலாக்காவில் டச்சுக்காரர்கள் அதிகமான கோட்டை கொத்தளங்களையும் கட்டியிருந்தார்கள். இவைகள் தேவைக்கதிகமாக இருந்தபடியால் 6000 வெள்ளிவரை செலவு செய்து பிரிட்டிஷார் இடிக்க வேண்டிவந்தது.

### கோக்கோஸ் தீவுகள்

சுமார் 20 தீவுகளைக்கொண்ட கொக்கோஸ் தீவுகளென வழங்கப்படுவது பட்டேவியாவிலிருந்து தென் மேற்காக 700 மைல் தூரத்திலிருக்கிறது. 1609ம் வருடம் காப்டன் கீலிங் என்பவரால் பிடிக்கப்பட்டு 1857ம் வருடம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் சேர்க்கப்பட்டது. 1878ம் வருட முதல் சிலோன் கவர்மெண்டின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. 1886ம் வருடம் சிங்கப்பூர் கவர்னரின் ஆளுகையிலிருந்து 1903ம் வருடம் சிங்கப்பூருடன் ஒருபாகமாகச்


# குறைந்த விலையில்

## புதிய உயர்ந்த சரக்குகள் !

நயத்தைத் தேடி லாபத்தை விரும்புபவர்களுக்கு நல்ல தருணம்.

**நயமான ஜவுளிகள் !** **சகாயமான விலைகள் !**

எங்களிடத்தில் அசல் கதரில் பலவிதமான வேஷ்டி தினுசுகளும், சேலைகளும், சட்டைக்காக வேண்டிய தினுசுகளும், சேலம், கும்பகோணம், துயில், வேஷ்டி, துப்பட்டா, பட்டு சேலைகளும் இன்னும் தற்கால நாகரீகத்திற்கேற்ற முறையில் பற்பல ஜவுளி தினுசுகளும், மதராஸ் ராமகோடி குறிப்பு பேரேடு காட்டுப்புத்தகம், லெட்டர் பேப்பர், மரக்கறி வத்தல் வகையறுக்களும் குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

**அ. வீ. மருதப்ப செட்டியார் அன் கம்பெனி,**

ஜவுளி வியாபாரம், நெ. 101, மொகல் தெரு, இரங்கூன்.

சேர்க்கப்பட்டது. இதில் 800மலேயர்களிருக்கின்றனர்.

## கிறிஸ்மஸ் தீவு

இது இந்து மஹாசமுத்திரத்தில் படேவியாவுக்குத் தெற்கே 190 மைல் தூரத்திலுளது. இத்தீவு 12 மைல் நீளமும் 9 மைல் அகலமும் 62 சதுர மைல்கள் விஸ்தீரணமுமுடையது. முழுதும் சீனர்களாக 1100 ஜனங்கள் வசிக்கின்றனர். 1888ம் வருடம் பிரிட்டிஷாருக்கு சொந்தமாகி 1900ம் வருடம் சிங்கப்பூரோடு சேர்க்கப்பட்டது. 1895ம் ஆண்டுவரை இதில் மிக்கக் குறைந்த ஜனங்களே இருந்து வந்தார்கள். பிறகு சுரங்கங்களையும் பூமியில் போடக் கூடிய ஒருவித எருக்களையும் கண்டுபிடித்தவுடன் கொஞ்சம் ஜனப்பெருக்க முண்டாயிற்று. இதன் உற்பத்திப் பொருள்கள் ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

## லாபுவான் தீவு

போர்னியோவுக்கு வடகிழக்கே 6 மைல் தூரத்திலுள்ள இத்தீவு 28 சதுர மைல் விஸ்தீரணமும் 6000 ஜனத்தொகையையும் கொண்டதாகும். இதில் வசிக்கும் ஜனங்கள் போர்னியோமலேயர்களும் சீனர்களுமாகும். இத்தீவு புரூனி (BRUNEI) சுல்தானிடமிருந்து வியாபாரத்திற்கு சௌகரியமான ஸ்தலமெனக்கருதி 1846ம் ஆண்டில் பிரிட்டிஷாருக்குக் கொடுக்கப்பட்டது. அப்பொழுது இத்தீவில் ஜனங்களொருவரும் குடியேறவில்லை. 1905ம் வருடம்வரை பிரிட்டிஷ் நார்த்போர்னியோ கம்பெனியாரே ஆண்டு வந்தனர். இப்பொழுது சிங்கப்பூரோடு சேர்க்கப்பட்டுவிட்டது.

## ஐக்கிய மலாய்நாடுகள்

மலாய் நாடுகளை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அதாவது ஸ்ட்ரெயிட் செட்டில்மெண்டு, ஐக்கிய மலாய்நாடுகள், ஐக்கியப்படாத மலாய் நாடுகள் அதில் ஸ்ட்ரெயிட் செட்டில் மெண்டைப்பற்றி முன்னால் விவரித்துவிட்டோம். இனி மற்ற இரண்டு பிரிவுகளையும் கவனிப்போமாக. ஐக்கிய மலாய்நாடுகளென்பது நான்கு சுதேச அரசர்களுக்கு சொந்தமான தனித்தனி நான்கு நாடுகளை ஒன்றாகச் சேர்க்கப்பட்டதாகும். இந்நான்கு ராஜ்யங்களின் சுல்தான்களும் பொது விவகாரங்களுக்கு ஒற்றுமையோடு நடந்து கொள்வதாக 1896ம் ஆண்டில் உடன்படிக்கை செய்து கொண்டதால் அன்று முதல் ஐக்கிய மலாய்நாடுகளென அழைக்கப்பட்டு வருகிறது. 1874ம் ஆண்டுவரை சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய ஸ்ட்ரெயிட் செட்டில்மெண்டு நாடுகளைவிட மற்ற மலேயாப் பகுதிகள் பிரிட்டிஷார் மேற்பார்வைக்கு வரவில்லை. பிரிட்டிஷார் பாதுகாப்புக்கு முதன் முதல் உட்பட்ட தேசம் போரா (PERAK) ராஜ்யமே. இங்கு ஒவ்வொருவரும் சுல்தானாக வேண்டுமென்றும் சீனத் தொழிலாளர்களுக்குள் சச்சரவு ஏற்பட்டு குட்டிக் கலகங்கள் புகைந்து கொண்டேயிருந்தன. அதை அடக்க பிரிட்டிஷார் தலையிடநேர்ந்தது. அதன் பிறகு பங்கோர் என்ற போரா நதியின் முகத்துவாரத்தில் அந்தத் தலைவர்களால் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டு அதன்படி பிரிட்டிஷ் பிரசிடெண்ட் ஒருவரை நியமிப்பதென்றும் மலேயா வழக்கங்களையும் மதத்தையும் தவிர மற்ற எல்லா சம்பந்தங்களையும் அவர் உத்தரவன்னியில் நடத்துவதில்லை என்றும் ஒத்துக் கொண்டார்கள். செலாங்கூர் (SELANGOR) நெகிரி செம்பிலான் (NEGRI SEMBILAN) என்ற மற்ற இரண்டு ராஜ்யங்களிலும் அப்படியே அவ்வருஷத்தில் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. பாஹாங் (PAHANG) என்ற ராஜ்யத்தில் ஸ்ட்ரெயிட் செட்டில் மெண்டில் பிறந்த சீனப் பையனொருவன் கொலை செய்யப்பட்ட காரணத்தைக் கொண்டு 1888ம் ஆண்டில் பிரிட்டிஷ் பிரசிடெண்டை நியமித்தார்கள். இந்த ராஜ்யங்களில் ஈயமும் ரப்பரும் முக்கியமானவை.

பாதுகாப்புக்காக போரா ராஜ்யத்தில் தைப்பிங் என்ற நகரில் பர்மா பட்டாளம் ஒன்று வைக்கப்பட்டிருக்கின்றது.

ஐக்கிய மலாய் நாடுகளின் நான்கு பிரிவுக்கும் நான்கு பிரிட்டிஷ் ரெசிடெண்டுகளும் அவர்களுக்கு யோசனை சொல்வதற்கு பிரதம காரியதரிசி (CHIEF SECRATARY) ஒருவரும் எல்லாவற்றிற்கும் உயர்தரக் காரியதரிசியாக ஸ்ட்ரெட் செட்டில் மெண்டு கவர்னரும் இருந்து வருகின்றனர்.

ஐக்கிய மலாய்நாட்டில் ஐக்கிய சபை ஒன்றுளது. நான்கு ராஜ்யங்களும் பொதுவாக அமைக்கக் கூடிய சட்டங்களெல்லாம் இந்தச் சபையால் நிர்வகிக்கப் பெற்றுவருகிறது. இச்சபைக்கு ஸ்ட்ரெயிட் செட்டில் மெண்டு கவர்னர் ஐக்கிய மலாய் நாடுகளின் உயர்தரக் காரியதரிசி என்ற முறையில் தலைமை வகிக்கிறார். இதில் 14 உத்தியோக அங்கத்தினர்களும் 11 உத்தியோகப் பற்றற்றவர்களுமிருக்கின்றனர்.

ராஜாங்க சபைகளுமுண்டு. நான்கு பிரிவுகளிலும் நான்கு ராஜாங்க சபையுண்டு. ஐக்கிய சபையால் நிர்வகிக்கப்பெற்ற சட்டங்களுக்கு விரோதமில்லாமலும் தன் சொந்த ராஜ்யத்திற்கு அவசியமான சட்டங்களைப் பிறப்பிக்க இந்த ஒவ்வொரு சபைக்கும் அதிகாரமுண்டு. இந்த சபைகளுக்கு அந்தந்த சுல்தான்கள் தலைமை வகிக்கிறார்கள்.

## ஐக்கியபடாத மலாய்நாடுகள்

பேரா, செலங்கூர், நெகிரிசெம்பிலான், பாஹாங் முதலிய ராஜ்யங்களின் சுல்தான்கள் ஒருமித்து பொது விவகாரங்களை நடத்திக் கொள்வதாக தீர்மானித்த உடன்படிக்கைக்கு ஐக்கியப்படாமலிருக்கும் சுதேசி ராஜ்யங்களெல்லாவற்றிற்கும் ஐக்கியப்படாத மலாய் நாடுகளெனப் பெயர். இப்பகுதிகள் ஜோகூர் (JOHORE) கெட்டா (KEDAH or ALORSTAR) பெர்லிஸ் (PERLIS) கிளாந்தன் (KELANTAN) டிரெங்கானு (TRENGANU) என்ற ஐந்து சுதேசி ராஜ்யங்கள் கொண்டதாகும்.

ஐக்கிய மலாய்நாடுகளிலுள்ள ஒவ்வொரு சுல்தான்களுக்கும் பிரிட்டிஷ் ரெசிடெண்டிருப்பதுபோல் ஐக்கியப் படாத மலாய் நாடுகளிலுள்ள ஒவ்வொரு சுல்தானுக்கும் ஒரு பிரிட்டிஷ் அட்வைசரிருக்கின்றனர். ஒவ்வொரு அட்வைசரும் ஸ்ட்ரெயிட் செட்டில்மெண்டு கவர்னருக்கு அடங்கியவர்களாகும்.

## மலாய் நாட்டில் இந்தியர்கள்

மலேயாவில் ரப்பரும் தென்னையும் முக்கிய விளைபொருளாகவும் உலோக வகையில் ஈயமும் அதிகமாக எடுக்கப்படுகின்றன. ஈயச் சுரங்கங்கங்களில் சீனத் தொழிலாளர்களே அதிக மிருக்கின்றனர். ரப்பர் தென்னந் தோட்டங்களில் பெரும்பாலும் இந்தியக் கூலிகளே மிகுதியாகக் காணப்படுகின்றனர். இக்கூலிகளை இந்திய அரசாங்கத்தாரின் அனுமதியில் மலேயா தேசத்திலிருந்து சஞ்சிலாக்கா மூலமாக கங்காணிகளை யனுப்பி சென்னை மாகாணத்திலும் ஏனைய இடங்களிலுமிருந்தும் திரட்டிக் கொண்டு வருகின்றனர். இவர்கள் நாகபட்டணம் சென்னை முதலிய துறைமுகங்களிலிருந்து கப்பல் மூலமாக பினங்கு, கோல்க்கிள்ளான், சிங்கப்பூர் முதலிய விடங்களுக்கு கொண்டு வரப்படுகின்றனர். இவர்கள் சுக துக்கங்களை கவனிப்பதற்காக பல விடங்களில் சஞ்சித்துரை ஆபீஸ் என ஏற்படுத்தி யிருக்கின்றனர். இவ்வாபீசுகள் மூலம் கூலியாட்கள் தங்கள் குறைகளைத் தெரிவித்துக் கொள்ளலாம். இந்த ஆபீசுகளை விட கோலாலம்பூரில் இந்திய அரசாங்க ஏஜண்டு ஒருவரு மிருக்கிறார்.

## ரப்பர்.


மலேயாவில் பொதுவாக தொழிற்சாலைகள் ஒன்றுமேயில்லை. அதனால் எப்பொருளும் வெளிநாட்டுக்குச் சென்றே உருவம் பெறப்படுகிறது. மலேயா தீப கற்பத்தின் எப்பாகத்திலும் ரப்பர் பயிரிடப்படுகின்றன. ரப்பர் மரங்கள், வைத்து ஐந்து வருஷமானதும் பலன் கொடுக்க ஆரம்பிக்கிறது. நிலத்திலிருந்து ஏறக்குறைய ஒரு அடிக்கு மேல் ஓர் கூரிய கத்தியால் உள் மரத்தில் காயப்படாதபடி மேல் பட்டையைச் சீவி அதிலிருந்து வரும் பாலை ஒரு மங்கில் வடிய விடுகிறார்கள். சிறிது நேரஞ் சென்ற பிறகு வடிந்த பாலை ஒரு வாளியில் நிரப்பி வேலைச் சாலைகளுக்கு கொண்டு போகின்றனர். அங்கு தட்டையான பாத்திரங்களில் இப்பாலை வார்த்து மருந்து விட்டு உறைய வைக்கின்றனர். உறைந்த பாலை மறுநாட் காலையில் எடுத்து யந்திரங்களில் அழுத்தி தகடுகளாகச் செய்கின்றனர். அதை புகையிலிட்டு மானிறமாக்கி விடுகின்றனர். இப்படித் தயாரித்த தகடுகள் அமெரிக்கா ஐரோப்பா முதலிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு பலவித ரப்பர் சாமான்களாக ஆக்கப்படுகின்றன.

## ஈயம்.

இம்மலேயாவில் உலகத்திலிருந்து எடுக்கப்படும் ஈயத்தில் அரை வாசிக்குமேல் கிடைக்கின்றன. பேரா செலாங்கூர் பகுதிகளில் அதிகமாக எடுக்கப்படுகின்றன. யந்திர மூலமாக தரையிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டு சுத்தப்படுத்தி அமெரிக்கா முதலிய தேசங்களுக்கு அனுப்பப்படுகிறது. சுத்தப்படுத்தினால் 100 க்கு 72 பாகம் ஈயம் கிடைத்திருக்கிறது.

## மற்ற பொருள்கள்.

பொன் பாஹாங் பகுதியிலும், நிலக்கரி செலாங்கூர் பகுதியிலும் சீனக்களிமண் பேரா, ஜோகூர் பகுதிகளிலும், (இக்களி மண்ணால் பானை சட்டி, காகிதம் துணி முதலியன செய்யப்படுகின்றன) நெல் பேரா, மலாக்கா, கெடா, பெர்லீஸ் முதலிய விடங்களிலும் கிடைக்கிறது. இதைத்தவிர மரவள்ளி, சவ்வரிசி, கத்தைக்காம்பு, காப்பி முதலியனவும் பயிரிடப்படுகிறது. தென்னை




கிங் எட்வர்ட் பிளேஸ், பினங்கு.




பினங்கு சமுத்திரகரையின் தோற்றம்.




பினங்கு கடற்கரைக் காட்சி.




பினங்கு மலை ரயில்.



பிஞங்கு நகர குடி தண்ணீர்த் தேக்கம்.



பிஞங்கு துறைமுகத்தில் படகுகள் தங்கி நிற்கும் காட்சி.




தைப்பிங் பூந்தோட்டம்.



பிஞங்கு கடற்கரையும் கலங்கரை விளக்கமும்.




சிங்கப்பூர் துறைமுகம்.




சிங்கப்பூர் ஆண்டர்சன் பாலம்.




சிங்கப்பூரில் ஒரு தெருவின் தோற்றம்.



சிங்கப்பூரில் சீன ரிக்ஷாக்காரன்.



சிங்கப்பூர் கடற்கரை.



சிங்கப்பூர் நதியில் உள்நாட்டு வியாபாரப் படகுகள்.



மலாய் நாட்டில் கொப்பரா.



கோலாலம்பூர் ஜெனரல் போஸ்டா பீஸூம்
அரசாங்க மாளிகைகளும்.

மலேயா எப்பாகத்திலும்பயிரிடப்படுகிறது. தேங்காய்களை உரித்து உடைத்து உலர்த்தி கொப்பராவாக்கி எண்ணை எடுக்கப்படுகிறது. வருஷா வருஷம் ஒரு கோடியே முப்பது லெட்சம் வெள்ளி பெறுமதியான கொப்பராக்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

### மலேஷியா.

மலேயா தீப கற்பத்திற்கு தெற்கிலும், பூமியின் சமரேகைக்குத் தெற்கே பத்து டிகிரியும் வடக்கே 40 டிகிரியும் உள்ளடங்க கடல் தீவுகள் ஏராளமாக நிறைந்திருக்கின்றன. இத்தீவுகள் மேற்கே சுமத்ரா முதல் கிழக்கே நியூ செனியா வரைக்கும் தெற்கே ஆஸ்திரேலியா முதல் வடக்கே பிலிப்பைன் தீவுகள் வரையிலும் பாவியிருக்கின்றன. இத்தீவுத் தொகுதிகளை மலேயன் ஆர்ச்சிப் பெலக்கோ (MALAYAN ARCHIPELAGO) அல்லது மலாயா தீவுக் கூட்டங்கள் என அழைக்கிறார்கள். இங்கு வசிப்பவர்கள் பெரும்பாலும் ஆசியர்களாக இருப்பதால் மலேஷியா என இதை அழைப்பது முண்டு. மலேஷியாவில் 6 கோடி ஜனங்கள் வசிக்கின்றனர். இவர்களில் $3\frac{1}{2}$ கோடி ஜனங்கள் ஜாவாவிலும் ஒரு கோடி ஜனங்கள் பிலிப்பைன் தீவுகளிலும் 1 கோடி ஜனங்கள் மற்ற தீவுகளிலும் வசிக்கின்றனர். இந்த மலேஷியா மேலே ஆரம்பத்தில் சொல்லப்பட்டபடி அமெரிக்கா பிரிட்டிஷ் டச்சு இம் மூன்று பிரபலமான தேசங்களுக்கும் சொந்தமானவையாகும்.

### மலேயா ஜாதியார்.

இதுவரை மலேயா தீப கற்பத்தின் தேச விளக்கங்களையும், அதில் உண்டாகும் விளை பொருள்களையும் அரசாங்கம் முதலியவைகளையும் சொல்லி வந்தோம். இனி முக்கியமானது மலேயாவில் வசிக்கும் ஜனங்களைப் பற்றியதேயாகும்.

மலேயாவில் வசிக்கும் ஜனங்களின் ஜாதி,மதம் முதலியவைகளை ஆராய்ச்சி செய்வோமானல் ஒரு காலத்தில் ரோமர்கள் பிரிட்டனை ஆளுகையில் தாங்கள் முக்கிய பாகங்களிலிருந்துகொண்டு பிரிட்டிஷ் ஜாதியினரை காடு மலைகளில் தள்ளியதுபோல் மலேயாவிலும் நாகரிக முதிர்ந்த அயல் நாட்டார்களை குறிப்பான பாகங்களிலும் கொஞ்சம் நாகரீகமுள்ள சுதேசிகளை ஒரு புறமும் காட்டுமிராண்டித் தனமுள்ளவர்களை மலைப் பிரதேசங்களிலும் காடுகளிலும் பார்க்கலாம். நாம் முதலாவதாக நாகரீகமுள்ள மலேயர்களையும் இரண்டாவதாக நாகரீகமற்ற நீக்ரட்டோ, அல்லது செமாங், சக்காய் ஜாக்கூன் ஜாதியினர்களைப் பற்றியும் பேசுவோம். மலேயாவில் டவுன் பகுதிகளில் சைனக்காரர்கள் அதிகப்படியாகவும் ஐரோப்பிய எஸ்டேட்டுகளில் தமிழர்கள் அதிகமாகவும் தீபகற்பத்தின் வடபாகத்தில் சையாம் தேசத்தவர்களும் குடியிருந்து வருகின்றனர். மலேயாவில் மலைப் பிரதேசங்களும் காடுகளும் மிகுந்திருப்பதால் புலி, காடி முதலிய துஷ்ட மிருகங்கள் அதிகம் காணப்படும். மலைகளிலும் காடுகளிலும் வசிக்கும் ஜனங்கள் கொடிய மிருகங்களினின்றும் காப்பாற்றப் படுவதற்காக தங்கள் குடிசைகளை மாத்தின் உச்சியிலே அமைத்துக் கொள்வது ஒரு வேடிக்கையாக இருக்கும். காடுகளில் மலையடிவாரங்கள் அடர்ந்த மரங்களைக் கொண்டிருக்கிறது. மலையடிவாரமான பாகங்களில் செமாங் என்ற ஜாதியினர்கள் அதிகமாக வசிக்கின்றனர். மலைகளைச் சுற்றி அநேகவிதமான பாதைகள் பிரிந்து போவதால் சக்காய் ஜனங்கள் மலைகளைச் சுற்றித் திரிகின்றனர்.

சமுத்திரத்திரக்கரையோரங்களில் மலேய ஜாதியினர்களில், மந்திரவாதிகள் அல்லது ஒராங் லாட் (Orang Laut) என்ற வர்க்கத்தார் மீன் பிடிக்கும் தொழிலுடன் வசித்துக் கொண்டுவருகின்றனர். ஜாக்கூன் என்று சொல்லப்படும் வர்க்கம், நீக்ரட்டோ, சக்காய், பூர்வ மலேயர்கள் இம்மூன்று வகுப்பும் கலந்தவையாகும். அவர்கள் உருண்டைத் தலையும் ஊதா நிறமுள்ள தலை மயிரும் சிகப்பு அல்லது மஞ்சள் மாநிறமுள்ள தோலும் மங்கோலிய வம்சத்தவர்களைச் சேர்ந்தவர்களுமாவார்கள்.

மலேயர்களின் பூர்வ நடைமுறை பாஷை முதலியவைகளைத் தெரிந்து கொள்வதற்கு இவர்களைக் கொண்டுதான் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்திருக்கின்றனர்.

வடக்கேயிருந்து சையாம் தேசத்தவர்களும் சுமத்திராவிலுள்ளவர்களும் அதற்கு பக்கத்திலுள்ள தீவுகளிலிருந்துமுகமதிய மலேயர்களும் இங்கு குடியேறி பூர்வ மலாயர்களைத் தனியாகப் பிரித்துவிட்டனர்.

ஆதியில் பாமர ஜனங்களாகிய மலேயர்களை முகமதியர்கள் கொடுமையாக நடத்தியதோடு தங்கள் மதத்தில் சேர்ப்பதற்கு நெருப்பு முதலியவைகளைக் காட்டிப் பயமுறச் செய்துமிருக்கின்றனர்.

தீப கற்பத்தின் பூர்வ குடிகளில் கிறிஸ்தவர்களைத் தவிர, சயாமிய புத்தர்களும் தென்பாகத்

தில் அநேகமாய் முழுதும் முகமதிய மதத்தை தழுவியவர்களுமாகும். சக்காய் ஜனங்கள் பசா சங்களை தொழுகின்றனர்.

## ஆகாரமும் சமையலும்.

மலேயர்கள் நெற்சோற்றையே முக்கிய ஆகாரமாகக் கொள்கின்றனர். மலேயர்கள் தங்கள் வீட்டுக் கொல்லைகளில் பதார்த்தத்துக்கு வேண்டிய காய்கரி கிழங்குகளைப் பயிரிட்டுக்கொள்கின்றனர். அதை வீட்டிலுள்ள பெண்களும் குழந்தைகளும் பாதுகாத்துக் கொள்கின்றனர். அநேகமாய் எல்லா வீடுகளுக்கு பக்கத்தில் ஓங்கி வளர்ந்த தென்னை மரங்களும் மற்ற மரங்களும் நிழலைக் கொடுத்துக் கொண்டிருக்கும். அவர்கள் கோழிகளையும் செம்மறி ஆடுகளையும் பிரியமாக வளர்க்கின்றனர்.

வலை, கூடை பின்னும் வேலைகளிலும் மீன் பிடிக்கும் தொழிலிலும் ஈடுபடுகின்றனர். அநேகமாய் மலேயக் குடிகள் முழுதும் நதிகளின் ஓரங்களிலோ அல்லது மலை அருவி ஓட்டங்களிலோ மீன் பிடிக்கும் தொழிலுக்காக வாசஞ் செய்கின்றனர்.

காடுகளில் அநேகமான பதார்த்தங்கள் இவர்களுக்கு கிடைத்து வந்த போதிலும் முகமதிய சட்டப்படி சாப்பிடலாமென்ற சகல ஜீவ ஜந்துக்களையும் கொன்று சாப்பிடுகின்றனர்.

அரிசியால் ரொட்டி முதலிய இனிப்பு பதார்த்தங்கள் செய்வதோடு ஊறுகாய்களும் விதவிதமாகச் செய்கின்றனர். இந்தப் பதார்த்த வகைகளுக்கு கொடுத்திருக்கும் பெயர்கள் கவிகளைப் போன்றதாகும்.

பணக்காரர்கள் நாட்டு மிருகங்களாகிய எருமை மாடு,ஆடு, கோழி,முட்டை,மீன் முதலியவைகளை ஆகாராதிகளாக சமையற் செய்து சாப்பிடுகின்றனர். ஒவ்வொரு நாளும் இரண்டு தடவை சமையற் செய்கின்றனர்.

மேற் பாகங்களில் கோழி மாமிசங்களை வறுத்து தேனில் ஊரவைத்து சாப்பிடுகின்றனர்.

ஆநேகமாக காடுகளில் வசிக்கும் ஜனங்கள் சோளம், கிழங்கு, காய்கரிகள் முதலியவைகளை ஆகாரமாகக் கொள்கின்றனர். இவைகள் கிடைக்காத பக்ஷம் எந்த மிருகங்களையும் வேட்டையாடி சாப்பிடுகின்றனர். இப்படி கொலை செய்துவரும் மிருகங்களிலுள்ள விஷ வஸ்துக்களை பெண்கள் சாதுரியமாக அகற்றிவிடுகின்றனர்.

## உடைகள்.

மலேயர்கள் சாரங் என்று சொல்லப்படும் மலேயர்கள் உடைகளாகிய அழகு பொருந்திய சில்க் அல்லது நூலினால் செய்யப்பட்ட லுங்கிகளையே உடுத்திக் கொள்கின்றனர். இந்த லுங்கியை அவர்கள் பகலிலும், இரவிலும், படுக்கையிலும் எந்தக் காலமும் உபயோகிக்கின்றனர். பர்மியர்களைப் போல இவர்களும் குளிரும்பொழுது ஒரு பழைய துணியைக் கட்டிக் கொள்கின்றனர். பெண்கள் முழு உடை அணியாத போனால் ஒரு லுங்கியை இடையில் கட்டியும் ஒரு லுங்கியை மார்பில் கட்டியுங் கொள்கின்றனர். இந்த லுங்கி பலவித வர்ணங்களுடையதாகும். இதில் பூக்களும் ஜரிகைகளும் நிறைந்திருக்கும். ஆண்கள் பூக்கள் போடாத கொட்டடி அடைத்தலுங்கியை உபயோகிக்கின்றனர்.

கெலந்தான், டிரங்கானு இந்த இரண்டு ராஜ்யங்களிலும் மலேயர்களுக்கு வேண்டிய சாரங்கள் செய்யும் தொழில் நிறையப்பெற்றும் ஒவ்வொரு வீடுகளிலும் நெசவுக்கு வேண்டிய கருவிகள் வைக்கப்பட்டுமிருக்கும். ஆண்கள் ஒரு லுங்கியை இடையில் கட்டிக்கொண்டு வெள்ளை அல்லது பல வர்ணங்களாக உள்ள துணிகளில் தளர்ந்த மேலங்கியையும் தலையில் உயரமில்லாத வெல்வெட் தொப்பிகளையும் அணிந்து கொள்கின்றனர்.

பெண்கள் கண்கள் ஓரங்களில் மை தீட்டிக் கொள்கின்றனர். கல்யாண காலங்களில் மலேயா யுவதிகளுக்கு ஆடம்பரமான விலையுயர்ந்த உடைகளையும் தலையில் மெல்லிய துணியால் தைக்கப்பட்ட ஓர் தலை அங்கியையும் பர்மியர்களைப்போல் தமது நகைகளைத் தவிர இரவல் நகைகளை ஏராளமாக பூட்டிக்கொண்டும் அழகுபெற சிங்காரித்துக் கொள்கின்றனர். மலேயப் பெண்கள் வெளியில் செல்லுங்கால் ஒரு மெல்லிய துணி அல்லது மற்றொரு லுங்கியை தலையில் போட்டு முக்காடிட்டுக் கொள்கின்றனர்.

## மயிரழகு

மலேய நாட்டு பெண்களின் கூந்தல் அவர்களுக்கு முக்கிய அழகைக் கொடுக்கிறது. கூந்தல் நீளமாகவும் மினுமினுப்பாகவும், கருப்புக் கலந்த நீல நிறமாகவு மிருக்கிறது. தலை மயிரை எலுமிச்சம் பழங்கொண்டு சுத்தி செய்து கொள்கின்றனர் இள மாதர்கள் சடை போட்டுக்கொள்கின்றனர். நடுத்தர வயதினர் பின்னல் இறுக்கமாக முடி போட்டுக்கொள்கின்றனர். மயிரில் தங்கம் அல்லது வெள்ளியால் வேலைப்பாடுகளமைந்த

கொண்டை ஊசிகளைக் குத்திக்கொள்கின்றனர். மெல்லிய மஞ்சள் நிறமுள்ள சண்பக புஷ்பத்தை மலேயப் பெண்கள் இரவில் தங்கள் கொண்டையில் வைத்துக்கொள்வதால் ஒருவித ஜோதியைக் கொடுப்பதோடு அழகையும் அதிகரிக்கிறது. தென்னை ஓலைகளால் செய்யப்பட்ட குடைகளை மழைக்கும் வெய்யலுக்கும் உபயோகப்படுத்திக் கொள்கின்றனர்.

## நீக்ரட்டோ, சக்காய் ஜனங்களின் உடைகள்

நீக்ரட்டோப் பெண்கள் மேல் அங்கி அணிந்து கொள்வதில்லை. ஒரு வித மரப்பட்டை நூல்களால் நெய்யப்பட்ட சிறு ஆடைகளை தங்கள் அரையில் மட்டும் அணிந்துகொள்கின்றனர். அந்த ஆடை பளபளப்பாகவும் கருப்பாகவு மிருக்கும்.

சக்காய் ஜனங்களும் இதே போல் இடுப்பில் மட்டுந்தான் ஆடை அணிந்துகொள்கின்றனர். ஆனால் அந்த ஆடை முரடான மலேயா சாரங்களாகும். அது அகப்படாத இடங்களில் மரப்பட்டையை உரித்து அடித்து எடுத்த பஞ்சால் நெய்யப்பட்ட ஆடைகளே அணிந்து கொள்கிறார்கள்.

இந்த காட்டுமிராண்டி மலை ஜாதியார் கல்யாண காலங்களிலும் திருவிழாக் காலங்களிலும் ஒரே இடத்தில் கூடுகின்றனர். இலைகளையும் பூக்களையும் தலையில் சொருகிக் கொள்வதோடு அவைகளினால் தலை அணியும் செய்து தரித்துக் கொள்கின்றனர். கூந்தலில் அநேக விதமாகச் செய்யப்பட்ட சீப்புகளையும் சொருகிக் கொள்கின்றனர். ஒருவித பக்ஷியின் இறகை காதுத் துவாரங்களிலும் மூக்குத் தண்டின் துவாரத்திலும் பெண்கள் அழகுக்காக சொருகிக் கொள்கின்றனர். ஜாக்கூன் ஜாதியாரை விட சக்காய் மாதர்களே இந்த இறகுகளை அதிகமாக உபயோகிக்கின்றனர். உலோகத்தால் செய்யப்பட்ட மோதிரம், குடங்கை வளையல் கழுத்து மாலைகளை ஆபரணமாக அணிந்துகொள்கின்றனர்.

சக்காய் மாதர்கள் அணிந்துகொள்ளும் மார்பு வரை தொங்கும் கழுத்துமாலைகள் எலும்புகளாலும் மிருகங்களின் மெல்லிய வால் நுனியாலும் செய்யப்பட்டிருக்கும். வெள்ளிநாணயங்கள் அகப்பட்டால் அதையும் கோர்த்து கட்டிக் கொள்கின்றனர்.

## மலேயர்களின் வீட்டுப் பழக்கங்கள்

மலேய நாகரீகக்குடி மக்கள் பெண்களை வீட்டினுள் வைத்திருப்பதே நியாயமெனக் கொள்கின்றனர். ஆனால் நாகரீகமிகுந்த பட்டணங்களிலும் கிழக்கு கரையோரங்களில் சில பாகங்களிலும் பெண்களுக்கு கொஞ்சம் சுதந்திர மளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பர்மா, சயாம் முதலிய நாடுகளில் பெண்கள் முக்கியமாகக் கருதப்படுவது போல் மலேய நாட்டிலில்லை. பர்மா, சயாம் பெண்கள் வியாபாரத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொள்கின்றனர். அதோடு ஆண்களின் வேலையில் ஒரு பாகத்தை பகிர்ந்துகொள்கின்றனர். மலேயா மாதர்கள் எதிலுங் கலந்துகொள்வதேயில்லை. மலேய ஜனங்களும் பர்மியர்களைப்போல் ஆற்றங்கரை யோரங்களிலும் சமுத்திரக் கரைக் கருகாமையிலும் வசிப்பதால் தங்கள் வீடுகளின் தளம் தரை மட்டத்திலில்லாமல் கம்பங்களை நட்டு அதற்குமேல் தளமமைத்து வீடு கட்டிக்கொள்கின்றனர். இது தண்ணீர் பெருக்கு காலத்திற்கும் மற்ற சௌகரியங்களுக்கும் ஹேதுவாக இருக்கிறது. இந்த வழக்கத்தை உள் நாட்டுக்குச் சென்றாலும் அவர்கள் விடுவதில்லை.

## மலேயப் பெண்களின் வேலை.

பயிர்த்தொழில் செய்யும் மலேயர்களில் ஆண்கள் மிகவும் கடுமையான வேலைகளைச் செய்கின்றனர். பெண்களும் அவர்களுக்குத் தகுந்த அதிக சிரமமில்லாத வேலைகளைச் செய்கின்றனர். மலைப் பிரதேசங்களை விடுத்து சம வெளிகளில் நெற் பயிர்த் தொழில் நடந்து வருகிறது. அநேகமாக கிட்டா பிராந்தியங்களிலும், வெல்லஸ்லி மாகாணத்திலும் நெற் பயிர்த் தொழில் அதிகமாக நடக்கிறது. இதற்கு சில கால்வாய்களின் மூலம் தண்ணீர் கொண்டு வருகின்றனர். கோடைவெள்ளாண்மையும் மலையடிவாரங்களில் நடக்கிறது: இதில் முக்கியமாக பெண்களே வேலைமுழுவதையும் செய்கிறார்களெனச் சொல்லலாம். ஆண்கள் பூமியைப் பண்படுத்துவதிலும் பெண்கள் நாற்று நடுவதிலும், களைகள் களைவதிலும், பக்ஷிகளைத் துரத்துவதிலும் ஈடுபடுகின்றனர். சிறு வளைவான கத்தியால் நெற்கதிரை அறுப்பதும் கதிரிலிருக்கும் தானியத்தை வேறாக்குவதும் பெண்களின் வேலைகள். காலைப் போஜனம் முடிந்ததும் மலேயப் பெண்கள் ரப்பர் பால் முதலியது வெட்டுவதற்கும் நெசவு நெய்வதிலும், பாய், சாக்கு முதலியவைகளை பின்னுவதிலும் பிரம்பு கோரைகளினால் கூடை முடைவதிலும் ஈடுபடுகின்றனர். கிட்டா, டிரெங்கானு முதலிய இடங்களில் வியாபாரத்திற்காக கொஞ்சம் பெண்கள் இப்பொழுதுதான் பழக்கப்பட்டு வருகிறார்கள். மலேயர்களின் கூடைகளுக்கு இங்கிலாந்தில் அதிக கிராக்கி

யிருப்பதால் ஏராளமாக மேல் நாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறது.

காட்டு மிராண்டி ஜனங்களில் மிருக பலமுள்ள வேலைகளை ஆண்களும் மற்ற வேலைகளை பெண்களும் செய்கின்றனர். இன்னும் சில நாடோடி காட்டு மிராண்டிகளில் ஆண்கள் வேட்டையாடி ஆகாரம் தேடுவதிலும் பெண்கள் குடிசைகள் கட்டுவதிலும் சமையல் வேலை செய்வதிலும் ஈடுபடுகின்றனர்.

கிழக்கு கரையில் வசிக்கும் மலேயப் பெண்கள் நெசவுத் தொழிலில் அதிகமாக ஈடுபடுகின்றனர்.

கல்யாண காலத்தில் ஏற்பட்ட முக்கியமான விதிகளின்படி சமையற் செய்வதும் உடைகளைச் சிங்காரிப்பதும் மலேயப் பெண்களின் முக்கியமான வேலைகளாகும்.

சுதந்திரமற்ற மலேயப் பெண்கள் நாடகங்களிலும் நடிக்கின்றனர். ஆண்கள் பிடில் முதலிய வாத்தியங்களையும் மூங்கிலால் செய்யப்பட்ட சில வாத்தியங்களையும் வாசிக்கின்றனர்.

மலேயர்களைவிட சக்காய்ஜனங்கள் இரவில் நேரஞ் சென்றே போஜனமருந்துகின்றனர். அவர்கள் ஓலையினலாக்கப்பட்ட தட்டுகளைப் பாய் செய்வதிலும் கூடை முடைவதிலும் சமர்த்தர்கள். சக்காய் பெண்கள் காடுகளில் கிடைக்கும் அவர்கள் வீட்டுக்கு தேவையான வஸ்துக்களைச் சேகரிப்பதில் மிக்கப் பிரியமுடையவர்கள்.

## பிறப்பின் நம்பிக்கையும் சடங்குகளும்

மலேய ஜாதியார்களுக்கும் பூர்வகுடி மக்களாகிய காட்டு மிராண்டிகளுக்கும் சிற்சில விஷயங்களில் தெளிவான வித்யாசங்கள் காணப்படுகிறது. மலேயர்களில் குழந்தைகள் பிறந்தவுடன் செய்யவேண்டிய சடங்குகளை புருஷனே செய்கிறான். மலேயர்களில் பெண்கள் பிறப்பது கஷ்டத்திற்கு உட்படுவதற்கே என்றும் இது கடவுள் ஆக்ஞை என்றும் கருதுகிறார்கள்.


ப்சாசங்களுக்கு இவர்கள் அதிக பயமுடையவர்கள். இரவில் பறக்கும் பக்ஷிகளில் சிலதைக் கூட பறக்கும் பிசாசு எனக் கொள்கின்றனர். இந்த சாசங்களைப்பற்றி அநேகம் கதைகள் கட்டிவிடப் பட்டிருக்கிறது. "பாண்டியெனக்" என்ற பறவையும் "பிஞங் காலன்" என்ற முண்டமில்லாப் பறவையும் குழந்தைகளின் ரத்தத்தை உறிஞ்சுவதில் பிரியப் படுகிறதென்ற கொள்கை மலேயாவிலிருந்து வருகிறது.

மலேயப் பெண்களுக்கு குழந்தைபிறந்தவுடன் சில பத்திய முறைகளும் சாதனங்களும் செய்யப்படுகின்றன. இந்த வழக்கங்கள் கடுமையான முறையிலிருந்து வந்த போதிலும் சகல பெண்ணும் உட்பட்டே தீரவேண்டியிருக்கிறது. பிரசவித்த மாதர்களும் மாக்கட்டைகளால் கட்டப்பட்ட மேடைகளில் படுக்க வைத்து கீழே நெருப்பு எரிக்கின்றனர். இதில் இரவும் பகலும் சில நாட்கள் வரை படுத்துக் கொள்ளவேண்டும். இதனால் உடம்பில் புண்களும் ஏற்படுவதுண்டு. சில பெண்கள் புத்தி சுவாதீன மில்லாமலும் போய்விடுகின்றனர். தவிர இன்னும் சில கஷ்டமான விதிகளும் அனுட்டிப்பதுண்டு. இந்த சடங்குகள் முடியும் வரை புருஷன் தலைமுடி எடுக்கப்படாது. விருந்தினர்களையும் வீட்டுக்கு அழைத்து வரக்கூடாது.

தவிர புருஷன் மிருகங்களை காயப் படுத்தக் கூடாததோடு வீட்டுக் கதவண்டையும் உட்காரக் கூடாது.

குழந்தைகள் பிறந்ததும் குழந்தைக்கு அதிக ஆபத்துக்கள் ஏற்படுமென்பது மலேயர்கள் நம்பிக்கை. சந்திர கிரஹணத்தில் உதித்தகுழந்தைகளை மிக்க ஜாக்கிரதையாக காப்பாற்றுகிறார்கள். ஆண் குழந்தையாக இருந்தால் பிறந்தவுடன் நெற்றியில் ஒரு நீலக்கோடு போடுகின்றனர். பெண் குழந்தையாக இருந்தால் சிலுவை மாதிரி குறியிடுகின்றனர். இந்தக் குறி கிறிஸ்துவ மதத்தை ஒட்டியதல்ல. குழந்தைகளுக்கு தீங்கு நேரிடாதென்ற நம்பிக்கையைக் கொண்டு இக்குறியிடப்படுகிறது. மலேயர்கள் வீட்டின் உத்தாரங்களில்கட்டப்பட்ட துணித் தொட்டில்களிலே குழந்தைகளை கிடத்துகின்றனர். இந்தக் குழந்தைகளைத் தொட்டிலில் கிடத்துவதில் காட்டு மிராண்டிகளிடம் ஒரு நூதன வழக்கமிருக்கிறது. தொட்டிலில் கிடக்கும் குழந்தைகளைத்தான் பசாசு சுலபமாய்க் கைப்பற்றிவிடுமாம். அதனால் இரண்டு தொட்டில் ஒவ்வொரு வீட்டிலும் கட்டப் பட்டிருக்கும். முதலில் ஒரு தொட்டிலில் குழந்தையைப் போட்டு உடனே எடுத்து மற்றொரு தொட்டிலில் கிடத்திவிட்டு முதற் தொட்டிலில் ஒரு கல்லைப் போட்டு வைப்பார்கள். இதனால் முதல் தொட்டிலில் குழந்தை கிடப்பதாக பசாசுகள் நினைத்து செய்யும் தீங்குகள் குழந்தையைச் சாராமல் கல்லுக்குத்தான் விளையுமென்பது அவர்கள் நம்பிக்கை.

மலேயாவில் கல்யாணமாகாத பெண்களை ஒரு வித காதணியிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இந்த காதணி கல்யாணமானவுடன் அகற்றப்



சக்காயர்கள் குழல்களை ஊதி பட்சி வேட்டையாடும் காட்சி




சக்காய் பெண்களின் இயற்கைத் தோற்றம்.



மலாய் தாயும் அவள் குழந்தைகளும்



மலாய் பெண் ரப்பர்பால் வெட்டும் காட்சி

பட்டுவிடும். பெண்கள் பருவமடையுங் காலத்திலோ அல்லது கல்யாணஞ் செய்யுங் காலத்திற்கு முன்போ பற்களை ராவப் படுகிறார்கள். முகத்தில் வர்ணம் அடித்துக் கொள்வதும் பயங்கரமாக பச்சை குத்திக் கொள்வதும் மலேயாப் பெண்களிடமில்லை.

சக்காய் பெண்கள் முட்களாலும் கம்பிகளாலும் முகத்தை கீறிக் கொள்கின்றனர். இரண்டு கன்னங்களிலும் பெரிய கோடுகள் கீறப்பட்டிருக்கும். கருப்பு வெள்ளை அல்லது வேறு வர்ணப் புள்ளிகளால் முகங்களில் பச்சை குத்திக் கொள்வதால் பயங்கரமாக இருக்கும். இது அவர்களுக்கு பெருத்த அழகைக் கொடுக்கிறதாம்.

## மலாய்ப்பெண்களின் அழகு

சாதாரணமாக மலேயாப் பெண்கள் அழகுடையவர்களேயாகும். ஆனால் சிறுவயதிலே அவர்கள் தோற்றத்தை இழந்து விடுவதால் நடுத்தர வயதில் விகாரமாகக் காணப்படுகின்றார்கள். அவர்கள் முகமும், மூக்கும் சப்பையாக விருப்பதால் இந்தியப் பெண்களைப் போல் அழகாகக் காணப்படுவதில்லை. வாய் அகன்று இருப்பதாலும் அழகுத் தோற்றம் குறைவு படுகிறது. அவர்களின் கண்கள் பழுப்பாகவும் கருமையாகவுமிருக்கிறது. பழுப்பான உடற்தோல் அழகாகவும் சுத்தமாகவுமிருக்கிறது. அவர்கள் பற்கள் வெண்மையாக இருந்தபோதிலும் பாசி படிந்திருக்கும். வயதடைந்தவுடன் பற்கள் ராவப்படுவதால் சில சமயம் உடைந்துவிடுவதுமுண்டு. கன்னத்தின் எலும்பு மங்கோலிய வகுப்பாருக்குப் போல் வெளியில் தெரிந்து கொண்டிருக்கும். அவர்களின் முக்கிய அழகு கருத்த நீண்ட கூந்தலேயாகும். இந்தியப் பெண்களைப்போல் முடிபோட்டு புஷ்பங்களை அணிந்துகொள்கின்றனர். குள்ளமாகவும் தடித்துமிருப்பதோடு நடுவயதடைந்தவுடன் இன்னும் கொஞ்சம் பருமனாகவும் விகாரமாகவும் ஆகிவிடுகின்றனர்.

## மலேயர் கல்யாண வழக்கங்கள்

கல்யாணம் செய்வதற்கு முன், பிள்ளை வீட்டார் பெண்ணை நன்றாகப் பார்வையிட்டு பிறகு தான் நிச்சயம் செய்கிறார்கள். மலேயா நாட்டில் கல்யாணமே முக்கிய சடங்காக இருந்து வருகிறது.

பிசிசி (Besisi) என்ற காட்டு ஜாதியார்களில் ஒருவிதமான கல்யாணம் நடந்து வருகிறது. அந்தக் கல்யாணத்தில் மண்ணால் செய்யப்பட்ட ஒரு மணியைச் சுற்றி மணமகளை மணமகன் ஓடி ஓடிப்பிடிக்கவேண்டும்.

"ஓராங்லாட்" (Orang Laut) அல்லது சமுத்திரத்தை சுற்றியிருக்கும் நாடோடிகள் என்ற காட்டுமிராண்டிகளில் கல்யாண வழக்கம் வேறு விதமாக இருக்கிறது. மணமகன் ஒரு படகிலும் மணமகள் ஒரு படகிலும் ஏறிக்கொண்டு படகோட்டுவார்கள். மணமகன் மணமகளை படகிலிருந்து கொண்டே துரத்திப் பிடிக்க வேண்டுமாம்.

பிசிசி ஜாதியார்கள் மணமகன் மணமகளை மணியைச்சுற்றி ஓடிபிடித்துக்கொண்டவுடன் ஒரு விருந்து நடத்துகிறார்கள். அந்த விருந்தில் பெண்ணும் பிள்ளையும் ஒரே தட்டில் சாப்பிட வேண்டும்.

பிறகு சீர் சீதனங்கள் வழங்கப் படுகிறது. பெண்ணுக்கு தகப்பன் பானைகள் தட்டுகள் காட்டுக் கத்திகள் குல்லாய்கள் பாடற் கருவிகள் இவைகளை தன் மகளுக்கு சீராகக் கொடுக்கிறான்.

மலேயர்கள் அதிகமாக பழங்கள் அகப்படக் கூடிய மாதமாகிய ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் தான் அநேகமாக கல்யாணங்கள் வைத்துக்கொள்கின்றனர்.

ஓராங்லாட் ஜாதியார் மனைவியைக் விலை கொடுத்தே வாங்கி விடுகிறார்கள். ஒரு மனைவியின் பொருமானம் 10 ஊசிகள், 3 சுருட்டு நூல் கண்டுகள், 16 முழம் துணி, 3 மலாய்வெள்ளி நாணயங்களாகும்.

மலேயர்களில் புருஷன் பெண்சாதியை பெருமையுடனே நடத்துகிறான். நன்னடக்கையிலிருந்து தப்பியவர்களுக்கு மிகவும் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுகின்றன. முன்னாளில் அப்படிப்பட்ட ஸ்திரீ புருஷர்களை முகங்களில் மஞ்சக் கோடுகளை தீட்டி தெருக்களில் விடுவது வழக்கம்.

முகமதியர் விதிப்படி மலேயப்பெண்கள்படுதா வழக்கத்தை அனுசரிக்க வேண்டுமென்றிருந்த போதிலும் மலேயப் பெண்கள் வீட்டினுள்ளே இருப்பதில்லை. பெண்களுக்கு புருஷன் அடங்கி நடக்கிறான். ஆண்மகன் கல்யாணமானதும் மாமியார் வீட்டில் ஒருவருஷத்திற்கு மேல் தங்கிவிடுகிறான். சாயங்கால வேலையில் ஒவ்வொரு மலேயன் வீட்டிலும் குரான் ஓதப்படுகிறது.

## ஈமச் சடங்குகள்

மலேயர்கள் இறந்த 24 மணி நேரத்திற்குள் பிணத்தை புதைத்து விடுகின்றனர்.

கிக்ரட்டோ ஜாதியார் இவ்வழக்கத்தை சாதாரணமாகச செய்கிறார்கள். ஆனால் சக்காய் ஜாதியார் பிணங்களை பசாசம் என்றே கருதி மிக்கப் பயப்படுகின்றனர். ஆகையால், ஆழமான குழி வெட்டி புதைத்துவிடுவதோடு இறந்தவன் வீட்டை தீமூட்டிக் கொளுத்திவிடுகின்றனர்- அதோடில்லாமல் வேறு கிராமத்துக்கு குடியேறியும் விடுகின்றனர். இப்படிச் சமயங்களில் தாங்கள் பயிரிட்ட பயிர்களைக்கூட விட்டுவிட்டு ஓடிவிடுகின்றனர். புதை குழிக்குமேல் மண்மேடை ஒன்று போட்டு அதில் ஒருசிறு கம்பத்தை நட்டு வைப்பார்கள். பெண் பிணமாக இருந்தால் அவளுடைய சீப்பு ஆபரணங்கள் உடைகள் எல்லாவற்றையுமே பிணத்தோடு சேர்த்து புதைத்து விடுகின்றனர்.

ஜக்கூன் ஜாதியார்கள் பிணத்தை அடக்கம் செய்த இடத்தில் ஒரு வீடு கட்டிவைப்பார்கள். அந்த வீட்டில் உயிருடனிருக்கப்பட்டவர்களுக்கு செய்வது போல் சகல ஆகமங்களும் நிறைந்திருக்கும். சில சமயம் புதைத்த பிணங்களுக்கு சோறூட்டுவது முண்டு. அந்தப்பிணத்தைப் புதைக்கும் பொழுது ஒரு மூங்கில் குழாயை பிணத்தின் வாயில் நட்டு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும்படி செய்வார்கள். பிறகு சாதம் தினந்தோறும் படைக்கும்பொழுதுமூங்கில் குழாய் மூலம்பிணத்துக்கு ஆகாரம் வந்து விட்டதாக அறியப்படுத்தி சாதம் பழம் முதலியவைகளைப் படைப்பார்கள்.

ஜக்கூன் ஜாதியார்கள் பெண் சமாதி ஆண் சமாதி என வித்யாசத்தோடு கட்டுகிறார்கள். ஆண் சமாதிக்கு மேல் நாட்டிருக்கும் மரம் வட்டமாககவும் முனை கூர்மையாகவுமிருக்கும். பெண்சமாதியானால் கம்பம் தட்டையாகவும் கரடு முரடாகவுமிருக்கும். மலையாவுக்கு பக்கத்திலுள்ள சயாம் ஜாதியார்கள் பிணங்களை அடக்கம் செய்வதில் விதவிதமான பழக்கங்களை அனுசரிக்கின்றனர். சமுத்திரத்தில் ஒருவன் இறந்து அவன் சடலம் காணப்படவில்லை யானால் அதற்கு பதிலாக ஒரு கட்டையைத் தகனம் செய்கின்றனர். ப்ராம் என்ற பிராமண வகுப்பார் உட்கார வைத்தபடி பிணத்தைக் கொளுத்துகின்றனர். சில பக்கங்களில் பிணத்தை துணியால் சுற்றி இரண்டு கம்பங்களுக்கும் நடுவே


# டிராபிகல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ் டில்லி.

இந்திய பிரபலஸ்தர்களால் ஸ்தாபிக்கப்பட்ட தேசீய ஸ்தாபனம்.

ஸ்தாபித்தவர்கள்

பண்டித மோதிலால் நேரு, அக்கீம் அஜ்மால்கான்,
டாக்டர் M. A. அன்சாரி, நிர்வாக போர்டின் தலைவர்.

| | |
|---|---|
| கூட்டுப் டாலிஸிகள் | நிரந்தர அங்கஹீனத்திற்குப்பரிகாரம் |
| பெண்மக்கள் இன்சூரன்ஸ் | கம்பெனி நிர்வாகத்தில் அதிகாரம் |

மனதைக் கவரும் விசேஷ உரிமைகள் பல.

ஜனாப் T. A. K. ஷெர்வானி, பாரிஸ்டர் M. L. A. கூறுவது,

இந்தியாவில் முதன்மை ஸ்தானம் வகிக்கும் கம்பெனிகளில் ஒன்றாகவும், நாணயப் பொருப்புள்ள நிர்வாகத்துடனும், இந்தியா வெங்கனும் பரவியும், சிறந்த லாபத்துடனும் டிராபிகல் திகழுகிறது.

இன்றே டிராபிகலின் பாலிசி ஒன்றைப் பெற்று சந்தோஷ மடையுங்கள்,

**R. V. சுவாமிநாதன்**
சீப் ஆர்க்கனைசர்
194, பார் வீதி, இரங்கூன்.

**ஏஜண்டுகள் தேவை.**

பூமியிலிருந்து எட்டடி உயரத்தில் தொங்கவிட்டு விடுகிறார்கள். சில பாகங்களில் ஒரு பெரிய பானைக்குள் பிணத்தைத் திணித்து ஒரு மரத்தில் கட்டிவிடுகின்றனர்.

மலேயப் பெண்களிறந்தால் பசாசு அணுகாதிருக்க கையைச் சேர்த்து கட்டுமிடத்தில் ஒரு பாக்குவெட்டியைவைப்பதுமுண்டு. சொந்தகாரர்கள் பிணத்தை கட்டிஅழும் பொழுது கண்ணீர் பிணத்தில் விழுந்தால் இன்னும் அதிகமான துக்க சம்பவங்கள் நடக்குமெனக்கருதி கண்ணீரை ஜாக்கிரதையாக வடிக்கின்றனர். பிணத்தை நன்றாக மூடி ஐந்து இடங்களில் கட்டுகிறார்கள் பெரிய குடும்பத்து பிணங்களை அநேகர் கூடி தூக்கிச் செல்வது காட்சியாக இருக்கும். பிணத்தை பெட்டியில் அடக்கம் செய்யும்பொழுது நல்ல துணிகளால் மூடி அதன் மேல் வெற்றிலை முதலியவைகளை போடுகின்றனர். இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக ஏழாம் நாள் பதினைன்காம் நாற்பதாம் நாள், நூறும் நாட்களில் விருந்து நடத்தப்படுகிறது. வருஷமுடிவிலும் பலமான விருந்து நடத்துகிறார்கள்.

மலேயப் பெண்கள் சாதாரணமாக ஆண்களைப் போல் தைரியசாலிகளல்ல. முன் காலங்களில் தம் புருஷர்கள் கத்தியால்தாககப்பட்டோ தற்கொலை செய்து கொண்டோ இறந்துவிட்டால் மனைவி பாஷாணத்தைத்தின்று மரித்து விடுவதுண்டு. சில மனைவிகள் கத்தியால் குத்திக் கொண்டிறப்பதுமுண்டு. பிரிட்டிஷ் ஆளுகைக்குப் பிறகு இவ்வழக்கம் ஒழிக்கப்பட்டு விட்டது.

## இதர ஜாதியினர்.

மலேயாவில் அயல் நாட்டார்தான் பெரும்பகுதியாக இருக்கின்றனர். அதிகாரவர்க்கத்தாராகிய பிரிட்டிஷாரைத் தவிர இத்தேசத்தின் வியாபாரச் செழிப்பினால், டச்சு, பிரஞ்சு அமெரிக்கர்முதலிய ஜனங்களுமிருக்கின்றனர். பெரிய பட்டணங்களின் அருகாமையில் பெரிய எஸ்டேட்டுகளிலும் அரசாங்க உத்யோகங்களிலும் ஐரோப்பியர்கள் காணப்படுகிறார்கள். சிங்கப்பூரில் ஆயிரக்கணக்காண ஐரோப்பியர்கள் வசிக்கின்றனர். பினங்கு, கோலாலம்பூர், ஈப்போ முதலிய இடங்களிலும் ஐரோப்பியர்கள் மிகுதியாகஇருக்கின்றனர்.

## சீனர்கள்.

மலேயாவில் அந்நியதேசத்து ஜனங்களில் சீனர்கள்தான் பெரும்பகுதியாளர்கள். சிங்கப்பூர் ஜனத்தொகையில் முக்கால் பங்கு சீனர்களே. சீனர்கள் தீபகற்பம் முழுதும் காணப்படுகின்றனர். காடுகளிலும் அவர்கள் பயிர்த்தொழில் செய்து கொண்டிருக்கின்றனர். மலேயா ரிக்ஷா இழுக்கும் தொழில் சீனர்கள் கைவசமேயிருக்கின்றன. சீனர் தமது தாய் நாட்டைப் போல் மலேயாவை நினைத்து தங்கள் முதலை ஏராளமாகப் போட்டிருப்பதுடன் மிக்கச் செல்வாக்குடன் காண படுகிறார்கள். பெரிய சுரங்கங்களும், எஸ்டேட்டுகளும், சில கப்பல்களும் சீனர்களுக்கு சொந்தமாக இருக்கிறது. அவர்கள் பிரிட்டிஷ் சட்ட திட்டங்களுக்கு மிக்க கட்டுப்பட்டு நடப்பதோடு பெரிய உத்யோகங்களையும் வகிக்கின்றனர். பொதுவாக பார்க்குமிடத்து மலேயா சீன நாடு மாதிரியாகவே தோன்றும். மலேயா ஜனங்களை பிறகு, தேடிப்பிடித்துத்தான் காண வேண்டும்.

## இந்தியர்கள்

இந்தியர்களில் முக்கியமாகதமிழ்ப்பேசக்கூடியவர்கள்தான் சீனர்களுக்கு அடுத்தபடியாக ஜனத்தொகையிலும் செல்வாக்கிலும் காணப்படுகிறார்கள். அவர்கள் விவசாயத்திலும் குமாஸ்தாவேலைகளிலும் தோட்டக்கூலி வேலைகளிலும் ஈடுபடுகின்றனர். சிலர் வியாபாரிகளாகவுமிருக்கின்றனர். செட்டியார்கள் நல்ல நிலைமையில் கஷ்டமில்லாதபடி சிக்கலற்ற மலேயா சட்ட திட்டங்களுக்குட்பட்டு லேவாதேவித் தொழிலை நடத்தி வருகின்றனர். இப்பொழுது அநேகம் ரப்பர் எஸ்டேட்டுகள் செட்டியார்களது கைவசமிருக்கின்றன.

இவர்களைத்தவிர ஜப்பானியர்களும் அரபியர்களும் ஜாவா தேசத்து ஜனங்களும் கலப்பு ஜனங்களும் வசிக்கின்றனர். சீனக்கலப்புவர்க்கத்தாரை பாபாஸ் என்றும் தமிழர்களை கிளிங் என்றும் மட்டமான பேச்சில் அழைப்பதுமுண்டு.

## செட்டியார்களுக்கு ஒரு வார்த்தை !

———0———

சிறந்த பிளாக்குகள் வேண்டுமானால்
பாம்பே பர்மா போட்டோ கம்பெனிக்குச்
செல்லுங்கள் !

Perfectly etched & finished

BLOCKS

'தனவணிகன்
பொங்கல் மலரில் வெளிவந்
துள்ள பிளாக்குகள் அனைத்தும்
எங்களால் தயாரிக்கப்பெற்றவைகள்.'

# Bombay Burma Photo Co.

**Blockmakers, Designers, Photographers**

**356, Dahlhousie St. Rangoon.**

CORNER OF LEWIS STREET. PHONE NO. 542,



"பவளக் கோடி" யில் நடிக்கும் திருமதி. எஸ். டி. சுப்புலட்சுமி.

# கூட்டுக் கமிட்டி அறிக்கை

திரு. சுப. க. அ. லட்சுமணன் செட்டியார்
(காரியதரிசி நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம், பர்மா)

வெகுநாளாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த அறிக்கை வெளிவந்துவிட்டது. அதை உற்று நோக்குங்கால் ஆங்கிலத்தில் உள்ள ஒரு வசனம் ஞாபகத்திற்குத் தானாகவே ஓடி வருகிறது. அதாவது ஒரு மலை நெடுநாளாக குமுறிக்கொண்டும் அலண்டுகொண்டும் வந்ததாம். ஏதோ விபரீதம் கிளம்பப் போவதென்று எதிர்பார்த்திருந்த ஜனங்களின் கண்முன் அம்மலையின் கீழிருந்து ஒரு சுண்டெலி ஓடிவந்து பக்கத்திலிருந்த வளைக்குள் புகுந்து மறைந்துவிட்டதாம். இதுபோல் பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் ஏதோ பால் மழையாகப் பொழிந்து, நம் ஏழை இந்தியருக்குச் சத்துவாய்ந்த உணவைக் கொடுத்துக் காக்கப்போகிறார்களென்று வெகு ஆவலுடன் காத்திருந்தவர்களுக்குக் கிடைத்ததென்னவென்றால் சாரைப்பிழிந்தெடுத்த சக்கைதான். பிஷாவரிலிருந்து கல்கத்தாவரையும் இமயமலைமுதல் கன்னியாகுமாரி வரையும் இச்சாரமற்ற அறிக்கையைக் கண்டிக்காத இந்திய பத்திரிகைகளாவது, சங்கங்களாவது, தேசீயக் கட்சிகளாவது தேசத் தலைவர்களாவது கிடையாது. இப்படி ஒருமிக்க கண்டித்து நிராகரிக்கப்பட்ட இவ்வறிக்கையானது எத்தகையது என்றால் நாரையின் கால்களின் மேல் மனிதக்குரங்கினுடலை யமைத்து அதன்மேல் ஒரு நீள் செவியனின் தலையைச் சேர்த்து வைத்துண்டாக்கிய நூதனசிருஷ்டிக்குவெகுவாய் ஒத்திருக்கிறது. இந்தஅலங்காரபிராணியை இந்தியப் பொது ஜனங்கள் ஒன்றுகூடி எதிர்கொண்டழைத்து ஆலிங்கனம் செய்துகொண்டு ஆனந்தத் தாண்டவம் புரிவார்களென்று எதிர்பார்த்த அந்த ஆங்கிலப் பெரியோர்களின் மனோபாவம்தான் எத்தகைத்தோ தெரியவில்லை.

இதுநிற்க, இவ்வறிக்கையில் பர்மாவைப் பற்றியும், பர்மாவிலுள்ள இந்தியர்களைப் பற்றியும் வெளியிடப்பட்டிருக்கும் விஷயங்கள் விஷமங்களாகத்தான் இருக்கின்றனவென்பதிற் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. பர்மாவை இந்தியாவினின்றும் பிரித்து ஒரு தனி கவர்னருடைய மகாணமாக்க வேண்டுமென்பதற்குக் கூறியிருக்கும் முகாந்தரங்களைக் கவனிக்குமிடத்து இப்பிரிவினை முக்கியமாய் பர்மாவினுடையவும், பர்மியர்களுடையவும் மேல் அபிவிர்த்திக்காகவே செய்வதாகவும், அப்படிச் செய்வதே பர்மியர்களின் பெரும்பான்மையோருடைய முடிவான உத்தேசமென்றும் காட்டியிருக்கிறது. பர்மியர்களும் இந்தியயக்களும் ஒன்னு சேர்ந்து ஒருமனப்பாட்டுடன் பல்லாண்டுகளாக இருந்து சகோதரபாவத்தைக் காட்டிவந்திருப்பதைக் கொஞ்சமேனும் கருதியதாகத் தெரியவில்லை. தேசீய அரசியல் கிளர்ச்சிகளில் இந்தியர்கள் ஐரோப்பியநாடுகளிற் கையாளும் முறைகளையும் அவற்றிற்கும் மேலான சாத்துவீகப் போர் என்றும் புதிய முறையையும் கையாண்டு பல விதத்தில் இந்தியாவிலுள்ள கவர்ன்மெண்டு தரப்பாளர்களுக்கு இடுக்கண்கள் விளைவிப்பதைப் பார்க்கச் சகியாமல், எங்கே இம்மாதிரியான கிளர்ச்சி முறைகளை பர்மாவுக்கும் கொண்டுவந்து, நாடு, நகரம், மூலைமுடுக்குகள் எங்கும் பரவியிருக்கும் எளியோர் பெரியோர் பலருக்கும் அறியும்படி செய்து, அவர்களும் இவ் விந்தியர்களைப் போல் பூர்ண சுயராஜ்யம் கொடுங்கள்; அது தவிர வேறு ஒன்றும் வாங்கமாட்டோம், என்று சொல்ல ஆரம்பித்து விடுவார்களென்று சந்தேகப்பட்டு, இம்மாதிரியான எந்

பாடு செய்திருக்கிறார்களென்றும் எண்ணுதற் கிடம்கொடுக்கிறது. இந்தியர்கள் பர்மாவிற்குத் தாராளமாய் வந்து போய்க் கொண்டும், தங்களுடைய தொழில் முறைகளை என்றும் போல் நியாயமான வழிகளில் நடத்தி வருவதில் பர்மியர்களுக்கு ஒருவித ஆட்சேபனையும் இருப்பதற்கு இடமில்லை. அப்படி இருப்பதாக கமிட்டியின் அறிக்கையிலாவது, கமிட்டியின் முன் ஆஜராகி சாக்ஷியங்கள் கூறின பர்மியத் தலைவர்களாலாவது கூறப்படவில்லை. பர்மா நாட்டின் அபிவிர்த்திக்கும், அரசாங்கத்தாருடைய பொக்கிஷத்துக்கும் பர்மாவிலுள்ள இந்தியர்களின் உழைப்பும், பொருளும் எவ்வளவு தூரம் உதவி புரிந்தனவென்பதை அரசாங்கத்தாரும் உலகமுமே நன்கறிவார்கள். அப்படிக் கிருக்க இந்தியாவுடன் பர்மா சேர்ந்து ஒரே அரசியல் முறையில் ஈடுபட்டு வந்தால் பர்மியர்களுடைய நாகரீகத்திற்கும் அபிவிர்த்திக்கும் எவ்விதத்தில் இதுகாறும் உண்டாகாத குறைபாடுகள் இனிமேல் ஏற்பட்டுவிடுமோ தெரியவில்லை.

இந்தியாவிலிருந்து கடலைக் கடந்து இவ்வன்னிய நாட்டிற்கு வந்து கூலிக்கு வேலை செய்யும் இந்தியத் தொழிலாளர்கள் குறைந்த கூலிக்கு வேலை செய்கிறார்களென்றும், அதே கூலிக்கு உள்ளூர் பர்மியர்களால் வேலை செய்து சரிவர ஜீவனம் செய்ய முடியாமற் போவதால், அவர்கள் வேலையின்றி கஷ்டப்படுவதாக இவ்வறிக்கையில் காட்டியிருக்கிறது. இதன் உண்மையைப்பற்றி அதிகமாக இப்போது தர்க்கிப்பதற்கு இஷ்டமில்லை என்றாலும் இந்தியத் தொழிலாளிகள் பர்மியர்களால் செய்ய இஷ்டமில்லாமல் அல்லது செய்ய முடியாமல் விட்டு விட்ட வேலைகளைத்தான் பற்றினார்களே தவிர அவர்களுக்குப் போட்டியாகப் போராடிக் கைப்பற்றியதாகக்கூறுவது சரியன்று. சாகுபடியின்றிக் காம்பாய் வெகுகாலம் கிடந்த நிலங்கள் இந்திய பண உதவியால் விவசாயத்


## இந்த ஆறு விஷயங்களையும் கவனியுங்கள்!

ஏனென்றால்

1 நீங்கள் திருப்தியடைகின்றீர்கள்

2 நேரில் கவனிக்கப்படுகிறீர்கள்

3 தாமதமின்றி சப்ளை செய்யப்படுகிறீர்கள்

4 புதிய சாமான்கள் கிடைக்கப் பெறுகிறீர்கள்

5 குறைந்த விலைக்கே வாங்குகிறீர்கள்

6 ஆகையால் கீழ்க்கண்ட இடத்தில் மருந்தை வாங்குங்கள்

## கிராண்ட் பார்மஸி

(பாரா டவாகானு, மொகல் கார்டுக்கு எதிரே)

மொகல் வீதி, இரங்கூன்.


துக்குக் கொண்டுவரவும், அவைகளை உழுது பண்படுத்திச் சாகுபடி செய்யப் போதுமான ஜனங்கள் இங்கே இருந்தால் வெளி ஜனங்கள் வருவதற்கு இடம் இராதல்லவா. இந்தியத் தொழிலாளிகள் குறைந்த கூலியில் சிக்கனமாய் ஜீவனம் செய்துவருவது அவர்களுக்கு ஒரு குறைவை எப்படித் தரக்கூடும்? "கூலியானது வேலையை ஒற்று அதனையனுசரிக்கும்" என்னும் உண்மையை அறிந்தோர்கள் இவ்விதம் கூறமாட்டார்கள்.

அறிக்கையின் 445-வது பாராவில் சிறுபான்மைக் கூட்டத்தாருடைய நியாயமான உரிமைகளைப் பாதுகாத்து அவர்களை ஆதரிக்க வேண்டியது மாகாண கவர்னரின் விசேஷ பொறுப்புகளில் ஒன்றாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் நியாயமான உரிமைகள் என்னவென்பதை விவரமாய் எங்கும் காட்டக்காணோம். பர்மாவில் இருக்கும் இந்தியர்களும் இதர அன்னியர்களும் அனுபவித்து வரும் சகல உரிமைகளும் பாத்தியதைகளும் அவர்களுக்கு நியாயமான வழிகளிலேயே கிடைக்கப்பெற்று அவர்கள் அனுபவிக்கிறார்கள் என்பதைத் தடுத்துச் சொல்ல முடியாது. இதேமாதிரி இனியும் என்றும் அனுபவித்து வருவதில் நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தாமல் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தாரின் கடமையாகும்.

வியாபார விஷயத்திலும் இதர தொழில்களை நடத்திவரும் விஷயத்திலும் ஆங்கிலேயர்களுக்குளவ்விதபாதுகாப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அவ்வளவும் இந்தியர்களுக்கும் இதர அன்னிய வாசிகளுக்கும் கொடுக்கவேண்டுமென்று அறிக்கைகையின் 472-வது பாராவில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆங்கிலேயர்களைப்பற்றிய வரையில் பர்மா வெள்ளை அறிக்கையின் 59-வது பாராவில் கீழ் வருமாறு சொல்லியிருப்பதை கமிட்டியார் பூராவும் ஆமோதித்திருக்கிறார்கள். அதாவது ஆங்கிலேயர்களுக்கு "பர்மாவுக்கு வரவும் இஷ்டப்போல் பிரயாணம் செய்யவோ, குடியிருக்கவோ சொத்துக்களைப் பெற்று அனுபவிக்கவோ தேசத்திலுள்ளவர்களுடன் எவ்விதமான வியாபாரமோ தொழிலோ செய்யவோ அல்லது இஷ்டம் போல் ஏஜண்டுகளையும் வேலைக்காரர்களையும் நியமிக்கவோ" யாதொரு தடங்கலுமின்றி அனுமதி கொடுத்திருக்கிறது. சட்ட சபைகளிலும் அவர்களுக்குப் போதுமானதைவிட அதிகமாகவே பிரதிநிதிஸ்தானங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியர்களுக்கோவெனில் இதற்கு மாறுபட நிர்ப்பந்தங்கள்தான் ஏற்பட்டிருக்கிறது. அறிக்கையின் 433, 473-வது பாராக்களில் இந்திய தொழிலாளர்கள்பிழைப்புக்காக தாராளமாக பர்மாவுக்கு வரப்போக இருப்பதற்கு தடைகள் செய்ய வேண்டியது அவசியம் என்று சொல்லியிருக்கிறது. இந்தியர்களுக்கு பர்மாவில் ஏராளமான நிலபுலங்களும், வீடுகளும், தொழிற்சாலைகளும், வியாபார ஸ்தலங்களும் சொந்தமாயிருக்கின்றன. இவைகளை இஷ்டம்போல் அவர்கள் அனுபவிப்பதிலும் நிலங்களைச் சாகுபடி செய்யவும், தொழிற்சாலைகளை நடத்தி வரவும், வேண்டிய தொழிலாளர்களையும் இதர சிப்பந்திகள் வேலைக்காரர்களையும் தருவித்துக் கொள்வதில் அரசாங்கத்தாரே தடைகள் ஏற்படுத்தி விட்டால் இவர்களுடைய சொத்துக்களின் மதிப்பு தான் என்ன? அவைகள் விஷயமாக இறைத்திருக்கும் பணத்தின் போக்குதான் எப்படியோ? 455, 472 பாராக்களில் சொல்லியிருப்பதற்கும், இந்த 433, 473 பாராக்களில் சொல்லியிருப்பதற்கும் பொருத்தமின்றி இருப்பது ஒரு கையால் கொடுத்த லாபத்தை மற்றொரு கையால் அடித்துப் பிடுங்கிக்கொள்வது போலல்லவோ இருக்கிறது! இதுவும் பிரிட்டிஷாரின் நியாயம் தானோ?


அறிக்கையின் 473-வது பாராவில் இந்திய லேவாதேவிக்காரர் என்று நாட்டுக்கோட்டைச் செட்டியார்களைப் பற்றிக் கூறியிருப்பது நகரத்து செட்டியார்களுடைய அந்தஸ்துக்கே வேணுமென்றே உண்டாக்கிய பெருங் குறைபாடாயிருக்கிறது. பாங்குகளும், கூட்டுறவுச் சங்கங்களும், இன்னும் இதர இலவசக்கடன் பெறுதற்குரிய சாதனங்களும் நன்றாய் ஏற்படாத காலத்திலிருந்து பர்மியர்களுடைய விவசாயத்துக்கும் கைத்

தொழிலுக்கும், வியாபாரத்துக்கும் பொருளுதவி செய்து நாட்டின் அபிவிர்த்திக்கு முக்கிய காரணஸ்தர்களாயிருந்த நாட்டுக் கோட்டைச் செட்டியார்களைப்பற்றி இப்படி குறைவான பாஷையில் கூறியிருப்பது அரசாங்கத்தாருக்குத்தான் பெருந்தன்மையைக் காட்டுமா? செட்டியார்கள் பர்மியர்களின் நிலத்தையோ இதர சொத்துக்களையோ நாடி தங்கள் தொழில் புரிந்தவரல்ல; புரிபவருமல்ல. ஒருவராலும் எதிர் பாராததும் தடுக்க முடியாததுமான காரணங்களின் மூலம் இவர்களுக்கு நிலங்களும் இதர சொத்துக்களும் சேர்ந்தால் அதற்கு இவர்களைக் காரணமாகக் கூறுவது நியாயமாகாது. இதனையறிந்தும் அறிக்கையில் மாறாக வெளியிட்டிருப்பது மிகவும் கண்டிக்கத்தகுந்தது.

ஸ்ரீராமஜெயம்.

# கோ. கி. வெ.



சகோதர சகோதரிகளே !

எங்களிடம் அகில பாரத சர்க்கா சங்கத்தாரால் நற்சாக்ஷிப் பத்திரம் அளிக்கப்பெற்ற திருப்பூர், இராஜபாளையம், சுத்த கதர் தினுசுகளும், தமிழ்நாடு சுதேசி பேரர்டாரால் அத்தாக்ஷி பெற்ற சுத்த சுதேசி ஆலை நூலால் கைத்தரியில் நெய்யப்பட்ட சுத்த சுதேசி ஜவுளிகளும், காங்கிரஸால் ஆதரவுபெற்ற "காலிகோ" ஆமதாபாத் முதலிய மில்களில் தயாரிக்கப்பெற்ற ஷர்ட்டிங், கோட்டிங், தோத்தி வகையறக்களும் சேலம், கும்பகோணம், கேறநாடு, காஞ்சீவரம், கோல்லேகாளம், பெனரீஸ் அசல் பட்டுப் புடவை துப்பட்டா ரகங்களும், மதுரை நேரியல் தினுசுகளும் விலை சரசமாகவும், நம் நகரத்தார் அவர்களுக்கு பூர்ண திருப்தி அளிக்கும்விதமான எல்லாதினுசுகளும் எங்களிடம் கிடைக்கும்.

எமது விலாசம்:—

**K. K. V. Chettiar,**

Popular Clothier, ***125, Mogul Street, Rangoon.***

# சுதந்திரத்திற்குச் சுருக்க வழி

"நேல்போதி"

சுமார் இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன் இங்கிலாந்து தேசத்தில் இரண்டாவது சார்லஸ் என்பவன் அரசாண்டு கொண்டிருந்தான். அவன் ஜனங்களுக்கு நன்மை செய்யும் செங்கோல் மன்னனாய் இருக்கவில்லை. குடிகளின் பணத்தை வீணான விஷயங்களில் ஏராளமாக விரயம் செய்வதையே வழக்கமாக வைத்துக்கொண்டிருந்தான். அதனால் தேசமக்களுக்கு அவனிடத்தில் வெறுப்பு அதிகம். ஆயினும் அவனுடைய தவறான நடைமுறைகளை பகிரங்கமாகக் கண்டிக்க யாரும் துணியவில்லை.

ஆனால் அந்தச் சமயத்தில் ஆன்ட்ரூ மார்வெல் என்னும் ஒரு கவிஞர் பெருமானார் இருந்தார். அவர் பாடுவதில் சமர்த்தர் என்பது மட்டுமன்று. பார்லிமெண்டு அங்கத்தினராகவுமிருந்தார். ஆனால் அவர் அதிகமாகப் பேசுவதில்லை. அவருக்குப் பேசுவது தான் சிரமம். எழுதுவது சிரமமே இல்லை. அவர் யாரைக்குறித்தானாலும் சரி, எந்த விஷயத்தைப்பற்றி யானாலும் சரி, தைக்கும்படியான விதத்தில் கேலி செய்து எழுதுவதில் வல்லவர். அவர் ஒருவர்தான் அரசன் அநீதச் செயல்களை கண்டித்து எழுத ஆரம்பித்தார்.

சார்லஸ் அரசனுக்கு மார்வெலை நன்றாய்த் தெரியும். அவருடைய வல்லமையை நன்கு உணர்ந்திருந்தான். அதனால் அவருடைய மொழிகளுக்கு அதிகமாக அஞ்சினான். அவரை எழுதவொட்டாமல் அடக்குவது எப்படி என்று பல நாட்களாக யோசித்து வந்தான். ஒன்றும் புலப்படவில்லை. மார்வெலின் வியாசங்களுக்கு எதிராக வியாசங்கள் எழுதச்சொல்ல விரும்பினால் அதற்குத்தக்க சக்திவாய்ந்த அறிஞர் வேறுயாரும் இல்லை. ஒருவர் இருவர் இருந்தாலும் மார்வெலோடு போருக்கு நின்று தோல்வியுற விரும்பமாட்டார். மார்வெல் எழுதுவதும் உண்மை நிறைந்ததாக இருக்கும் பொழுது அதை மறுத்துரைப்பது எப்படி?

வேறுவிதமாக அடக்குவோம், சிறையிலிட்டு வாயை மூடிவிடுவோம் என்றால் அதுவும் இயலாத காரியம். மார்வெல் சட்ட சபை அங்கத்தினர். சபையில் கௌரவஸ்தானம் பெற்றவர். ஜனங்களின் பிரதிநிதி. தேச மக்களால் பெரிதும் போற்றப்படுபவர். அவர் மீது கைவைத்தால் உடனே பல அனர்த்தங்கள் விளைந்துவிடும். ஜனங்களைப் பகைத்து முதலாவது சார்லஸ் பட்ட பாட்டை இன்னும் இதற்குள் மறந்துவிடப் போமோ?

ஆனால் இப்படியே மார்வெல் எழுதிக் கொண்டிருக்க விட்டுவிடலாமோ? மார்வெல் எழுத எழுத ஜனங்கள் மனதில் ராஜத்துவேஷம் ஜனித்துவிடுமல்லவா? ஜனங்கள் கிளம்பிவிட்டால் அரசனுக்குப் புகலிடமேது? தலையிழக்க வேண்டியது தானே! தலையிழக்கச் செய்த ஆலிவர் கிராம்வெல் கட்சியைச் சேர்ந்த முக்யஸ்தர்களில் ஒருவரல்லரோ ஆண்ட்ரூ மார்வெலும்?

இங்ஙனம் யோசித்து ஒருநாள் சார்ல்ஸ் அரசன் தன் பிரதான மந்திரி டான்பி பிரபுவை அழைத்து "மார்வெல் எழுதுவதைப் பொறுக்க முடியவில்லை. அவரை அடக்கிவிட வேண்டுமே, அதற்கு வழி என்ன? நீர் என்ன செய்வீரோ அறியேன். எப்படியாவது அவரை நம் வசப்படுத்திவிட

வேண்டும்" என்று முறையிட்டுக் கொண்டான். மார்வெலை ஊமையாக்கி விடுவதில் அரசனுக்குள்ள அக்கறை அமைச்சனுக்கும் உண்டு. அரசன் தலை போகும் பொழுது அமைச்சன் தலை போகாமல் நிற்குமோ?


அரசன் அனுமதி அளித்துவிட்டதால் ஆனந்தமாய் டான்பி பிரபு மார்வெல் வீட்டைத் தேடிப் புறப்பட்டான். ஆனால் அவனுக்கு கவிஞர் வசிக்கும் வீடு இருக்குமிடந் தெரியாது. மார்வெல் என்ன மாளிகையில் வாழமுடியுமோ? அவர் பரமதரித்திரர். பாடகர் நிலைமை எந்தக் காலத்திலும் அப்படித் தானே. அதோடு அவர் ஜனங்கள் சார்பாய் நின்றவர். சர்க்கார் தயவு பெறாதவர். அதனால் அவர் ஹல் நகரத்திற்கு பிரதிநிதியாயிருந்தபடியால் அந்த ஊரார் கொடுத்த ஒரு சிறு தொகை கொண்டே அரிதில் காலங் கழித்து வந்தார். ஆகலால் அவருடைய சின்னஞ் சிறு குடிசில் ஏதோ ஒரு ஒழிந்த மூலை முடுக்கில்தானே இருக்க முடியும். டான்பி பெரிய பிரபு. பிரதானமந்திரி. அவருக்கு ஊரிலுள்ள மூலை முடுக்குகள் தெரியுமோ? அதனால் மார்வெல் இருந்த வீட்டை கண்டு கொள்ள மிகவும் அதிகமாகச் சிரமப்பட்டார்.

இறுதியில் வீட்டைக் கண்டு திடீரென்று உள்ளே நுழைந்தார். இக்காலத்தில் பல பிரமுகர்கள் தங்கள் அழகான இல்லங்களை "காட்டேஜ்" "வில்லா"—குடில்கள் என்றே அழைக்கும் வழக்கத்தை அறிவோம். ஸ்ரீ கிருஷ்ணன் பாண்டவர்க்காக துரியோதனனிடம் தூது சென்றபொழுது முதலில் விதுரன் அரண்மனையிலேயே போய் இருக்கிறார். அப்பொழுது விதுரன் "தாங்கள் வந்து தங்க இந்தக் குடில் என்ன மாதவம் செய்ததோ" என்று கூறி கண்ணனை வணங்


# ஹலோ!

எங்களிடம் எல்லாவிதமான போட்டோ காமிரா, பிளேட்டுகள், பேப்பர் பிலிம்கள் கிடைக்கும்.

"பவ்ஸ்ட்" என்கிற 8 விதமான போட்டோக்கள் அல்லது 4 முழு போட்டோக்கள் எடுப்பதற்கு ரூபாய் ஒன்றே.




## டி. எ. அஹராஜா,

123, சூலை பகோடா ரோடு, இரங்கூன்.

குகிறான். ஆனால் மார்வெல் அவ்விதம் கூற முடியுமோ? அவர் வாழ்ந்தவிடம் குடிலினும் குடிலே. சிறு குகை என்றுகூடச் செப்பிடலாம்.

டான்பி பிரபு குடிசைக்குள் கால் வைத்ததும் மார்வெல் எதிர்பாராத ஒருவர் வரவே அதிக ஆச்சரியமடைந்தார். வந்தவரை வரவேற்று "இந்த விஜபம் பெற எனக்குள்ள பாக்கியத்திற்கு எது காரணமோ" என்று மிக வினயமாய்க் கூறினார்.

"அரசரிடமிருந்து வருகின்றேன்" என்று பிரபு மறுமொழி தரவே மார்வெல் "அப்படியா, அரசன் பெருமான் திருவுளம் யாதோ?" என்று கேட்டார். "சமஸ்தானத்தில் ஒரு கௌரவ ஸ்தானம் வகிக்குமாறு விரும்புகின்றார்" என்று மந்திரி மொழிந்தார். அதைக் கேட்டதும் மார்வெல் "அரசர் ஆணை அறிய ஆனந்தம். ஆனால் அந்த ஸ்தானத்தை கௌரவத்தோடு வகிக்கமுடியுமோ? அரசருக்கு விரோதமாக வாக்களித்தால் ராஜ துரோகம்; அரசர் ஆணைப்படியே நடந்துவிட்டால் ஜனங்கள் நலன் பாதிக்கப்படலாம். அதனால் அரசர் என்னை ராஜ விஸ்வாசமுள்ளவர்களில் ஒருவன் என்று கருதுவாரானால் அதுவே எனக்குப் போதும். அவர் அருளும் பதவியை மறுப்பது அவருடைய நலத்திற்கே என்பதையும் கூறும்" என்று கூறினார்.

உத்தியோகம் வேண்டாம் என்று மார்வெல் மறுத்து விடுவார் என்று ஒரு நாளும் எதிர்பாராத பிரபுவுக்கு இது செய்வது என்று ஒன்றும் விளங்கவில்லை. ஆயினும் மந்திரி அல்லவா? திடீரென்று ஆயிரம் பவுன்கள் கொண்ட ஒரு பணப்பையை எடுத்து மேஜைமேல் வைத்து "அரசர் இதைத் தங்கட்கு அனுப்புகிறார், வேறு ஏதேனும் தேவையானால் வேண்டும் பொழுது கேட்கவும் கூறுகிறார்" என்றார்.

மார்வெல் குலுங்கக் குலுங்க நகைத்தார். "இதென்ன இப்படி என்னைக் கேலி செய்ய எண்ணுகிறீர்களா? எனக்கு என்ன தேவை? இருக்க இந்தக் குடில் உளது; உணவிற்கோ இதோ நிற்கும் இந்த வீட்டுக்காரி அம்மாளைக் கேளுங்கள்" என்று சொல்லிக்கொண்டே அந்த அம்மாளை நோக்கி "அம்மா எனக்கு உணவாக நேற்று என்ன தந்தீர்கள்" என்று வினவினார்.

"நேற்று ஒரு துண்டு இறைச்சி"—

"இன்று என்ன"?

"இன்று அதில் மீதியுள்ளது"

"சரி, நாளைக்கு அதிலுள்ள எலும்பைச் சூப் செய்து குடிப்பேன், போதாதா?" என்று மந்திரியிடம் கேட்டார். மந்திரி என்ன கூறுவார். ஒன்றும் சொல்ல நாவெழவில்லை. சுதந்திர ஜோதியைக் கண்டு திகைத்து பிரமித்து நின்றுவிட்டார். பின்னர் சிறிது நேரம் சென்றதும் ஒன்றும் மொழியாது வெளியே போய் விட்டார்.

ஸ்ரீ கிருஷ்ண லீலா படத்தை தயாரித்த சேலம் எஞ்சல் பிலிம் கம்பெனியாரால்
கல்கத்தா பயனியர் பிலிம் ஸ்டுடியோவில் பதின்மடங்கு உயர்வாய்
தயாரிக்கப்பட்ட மற்றோர் தமிழ் பேசும் படக்காட்சி,

# இரங்கூன் எம்பையர் டாக்கீஸில்

**12—1—35** முதல்

மகாபாரதத்தில் ருசிகரமான ஓர் முக்கிய பகுதியை தெரிந்தெடுத்து அதற்கேற்ற நடிக திரமணிகள் தென்னிந்திய நாடகமேடையிலும் பேசும் படக்காட்சிகளிலும் கிராம்போன் ரிக்கார்டுகளிலும் பெயர்பெற்று விளங்கும் உயரிய சுகசாரீர அதிஅபிநய ஆக்டர்களைக் கொண்டு சுத்தமான சப்தத்துடன் எடுக்கப்பட்ட

# துரௌபதி வஸ்திராபஹாரணம்

**16** பாகங்கள் **50** பாடல்கள்

முக்கிய நடிகர்கள்

தென்னிந்திய சினிமா
ராணியென விளங்கும்
மிஸ் T. P. ராஜலெக்ஷ்மி
சங்கீதகான
Mr. V. A. செல்லப்ப ஐயர்
முன் கிருஷ்ணலீலாவில்
இடைச்சியாக நடித்த
மிஸ் P. S. சிவபாக்கியம்
இடையனாக நடித்த
வாசுதேவ பிள்ளை
வாசுதேவராக நடித்த
பந்துலு ஐயர்
இந்தியன் சார்லிசாப்ளின்
C. S. சாமண்ணா ஐயர்
இன்னும் அனேகர்
சென்னை ராஜதானி நாடக
மேடைகளில் கியாதி பெற்று விளங்கும் நடிகர்களுமாவர்.






12—1—35 முதல் இரங்கூன் எம்பையர் டாக்கீஸில் நடை பெறும்
"துரௌபதி வஸ்திராபஹரண"த்தில் ஒருகாட்சி.

# கொடுக்கல் வாங்கல்.

திரு. ராம. பத்மநாபன்.

லேவாதேவி அல்லது கொடுக்கல் வாங்கல் என்பது சிறப்பாக பணம் கடன் கொடுத்து வாங்குவதையே குறிக்கிறது. தொன்று தொட்டு—சரித்திர காலத்திற்கு முன்னதாகவே—கொடுக்கல் வாங்கல் நமது இந்திய நாட்டில் நடந்து வந்திருப்பதாக பழங் காப்பியங்கள் மூலம் அறியக் கிடக்கிறது.

மனிதர்களுடைய தேவைகள் குறைந்திருந்த பண்டைய காலத்தில் பண்ட மாற்றுதலினாலேயே சமுதாயத்தின் வேண்டல்களெல்லாம் பூர்த்தி செய்யப்பட்டு வந்தன. நாகரீகம் வளர வளர மக்களின் ஆசைகளும் தேவைகளும் மிகுதிப்பட்டன. கையிலுள்ள பண்டங்களின் விலையை மதிப்பதற்கும், தனக்கு வேண்டிய பொருள்களின் மதிப்பை நிர்ணயிப்பதற்கும் இடையே ஒரு கருவி வேண்டியதிருந்தது. அக்கருவியையே பணமென்றும், அதைச் செலாவணி செய்பவர்களை பேங்கர்களென்றும், லேவாதேவிக்காரர்களென்றும் சொல்கிறோம். தமிழ் நாட்டில் அன்னார்களை "தனவைசியர்கள்" என்று சொல்வது மரபு.

அரசியலில் நெருக்கடி ஏற்பட்ட பொழுதெல்லாம் தனவைசியர்களின் உதவியை அரசர்களும் விரும்புவர். தமிழ் நாட்டுக்கதைகளில் இதற்கு சில சான்றுகள் உள. இவ்விதி தமிழ் நாட்டிற்கும் பொருந்தும். ஐரோப்பிய நாடுகளையெல்லாம் தன்னுடைய ஏக சக்கிராதிபத்தியத்திற்குள் கொண்டு வந்தும் திருப்தியடையாது கீழ் நாடுகளையும் ஜயிப்பதற்கு திட்டம் போட்டு படையெடுத்து வந்த நெப்போலியனை முறியடிக்க பெரும் உதவியாயிருந்தது ராத்சைல்டு என்ற தனவைசியரின் பண சகாயமேயாகும்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் பேங்கர்கள் செய்யும் சௌகரியங்களை சிறப்பாக பொறுத்திருக்கிறது. விவசாயம், வியாபாரம், கைத்தொழில்கள், போக்குவரவு சாதனங்கள் முதலிய சமுதாயத்தின் பல்வேறு துறைகளுக்கும் எவ்வளவுக் கெவ்வளவு சர்தகமாய் பண உதவி கிடைக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அவைகள் முன்னேறுவதற்கு இடமுண்டு. இன்று உலகத்தில் தலை சிறந்து விளங்கும் தேசங்களிலெல்லாம் வட்டி விகிதம் மிகக் குறைவாயிருப்பது கண்கூடு.

பேங்கர்களின் முக்கிய தொழில் பணத்தை உண்டாக்குவது; அதனை தேசத்திற்கு நன்மை பயக்கும் விதத்தில் செலாவணி செய்வது.

பணத்தை உண்டாக்குவது எப்படி? சர்க்காரில் நோட்டுகள் நாணயங்கள் வெளியிடுவதின் மூலம் பணத்தை உற்பத்தி செய்து வரவில்லையா? உண்மையில் இது சர்க்காருடைய கடமையன்று. பேங்கர்களின் கடமையே. ஆதலால் நம் நாட்டில் புதிதாக ஏற்படப் போகிற ரிசர்வ் பேங்குக்கு இத்தொழில் சட்ட பூர்வமாக கொடுக்கப் பட்டிருக்கின்றது. ரிசர்வ் பேங் ஏற்பட்டதும் அப்பேங்கின் பேரிலேயே நோட்டுகள் வெளியிடப் பெறும். இந்தியா கவர்ன்மெண்டு பேரால் நோட்டு வெளியிடுவதை நிறுத்திவிடுவார்கள்.

பொருளாதாரத் துறையில் முன்னணியில் நிற்கும் ஒவ்வொரு நாட்டிலும் இவ்வித பேங்குண்டு. இதற்கு மத்திய பேங்கு என்று சொல்லுவார்கள். பேங்கர்களின் பேங்கு என்றும் சொல்லுவதுமுண்டு. நாட்டின் பொருளாதார சம்பந்தமான சகலவற்றையும் கண்காணித்து வருவது அவ்வித பேங்கின் கடமையாகும். இவ்வித மத்திய பேங்கு பணம் உற்பத்தி செய்வதோடு, நாட்டிலுள்ள இதர பாங்குகளின் மூலம் நாடெங்

கும் பணத்தை செலாவணி செய்கிறது; பாவச் செய்கிறது.

இங்கு சர் டேனியல் ஹேமில்டன் நினைவு வருகிறது. கூட்டுறவு இயக்கத்தின் மூலம், படித்த வகுப்பினிடையே இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு அல்லும் பகலும் வங்காளத்தில் வேலை செய்து வரும் உத்தமர் இவர். விரிந்த மனமும் உயர்ந்த நோக்குமுள்ளவர். பொருளாதாரத்தைப் பற்றி சில சமயங்களில் அருமையான கருத்துக்களை வெளியிடுவார். அதாவது பணத்திற்கு மதிப்பு எங்கிருந்து வந்தது. மனிதர் கொடுக்கும் மதிப்புத்தானே? மனிதர்களுடைய உழைப்பையும், அவ்வுழைப்பின் பயனாய்க் கிடைக்கும் பொருள்களையும் அளப்பதற்கு ஒரு கருவிதானே? அதனை சரியான வழியில் உபயோகப்படுத்தாததினாலேயே நமது இந்திய நாட்டில் பல கஷ்டங்கள் தோன்றியிருக்கின்றன. இறைவன் அளித்த இயற்கை வசதிகளும், ஏராளமான மனிதச் செல்வமும் இந்நாட்டிலிருக்கிறது. இவைகளை இயக்குவதற்கு ஒன்று செய்ய வேண்டும். சர்க்காரிலோ அல்லது மத்திய பாங்கிலோ அதிகமான ஒரு ரூபாய் நோட்டுகள் வெளியிடவேண்டும். அதனை மாகாணங்கள் தோறும், ஜில்லாக்கள் தோறும், கிராமங்கள் தோறும், சில ஸ்தாபனங்கள் மூலம் பங்கிட்டுக் கொடுத்து ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏற்ற விவசாய முன்னேற்றத்திலோ, குடிசைக் கைத்தொழில்களிலோ


## பங்க லக்ஷ்மி

கூந்தல் வளரும் தைலம்.

சுத்தமான எண்ணெயில் வாசனையோடு தயாரிக்கப் பெற்றது. கூந்தலை வளரச் செய்யும் மூளையைக் குளிரச் செய்யும் இது டம்பத்துக்காக வல்ல வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

பத்து அவுன்ஸ் கொண்ட பாட்டில் விலை ரூபாய் ஒன்று.

**டே பிரதர்ஸ்,**

230, மொகல் வீதி,

இரங்கூன்.



இதர தொழில்களிலோ அக்கிராமத்திலுள்ள வேலை செய்யக்கூடிய அனைவரையும் எடு படும்படி செய்ய வேண்டும். இவ்வித முயற்சியினால் உண்டாகப் பெறும் பொருள்களை விற்று லாபத்தை எடுத்துக்கொண்டு வாங்கிய கடனுக்கு ஓர் பாகத்தைக் கொடுத்து வரச் செய்யவேண்டும். ஒரு சில வருடங்களில் சர்க்காரில் வெளியிட்ட நோட்டுகளெல்லாம் திரும்ப அவர்களுக்குக் கிடைத்துவிடும். தேசத்திலோ அனைவர்களும் சுபிட்சமாயிருப்பார்கள். இத்திட்டம் செயலில் கொண்டுவர முடியாதென்று சில பொருளியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். இவர்கள் கூற்று எவ்வாறாயினும் ஆகுக. சர்டாலியல் ஹாமில்டன் ஆலோசனை ஒரு மத்திய பாங்கின் முக்கிய கடமையை வலியுறுத்துகிறது.

பணத்தை உற்பத்தி செய்வது மத்திய பாங்கின் கடமையாயிருப்பது போல பணத்தை உண்டாக்குவது இதர பாங்கர்களின் கடமையாயிருக்கிறது. அதாவது நாட்டிலுள்ள மக்கள் செலவு போக மிஞ்சியதைப் புதைத்து வைக்காமலும், அநாவசியமான வெளிநாட்டுப் பகட்டுச் சாமான்களை வாங்கி வீணாக்காமலும், மிஞ்சியதைச் சேமித்து பேங்கர்களிடம் கொடுத்து வைக்கச் செய்ய வேண்டும். பேங்கர்கள் உலகெங்கும் சக்தியந் தவறாத சிலர்களாயிருக்கிறார்கள். சர்க்கார் பாண்டுகளை விட பேங்கர்களின் பேச்சு உறுதியிருக்கவேண்டும். பொதுஜனங்கள் பேங்கர்களிடம் அசையாத நம்பிக்கையை வைக்கத்தக்கவிதமாய் தங்களது பணங்களை யெல்லாம் பேங்கர்களிடம் கொடுத்துவைக்கவும் வேண்டியபொழுது பெற்றுக்கொள்ளவும் கூடிய விதமாய்—பேங்கில் தொழில் இருத்தல் வேண்டும். தங்களது சொந்தமுதலைக்கொண்டு தொழில் செய்வதை பேங்கிங் தொழில் என்று கூறுவதில்லை. அதற்கு


'சஞ்சாலா" ஊதுவத்தி,

மணமுள்ளது! மலிவானது!!

'உண்மை வெறும் புகழ்ச்சியில்லை'

பாரத பந்தர்,

110, 48-வது வீதி :: :: இரங்கூன்.

லேவாதேவி—மணிலெண்டிங்—என்று தான் பெயர். தங்களது சொந்த முதலோடு பொது மக்களின் பணத்தையும் ஜமாவாகப் பெற்று தொழில் செய்வதையே பேங்கிங் என்று சொல்கிறது.

இதுகாலை பேங்கர்களின் தொழில் மிக விரிந்து விட்டது. ஸ்தாவர சொத்துக்கள் ஜங்கம சொத்துக்கள், தங்கம், வெள்ளி வகையராக்கள் இவைகளை ஈடாக வைத்துக் கொண்டு கடன்கொடுத்தல்; கவர்ன்மெண்டு பாண்டுகள் குதாம்புகளிலுள்ள விலைபொருள்கள், ரயில்வே கப்பல்களில் ஏற்றப் பெற்ற பொருள்கள் இவைகளின் தஸ்தாவேஜுகளை வைத்துக்கொண்டு பணங் கொடுத்தல், நடப்புக் கணக்கு, தவணை கணக்கு, ஓவர் டிராப்ட் சேவிங்ஸ் பேங்கு முதலிய சௌகரியங்கள் செய்து கொடுத்தல், உண்டியல்கள் கொடுத்தல், வசூலித்தல், வியாபார பில்கள் வழங்குதல், அவைகளை வசூலித்தல், நாணயமாற்று, பணம் அனுப்பு வரவு வசதிகள், எஸ்டேட்டுகளுக்குடிரஸ்டியாயிருத்தல், தங்கம் வெள்ளி முதலியவை விற்றல் வாங்குதல், இன்னோரன்ன பல்வேறு தொழில்களை பேங்கர்கள் இதுகாலை செய்கிறார்கள்.

நம் நாடெங்கும் பரவியிருக்கின்ற தனவணிகர்கள்—சௌகார்கள்—இவர்களின் எண்ணிக்கை, இவர்களது முதல் தொகை, இவர்களிடமுள்ள ஜமால் தொகை—இவைகட்கு சரியான நம்பத்தக்க புள்ளி விபரங்கள் கிடைக்கவில்லை. எனினும் இந்திய நாட்டின் பொருளாதாரத்திற்கு இவர்களே ஜீவநாடி என்று பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான வருடங்களாய் விவசாயிகளுக்கு இவர்களே உற்ற துணைவர்கள். மேல்நாட்டு முறையில் தொழில் செய்யும் பேங்கர்களுடைய வட்டி விகிதத்தைவிட இவர்கள் வாங்கும் வட்டி விகிதம் அதிகமாயிருந்தாலும், பஞ்சகாலத்திலும்


# THE JUPITER GENERAL INSURANCE Co Ltd.,

(இந்தியாவில் இணைக்கப் பெற்றது.)

இந்தியர் மூலதனத்தில் இந்தியர்கட்காக உழைக்கும் இந்தியக் கம்பெனி.

## நெருப்பு, கப்பல், மோட்டார், ஆயுள் முதலிய இன்ஷ்யூரன்ஸ்கள்.

**ஜில்லாக்கள் தோறும் ஏஜண்டுகள் தேவை.**

மானேஜிங் ஏஜண்ட்ஸ்
லால்ஜீ நாரன்ஜி அன் கோ, பம்பாய்.
டெலிபோன்—W—734.

கிளைக்காரியாலயம்
644, மெர்ச்சண்ட் தெரு, இரங்கூன்.
தந்திவிலாசம்:—குரு

விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படுங் காலத்தும், இவர்கள் பல சமயம் வட்டி மாத்திரமின்றி முதல் தொகையில் ஒரு பாகத்தையும் இழக்க நேரிடுகிறது.

விவசாயிகளுடைய கடன் பிரச்னை கொஞ்சகாலமாக பத்திரிகைகளிலும், சட்டசபைகளிலும், வட்டமேஜை மகாநாடுகளிலும், தேசபக்தர்கள் கூட்டங்களிலும் வெகுவாய் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலுள்ள சமுதாய தீமைகட்கெல்லாம் லேவாதேவிக் காரர்களே காரணஸ்தர்களென்று பொருள்படும்படி ஆங்கிலநாட்டு அரசியல் கட்சியினர்களில் ஒரு சாரார் சொல்லி வருகின்றனர். லேவாதேவிக்காரர்களை மிகவும் பாதிக்கும்படியான சட்டங்கள் பஞ்சாபிலும் ஐக்கிய மாகாணத்திலும்சமீபத்தில் கொண்டுவந்துள்ளார்கள். சென்னை மாகாணத்தில் எவ்விதமான சட்டம்கொண்டுவரலாம் என்று ஆலோசிக்கப்பெற்று வருகிறது. இதர மாகாணங்களிலும் கடுமையான சட்டங்கள் கொஞ்ச காலத்திற்குள் கொண்டுவரப்படலாம்.

லேவாதேவிக்காரர்களைப் பற்றி பலரும் குறை கூறுகின்றனரேதவிர, விவசாயிகளின் தற்பொழுதைய பரிதாபகரமான நிலைமைக்கு அடிப்படையான காரணங்களை ஆய்ந்து அவைகட்குப் பரிகாரந் தேடக்காணோம். லேவாதேவித் தொழில் முறையை சீர் செய்தால் மாத்திரம் விமோசனம் வந்துவிடாது. விவசாயிகளின் இதர குறைகளையும் உடனே நீக்குதல் வேண்டும்.

அநாவசியமான, சுப அசுப சடங்குகளில் பணத்தை விரயஞ் செய்தல், கல்வி யின்மை நில அமைப்புக்களை பாகஞ் செய்து கொள்வதில் சின்னாபின்ன மாக்குதல், அதிகமான நிலவரி, விவசாயிகளின் தேகவலிமை குறைந்து வருவது, ஆடுமாடுகளின் பாதுகாப்புக் குறைவு, மகசூலை நல்ல விலைக்கு விற்பதற்கு ஏற்ற சௌகரியங்களில்லாதிருத்தல் இவ்விதமான பல குறைகள் விவசாயிகட்கிருக்கின்றன. இவைகட்கு முதலில் விமோசனம் தேடாத வரையில் அவர்களது கடன் பிரச்னையைத் திருப்தி கரமாகத் தீர்த்து வைக்க முடியாது.

நம் நாட்டின் முக்கிய தொழில் விவசாயம். நம் மக்களிற் பெரும்பாலோர் விவசாயத்தையே நம்பியவர்கள். விவசாயிகட்கு முக்கிய ஊன்றுகோலாயிருப்பது சவகார்கள், தனவணிகர்கள். சமுதாயத்தில் இவ்வளவு முக்கிய ஸ்தானம் வகிக்கும் தனவணிகர்கட்கு நமது நாட்டில் ஏற்படப்போகும் ரிசர்வ் பேங்கில் என்ன சௌகரியங்கள் செய்து கொடுக்கப் போகிறார்கள்? தனவணிகர்கட்கும் ரிசர்வ் பேங்கிற்கும் எவ்விதமான தொடர்பு இருந்துவரும்? தனவணிகர்களின் மூலமாக விவசாயிகட்கு ரிசர்வ் பேங்க் என்னென்ன உதவிகள் செய்யப் போகிறது? இவைகளெல்லாம் இன்னும் நிச்சயிக்கப்பெறவில்லை. நாட்டின் பெரும் பகுதியினரான விவசாயிகட்கு சீரிய முறையில் பண சகாயம் கிடைப்பதற்கு தக்க சட்ட திட்டங்கள் ஏற்படுத்தாத வரையில் ரிசர்வ் பாங்க் இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கு ஏற்பட்ட பாங்கி என்று எவ்விதம் சொல்வது.

தனவணிகர்களைத் தவிர்த்து மேல் நாட்டு முறையில் பல பேங்குகள் நம் நாட்டில் ஆரம்பிக்கப்பெற்று நல்ல முறையில் விர்த்தியாகிக்கொண்டு வருகின்றன. மற்றும் கூட்டுறவு பேங்குகளும், நிதிபேங்குகளும், நில மார்க்கேஜ் பேங்குகளும் ஆங்காங்கு ஏற்பட்டு சமுதாயத்தின் பல தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது. எக்ஸ்சேஞ் பேங்குகள் என்று சொல்லப்பெறும் வெளிநாட்டு பேங்குகளும் நம் நாட்டில் ஏராளமான தொழில் செய்து நல்ல ஊதியம் பெற்றுவருகின்றன. ரிசர்வ் பேங் இனிதானே ஏற்படப் போகிறது? இப்பொழுது கவர்ன்மெண்டு பேங்காக இருந்து வருவது இம்பீரியல்பேங் தான்.

பேங்குகளைக் குறித்து 1932 வருடம் முடிய உள்ள விபரங்கட்கு சமீபத்தில் சர்க்காரில் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்கள் அதன்படி எக்சேஞ் பேங்குகளின் கிளை ஸ்தாபனங்கள் நமது நாட்டில் 83 உள்ளன. இந்தியன் ஜாயிண்டு ஸ்டாக் பேங்குகள் 171ம் அவைகளின் கிளைகள் 551ம் இருக்கின்றன. இம்பீரியல் பேங்குக்கு மூன்று

தலைமை ஆபீஸ்களுண்டு. அதற்கு 161 கிளைகளுண்டு. இம்பீரியல் பேங்கிற்கு 5 கோடியே 62½ லட்சம் ரூபாய் மூலதனமும், 5 கோடியே 43 லட்சம் சேம நிதியும் உண்டு. கவர்ன்மெண்டு டெபாசிட் 7 கோடியே 6 லக்ஷமும், பொதுஜனங்களுடைய டெபாசிட்டுகள் 68 கோடியே 36 லக்ஷமும் ரொக்க யிருப்பு 20 கோடியே 97 லட்சமும் இந்தியாவில் வேலை செய்யும் எக்ஸ்சேஞ்சு பேங்குகளுக்கு 17 கோடியே 40 லட்சம் பவுன் மூலதனம் உண்டு. அவர்களிடம் 550லட்சம் பவுன்பொதுஜன டெபாசிட்டும் ரொக்கயிருப்பு70 லட்சம்பவுனும் இருந்தது.

ஒரு லட்சத்திற்குமேல் மூலதனங்கொண்ட இந்தியன் ஜாயிண்டு ஸ்டாக் பேங்குகள் 83 தான் உள்ளன. அவற்றின் மூலதனம் 1342 லட்ச ரூபாய். அவற்றிலுள்ள பொதுஜனங்களின் சமால் பணம் 76,16 லட்ச ரூபாய். ரொக்கயிருப்பு 10,41 லட்சம்.

மேற்சொன்ன மூன்றுவகை பேங்குகளிலும் பொதுஜனங்கள் டெபாசிட் செய்திருக்கும் தொகை 225கோடியாகும். அதில் இம்பீரியல் பேங்கில் 100க்கு 34 வீதமும். எக்ஸ்சேஞ் பேங்குகளில் 100க்கு 32 வீதமும் இந்தியன் ஜாயிண்ட் ஸ்டாக் பேங்குகளில் 100க்கு 34 வீதமும் இருக்கிறது.

இந்தியன் கூட்டுறவு பேங்குகளில் 5லக்ஷ ரூபாய்க்கு மேல் மூலதனங் கொண்டது 32 பேங்குகள் உள்ளன. ஒரு லக்ஷத்திற்கு மேல் 5 லக்ஷத்திற்குள் மூலதனங் கொண்டவை 184 பேங்குகளிருக்கின்றன. மொத்த மூலதனமும், சேம நிதியும் 7 கோடி ரூபாயிருக்கிறது. டெபாசிட்தொகையும்கடன்வாங்கிய தொகையும் 37 கோடி ரூபாயிருக்கிறது.

கூட்டுறவு இபக்கத்தை இன்னும் அபிவிர்த்திசெப்பவேண்டும். விவசாயிகளின் சேக்ஷமம் கூட்டுறவு இபக்கத்தில் தானிருக்கிறது.

தன் கையே தனக்குதவி. வெளி நாடுகளில் இவ்வியக்கம் எவ்வளவோ வலிமை பெற்றிருக்கிறது. நம் நாட்டில் மாத்திரம் ஏன் வளர்ச்சியுறக் கூடாது. சர்க்காரில் இவ்வியக்கத்திற்கு இன்னும் பல வழிகளில் உதவி செய்யலாம். ஆனால் அவ்வியக்கம் பிற உதவியை அதிகமாய் நம்புதல் கூடாது. விவசாயிகள் ஒற்றுமையின் வலிமையை உணர்ந்து கொண்டுவிட்டால், தங்கட்கு வேண்டிய சௌகரியங்களையெல்லாம் வெகு எளிதில் அடைவார்கள்.

சங்கீதப் பிரியர்களே !
வந்துவிட்டது!

கிராமபோன் அபிமானிகளே !
வந்துவிட்டது!!

# மதுரைவீரன் செட்

உங்கள் மனதை மகிழ்விக்க
வந்துவிட்டது !
5 ரிகார்டுகள் கொண்ட செட்
**உண்மையான காதல்**
வீரத்தன்மை, பக்தி முதலியன
ஒருங்கே அமைந்தது.
விலை ரூபாய் 13.12.0

குறிப்பு:- ஓடியன், கொலம்பியா, டுவின்,
ஹட்சின்ஸ் ரிகார்டு செட்களும்
குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

வெளியூர் ஆர்டர்களுக்கு தபால்
செலவின்றி அனுப்பப்படும்.

எங்கும் சப் ஏஜண்டுகள் தேவை!

ஆர். கௌரி அன் கோ, 50, டல்ஹவுஸி வீதி, ரங்கூன்.

# ரங்கூன் மேயர்



ரங்கூன் நகரசபைக்குத் தலைவராகத்
தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கும்
ஊச்சோஸான்.

# தனவைசிய இளைஞர் சங்கம்.

திரு. மு. சோமசுந்தரஞ் செட்டியார்.
(காரியதரிசி கம்பை தனவைசியர் கல்விக்கழகம்)

உலகம் முழுதும் சீர்திருத்த ஆர்வமிகுந்து எல்லாத் துறையிலும் முன்னேறிக் கொண்டு வருகின்றது. அதேபோல் நம் இந்தியாவில் வசிக்கும் ஒவ்வொரு சமூகத்தாரும் தத்தம் குறைபாடு களைந்து நாட்டின் முன்னணியில் வர விழைகின்றனர். இதையெல்லாம் அறிவுக் கண்ணால் பார்த்த நம் சமூகப் பெரியார்கள் சிலரும் இளைஞர்கள் பலரும் உலகத்தோடொத்து வாழ வேண்டுமென்ற பெருநோக்குடையவர்களாய் ஆங்காங்கு தோற்றுவித்த இயக்கங்கள் பல. அவற்றிற் சில பலத்த எதிர்ப்பினாலும் அங்கத்தினர்களின் ஊக்கக் குறைவினாலும் நிர்வாகஊழலினாலும் மறைந்து போயின எனினும் இன்னும் நிலை பெற்று உயர்ந்த முறையில் வேலை செய்து வரும் ஸ்தாபனங்கள் பலவுள.

அவற்றில் ரெங்கூனிலுள்ள "தனவைசிய இளைஞர் சங்கம்" ஒன்று என்று கூறின் மிகையாகாது. அது தோன்றிப் பதினன்கு வருடங்கட்கு மேலாகின்றன. ஆரம்பத்தில் பெரும்பாலும் சிறுவர்களே அதில் அங்கம் பெற்றிருந்தார்கள் என்றாலும் அதன் நலன் ஓர்ந்த சில வருடங்களுக் குள்ளேயே நம் சமூக இளைஞர்கள் பலரும் பெரியார்கள் பலரும் அதன் அங்கத்தினர்களாகவும் நிர்வாகஸ்தர்களாகவும் சேர்ந்து பேரூக்கங் காட்டத் தலைப்பட்டனர். பலருடைய ஒத்துழைப்பினாலும் அது செய்திருக்கும் வேலைகள் மிகப் பாராட்டற் குரியதாகும். ஒவ்வொரு வருடமும் மகாநாடு கூட்டி நம் சமூகத்தின் பழக்க வழக்கங்களை முரட்டுப் பிடியாக பிடித்துக்கொண்டு சீர்திருத்த வாதிகளை வாயில் வந்தவாறுதிட்டுவதோடு அமையாது இயன்றால் அவர்கட்கு எத்தகைய கெடுதலும் செய்யத் தயாராயிருந்த ஆண்டில் முதிர்ந்தோரின் எதிர்ப்பைச் சிறிதும் பொருட்படுத்தாது பெண்களை உடனழைத்து வருதல், விதவா விவாகம் போன்ற தீர்மானங்களை வெளிப்படையாக முதன் முதலில் கொண்டு வந்து நிறைவேற்றிய பெருமை இச்சங்கத்திற்கே உரியதாகும். மேலும் செய்த தீர்மானங்களை எழுத்தளவில் பேச்சளவில் நிறுத்திவிடாது செய்கையிற் கொண்டு வருவதற்கு இதன் அங்கத்தினர்கள் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியினாற்றான் இன்று பர்மாவிலும் மலேயா சிலோன் முதலிய நாடுகளிலும் நம்மவர் பலர் மனைவி மக்களுடன் வருகின்றார்களென்றால் இதனை மறுப்பவர் யார்? அடுத்தபடியாக விதவா விவாகத்தைப்பற்றி என்ன என்று நண்பர்கள் ஒரு கேள்வி போடலாம். அது நம் நாட்டில் நடக்க வேண்டிய விஷயமாதலால் இங்கிருந்து அவ்வளவு தீவிரமாக வேலை செய்ய இயலாது போயிற்று என்றாலும் விதவா விவாகம் என்று சொன்ன மாத்திரத்திலே சீறி விழுந்த பழுத்த கிழவர்களெல்லாம் இப்பொழுது தாங்கள் ஒப்புக்கொள்வதோடமையாது பிறருக்கு அதன் அவசியத்தை எடுத்தியம்புவதில் ஆர்வமுடையவர்களாயிருக்கின்றார்கள் என்ற ஒன்றினாலேயே அது மிக விரைவில் செய்கையில் வந்துவிடுமென்பதை நண்பர்கள் உணரலாம்.

இன்னும் சமூக சீர்திருத்த சம்பந்தமாக இச் சங்கம் பல வேலைகள் செய்தது. எவ்வேலைக்கும் கல்வி அடிப்படையானதால் நம் சிறுவர்களும் சிறுமிகளும் தக்க கல்வி பெற்றாலொழிய சீர்திருத்தம் பகற்கனவாகவே முடியுமென்பதை அநுபவத்தில் உணர்ந்து இச் சங்கத்தின் சிறிய மூலதனத்திலிருந்தே 1921ஆம் செப்டம்பர் மீ நமது சிறுவர்கட்

கென ஓர் குருகுலம் ஸ்தாபிக்கப் பெற்றது. ஆரம்பத்தில் ஏழு மாணவர்களே பயின்றார் கள் என்றாலும் சங்கத்தாரின் பெரு முயற்சியால் மிக விரைவில் அதிகமான மாணவர்கள் வந்து சேர்ந்தனர். மாணவர் அதிகரிக்கதும் பொருள் உதவி அவசியமாயிற்று. பர்மா நகரத்தார்களிடம் முறையிட அவர்களும் கல்வியின் அவசியத்தை நன்குணர்ந்து பொருளுதவி செய்ய முன்வந்ததோடு குருகுலத்தை நிர்வகிப்பதற்கு நிறுவிய டிரஸ்டில் அங்கம்பெறவும் ஒப்பினர். எனவே நாட்டுக்கோட்டைச் செட்டியார் எஜுகேஷனல்டிரஸ்டுஎன்ற ஸ்தாபனத்தின் கீழ் செட்டியார் ரெஸிடென்ஷியல் ஐஸ்கூல் என்ற பெயரால் மேற்கண்ட குருகுலம் கம்பையில் மிக உயர்ந்த நிலையில் நடைபெற்று வருகிறது. இவ்வமயம் 200 மாணவர்கள் பயில்கின்றார்கள். (இதர விஷயங்கள் அவ்வறிக்கை மூலம் தெரிந்து கொண்டிருக்கலாம்) ஏன்? என்றும் அதன் நிர்வாக அங்கத்தினர்களில் எழுவர் இளைஞர் சங்கச் சார்பாக இருந்து வருகின்றார்கள். இதுகாறும் செட்டியார் சமூகத்தினர் அச்சமூகத்தின் நலன் கருதி ஏற்படுத்திய ஸ்தாபனங்களில் மிக உயர்ந்ததென ஒன்றைக் குறிப்பிட வேண்டுமேல் அதுதான் கம்பைக் கல்விநிலையமென பல அறிஞர்கள் கூற கேள்விப்பட்டிருக்கிறேன்.

நிற்கநமதுசிறுவர்கள் கம்பையில்பயில்வதுடன் பிற கல்லூரிகளிலும் பயில்கின்றார்கள். படித்து வெளிவந்த இளைஞர்களும் பலரிருக்கின்றார்கள். கல்வியும் உலக ஞானமும் நிறம்பிய பெரியோர்களும் பலரிருக்கின்றார்கள். இவர்களெல்லாம் வெளி நாட்டிற்கு வந்து சீர்திருத்த வாழ்க்கையோடுள்ள பல அறிஞர்களுடன் பழகித் தத்தம் வாழ்க்கையையும் உயர்ந்த முறையில் மாற்றவேண்டுமென்ற வேட்கையுடையவர்களாக தம் தாய் நாட்டிற் கேகுகின்றார்கள். கல்வியறிவில்லாப் பெண்ணுலகத்தினுள் புகுந்ததும் எங்கும் அந்தகாரம் சூழ்ந்திருக்கிறது. அப்பிரமாண்டமான இருளுலகத்தில் இவர்கள் கொண்டுள்ள சீர்திருத்த எண்ணம் என்னும் மின்மினிப் பூச்சி சிறிது உருவத்தை வெளியில் காட்ட ஆரம்பித்தால் அவ்வுலகில் வாழும் பெண்கள் இப்பூச்சியை உயிருடன்விட்டால் எங்கும் பரவி நம் உலகத்தில் ஓர் தொத்து வியாதியை உண்டாக்கிவிடுமென எண்ணி எல்லோருங்கூடி ஒரே நசுக்காக நசுக்கிவிடுகிறார்கள். எனவே சீர்திருத்த வேட்கையுள்ளோரில் பலர் மனம் சோர்ந்து அசைவற்று இருந்துவிடுகின்றனர். சிலர் இவ்விருளுலகத்தை விட்டு வேறு உலகத்திற்கு சென்று கொண்டும் செல்ல முயற்சித்துக் கொண்டும் இருக்கின்றனர். நம் சமூகத்தில் செல்வாக்குள்ள செல்வர்களானாலும் சரி, அறிவு நிரம்பிய ஆன்றோரானாலும் சரி, சமூகச் சடங்குகளைப் பொறுத்த வரையில் அவ் அந்தகார உலகத்தில் கிடந்து அவதியுறவேண்டியிருக்கிறதென்பதை யாரே மறுப்பவர்.

அன்பர்களே, அந்தகார உலகத்தைவிட்டு அகன்று விடவேண்டுமென்று மட்டும்நினைப்பது ஆன்றோர்கட் கழகல்ல. இருளை ஓட்டுவதற்கு வேண்டிய சாதனங்கள் என்ன என்பதை யோசித்து அவற்றை அங்கு கொண்டு வந்துவிடுவோமே யானால் இருள் இருந்த இடம் தெரியாது ஓடிவிடும்,உடனே எங்கும் பிரகாசம் உண்டாகும். அப்பொழுது சீர்திருத்த வாதியெனச் சிலரிருக்க வேண்டிய அவசியமில்லாமலே போய்விடுமல்லவா? ஆகலான் புற இருளை ஓட்டும் வெளிச்சம் போன்று அக இருளை ஓட்டும் அறிவைப் பெறுவதற்கு நம் சிறுமிகட்கென ஓர் குருகுலம் நம் நாட்டில் நிறுவ வேண்டியது இக்காலத்து இன்றியமையாத ஒன்றாகும். நம் பெண்களிற் சிலர் படித்திருக்கின்றார்கள் என்றாலும் நிறைந்த கல்வி யுடையவர் யாரையும் பார்த்தற்கியலவில்லை. பெண்கள் கல்வி பெறாத வரையில் நாம் என்னதான்சீர்திருத்தம் பேசினும், எழுதினும் அவையெல்லாம் விழலுக் கிறைத்த நீராகவே முடியும். இதன் அவசியத்தையுணர்ந்து நமது சிறுவர்கட்கு குருகுலம் கண்ட இளைஞர் சங்கத்தாரே சிறுமிகட்கும் ஓர் குருகுலம் காணுதல் நலமென பல அன்பர்கள் விரும்புகின்றனர் என்றாலும் இவ்விஷயம் மிகப்பெரிது. இதனை தனவைசிய இளைஞர் சங்கத்தார் நடத்துவதானால் இதற்கென ஓர் ஸ்தாபனம் நமது

தாய் நாட்டில் நிறுவவேண்டும். அதில் இளைஞர், பெரியோர், ஆண், பெண் என்ற பாகுபாடின்றி எல்லோரும் அங்கத்தினர்களாகச் சேரவேண்டும். செல்வவந்தர்கள் பெரும் பொருள் கொடுத்துதவ முன்வர வேண்டும். மற்றவர்களும் அவரவர் தகுதிக்கேற்பப் பொருள் கொடுக்கவேண்டியது கடமையென்பதை உணரவேண்டும். மேலும் இவ் விஷயத்தில் நம் சமூகத்தினரெல்லோரும் தத்தம் மனம் வாக்கு காரியங்களினால் என்னென்ன உதவி செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்தே தீருவோமென உறுதியுடையவராய் வேலை செய்தல் வேண்டும். இப்படியெல்லாம் செய்து மிக விரைவில் நமது நாட்டில் ஒரு குருகுலம் கண்டு அதில் நமது சிறுமிகளை யெல்லாம் குறைத்தது ஐந்தாண்டுகளாவது பயிலும்படி செய்வோமானால் இப்பொழுது நாம் காணும் இருளுலகம் அறிவுலகமாகத் திகழுமென்பதற்கு யாது தடை? பெரியோர்களே!

சீர்திருத்தங்களைப் பற்றி பேசப் புகுங்கால் பலருக்கும் பல அபிப்பிராயங்கள் தோன்றுவது இயல்பு. விதவா விவாகம் கலப்பு மணம் போன்ற விஷயங்களை ஆதரிப்பவர்களும் பலரிருக்கின்றார்கள். எதிர்ப்பவர்களும் சிலரிருக்கின்றார்கள். ஆனால் பெண்கல்வி கூடாதெனக்கூறும் அவ்வளவு பிற்போக்காளர் யாரும் நமது சமூகத்தில் இவ்வமயம் இல்லை யென நிச்சயமாகக் கூறலாம். எனவே இது யாவரும் ஆதரிக்க வேண்டிய செய்கையாகையால் மிக விரைவில் கொண்டுவர வேண்டிய விஷயமாகும். ஆகலான் நமது தனவைசிய இளைஞர் சங்கத்தின் அங்கத்தினர்கள் இதில் பேரூக்கங் காட்டி வேண்டியன செய்வார்களென நம்புவதுடன் அவர்கள் முயற்சியில் யாவரும் கலந்துகொண்டு வேண்டிய உதவிகள் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

# தாயின் கடிதம்

இங்கிலாந்தின்-குதிரை வீரரும், இராஜ தந்திரியும், புலவருமான ஸர் ரிச்சர்ட் வ்வேன்ஷோ மனைவியார் (Lady Anne Fanshawe) தமது மகனுக்கெழுதியவை.

அருமை மிக்க எனது தனிப் புதல்வ, குறிப்பிடத் தகுந்த உனது குடும்பத்தின் நடவடிக்கைகளையும் சந்தர்ப்பங்களையும், சிறப்பாக உன் தந்தையின் மிகவும் சிறந்த நடவடிக்கைகளையும் உனக்குத் தெரிவிப்பது நன்றென நினைக்கின்றேன். நியாயமான மற்றவர்களின் கீர்த்திகளில் பெருமைப்படத்தக்க சில வாக்கியங்களை — யாதொரு விருப்பும் வெறுப்புமின்றி—வெளியிடுவதே எனது வாழ்வின் அவசியமுமாகும். இதுவே இச்சம்பவத்தில் என் குறிக்கோள். உதாரணங்களால் அவற்றை நன்றாய் அறிந்து கொண்டு, உலகத்தில் உனது நிலைமைக்குத் தகுந்தவைகளை அநுசரித்து நமக்கு நேர்ந்த பொல்லாங்குகளைக் கடவுளருளால் தவிர்க்க முயற்சி செய்.

புறாவைப்போல் கள்ளங் கபடற்றவனாயிரு. ஆனால் விரியன் பாம்பைப்போல் ஞானமுள்ளவனாயிரு. அதிர்ஷ்டத்தின் மிகப் பெரிய விளிம்புகளில் இப்பாடம் வழி காட்டட்டும். சோம்பலை வெறு. எல்லாப் பேராசைகளையும் தடு. சொல்லிலும் நடத்தையிலும் உண்மையானவனாயிரு. அவசியமின்றி அபிப்பிராயம் சொல்லாதே. அவசியமானால் நன்றாய் யோசித்து தெளிவாக நியாயஞ் சொல். எண்ணங்களிலும் வார்த்தைகளிலும் காரியங்களிலும் அன்பு செலுத்து. உனக்குச் செய்த தீங்குகளை மன்னிப்பதற்கு என்றுந் தயாராயிரு. நன்மையைப் பெற்றுக் கொள்வதைப் பார்க்கிலும் நன்மையைச் செய்வதற்கு அதிக ஆனந்தம் கொள்.

கடவுளும் இயற்கையும் கட்டளையிடுகிறவற்றிற்கு மனம் ஒருமித்துக் கடமையும் பணிவும் உள்ளவனாய் நட. நண்பனிடத்தில் நட்பை மிகத் தெய்வீகமாகப் போற்று. உலகத்தில் மிகப்பெரிய பந்தம் அதுவேயாம்; அந்நட்பு நற்குணம் என்ற அஸ்திவாரம் இடப் பெற்றிருக்கிறதா வென்று உண்மையறிந்து கொள். ஏனென்றால் அதைப் போன்று மற்றவை அத்தகைய சந்தோஷகாமாகவும் என்றும் நிலைத்திருப்பதாகவு மில்லை.

உன்னைப் படைத்த கடவுளைத் திருப்தி செய்யத் தக்க விதமாக வாழ்க்கைப் பொருளைச் சீர்திருத்திக்கொண்டு எப்பொழுதும் மகிழ்வுள்ளவனாக முயற்சி செய். உன் ஆத்மாவின் நலனுக்

காதல், அறிவின் வளர்ச்சிக் காதல், ஆரோக்கியத்திற் காதல், பூஸ்திதிக் (Estate) காதல் உழைக்கா விட்டால் அது பெரிய தவறாகுமென நினை. ஏனென்றால் இவைகளே மிக இன்பமாய்ச் சென்ற நாட்களாவதோடு கூட முதுமைப் பருவத்தி லடையும் பலமின்மையால் விளையும் குறைபாடுகளை நிவர்த்திக்கத் தகுந்த உபகாரணங்களை உண்டாக்கித் தர மிக முக்கியமானவைகளாய் அப்பருவத்திலும் மகிழ்வை விளைவிக்கும் ஒரு துஷ்ட இளைஞன் முதுமைப் பருவத்தில் திருப்தியும் மகிழ்வு முள்ளவனா யிருந்ததை நாம் என்றுங் கண்டோமில்லை; ஆனால், ஆதாவின்றி அழிந்துபடக் காண்கின்றோம்.

நீ முன்னேற்றம் அடையத் தக்க நற்குணம் படைத்தவர்களையே என்றும் தோழமை கொண்டு உன்னையும் அதிர்ஷ்டத்தையும் நாடோறும் சில மணி நேரங்கள் பரீக்ஷித்துப் பார்த்துக் கொள். ஓயாத சம்பாஷணையாலும் புதிய எண்ணத்தாலும் உன்மனதையும் அதிர்ஷ்டத்தையும் ஒருவகையாக அடக்கிக் கொள்ளலாம். "தோழர்கள் எப்படியோ, அப்படியே அவனும்" எனும் பழமொழியை ஞாபகத்தில் வை. புகழத்தக்க நடத்தையுடையவனாயிரு. பூலோகத்தில் எதை விரும்புகிறாயோ அதுவே மேலோகத்தில் உன் பங்காயிருக்குமென நினை.

உன் அதிர்ஷ்டத்தை ஜாக்கிரதையாக நிர்வகி. இதற்குப் பிறகும் எல்லாச் சமயங்களிலும் கடவுளிடம் கணக்குக் கொடுக்க வேண்டுமென்பதை மறவாதே.

உன் மூலம் கடவுள் அந்த ஆசீர்வாதச்சாயையை அருளினாலொழிய நான் என்றும் உயிரோடு உண்மையுடலைக்காண முடியாதஉன் தந்தையை நினைவில் வை. கடவுள் உன் தந்தையை மீண்டும் தன்னிடம் அழைத்துக் கொண்ட பொழுது நீ (பிறந்து) பத்துமாதம் பத்து நாள், உனது முன்னேற்றத்திற்காக உன் தந்தையைக் குறித்தஎல்லா உண்மைகளையும் பாரபட்சமின்றி இயம்புவேன்.

அவர் மனிதர்களில் மிக வளர்ச்சியும் அதற்குத் தகுந்த அவயவ ஆகிருதியும் பலமும் உள்ளவர். ரத்த நிறமான மேனித் தோற்றம்; தோல் மிக அழகு, உரோமம் இருண்ட கபில நிறமாகவும் மிக நீளமில்லாமல் மிகச் சுருண்டு மிருக்கும். கண்கள் கருமைகலந்த வெண்மையாகவும் ஊடுருவிப் பாய்வதாகவுமிருக்கும். உயர்ந்த மூக்கு. கருணையும் ஞானமுமுள்ள முகத் தோற்றம். நல்ல இயக்கம் தெளிவும் வெளிப்படையும் அமைந்த பேச்சு. அவர் ஒரு பொழுதும் சவாத் செய்ததில்லை. ஆனால் உலாவ (நடக்கப்)போவார்; அதுவும் பெரும்பாலாய் ஏதாவதொரு புஸ்தகத்தை அநேகந் தடவைகளிற் பாடற் பிரபந்தங்களைச் கையிலெடுத்துக்கொண்டு செல்வார். அதன் மூலம் சோம்பல் நேரத்தைக் கழிப்பார். நல்ல காற்றைச் சுவாசிக்கச் சில வேலைகளில் குதிரைச் சவாரி செய்வார். ஆனால் என்னுடன் ஒரு கோச் வண்டியில் சில மைல்தூரங்கள் சென்று அவருக்கு மிகப் பிரியமான எந்த விஷயத்தையாவது சம்பாஷிப்பதில் அதிக மகிழ்வடைவார்.

கடவுளுக்கும் தேசத்துக்கும் நண்பனுக்கும் தொண்டாற்றி முன்னணியில் நிற்பதை மிகவும் கடமைப்பாடாகக் கருதுவார். சம்பாஷணையில் மகிழ்வார். அறிஞர்களின் வாக்கியங்களையும் அவர்களின் சரிதைகளையுங் கலந்து அவர் சம்பாஷிக்கும் திறம் மிக இன்பமாயிருக்கும். ஆயினும் பேரறிவுபொருந்திய தன்எண்ணத்தை என்னைத் தவிர மற்றவர்களிடம் சொல்லார், அவர் துயரங்களை ஒரு பொழுதும் என்னிடம் சொன்னதில்லை. ஆனால் என்னிடமிருந்து முழுமனதுடனும் மகிழ்வுடனும் செல்வார். இதற்காக மனப் பூர்வமாய்க் கடவுளுக்கு வணக்கம் செலுத்துகிறேன். அவருடைய நம்பிக்கைகளையும் சந்தோஷங்களையும் வெளியிடார். ஆனால் அவைகளை என்னிடம் இருத்துவதால் இரட்டுற இன்பம் எய்தியதாகச் சொல்லுவார்.

மிக அன்புள்ள தந்தையாகவும் மிக ஜாக்கிரதையும் தாராளமும் உள்ள எஜமானராகவும் இருந்தார். விருந்துபசாரத்தை நேசிப்பார். இங்கிலாந்தின் அரசியல் ஸ்தாபிதத்திற்கு அது முழுதும் சிறந்ததென்று அடிக்கடி சொல்வார். மிக மரியாதையுடன் உத்தரவுகளைப் பேணி அன்புற்றார். அவர் தம் வீட்டு (குடும்ப)க் காரியங்களை நானே நிர்வகித்து வந்தேனென்று சொல்லி வந்தபோதினும் அவருடைய உத்தரவுகட்குக் கீழ்ப்படிந்தே நிர்வகித்து வந்தேன். அங்ஙனம் நிர்வகித்து வந்ததில் அவர்தம் சம்மதத்தையும் திருப்தியையும் நான் கொண்டமைக்குக் கடவுளுக்கு வணக்கஞ் செலுத்துகிறேன்.

# இன்பக் கூத்தன்

திரு. கா. சுப்பிரமணியபிள்ளை எம். ஏ; எம். எல்.

உள்ள நிகழ்ச்சியின் மிகுதி உடம்பின் செயலில் வெளிப் படுங்காலத்துக் கூத்து என்பது தோன்றும். உடம்பின் செயல் பிறரைத் தாக்காது செய்வோன் இயக்கத்திற்கே காரணமாமெனின் அது கூத்தெனப் படும். கூத்து, மகிழ்ச்சி காரணமாகவுந் துயரங் காரணமாகவுந் தோன்றும். மகிழ்ச்சி காரணமாகத் தோன்றுங் கூத்து இன்பக் கூத்தெனப்படும். இன்பத்தைப் பிறர்க்குக் கொடுப்பதற்காக நிகழ்த்துங் கூத்தே இறைவன் கூத்தாகும். அது "நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்அனைத்தெலும்புள் நெக ஆனந்தத்தேன் சொரியும் குனிப்புடையான்" என்ற திருவாசகத்தாற் றெளியப்படும். "தம்மைப் போலத் தம் அடியார்க்கும் இன்பமளிப்பவர்" என்ற தேவாரமுங் காண்க. தைத்திரியோப நிடதத்தில் படிப்படியாக உயர்கின்ற பலவகை ஆனந்தங்களை எடுத்துக்கூறி எல்லாவற்றினும்உயர்ந்தது பிரமானந்த மென்றதனோடு பிரமமாகிய முதல்வன் நிச்சயமாக ஆனந்தத்தை விளைவிக்கின்றானென்பது கூறப்பட்டது. தன் இன்பங்காரணமாக இறைவன் கூத்தியற்ற வேண்டியதில்லை. புதிதாகப் பெறக்கூடிய இன்பம் யாதுமில்லாமல் எப்பொழுதும் நிறைந்த இன்பத்தையே யுடையவனாதலின் பிறர்க்கு இன்பங் கொடுப்பதற்காகவே இறைவன் கூத்தியற்றுவதால் அவனுக்கு இன்பக் கூத்தனென்னும் பெயர் உரித்தாயின்றது. அது பின்வரும் குமரகுருபர சுவாமிகள் திருவாக்கானும் விளங்கும்.

"அடுத்தவின் னுயிர்கட் களவில்பே ரின்பங்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே
இத்தொழி லொந்துநின் மெய்த்தொழி லாகப்
பாலுண் குழவி பசுங்குடர் பொறாதெனா
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப
வையமீன் றளித்த தெய்வக் கற்பி
னருள்சூற் கொண்ட வையரித் தடங்கட்
டிருமாண் சாயற் றிருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியு
மற்புதக் கூத்த" என்றது காண்க.

வீடு பெறெய்திய உயிர்களுக்குப் பேரின்பங் கொடுத்தற் பொருட்டு உயிர்க்குயிராய் நின்று இறைவன் இயற்றுகின்ற திருக்கூத்தானது ஆனந்தக் கூத்தெனப் படும். அது எல்லாத் தத்துவத்தையுங் கடந்த மேல் நிலையில் உயிர் அறிவில் மன்னிய அருள் விலாசத்தே இன்பங் காரணமாக நிகழுங் கூத்தாதலின் அக்கூத்திற்கு இடம் ஆனந்தமெனப் பட்டது. இத்திருக் கூத்தானது,

"தானந்த மில்லாச் சதானந்த சத்திமேற்
றேனுந்து மானந்த மாநடங் கண்டீர்
ஞானங் கடந்து நடஞ்செய்யு நம்பிக்கங்
கானந்தங் கூத்தாட வாடரங் கானதே"

என்ற திருப்பாட்டிற் குறிப்பிக்கப் பட்டது. இறைவன் எல்லா வுயிரின் கண்ணும் கலந்திருத்தலின் அவனுடுங்கால் யாவையும் ஆடுமென்பார்.

"தேவர் சுரர்நரர் சித்தர் வித்தியாதார்
மூவர்க ளாதியின் முப்பத்து மூவர்க
டாபதர் சத்தர் சமயஞ் சராசரம்
யாவையு மாடிடு மெம்மிறை யாடவே."

என்றார்.

சிவ தத்துவத்தில் இறைவன் இயற்றுங் கூத்தும் ஆனந்தக் கூத்தெனப்படும். இறைவனுடைய ஞானசத்தி விளங்குகின்ற இடமாதலாலும் நால்வகை வாக்கிற்கும் மூலமாகிய அதி சூக்கும நாதம் விளங்குமிடமாத

செய்யுளில் 'கழுதொடு காட்டிடை நாடக மாடிக் கதியிலியாய் உழுவையின் தோலுடுத் துன்மத்தமேல் கொண்டுழிதருமே" என்ற அடிகளில் புலப்படுதல் காண்க. "பேய்கள் கூடிப் பிணங்கள் மாந்தி அணங்கும் பெருங் காட்டில் மாயனுடை மலையான் மகளும் மருண்டு நோக்குமே" என்ற விடத்து இழிவும் அச்சமும் புலனாதல் காண்க. இறைவனுடைய திருக்கூத்தின் ஒழுங்கால் உலகமெல்லாம் இனி தியங்குகின்றன. "காயில் உலகனைத்தும் கற்பொடிகாண்" என்றபடி இறைவன் வெகுண்டு ஒரு சிறிது திருமேனியைப் பெயர்த்தசைத்தால் உலகங்களெல்லாம் நிலை பிறழ்ந்து விடுமென்ற விடத்துப் பெருமிதமும் வெகுளிச் சுவையின் தோற்றமும் புலப்படுதல் காண்க. அது காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதியிலுள்ள பாட்டொன்றில் இனிது விளக்கப்பட்டது. அப்பாட்டு வருமாறு:

"அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் வான்முகடுபேரும்—கடகம்
மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் [பேரும்
அறிந்தாடும் ஆற்றா தரங்கு."

இறைவன் வேகத்தோடு ஆடுங்கால் அவன் திருமேனி மேல் அணியாக அணியப்பட்ட பாம்புகள் வேகத்தைப் பொறுக்க மாட்டாமல் கக்கிய செம்மணிகள் எட்டுத் திசைகளிலுமுள்ள யானைகளின் முதுகின் மீது சிங்கம் பாய்வதுபோற் போய்த் தாக்க அவைகள் அஞ்சித் துதிக்கையைத் தூக்கிக் கதறி வீறிட்டன என்னுமிடத்து வீரமும் அச்சமும் புலனாதல் காண்க. அக்கருத்தினை

"முடவுப்ப டத்தகடவுட் பைம்பூண்
கறங்கெனச் சுழலுங்கால் விசைக்காற்று
துமிழ்தரு குருதித்திரள் தெறித்தாங்குத்
திசைதொறுந் தெறித்த திரண்மணிக் [குலங்கள்
ஆனேறு கடுப்பவெரி நிற்றுக்கலும்
கையெடுத் தெண்டிசைக்களிறும் வீறிடத்
தெய்வ நாடகஞ் செய் வைதிகக் கூத் [தன்," என்ற

காசிக் கலம்பக அடிகளிற் காண்க. திருவிளையாடற் புராணத்துள் மாறியாடிய படலத்தில் பாண்டிய னொருவன் கூத்தப் பெருமான் இடக்காலொன்றினையே எப்பொழுதுந் தூக்கியாடுவதால் அத்திருவடி நோகுமென்று கருதிபகாலை அம்மன்னனுக்கு இறைவன் திருக்கூத்து அவலத்தையுண்டாக்கிற்று. அவ் வவலத்தை நீக்குதற் பொருட்டு இறைவன் வலக்காலைத் தூக்கி மாறியாடி யருளினர். இதனால் திருக்கூத்து அவலச்சுவைக் குறிப்பு முள்ளதென்பது அறியக் கிடக்கின்றது.

கூத்தாடுவோர்க் கெல்லாம் ஆடும் இடமில்லாமல் ஆடல் நிகழாது. ஆனால் இறைவன் யாதொரு ஆதாரவையும் வேண்டாது கூத்தியற்றுவது வியக்கத் தக்கதாகும்.

"அந்தாத்தி லாடுகின்றார் பாங்கிமாரே
அவராட்டங்கண்டு நாட்டங்கொண் [டேன் பாங்கிமாரே"

என்றவிடத்து வியப்புச்சுவை புலனாதல் காண்க.

கூத்தப்பிரான் திருநடனமானது பிறவிப் பெரும் பயனளித்தலால் பேருவகை விளைக்கக் கூடுமென்பது 'குனித்த புருவம்' என்ற தேவாரத்தால் இனிது விளங்கும்.

"குனித்த புருவமுங் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்
பாதமுங் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
யிந்த மாநிலத்தே"

உவகையே என்றும் நிலைத்தற்குரியதாகலின் அவற்றிற்குரிய உதாரணத்தோடு இக்கட்டுரை முடிகின்றது.

"ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் காரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்து சாத்துவிக மேயாக
விந்துவாழ் சடையனாடு மானந்த வெல்லை
யிறனிப் பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத் துட்டினைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"
"கற்கக் கசடறக்கற்பவை கற்றபி
னிற்க வதற்குத்தக"

# எங்களிடம் கிடைக்கக் கூடிய சில நூல்கள்

பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய
தாக்ஷிணாத்யகலாநிதி
Dr. உ. வே. சாமிநாதையர் அவர்கள்
பரிசோதித்துப் பதிப்பித்தவை.

உதயணன் சரிதமாகிய பெருங்கதை
சீவகசிந்தாமணி, நச்சினார்க்கினியருரை
ஷை 2-ஆவது கோவிந்தையாரிலம்பகம் மூலமும் உரையும்
சிலப்பதிகாரம்
ஷை 5-ஆவது இந்திரவிழவூரெடுத்த காதை உரையுடன்
ஷை 10-ஆவது நாடுகாண்காதை உரையுடன்
ஷை 13-ஆவது புறஞ்சேரியிறுத்த காதை உரையுடன்
ஷை 14, 15-ஊர்க்காண்காதையும் அடைக்கலக் காதையும் உரையுடன்
மணிமேகலை
ஷை முதல் மூன்று காதைகள்மட்டும் உரையுடன்
பத்துப்பாட்டு
பத்துப்பாட்டு மூலம்
சிறுபாணாற்றுப்படை உரையுடன்
முல்லைப்பாட்டு உரையுடன்
ஐங்குறுநூறு
பதிற்றுப்பத்து
பரிபாடல்
புறநானூறு (2-ஆம் பதிப்பு 1923)
புறப்பொருள் வெண்பாமாலை
நன்னூல்
நன்னூல்
புத்தசரித்திரம், பௌத்த தருமம், பௌத்தசங்கம்
மணிமேகலைக் கதைச்சுருக்கம்
உதயணன் சரித்திரச் சுருக்கம்
மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் வரலாறு இரண்டு பாகங்கள்
தக்கயாகப்பரணி
பாசவதைப்பரணி
திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம்
திருக்காளத்திநாதருலா
தேவையுலா
மதுரைச் சொக்கநாதருலா
கடம்பர் கோயிலுலா குறிப்புரையுடன்
திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா
வலிவலமும் மணிக்கோவை
சங்கரநயினார் கோயிலந்தாதி
வராரசையுலா (சங்கரநயினார் கோயிலுலா)
மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடுதூது
கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டு விடுதூது
பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது
திருவாவடுதுறைக்கோவை
மதுரைச் சொக்கநாதர் மும்மணிக்கோவை
திருமயிலைத் திரிபந்தாதி
பழனிப் பிள்ளைத் தமிழ்
கொட்டையூர் ஸ்ரீசிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள்
ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு
விளத்தொட்டிப்புராணம்
திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
மண்ணிப்படிக்கரைப் புராணம்
தனியூர்ப் புராணம் ஷை ஷை
திருவாரூர்த் தியாகராசலீலை ஷை ஷை

# பாரதபந்தர்

110, 48-வது வீதி, : ரங்கூன்.

### பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் பதிப்புகள்.

சுக்கிர நீதி-புராதன அரசியலை விளக்குவது
மண்ணியல் சிறுதேர்—மிருச்சகடி என்ற வடமொழி நாடகத்தின் மொழி பெயர்ப்பு
சுலோசனை
உதயன சரிதம்

### திருவாளர்-திரு. வி. கல்யாணசுந்தரனார் இயற்றிய நூல்கள்.

பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை
தமிழ்த்தென்றல்
முருகன் அல்லது அழகு
இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்
என் கடன் பணிசெய்து கிடப்பதே
சைவத்தின் சமரசம்
சைவத்திறவு
சமரச சன்மார்க்க போதம்
கடவுள் காட்சியும் தாயுமானரும்
தமிழ் நூல்களில் பௌத்தம்
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து
நாயன்மார்
சைவ சமய சாரம்
இமயமலை அல்லது தியானம்
தமிழ்நாடும் நம்மாழ்வாரும்
உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்
முருகன் அருள் வேட்டல்
காரைக்காலம்மையார் திருமுறை (அரும்பதக் குறிப்புரையுடன்)
பெரிய புராணம்
கந்த புராணச் சுருக்கம்
முருகவேள் பனுவல் திரட்டு
விநாயகர் பனுவல் திரட்டு
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்
குசேலோபாக்கியானம்-மூலமும்அரும்பதவுரையும்
திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டு
சிவபுண்ணியத் தெளிவு

### பாரதியார் நூல்கள்.

தேசியக் கீதங்கள்
தோத்திரப் பாடல்கள்
வேதாந்தப் பாடல்கள்
விநாயகர் நான் மணிமாலை, கண்ணன் பாட்டு
புதிய ஆத்திச்சூடி, பாப்பா பாட்டு முதலியன
சாட்சி
குயில்
பாஞ்சாலி சபதம்
பகவத் கீதை
ஞானரதம்
சித்தக் கடல்
பதஞ்சலி யோக சூத்திரம்
சந்திரிகையின் கதை
நவதந்திரக் கதை
தராசு
கதைக்கொத்து
வியாசங்கள்

### ராமகிருஷ்ணமடம் பதிப்புகள்

ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்விய சரிதம் பெரியது
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்-சிறியது
ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம்-முதல் பாகம்
ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸர் அருளிய 1003 உபதேச மொழிகள்
குருதேவர் வாக்கியம்
ஸ்ரீ சாரதா தேவியார் சரித்திரம்
ஸ்ரீ விவேகாநந்த சரிதம்
பாலபோத விவேகானந்த சரிதம்
விவேகானந்த ஞான தீபம்-முதல் தொகுதிமுதல்
இராஜ யோகம்
பக்தி யோகம்
கர்ம யோகம்
எமது தாய்நாடு
விவேகானந்தர் கடிதங்கள்
சிகாகோ பிரசங்கங்கள்
பவா ஹாரிபாபா
ஜகஜீவ பாவிழக்க வினா விடை
எனது போர் முறை
விதிவசம் அல்லது ஊழ்வினை
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்
நடராஜ வடிவம்: தில்லைத் திரு நடனம்
முக்தி நெறி
பக்தி மார்க்கம்

### கோவைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்.

திரு C. K. சுப்பிரமணிய முதலியார், BA.F.M.U. இயற்றியன,
சேக்கிழார்—16 படங்களுடன்

# பாரதபந்தர்

**110, 48-வது வீதி, : ரங்கூன்.**

மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை
அவிநாசிக் கருணாம்பிகை பிள்ளைத் தமிழ்
கருவூர்த் தேவர்-(ஒரு அரிய ஆராய்ச்சி நூல்)
அர்த்தநாரீசர் அல்லது மாதிருக்கும்
பாதியன்

திரு. இராவ் சாகிபு
C. M. இராமச்சந்திரஞ்செட்டியார், B.A., B.L.
இயற்றியது.

கொங்குநாடும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்
கடவுள் வணக்கச் செய்யுள்கள்
பேரூர்ப் புராணம்-வசனம்-படங்களுடன்

சரித்திரங்கள்.

அம்பிகாபதி
அசோக சக்ரவர்த்தி
அசோகருடைய சாசனங்கள்
அப்பர்
அயல் நாட்டுப் பெரியோர்
அனிபெசண்டு அம்மாள்
அமெரிக்காவின் மூன்று பெரு மக்கள்
ஆரிய சரித்திரம்
ஆழ்வார்கள்
ஆறுமுக நாவலர்
ஆலிவர் கோல்டு ஸ்மித்
இராஜ ராஜ சோழன் சரித்திரம்
இந்தியர் சரித்திரம் (3 பாகம்)
இந்திய வீரர்கள் சரித்திரம்
இராணி மங்கம்மாள் சரித்திரம்
இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்ரம்
இடைக்காடர் சரித்திரம்
இரட்டைப் புலவர் சரித்திரம்
இராஜ புத்திர வீரர்கள் சரித்திரம்
இரவிவர்மன் சரித்திரம்
இராஜா கோபிசந்த் சரித்திரம்
இருபெருமக்கள் சரித்திரம்
இந்திய கற்பரசிகள் சரித்திரம்
இருபெருங்காவலர் குகன். கண்ணப்பர் சரிதம்
ஈசுவர சந்திரவித்யா சாகரர் சரித்திரம்
உதடணன் சரித்திரம்
எட்வர்ட் மஹாராஜா
ஐதர் அலி
ஒட்டக் கூத்தர்
ஔரங்க சீப்
ஔவையார்
கம்பர்
கர்ணன்
கண்ணகி தேவி சரித்திரம்
கபீர் தாஸ்
காளிதாசர்
காளமேகப் புலவர்
குமாரசாமிப் புலவர் (யாழ்ப்பாண வித்வான்) சரித்திரம்
குருநானக், மகாவீரர் சரித்திரம்
குமணன் (கொடைவீரன்)
குகப் பெருமான்
குண்டல கேசி
கும்பமகாராணா
கௌதம புத்தர்
சங்கராசாரியார் சரித்திரம்
சந்திரகுப்தன்
சரோஜினி தேவி
சாக்ரடீஸ் சரித்திரம்
சித்தரஞ்சன தாஸ் சரித்திரம்
சிவப்பிரகாச சுவாமிகள் (துறைமங்கலம்)
சிவாஜி சரித்திரம்
சூரவாதித்த சோழன் சரித்திரம்
செந்தமிழ் புலவர் சரித்திரம்
செந்தமிழ் வாணவர் சரித்திரம்
சேலம் ராமசாமி முதலியார் சரிதம்
சைவசிகாமணிகள் இருவர்
சோழமன்னர் சரித்திரம் (3 பாகம்)
டால்ஸ்டாய் (Tolstoy) மகாத்மா காந்தியின் குரு சரித்திரம்
தக்ஷிண சரித்திர வீரர்
தயானந்த சரஸ்வதி சரித்திரம்
தந்தி தபால் சரித்திரம்
தமிழ்ப்புலவர் சரித்திரம்
தமிழ்ப்புலவர் வரலாறு (3 பாகம்)
தமிழ்ப் பெருமக்கள் சரித்திரம்
தமிழ் நாவலர் சரித்திரம்
தாதாபாய் நௌரோஜி சரித்திரம்
திருமலை நாயகர் சரித்திரம்
திலகவதியார் சரித்திரம்
தியாகராஜஸ்வாமி சங்கீத வித்வ சிரோமணி சரித்திரம்
திருவள்ளுவர் சரித்திரம்
துளசிதாசர்
தென்னாட்டு சிரேஷ்டர்கள்


பாரத பந்தர்

110, 48-வது வீதி, : ரங்கூன்.

தேசாபிமானிகள்
தேசிங்குராஜன் சரித்திரம்
நக்கீரர்
நம்மாழ்வார்
நாற்பெரு வள்ளல்கள்
நூர்ஜஹான்
நேப்போலியன்
பழந்தமிழ் பெருமக்கள் சரித்திரம்
பண்டித மோதிலால் நேரு
பல்லவர் சரித்திரம்
பச்சையப்ப முதலியார்
பத்மினி
பண்டைத் தமிழரசர்
பாண்டிய தேச நாய்க்க மன்னர்
பாஞ்சாலங் குறிச்சி சரித்திரம்
பாண்டிய ராஜவம்சம்
புலிகேசி அல்லது சாலுக்கிய குல திலகன்
பூர்வீக இந்திய தேச சரித்திரம்
பெஞ்சமின் பிராங்கிலின்
மங்கையர்க்கரசி
முதற்குலோத்துங்கன்சரித்திரம்
முகமதலி, ஷவுகதலி சரித்திரம்
மௌரிய சக்ரவர்த்தி அல்லது மதிமிக்க அசோகர்
ராஜம் ஐயர்
ராபர்ட் கிளைவ்
லாலா லஜபதிராய்
விக்ரமாதித்தன் சரித்திரம்
விக்டோரியா மகாராணி
ஹென்ரி போர்ட்டு
பண்டித ஜவஹர்லால் நேரு
திலகர்
தட்சண இந்திய சரித்திரம்
சேரன் செங்குட்டுவன்
நக்கீரர்
கபிலர்
வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி
கள்ளர் சரித்திரம்
சோழர் சரித்திரம்
ஆழ்வார் காலநிலை
தமிழ் வரலாறு
தென்மொழி வரலாறு

## சிறந்த நாடகங்கள்.

அபிமன்யு-வெ. சாமிநாத சர்மா
இராஜபக்தி-வி. சி. கோபாலரத்னம்
மனோன்மணீயம்-புதிய வசனப் பதிப்பு-
ம. ஷண்முகசுந்தர முதலியார்
கலாவதி, ரூபாவதி — வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார்
தசரதன் தவறு-ந. பலராமையர்
மண்ணியல் சிறுதேர்-பண்டிதமணி
மு. கதிரேசச் செட்டியார்
சாகுந்தலம்-மறைமலையடிகள்
விக்ரமோர் வசீயம்
மாளவி காக்னிமித்திரம்
முத்திரா ராட்சஸம்
மாலதி மாதவம்
நாகானந்தம்
பிருதிவி ராஜன்
போஜ சரித்திரம்
பாதுகா பட்டாபிஷேகம்

## இதர புத்தகங்கள்.

உடற்பயிற்சி
பெண்கள் உடற்பயிற்சி
எனது கண்ணுடி (வேடிக்கை கட்டுரைகள்)
உத்யோகம் (சிறு நாடகம்)
தற்கால தமிழ் அகராதி

இவைகளும் சங்கு காரியாலயப் பதிப்புகள், கிருஷ்ணசாமி சர்மா, எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் முதலியோர் எழுதிய நூல்கள், கே. கிருஷ்ணமாச்சாரியார் பதிப்பு நூல்கள் முதலிய வேறு பல நூல்களும் கிடைக்கும்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக
வெளியீடுகள் அனைத்தும்
கிடைக்கும்.

# பாரத பந்தர்

**110, 48-வது வீதி, : ரங்கூன்.**

நூ- 232

நகரவணிகர் பொங்கல்மலர் 1935

Regd. No. R. 569 The "DHA

தந்தி அட்ரஸ் "யூனடேட்" சென்னை டெலிபோன் நம்பர் 3092 சென்னை.

# யுனைடெட் இந்தியா

## லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

தபால்பெட்டி 281, சென்னை தலைமை ஆபீஸ் சென்னை தபால்பெட்டி 745, ரங்கூன்.

**நிதிகளை சென்னை ஆபீஷியல் டிரஸ்டியார் நிர்வகிக்கின்றனர்.**

நடப்பிலிருக்கும் பாலிஸியின் மதிப்பு சுமார் 2,00,00,000 ரூபாய்கள்
நிதிகளின் வருட வருமானம் .... 66,00,000 ரூபாய்கள்
வருட வருமானம் 15.00,000 ரூபாய்கள் அதிகரித்திருக்கிறது.

முக்கியமான எல்லா ஊர்களிலும் ஆபீஸ்கள் இருக்கின்றன.

**தகுந்த போனஸுடன் மிதமான பிரீமியம்**

ஜாயின்டு லைப் பாலிஸீ ஒப்புக்கொள்ளப்பெறும்.

சிக்கனத்துடன் திறமை வாய்ந்த டைரெக்டர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

போட்டு வைத்த பணங்களுக்கு சரியான பாதுகாப்பு.

## பர்மா சீப் ஏஜன்ஸி ஆபீஸ்,

229, பேயர் வீதி, :: :: இரங்கூன்.

Printed and Published by C. Nagiah for the Nattukkottai Chettiars' Association, Burma
[Editor A. Rm. A. Karuppan Chettiar,] at the Chettiars' Press, 182, Barr Street, Rangoon